# பெரியார் பல்கலைக்கழகம்

NAAC 'A++' Grade with CGPA 3.61 (Cycle - 3)
State University - NIRF Rank 56 - State Public University Rank 25
Salem - 636011, Tamilnadu, India.

## தொலைநிலை மற்றும் இணையவழி கல்வி மையம்

## (CDOE)

## இளங்கலைத் தமிழ்

## முதற்பருவம்

# அடிப்படைத் தமிழ் இலக்கணம்

## 24DUTA05

## 2024 ஆம் கல்வியாண்டுமுதல் பயிலும் மாணவர்களுக்குரிய பாடநூல்

## Prepared By:

**Centre for Distance and Online Education (CDOE)**

**Periyar University, Salem – 11.**

# பாடத்திட்டம்

# அடிப்படைத் தமிழ் இலக்கணம்

# 24DUTA05



| அலகு | பாடதிட்டம் விளக்கம் | பக்கம் |
|---|---|---|
| **அலகு - 1** | இலக்கணம் - ஐந்திலக்கணம் - எழுத்து - எழுத்து வடிவங்கள் - தமிழ் எழுத்துக்கள் - குறில், நெடில் - வலி, மெலி, இடை - உயிர்மெய், ஆய்தம் - அளபெடை - எழுத்து வகைகள் - முதலெழுத்து - சார்பெழுத்து வகைகள் | 15-53 |
| அலகு - 2 | சொல் - பகுபதம் - பகாபதம் - சொல்லின் வகைகள் - பெயர்ச்சொல் - அறுவகைப் பெயர்ச்சொற்கள் - பெயர்ச்சொற்கள் திணை, பால், எண், இடம் உணர்த்துதல் - வினைச்சொல் - வினைமுற்று - வினையெச்சம் - வினையாலணையும் பெயர் - இடைச்சொல் - உரிச்சொல் | 54-117 |
| **அலகு - 3** | தொகைநிலை - தொகாநிலைத் தொடர்கள் - பண்புத்தொகை - வினைத்தொகை - உவமைத்தொகை - உம்மைத்தொகை வேற்றுமைத்தொகை - அன்மொழித்தொகை - எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் | 118-132 |
| **அலகு - 4** | தொடர் - வாக்கியம் - வாக்கிய உறுப்புகள் - எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் - தனிவாக்கியம் - தொடர் வாக்கியம் - கலவை வாக்கியம் - செய்வினை செயப்பாட்டுவினை நிறுத்தற்குறிகள் - புள்ளிகள் - அடைப்புக்குறிகள | 133-166 |
| **அலகு - 5** | புணர்ச்சி - புணர்ச்சி வகைகள் - உயிரீற்றுப் புணர்ச்சி - மெய்யீற்றுப் புணர்ச்சி - உருபுப் புணர்ச்சி - வல்லினம் மிகுமிடம் - வலிமிகா இடங்கள | 167-204 |
| | **முடிவுரை** | 205 |
| | **பார்வை நூல்கள்** | 206 |

# அடிப்படைத்தமிழ் இலக்கணம்

## பொருளடக்கம்


| | |
|---|---|
| 1.0 | பாட அறிமுகம் |
| 1.1 | பாட நோக்கம் |
| 1.2 | இலக்கணம் |
| 1..3 | இலக்கணத்தின் வகைகள் |
| 1.4 | ஐந்திலக்கணம் |
| 1.5 | ஐந்திலக்கண நூல்கள் |
| 1.6 | எழுத்து |
| 1.7 | எழுத்துக்களின் ஒலியும் வடிவமும் |
| 1.8 | தமிழ் எழுத்துக்களும் அதன் வகையும் |
| 1.8.1 | முதல் எழுத்துக்களின் வகைகள் |
| 1.8.1.1 | சுட்டு எழுத்துக்கள் |
| 1.8.1.2 | மெய்யெழுத்துக்களின் மூவகை |
| 1.8.1.2.1.1 | வல்லினம் |
| 1.8.1.2.1.2 | மெல்லினம் |
| 1.8.1.2.1.3 | இடையினம் |
| 1.8.2 | சார்பெழுத்து |
| 1.8.2.1.1 | உயிர்மெய் |
| 1.8.2.1.2 | ஆய்தம் |
| 1.8.2.1.3 | உயிரளபெடை |
| 1.8.2.1.3.1 | இயற்கை அளபெடை |
| 1.8.2.1.3.2 | சொல்லிசை அளபெடை |
| 1.8..1.3.3 | இன்னிசை அளபெடை |
| 1.8.2.1.3.4 | செய்யுளிசை அளபெடை |
| 1.8.2.1.4 | ஒற்றளபெடை |

| | |
|---|---|
| 1.8.2.1.5 | குற்றியலுகரம் |
| 1.8.2.1.6 | குற்றியலுகர வகை |
| 1.8.2.1.6.1 | நெடில் தொடர் குற்றியலுகரம். |
| 1.8.2.1.6.2 | வன்றொடர்க் குற்றியலுகரம். |
| 1.8.2.1.6.3 | மென்றொடர்க் குற்றியலுகரம். |
| 1.8.2.1.6.4 | இடைத் தொடர்க் குற்றியலுகரம |
| 1.8.2.1.6.5 | ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் |
| 1.8.2.1.6.6 | உயிர்த் தொடர்க் குற்றியலுகரம். |
| 1.8.2.1.7 | குற்றியலிகரம் |
| 1.8.2.1.7.1 | முற்றியலுகரம் |
| 1.8.2.1.8 | ஐகாரக் குறுக்கம் |
| 1.8.2.1.9 | ஔகாரக் குறுக்கம் |
| 1.8.2.1.10 | மகரக் குறுக்கம் |
| 1.8.2.1.11 | ஆய்தக் குறுக்கம் |
| 1.9 | எழுத்துக்களின் பிறப்பு - பொதுவிலக்கணம். |
| 1.9.1 | எழுத்துக்களின் இடப்பிறப்பு |
| 1.9.1.1 | முதல் எழுத்துக்களின் பிறப்பிடம். |
| 1.9.1.2 | மெய் எழுத்துகளின் உச்சரிப்பு முறை |
| 1.9.2 | சார்பெழுத்துப் பிறக்குமிடங்கள |
| 1.10 | எழுத்து நிலை |
| 1.10.1 | மொழி முதல்நிலை எழுத்துகள் |
| 1.10.2 | மொழி இறுதிநிலை எழுத்துகள் |
| 1.10.3 | மொழி இடைநிலை எழுத்துகள் |
| 1.10.3.1 | இடைநிலை மெய்மயக்கம் |
| 1.10.3.1.1 | உடன் நிலை மெய்மயக்கம்: |
| 1.10.3.1.2 | வேற்று நிலை மெய்மயக்கம் |
| 1.11 | சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள் |

| | |
|---|---|
| 1.12 | சொல்லுக்கு இறுதியில் வாராத எழுத்து |
| | தொகுப்புரை |
| | பயிற்சி வினாக்கள் |

| | |
|---|---|
| 2.0 | பாட அறிமுகம் |
| 2.1 | பாட நோக்கம் |
| 2.3 | சொல் |
| 2.4 | சொற்றொடர் |
| 2.4.1 | பகுபதம் |
| 2.4.2 | பகுபத உறுப்புகள் |
| 2.4.2.1 | பகுதி |
| 2.4.2.2 | விகுதி |
| 2.4.2.2.1 | தன்மை வினைமுற்று விகுதிகள் |
| 2.4.2.2.2 | முன்னிலை வினைமுற்று விகுதிகள் |
| 2.4.2.2.3 | ஏவல் வினைமுற்று விகுதிகள் |
| 2.4.2.2.4 | வியங்கோள் வினைமுற்று விகுதிகள் |
| 2.4.2.3 | இடைநிலை |
| 2.4.2.3.1 | இறந்தகால இடைநிலை |
| 2.4.2.3.1.1 | வினை இடைநிலை |
| 2.4.2.3.1.2 | பெயர் இடைநிலை |
| 2.4.2.3.1.3 | எதிர்மறை இடைநிலை |
| 2.4.2.3.2 | நிகழ்கால இடைநிலை |
| 2.4.2.3.3 | எதிர்கால இடைநிலை |
| 2.4.2.4 | சாரியை |
| 2.4.2.4.1 | பொதுச்சாரியை |
| 2.4.2.4.2 | எழுத்துச் சாரியை |

| | |
|---|---|
| 2.4.2.5 | சந்தி |
| 2.4.2.6 | விகாரம் |
| 2.4.2.6.1 | கால வேறுபாடுகள் |
| 2.4.2.6.2.1 | இறந்த காலம் |
| 2.4.2.6.2.2 | நிகழ்காலம் |
| 2.4.2.6.2.3 | எதிர்காலம் |
| 2.5 | பகாபதம் |
| 2.6 | சொல்லின் வகைகள் |
| 2.6.1 | இயற்சொல் |
| 2.6.2 | திரிசொல் |
| 2.6.3 | திசைச்சொல் |
| 2.6.4 | வடசொல் |
| 2.7 | பெயர்ச்சொல் |
| 2.7.1 | இடுகுறிப்பெயர் |
| 2.7.2 | காரணப்பெயர் |
| 2.7.2.1 | காரண இடுகுறிப்பெயர் |
| 2.7.2.1.1. | குறிக்கும் பொருள் பற்றிய பெயர்கள் |
| 2.8 | அறுவகைப் பெயர் சொற்கள் |
| 2.8.1 | பொருட்பெயர்: |
| 2.8.2 | இடப்பெயர் |
| 2.8.3 | காலப்பெயர் |
| 2.8.4 | சினைப்பெயர் |
| 2.8.5 | குணப்பெயர் |
| 2.8.6 | தொழிற்பெயர் |
| 2.8.6.1 | விகுதி பெற்ற தொழிற்பெயர் |
| 2.8.6.2 | விகுதி பெறாத தொழிற்பெயர் |
| 2.8.6.3 | முதனிலைத் தொழிற்பெயர் |

| | |
|---|---|
| 2.8.6.4. | முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் |
| 2.8.6.5 | காலம் காட்டும் தொழிற்பெயர் |
| 2.8.6.6 | உடன்பாட்டுத் தொழிற்பெயர் |
| 2.8.6.7 | எதிர்மறைத் தொழிற்பெயர் |
| 2.8.7 | பயன்படுத்தும் முறையால் வரும் பெயர்கள் |
| 2.8.7.1 | ஆகபெயர் |
| 2.8.7.2 | குடிப்பெயர் |
| 2.8.7.3 | கிளைப்பெயர் |
| 2.8.7.4 | அளவுப்பெயர் |
| 2.8.7.5 | சுட்டுப்பெயர் |
| 2.8.7.6 | வினாப்பெயர் |
| 2.8.7.7 | தொகுதிப்பெயர் |
| 2.8.7.8 | தன்மைப்பெயர் |
| 2.9 | பெயரெச்சம் |
| 2.9.1 | நிகழ்காலப் பெயரெச்சம் |
| 2.9.2 | எதிர்காலப் பெயரெச்சம் |
| 2.9.3 | எதிர்மறைப் பெயரெச்சம் |
| 2.10 | பெயர்ச்சொற்கள் திணை பால் எண், இடம் |
| 2.11 | திணை |
| 2.12 | பால் |
| 2.12.1 | பால்பாகுபாட்டுக் கோட்பாடு |
| 2.12.1.1 | உயர்திணைப் பால் |
| 2.12.1.2 | அ.'.றிணைப் பால் |
| 2.13 | ஐம்பால் பெயர் விகுதிகள் |
| 2.13.1 | உயர்திணைப் படர்க்கை ஆண்பால் பெயர்களுக்குரிய விகுதிகள்: |
| 2.13.2 | உயர்திணைப் படர்க்கைப் பெண்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்: |

| | |
|---|---|
| 2.13.3 | உயர்திணைப் படர்க்கைப் பலர்பாற்பெயர்களுக்குரிய விகுதிகள்: |
| 2.13.4 | அஃறிணைப் படர்க்கை ஒன்றன்பாற் பெயர்களுக்குரிய விகுதி: |
| 2.13.5 | அஃறிணைப் படர்க்கைப் பலவின்பாற்களுக்குரிய விகுதிகள்: |
| 2.13.6 | மதிப்புப்பன்மை |
| 2.13.7 | இருபால் பொதுப்பெயர் |
| 2.13.8 | பால் பகா அஃறிணைப் பெயர்கள் |
| 2.14 | பெயர்ச்சொற்கள் எண் உணர்த்துதல் |
| 2.14.1 | மூவிடம் |
| 2.14.1.1 | தன்மை |
| 2.14.1.2 | முன்னிலை |
| 2.14.1.3 | படர்க்கை |
| 2.14.1.3.1 | படர்க்கை ஒருமை |
| 2.14.1.3.2 | படர்க்கைப் பன்மை |
| 2.15 | வினைச்சொல் |
| 2.15.1 | வினைச்சொல் வகைகள் |
| 2.15.1.1 | தனிவினையும் கூட்டுவினையும |
| 2.15.1.2 | தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம் |
| 2.15.1.3 | குறிப்பு வினைச்சொல்லின் பொது இலக்கணம் |
| 2.16 | வினையெச்சம் |
| 2.17 | வினையெச்ச வகை |
| 2.18.1 | நிகழ்வு எதிாவு |
| 2.18.1.1 | எதிர்மறை வினையெச்சங்கள் |
| 2.18.1.2 | குறிப்பு வினையெச்சம் |
| 2.18.1.3 | வினையெச்சங்கள் பயன்படும் விதங்கள் |
| 2.19 | வினைமுற்று |

| | |
|---|---|
| 2.19.1 | தெரிநிலை வினைமுற்று |
| 2.19.2 | தெரிநிலை வினைமுற்றின் அமைப்பு |
| 2.19.3 | ஏவல் ஒருமை வினைமுற்று |
| 2.19.4 | எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று |
| 2.19.5 | ஏவல் பன்மை வினைமுற்று |
| 2.19.6 | எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று |
| 2.19.7 | வியங்கோள் வினை முற்று |
| 2.20 | வினையாலணையும் பெயர் |
| 2.21 | இடைச்சொல் |
| 2.21.1 | இடைச் சொல் வகைகள் |
| 2.21.1.1 | ஏகார இடைச்சொல் |
| 2.21.1.2 | ஓகார இடைச்சொல் |
| 2.21.1.3 | உம்மை இடைச்சொல் |
| 2.21.1.4 | இடைச்சொல் வரும் பொருள்கள் |
| 2.21.1.4.1 | சிறப்பு |
| 2.21.1.4.2 | ஐயம் |
| 2.21.1.4.3 | எச்சம் |
| 2.21.1.4.4 | தெரிநிலை |
| 2.21.1.4.5 | ஆக்கம் |
| 2.22 | உரிச்சொல் |
| 2.23.1 | உரிச்சொல்லின் பொது இலக்கணம் |
| 2.23.2 | உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் |
| | தொகுப்புரை |
| | பயிற்சி வினாக்கள் |

| | |
|---|---|
| 3.0 | பாட அறிமுகம் |
| 3.1 | பாட நோக்கம் |
| 3.2 | தொகாநிலைத் தொடர் |
| 3.2.1 | தொகாநிலைத் தொடர் வகைகள் |
| 3.2.1.1 | எழுவாய்த் தொடர் |
| 3.21..2 | விளித் தொடர் |
| 3.2.1.3 | வினைமுற்றுத் தொடர் |
| 3.2.1.4 | பெயரெச்சத் தொடர் |
| 3.2.1.5 | வினையெச்சத் தொடர் |
| 3.2.1.6 | இடைச்சொல் தொடர் |
| 3.2.1.7 | உரிச்சொல் தொடர் |
| 3.2.1.8 | அடுக்குத் தொடர் |
| 3.3 | தொகைநிலைத் தொடர்கள் |
| 3.3.1 | பண்புத்தொகை |
| 3.3.1.1 | இருபெயரொட்டுப் பண்புத் தொகை |
| 3.3.2 | வினைத்தொகை |
| 3.3.3 | உவமைத்தொகை |
| 3.3.4 | உம்மைத்தொகை |
| 3.3.5 | வேற்றுமைத்தொகை |
| 3.3.5.1 | வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை |
| 3.3.6 | அன்மொழித்தொகை |
| | தொகுப்புரை |
| | பயிற்சி வினாக்கள் |
| | |
| 4.0 | பாட அறிமுகம் |
| 4.1 | பாட நோக்கம் |
| 4.2 | தொடர் |
| 4.3 | வாக்கியம் |

| | |
|---|---|
| 4.3.1 | எழுத்தும் சொல்லும் வாக்கியத்திற்குக் கருவிகள் |
| 4.3.2 | வாக்கியத்தில் பலர் செய்யும் தவறுகள் |
| 4.3.3 | வாக்கியத்தில் முழுக்கவனம் செலுத்துக |
| 4.3.4 | வாக்கிய வரலாறு |
| 4.3.5 | வாக்கியத்தின் வகைகள் |
| 4.3.5.1 | கருத்துவகை |
| 4.3.5.2 | அமைப்பு வகை |
| 4.3.5.2.1 | தனி வாக்கியம் |
| 4.3.5.2.2 | தொடர் வாக்கியம் |
| 4.3.5.2.3 | கலவை வாக்கியம் |
| 4.3.5.2.4 | தொடர் கலவை வாக்கியம் |
| 4.3.6 | வாக்கிய அமைப்பில் அறிய வேண்டுவன |
| 4.3.7 | வாக்கிய உறுப்புகள் |
| 4.3.7.1 | எழுவாய் |
| 4.3.7.1.1 | வெளிப்படை எழுவாய் |
| 4.3.7.1.2 | தோன்றா எழுவாய் |
| 4.3.7.2 | பயனிலை |
| 4.3.7.3 | செயப்படுபொருள் |
| 4.4 | தனிவாக்கியம் |
| 4.4.1 | தனிவாக்கிய அமைப்பு |
| 4.4.2 | தொடர் வாக்கியம் |
| 4.4.3 | கலவை வாக்கியம் |
| 4.4.3.1 | கலவை வாக்கியம் அமைப்பு |
| 4.5 | செய்வினை செயப்பாட்டுவினை |
| 4.5.1 | செய்வினை |
| 4.5.2 | செயப்பாட்டு வினை |
| 4.6 | நிறுத்தற்குறிகள் |
| 4.6.1 | உடுக்குறி |
| 4.6.2 | காற்புள்ளி |

| | |
|---|---|
| 4.6.2.1 | விளிகளுக்குப் பின் காற்புள்ளியிடுக. |
| 4.6.3 | அரைப்புள்ளி |
| 4.6.4 | முற்றுப்புள்ளி |
| 4.6.5 | வினாக்குறி |
| 4.6.6 | உணர்ச்சிக் குறி |
| 4.6.7 | இரட்டை மேற்கோட் குறி |
| 4.6.8 | ஒற்றை மேற்கோட் குறி |
| 4.6.9 | தொடர் விடுபாட்டுக்குறி |
| 4.6.10 | விடுகுறி |
| 4.6.11 | உடுக்குறி |
| 4.6.12 | இடைப்பிறவரல் வைப்புக் குறி |
| 4.7 | அடைப்புக்குறிகள் |
| 4.7.1 | பிறை அடைப்புக் குறி |
| 4.7.2 | பகர அடைப்புக் குறி |
| | தொகுப்புரை |
| | பயிற்சி வினாக்கள் |

| | |
|---|---|
| 5.0 | பாட அறிமுகம் |
| 5.1 | பாட நோக்கம் |
| 5.2 | புணர்ச்சி |
| 5.2.1 | அகப்புணர்ச்சி |
| 5.2.2 | புறப்புணர்ச்சி |
| 5.2.3 | புணர்ச்சி வகைகள் |
| 5.2.3.1 | இயல்புப் புணர்ச்சி |
| 5.2.3.2 | விகாரப் புணர்ச்சி |
| 5.2.3.2.1 | தோன்றல் |
| 5.2.3.2.1.1 | உடம்படு மெய் |

| | |
|---|---|
| 5.2.3.2.1.2 | வகர உடம்படு மெய் |
| 5.2.3.2.1.3 | யகர உடம்படுமெய் |
| 5.2.3.2.1.4 | ஏ முன் இருமையும் |
| 5.2.3.2.1.5 | உடம்படுமெய் வரவேண்டிய இடங்கள் |
| 5.2.3.2.1.6 | உடம்படுமெய் வரக்கூடாத இடங்கள் |
| 5.2.3.2.1.7 | சுட்டெழுத்துகளின் பின்னும் எகர வினாவின் பின்னும் உயிரெழுத்துவரின் “வ்” தோன்றி இரட்டித்தல் |
| 5.2.3.2.1.8 | உயிர் முன் உயிர் |
| 5.2.3.2.1.9 | உயிர் முன் மெய் |
| 5.2.3.2.2 | திரிதல் |
| 5.2.3.2.3 | கெடுதல் |
| 5.3 | வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும் |
| 5.4 | உயிரீற்றுப் புணர்ச்சி |
| 5.4.1 | உயிர் முன் உயிர் புணர்தல் |
| 5.4.2 | யகர மெய் தோன்றுதல் |
| 5.4.3 | வகர மெய் தோன்றுதல் |
| 5.4.4 | குற்றியலுகரப் புணர்ச்சி |
| 5.5 | மெய்யீற்றுப் புணர்ச்சி |
| 5.5.1 | மெய் முன் உயிர் புணர்தல் |
| 5.5.2 | மெய்முன் மெய் புணர்தல் |
| 5.5.2.1 | மகர ஈறு |
| 5.5.2.2 | ணகர, னகர ஈறு |
| 5.6 | உருபுப் புணர்ச்சி |
| 5.7 | வல்லினம் மிகுமிடம் |
| 5.8 | வலிமிகா இடம் |
| | தொகுப்புரை |
| | பயிற்சி வினாக்கள் |

# அலகு - I

## 1.0 பாட அறிமுகம்

இல்லக்கணத்தின் வரையறை கொடுக்கப்பட்டுள்ளது. இலக்கணத்தின் வகைகளை உணர்த்த எழுத்தும் எழுத்து வடிவங்களும் வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழ் எழுத்துக்களின் வகைகளையும் அவற்றின் விரிகளையும் எடுத்தியம்புகின்றது.

## 1.1 பாட நோக்கம்

தமிழ் இலக்கணங்களின் வகைகளை மாணவர்களுக்கு கற்பித்தல். தமிழ் எழுத்துக்களின் பிறப்பினை உணரத்தல். தமிழ் எழுத்துக்களின் வகைகளைத் தெரிந்து அறிவித்தல்.

## 1.2 இலக்கணம்

மக்கள் தங்களது எண்ணத்தை ஒருவருக்கு ஒருவர் வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு அவர்களது கருத்தை வெளிப்படையாக வெளிப்படுத்தலே மொழியாம். இவ்வுலகில் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஆங்கிலேயர் ஆங்கிலம் பேசுகின்றனர். ஆந்திரர் தெலுங்கு பேசுகின்றனர். ஆங்கிலம், தெலுங்கு என்பன மொழிகளாம். அது போலவே நமது மொழியாகிய தமிழும் ஒரு மொழியாம். முதன் முதலில் ஒவ்வொரு மொழியும் பேச்சு முறையில் உரு எடுத்தது. பின் அவ்வொலி இலக்கியங்களாக அமைந்தன. இவ்வாறு ஒவ்வொரு மொழியிலும் பல இலக்கியங்கள் தோன்றலாயின. வசனமும் பாட்டுமே இலக்கியங்களாம்.

எள்ளில் இருந்து எண்ணெய் எடுக்கப்படுகின்றது. எண்ணெய் எள்ளினது சத்தேயாகும். அது போல இலக்கியத்தில் இருந்து இலக்கணம் எடுக்கப்பட்டது. இலக்கணம் என்பது இலக்கியத்தின் சத்தே ஆகும். தன் மொழியில் தேர்ச்சி அடைய ஒவ்வொருவரும் விரும்ப வேண்டும். தன் மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் வேண்டும். அவ்வாறு பழகினால் ஒவ்வொருவரும் அவரவரது மொழியில் பெருமை பெறலாம். இதைக் கொடுப்பதே இலக்கணமாம்.

**“ஒரு மொழியைப் பிழையில்லாமல் பேசவும் எழுதவும் கற்பிப்பதே இலக்கணமாம்.”**

## 1.3 இலக்கணத்தின் வகைகள்

ஒருவன் ஒரு வீடுகட்ட விரும்புகின்றான். அவன் செய்வது யாது? முதன் முதலில் அவன் கல், சுண்ணாம்பு, மணல் முதலியவற்றைச் சேகரிக்கின்றான். அவற்றால் சுவர் எழுப்புகின்றான். அச்சுவர்களை மனையலங்கார விதியின்படி வைக்கின்றான். வீடு

கிடைக்கின்றது. அதன்பின் அதை அழகுபடுத்துகின்றான். வீடு கட்டுவதில் ஐந்து காரியங்கள் நடைபெறுகின்றன. அதுபோலவே தமிழ் இலக்கணத்திலும் ஐந்து காரியங்கள் நடைபெறுகின்றன. கல், சுண்ணாம்பு முதலியவற்றைப் போன்று எழுத்துக்கள் இருக்க அலங்கார விதியின்படி அமைப்பதுபோல சொற்களை யாப்பு நூலில் கூறியபடி வைக்க வேண்டும்.

**“இலக்கணம், எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று ஐந்து வகைப்படும்.”**

## 1.4 ஐந்திலக்கணம்

தமிழ் இலக்கணம் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே ஐந்திலக்கணம் என்ற சொல்மரபு வழங்கி வருகிறது. அவை, எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியவை ஆகும்.

இவற்றில் எழுத்து, சொல் இலக்கணங்கள் மொழிக்கு இலக்கணம் கூறுபவை ஆகும். பொருள் இலக்கணம் மொழியில் எழுதப்படும் இலக்கியத்தின் உள்ளடக்கத்திற்கு இலக்கணம் கூறுவது ஆகும்.

யாப்பிலக்கணம் என்பது இலக்கியம் எழுதப்படும் செய்யுளின் இலக்கணம் கூறுவதாகும். யாப்பிலக்கணத்தின் ஒரு வளர்ச்சியாகப் பாட்டியல் இலக்கணம் தோன்றியது. பாட்டியல் இலக்கணம் இலக்கிய வடிவங்களினது இலக்கணத்தைக் கூறுகிறது. பிள்ளைத்தமிழ், உலா, தூது போன்ற இலக்கியங்களின் இலக்கணம் பாட்டியல் நூல்களில் இடம்பெற்றுள்ளது.

அணி இலக்கணம் செய்யுளில் அமையும் உவமை, உருவகம் முதலிய அணிகளின் இலக்கணத்தைக் கூறுகிறது.

எழுத்து இலக்கணத்தில், எழுத்துகளின் வகைகள், அவை ஒலிக்கும் கால அளவு, எழுத்துகள் பிறக்கும் முறை ஆகியனவும் சந்தி இலக்கணமும் இடம்பெற்றுள்ளன. சந்தி இலக்கணம் என்பது இரண்டு சொற்கள் சேரும்போது முதல் சொல்லின் கடைசி எழுத்திலும் இரண்டாம் சொல்லின் முதல் எழுத்திலும் ஏற்படும் மாற்றங்களைச் சொல்லுவது ஆகும்.

சொல் இலக்கணத்தில், சொல்லின் வகைகளான பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியனவும் திணை, பால், எண், இடம், காலம் முதலியனவும் தொகை (எழுத்துகள் மறைந்து வருதல்) வேற்றுமை ஆகியனவும் சொல்லப்பட்டிருக்கும்.

பொருள் இலக்கணம் என்பது தமிழ் மொழிக்கே சிறப்பாக உரிய இலக்கணம் ஆகும். தமிழ் மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களின் பாடுபொருளுக்கு எழுதப்பட்ட இலக்கணமே பொருள் இலக்கணம் ஆகும். பழங்காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட சங்க இலக்கியம் என்ற இலக்கியத் தொகுப்புக்கு எழுதப்பட்டதே பொருள் இலக்கணம் ஆகும். ஓர் ஆணும் ஒரு

பெண்ணும் கொள்ளும் காதல் அகப்பொருள் எனப்பட்டது. போர், வீரம், இரக்கம், நிலையாமை, கொடை, கல்வி முதலியவை எல்லாம் புறப்பொருள் எனப்பட்டன.

தமிழ் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுளில் இயற்றப்பட்டவையே. செய்யுள்களின் அமைப்பு, ஓசை, பாக்களின் வகைகள் முதலியவற்றைச் சொல்லுவதே யாப்பு இலக்கணம் ஆகும். சங்க காலத்திற்குப்பின் பக்தி இலக்கியக் காலத்திலும் அதற்குப் பின்பும் பல வகைச் சிறிய இலக்கிய வடிவங்கள் தோன்றின. தூது, உலா, அந்தாதி, மாலை, பிள்ளைத்தமிழ் முதலியவை இவ்வகையான இலக்கியங்களாகும். இவற்றுக்கு இலக்கணம் சொல்லுவது பாட்டியல் இலக்கணம் ஆகும்.

இலக்கியங்களில் அழகுக்காகவும் பொருள் விளங்குவதற்காகவும் உவமைகளைப் பயன்படுத்துவது கவிஞர்களின் இயல்பு. அவ்வாறு இடம்பெறும் உவமை, உருவகம் முதலியவற்றுக்கு அணி என்று பெயரிட்டு அவற்றின் இலக்கணத்தைச் சொல்லுவது அணி இலக்கணம் ஆகும்.

## 1.5 ஐந்திலக்கண நூல்கள்

இலக்கணப் பரப்பு விரிவடைந்ததைத் தொடர்ந்து பிற்காலத்தில் எழுந்த இலக்கண நூல்கள் பல, குறித்த சில இலக்கணப் பிரிவுகளை மட்டுமே கூறுவனவாக அமைந்தன. ஐந்து இலக்கணங்களையும் தனித்தனிப் பிரிவுகளாக ஒருங்கே எடுத்தாண்ட முதல் நூல் வீரசோழியம் ஆகும். கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்நூல் பெரிதும் வடமொழி இலக்கண மரபைத் தழுவியே அமைந்திருந்தது. சோழர் ஆட்சிக் காலத்தின் போது ஏற்பட்ட பெருமளவிலான வடமொழிச் செல்வாக்கே இதற்குக் காரணமாகும். இதன் பின்னர் பல ஐந்திலக்கண நூல்கள் காலந்தோறும் இயற்றப்பட்டன. அவற்றுள் இன்று அறியப்படுவன கீழ்வரும் பட்டியலில் தரப்பட்டுள்ளன:

- வீரசோழியம் - 11 ஆம் நூ.ஆ.
- தமிழ்நெறி விளக்கம் - 12 ஆம் நூ.ஆ. (முழுமையாகக் கிடைக்கவில்லை)
- நன்னூல் - 12 ஆம் நூ.ஆ. (முழுமையாகக் கிடைக்கவில்லை)
- இலக்கண விளக்கம் - 17 ஆம் நூ.ஆ.
- தொன்னூல் விளக்கம் - 18 ஆம் நூ.ஆ.
- முத்துவீரியம் - 19 ஆம் நூ.ஆ.
- சாமிநாதம் - 19 ஆம் நூ.ஆ.

## 1.6 எழுத்து

மானிடன் எப்படி எப்பொழுது பேசக் கற்றுக் கொண்டான் என்பது இன்னும் கண்டறிய முடியாத மறைபொருளாய் இருக்கிறது. நாகரிகம் வளர வளர அவன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டதால், மொழியைக் கண்டுபிடித்தான்.

ஒருவருக்கொருவர் கருத்தை வெளியிடுவதற்குக் கருவியாயிருப்பது மொழி, நாகரிகம் மேலும் வளரவே தன் அனுபவத்தை எழுதி வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்ட போது, அவன் எழுத்தைக் கண்டுபிடித்தான். தமிழ்மொழியில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் எழுத்து உண்டாயிற்று. அந்த எழுத்துக்களிலும் நாளடைவில் மாறுபாடுகள் தோன்றலாயின.

மொழி சொற்களால் ஆனது. சொல் எழுத்தால் ஆனது. ஆதலால் எழுத்தே சொல்லுக்கு அடிப்படை.

எழுத்தாவது யாது? மொழி உண்டாவதற்குக் காரணமான ஒலி கூட்டமே எழுத்து, அவ்வெழுத்து ஒலிவடிவம் என்றும், வரி வடிவம் என்றும் இருவகைப்படும். வரி வடிவம் என்பது எழுதும் எழுத்து.

தமிழெழுத்து நான்கு வகைப்படும்.

| | |
|---|---|
| உயிரெழுத்து | 12 |
| மெய்யெழுத்து | 18 |
| உயிர்மெய்யெழுத்து | 216 |
| ஆய்தஎழுத்து | 1 |
| | -------- |
| | 247 |
| | -------- |

தமிழ் அரிச்சுவடி (Tamil script) என்பது தமிழ் மொழியில் உள்ள எழுத்துகளின் வரிசை ஆகும். அரி என்னும் முன்னடை சிறு என்னும் பொருள் கொண்டது. இவை தமிழ் அகரவரிசை, தமிழ் நெடுங்கணக்கு போன்ற சொற்களாலும் குறிப்பிடப்படுகின்றன. தமிழில் 12 உயிரெழுத்துகளும் 18 மெய்யெழுத்துகளும் ஓர் ஆய்த எழுத்தும் 216 உயிர்மெய் எழுத்துகளுமாக மொத்தம் 247 எழுத்துகள், தமிழ் நெடுங்கணக்கில் உள்ளன.

தற்காலத்தில் வழங்கும் கிரந்த எழுத்துகள் தமிழ் நெடுங்கணக்கைச் சேர்ந்தவையல்ல. தமிழ் நெடுங்கணக்கில் சேராச் சில கிரந்த எழுத்துகள் (ஜ, ஷ, ஸ, ஹ வரிசைகள்) 52-உம் க்ஷ, ஸ்ரீ முதலான எழுத்துகளும் இன்று பலரும் பயன்படுத்தி வருகின்றனர். இதனைப் பலரும் எதிர்த்தும் வருகின்றனர்.

மனித உடலின் இயக்கத்திற்கு ஆதாரமாகும் இதயம் இடப்புறம் இருப்பதனால் தமிழ்மொழியின் இயக்கத்திற்கு ஆதாரமாக இருக்கும் ஒலி வடிவங்களைக் குறிக்கும் வரிவடிவத் தமிழ் எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்படுகின்றன.

## 1.7 எழுத்துக்களின் ஒலியும் வடிவமும்

நாம் நமது கருத்தை மற்றையோர்களுக்குச் சொற்களால் தெரிவிக்கின்றோம். தனித்தனிச் சொற்களாலும் அறிவிக்கின்றோம். வா, தீ, பை, போ என்பன போன்ற சொற்கள் தனியே நின்று பொருள் தந்தன. இவ்வாறு எல்லாச் சொற்களும் பொருள் தருவது இல்லை.

அன்பே கண்டேன் நான் நாயை சிவம் சென்றேன் - என்ற மேற்கூறிய சொற்கள் தனித்து நின்றும் கருத்துத் தோன்றவில்லை. ஆகவே கருத்தை விளக்குவது சொற்றொடரே.

அச்சொற்றொடருக்குக் காரணமாய் இருப்பது சொல். அன்பே கடவுள் - என்ற சொற்றொடரில் இரண்டு சொற்கள் இருக்கின்றன. அவற்றுள் “அன்பே“ என்பது ஒரு சொல். இச்சொல் “அ+ன்+ப்+ஏ“ என்ற நான்கு ஒலிகளால் அமைந்திருக்கிறது. இவ்வொலிகளே அச்சொல் உண்டாவதற்குக் காரணமாய் இருக்கின்றன. இவையே எழுத்து என்று பெயர் பெறும்.

”சொற்கள் உண்டாவதற்கு முதற் காரணமாய் இருக்கும் ஒலியே எழுத்தாம்”

தும்மல், இருமல், கனைத்தல் முதலியவைகள் ஏற்படும் பொழுது ஒலி ஏற்படுகிறது. அவ்வொலி சொற்கள் உண்டாவதற்குக் காரணமாய் இல்லை. ஆகவே அவ்வொலி எழுத்தாகாது.

எழுத்துக்கள் முதன் முதலில் ஒலி வடிவிலே இருந்தன. அப்பொழுது ஒருவரின் கருத்தை மற் றொருவர் நேரிலேயே தெரிந்து கொண்டனர். தூரத்தில் இருப்பவர்கட்குச் செய்தி அறிவிக்க முடியாத நிலையில் இருந்தது. அப்பொழுது ஒலி வடிவில் உள்ள எழுத்திற்கு வரி வடிவு கொடுத்தனர். இவ்வாறு எழுத்துக்கள் ஒலி வடிவு, வரி வடிவு என்ற இரண்டு உருவத்தைக் கொண்டன. ”வாயால் பேசப் பட்டுக் காதால் கேட்கப் படுவது ஒலி எழுத்தாம். கையால் வரி வரியாக எழுதப்பட்டுக் கண்ணால் பார்க்கப்படுவது வரி எழுத்தாம்.

## 1.8 தமிழ் எழுத்துகளும் அதன் வகைகளும்

தமிழ் இலக்கண நூல்களில் எழுத்து என்ற சொல் மொழியில் வழங்கும் ஒலிகளைக் குறிக்கவும், அவ்வொலிகளுக்குரிய வரிவடிவத்தைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வகையில் “அ“ என்ற எழுத்து ஒலிவடிவம், வரிவடிவம் இரண்டையும் குறித்து நிற்கின்றது. ஒவ்வொரு எழுத்துக்கும் ஒலிவடிவம், வரிவடிவம் இரண்டும் உண்டு.

ஒலிவடிவம் என்பது எழுத்தை உச்சரிக்கும்போது எழும் ஒலியையும், வரிவடிவம் என்பது ஒரு எழுத்து எழுதப்படும் வடிவத்தையும் குறிக்கும். தமிழ் எழுத்துகளை முதல் எழுத்து, சார்பெழுத்து என இரண்டாக வகைப்படுத்துவர்.

முதல் எழுத்து என்பது தமிழ் மொழியில் வழங்கும் அடிப்படையான ஒலிகளையும் அவற்றின் வரிவடிவங்களையும் குறிக்கும். அவ்வகையில் உயிர் எழுத்துகள் 12-ம் மெய் எழுத்துகள் 18-ம் முதல் எழுத்துகள் எனப்படும்.

சார்பெழுத்து என்பது மொழிக்கு அடிப்படையான ஒலிகளைக் குறிக்காது, இரண்டு ஒலிகளைக் குறிக்கும் உயிர்மெய் எழுத்துகளையும், சந்தர்ப்பத்துக்கு ஏற்ப நீண்டோ, குறுகியோ ஒலிக்கும் எழுத்துகளையும் குறிக்கும்.

நாம் கடைக்குப் போனால் பல பேர்கள் வேலை செய்வதைப் பார்க்கிறோம். அங்கு முதலாளி என்று ஒருவர் இருக்கிறார். மற்றையோர்கள் அவரைச் சார்ந்தவர்களே. அதுபோல எழுத்துக்களிலும் முதன்மையான எழுத்துக்கள் உண்டு. அம்முதன்மையான எழுத்துக்களைச் சார்ந்த எழுத்துக்களும் உண்டு. முதன்மையான எழுத்துக்கள் முதல் எழுத்து என்று பெயர் பெறும். அதைச் சார்ந்த எழுத்துக்கள் சார்பெழுத்து என்று பெயர் பெறும்.

### 1.8.1 முதல் எழுத்துகளின் வகை

உயிர் எழுத்து, மெய் எழுத்து என முதல் எழுத்து இரு வகைப்படும்.

#### 1.8.1.1 உயிரெழுத்து

உயிர் தானே தனித்து இயங்கும். இயங்குவதற்கு வேறு ஒன்றின் உதவியை நாடாது. மேலும் அது உடலையும் இயங்கச் செய்யும். அது போலவே உயிர் எழுத்தும் தானே இயங்குவது. வேறு ஓர் எழுத்தின் உதவியை நாடாது. அது தானே தனித்து இயங்கும். மெய் எழுத்தையும் இயங்கும்படி செய்யும். வேறு ஒன்றின் உதவியை நாடாது, தானே தனித்து இயங்கி, மெய்யெழுத்தையும் இயங்கும் படிச் செய்கிற அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ,ஏ, ஐ, ஒ, ஔ - என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எழுத்தாம்.

உயிரெழுத்துகளில் குற்றெழுத்து உண்டு; நெட்டெழுத்து உண்டு; சுட்டெழுத்து உண்டு; வினா எழுத்து உண்டு. வினா எழுத்தில் உயிர்மெய் எழுத்தாகிய யா என்னும் எழுத்தில் இனம் குறித்து சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதறிக.

குறுகிய ஓசையை உடைய அ, இ, உ, எ, ஒ - என்ற ஐந்து எழுத்துக்களும் குற்றெழுத்தாம். இதற்குக் குறில் என்ற வேறு பெயர் உண்டு. இவற்றை உச்சரிக்கும் கால அளவு ஒரு மாத்திரையாகும். மாத்திரை என்பது கை நொடிப் பொழுது அல்லது கண் இமைக்கும் பொழுதைக் குறிக்கும்.

அதாவது, ஒரு மாத்திரை ஒரு வினாடி நேரத்தைக் குறிக்கும். ஆயினும், இது ஒலி ஆய்வுக்குப் பயன்படும் நவீன கருவிகளைப் பயன்படுத்தி உறுதிசெய்யப்பட்ட கூற்று அல்ல.

குற்றெழுத்து (Shirt vowels) அ, இ, உ, எ, ஒ குற்றெழுத்து என்பது குறுகிய ஒலியுடைய எழுத்து, குற்றெழுத்தைக் குறில் என்று கூறுவர்.

நீண்ட ஓசையை உடைய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ - என்ற ஏழு எழுத்துக்களும் நெட்டெழுத்தாம். இதற்கு நெடில் என்ற வேறு பெயர் உண்டு. இவற்றை உச்சரிக்கும் கால அளவு இரண்டு மாத்திரையாகும்.

நெட்டெழுத்து (Long vowels) ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ஔ நெட்டெழுத்து என்பது நீண்ட ஒலியுடைய எழுத்து நெட்டெழுத்தை நெடில் என்று சொல்லுவர்.

உயிர்க்குறில், உயிர்நெடில் இவற்றின் வேறுபாட்டை யாரும் புறக்கணித்தல் கூடாது. இவ்வேறுபாட்டை நன்கறிய வேண்டும். அல்- இருள், ஆல்- ஆலமரம்- இவ்வேறுபாடு அறிந்து எழுதாவிட்டால் பொருள் மாறுபடும்.

#### 1.8.1.1.1 சுட்டெழுத்து (Demonstrative Letters) :

அ, இ, உ சுட்டிக்காட்டுவது சுட்டெழுத்து.

அப்பக்கம், இப்பக்கம், உப்பக்கம்

#### 1.8.1.1.2 வினா எழுத்து: (Interrogative Letters)

எ, ஏ, ஆ, ஓ, யா வினாவுவது வினா எழுத்து.

எவன்? எது? அவனா? அவனோ? யாது?

குறிப்பு: தமிழில் வினா அமைப்பது மிகவும் எளிது. இது தமிழுக்குள்ள சிறப்புகளுள் ஒன்றாகும்.

வருவான் ஆ வருவானா?

கேட்பாய் ஆ கேட்பாயா?

கொடுத்தேன் ஓ கொடுத்தேனோ?

எடுத்தாய் ஓ எடுத்தாயோ?

ஆங்கிலத்தில் வினா அமைப்பது கடினமானது.

### 1.8.1.2. மெய்யெழுத்து

உடம்பு தனித்து இயங்காது. உயிரின் உதவி பெற்றே இயங்கும். அது போல மெய்யெழுத்தும் தானே தனித்து இயங்காது. அது உயிர் எழுத்தின் உதவி கொண்டே ஒலிக்கும் தானே தனித்து இயங்காது, தலையில் புள்ளியைக் கொண்டதாய், உச்சரிக்கக் கூடிய, உயிர் எழுத்தின் உதவியால் இயங்கும்.

"க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன், என்ற பதினெட்டு எழுத்துக்களும் மெய் எழுத்தாம்."

புள்ளி வைத்து எழுதப்படுகின்றன. உயிர் ஒலிகளின் துணையின்றி எல்லா எழுத்துகளும் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய எல்லா இடங்களிலும் வருவதில்லை. ஒரு எழுத்து ஏனைய எல்லா எழுத்துகளுடன் சேர்ந்தும் சொற்களில் இடம் பெறுவதில்லை. எந்த எந்த எழுத்துக்கள் சொல்லின் முதலில் இடம்பெறும், எந்த எந்த எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும், சொல்லுக்கு இடையில் எந்த எந்த எழுத்துகள் எந்த எந்த எழுத்துக்களுடன் சேர்ந்து வரும் என்பவற்றை நாம் வரையறுத்துக் கூறமுடியும். இவ்வாறு சொல்லாக்கத்தில் எழுத்துகள் பயின்று வரும் முறைமையே எழுத்தின் பரம்பல் எனப்படுகின்றது.

### 1.8.1.2.1 மெய்யெழுத்துக்களின் மூவகை

மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் வலி, மெலி, இடை என மூவகைப்படும். பதினெட்டு மெய் எழுத்துக்களையும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உச்சரிப்பர்.

### 1.8.1.2.1.1 வல்லினம்

சுவாசப்பையில் இருந்து வெளிவரும் காற்றை பேச்சு உறுப்புகளால் முற்றாகத் தடைசெய்து திடீரென வெளியிடுவதன் மூலம் இவற்றை உச்சரிக்கிறோம். உதாரணமாக ப் என்ற எழுத்தை உச்சரிக்கும்போது காற்றை இரண்டு உதடுகளாலும் முற்றாகத் தடைசெய்து திடீரென வாய்வழியாக வெளியேற்றுகின்றோம். அதனால் இவற்றை வெடிப்பொலிகள் அல்லது தடை ஒலிகள் என்றும் சொல்லுவர்.

“க்“ என்ற எழுத்தை உச்சரித்துப்பார். அது வலிய ஓசையைக் கொண்டிருக்கிறதல்லவா? இவ்வெழுத்தைப் போலவே ச், ட், த், ப், ற் என்ற எழுத்துக்களும் கொண்டிருக்கின்றன. இவைகளே வல்லெழுத்துகள்.

வலிய ஓசையைக் கொண்ட க், ச், ட், த், ப், ற் என்ற ஆறு எழுத்துக்களும் வலி என்று பெயர் பெறும். வல்லெழுத்து, வல்லினம் என்றும் இதைக் கூறுவர்.

**“வல்லினம் கசட தபற வென ஆறே”**

### 1.8.1.2.1.2 மெல்லினம்

இவ்வெழுத்துகளை உச்சரிக்கும்போது காற்றைப் பேச்சுறுப்புகளால் தடைசெய்து மூக்கு வழியாக வெளியேற்றுகின்றோம். உதாரணமாக ம் என்ற எழுத்தை உச்சரிக்கும்போது இரண்டு உதடுகளாலும் காற்று தடை செய்யப்பட்டு மூக்குவழியாக வெளியேற்றப்படுகின்றது. மூக்கைப் பொத்திக்கொண்டு இந்த ஒலிகளை நாம் சரியாக உச்சரிக்க முடியாது. அதனால் இவை மூக்கொலிகள் என்றும் அழைக்கப்படும்.

"ங்" என்ற எழுத்தை உச்சரித்துப்பார். அது மெலிய ஓசையைக் கொண்டிருக்கிற தல்லவா? இவ்வெழுத்தைப் போலவே "ஞ், ண், ந், ம், ன் என்ற எழுத்துக்களும் கொண்டிருக்கின்றன. இவைகளே மெல்லெழுத்துக்கள்.

மெலிந்த ஓசையைக் கொண்ட ங், ஞ், ண், ந், ம், ன் என்ற ஆறு எழுத்துக்களும் மெலி என்று பெயர் பெறும். மெல்லெழுத்து, மெல்லினம் என்றும் இதைக் கூறுவர்.

**"மெல்லினம் ஙஞண நமன எனஆறே"**

### 1.8.1.2.1.3 இடையினம்

வல்லினம், மெல்லினம் இரண்டுக்கும் இடைப்பட்ட வகையில் உச்சரிக்கப்படுவதால் இவை இடையினம் எனப்பட்டன.

"ய்" என்ற எழுத்தை உச்சரித்துப்பார். இது வலிந்து உச்சரிக்கின்றதா? இல்லை. அல்லது இது மெலிந்து உச்சரிக்கின்றதா? அதுவும் இல்லை இரண்டிற்கும் இடையிட்டு உச்சரிக்கின்றது. இதைப் போலவே ர், ல், வ், ழ், ள் என்ற எழுத்துக்களும் உச்சரிக்கின்றன. இவைகளே இடை எழுத்துக்கள்.

வலிந்தும் மெலிந்தும் உள்ள ஒலியைக் கொள்ளாது, இரண்டிற்கும் இடைப்பட்ட ஒலியை உடைய ய், ர், ல், வ், ழ், ள் என்ற ஆறு எழுத்துக்களும் இடை என்று பெயர் பெறும். இடையெழுத்து, இடையினம் என்றும் இதைக் கூறுவர்.

**"இடையினம் யரல வழள என ஆறே"**

## 1.8.2 சார்பெழுத்து

தொல்காப்பியர் வழங்கிய முதல் நூலிலேயே முதலெழுத்து, சார்பெழுத்து ஆகிய இரண்டு பற்றிக் குறிப்பாகப் பேசுகிறார். அ - கரம் முதலாக ன - கரம் ஈறாக உள்ள முப்பது எழுத்துகளையும் முதலெழுத்து என்றும் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் மூன்றினையும் சார்பெழுத்துகள் என்றும் உரையாசிரியர்கள் விளக்கம் கூறுவர். சார்பெழுத்து என்ற சொல்லைத் தொல்காப்பியர் நேரடியாக ஆளவில்லை எனினும் பொருளில் முதல் நூற்பாவில் "சார்ந்துவரல் மூன்று" என்ற தொடரைப் பயன்படுத்தியிருப்பர் என்பது நமக்குத் தெளிவாக விளங்குகிறது. இலக்கணப் புலவராகிய நன்னூலார் சார்பெழுத்துச் சொல்லை ஒரு இலக்கணக் கலைச்சொல்லாகக் கையாளுகிறார். சார்பெழுத்து என்ற கலை தொல்காப்பியர் காலத்தில் உருவாகவில்லை. சார்பெழுத்து பற்றித் தெளிவான ஒரு கோட்பாடு இருந் திருக்கிறது என்பது தெளிவாக விளங்குகிறது.

தொல்காப்பியர் எழுத்துகளை இரண்டு பெரும் பிரிவாகப் பிரித்துக் கொண்டார். முதற் பிரிவில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் பதினெட்டு மெய்யெழுத்துகளையும் சேர்த்து எழுத்தென்று சொல்லப்படுவன முப்பது என்றார். இவற்றையே பிற்காலத்தார் முதலெழுத்து

என்றனர். இரண்டாவது பிரிவில் குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றினையும் சேர்த்து "சார்ந்துவரல் மரபின் மூன்று" என்று குறிப்பர். இவற்றையே பிற்காலத்தார் சார்பெழுத்து என்றனர். தொல்காப்பியர் கூறும் முதலெழுத்துகள் தமிழ் மொழியின் வேர்ச்சொற்களுக்கும் அடிகளுக்கும் உறுப்பாக வருவன. சார்பெழுத்துகள் அவ்வாறு வர இயலாதனவாய்க் காணப்படுகிறது.

### 1.8.2.1 சார்பெழுத்து வகைகள்

12 உயிர் எழுத்துகளும் 18 மெய் எழுத்துகளும் தமிழ் மொழிக்கு அடிப்படையான எழுத்துகள். அதனால் இவை முதல் எழுத்துகள் என நமது இலக்கணகாரரால் வகைப்படுத்தப்பட்டன. இவை தவிர்ந்த உயிர் மெய் எழுத்துகளும், ஆய்த எழுத்தும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப தமக்கு உரிய மாத்திரையை விட நீண்டு அல்லது குறுகி ஒலிக்கும் உயிர் அல்லது மெய் எழுத்துகளும் சார்பு எழுத்துகள் எனப்பட்டன. நன்னூல் 10 வகையான சார்பெழுத்துகளைப் பற்றிக் கூறுகின்றது.

### 1.8.2.1.1 உயிர்மெய்

தமிழ் மொழியிலே உயிர் ஒலிகளைக் குறிக்கத் தனி எழுத்துகளும் மெய் ஒலிகளைக் குறிக்கத் தனி எழுத்துகளும் உள்ளன. இவற்றை முறையே உயிர் எழுத்து, மெய் எழுத்து என்போம். உயிரும் மெய்யும் சேர்ந்த கூட்டு ஒலிகளைக் குறிக்கவும் தமிழில் தனி எழுத்துகள் உள்ளன. இவற்றையே உயிர்மெய் எழுத்துகள் என்போம்.

(எ.டு) அ, ஆ, இ உயிர் எழுத்துகள்

க், ங், ச் மெய் எழுத்துகள்

க, ங, ச உயிர் மெய் எழுத்துகள்

தமிழ், மலையாளம், ஹிந்தி முதலிய இந்திய மொழிகள் இந்த மூன்று வகையான எழுத்துகளையும் பயன்படுத்துகின்றன. ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகள் எல்லாம் உயிர் எழுத்துகளையும் மெய் எழுத்துகளையும் மட்டுமே பயன்படுத்துகின்றன. தமிழில் முருகன் என நான்கு எழுத்துகளால் எழுதும் சொல்லை ஆங்கிலத்தில் Murukan என ஏழு எழுத்துகளால் எழுதுகின்றோம். தமிழில் உயிர்மெய் எழுத்துகள் தேவை இல்லை. உயிர், மெய் ஆகிய முதல் எழுத்துகள் மட்டும் போதும் என்பவர்களும் உள்ளனர். அவர்கள் கூறுவதுபோல் உயிர் மெய் எழுத்துகளைத் தவிர்த்து முருகன் என்ற சொல்லை எழுதினால் அது ஆங்கிலம் போல் பின்வருமாறு ஏழு எழுத்துகளால் அமையும். ம்உர்உக்அன்

உயிரையும் மெய்யையும் சேர்த்து ஒரு எழுத்து உண்டாக்கினர். இக்கூட்டெழுத்தே உயிர்மெய் எனப்படும். பதினெட்டு மெய்யெழுத்துக்களின் மேலும் பன்னிரண்டு உயிர்

எழுத்துக்களும் தனித்தனியாகச் சேரும். அவ்வாறு தனித்தனியாகச் சேரும் பொழுது இருநூற்றுப் பதினாறு எழுத்துக்கள் உண்டாகின்றன.

உயிர்மெய்யெழுத்துகள் என்பவை உயிரும் மெய்யும் சேர்ந்த எழுத்துக்கள்

க் + அ = க

க் + ஆ = கா

உயிர்மெய்யெழுத்திலும் குறில் நெடில்கள் உண்டு. க - குறில். கா-நெடில். குறில் நெடில் வேறுபாடு அறிந்து எழுத வேண்டும். தொல் என்பதற்கும் தோல் என்பதற்கும், மிகுந்த வேறுபாடு இருப்பதைக் காண்க. தொல்காப்பியம் என்பதை தோல்காப்பியம் என்று எழுதினால் நகைப்பார்கள்.

க் + அ = க இது வல்லின உயிர்மெய்

ம் + அ = ம இது மெல்லின உயிர்மெய்

ல் + அ = ல இ∴து இடையின உயிர்மெய்

உயிர்மெய்யினும் இம்மூவினம் உண்டு என்பதறிக.

### 1.8.2.1.1.1 உயிர்மெய் எழுத்துகளின் அமைப்பு

மெய் எழுத்துகளுடன் உயிர் எழுத்துகளுக்குரிய துணைக் குறிகள் இணைந்து உயிர்மெய் எழுத்துகள் அமைகின்றன. ஓர் உயிர் எழுத்துக்கு ஒன்று அல்ல பல துணைக் குறிகள் உள்ளன. உயிர் எழுத்துகளின் துணைக் குறிகள் மெய் எழுத்துகள் புள்ளி நீங்கிய வடிவம் பெறுகின்றன.

### 1.8.2.1.2 ஆய்தம்

முக்கோண அமைப்பில் உள்ள மூன்று புள்ளி கொண்ட ∴ எழுத்து வடிவம் ஆய்தம் எனப்படுகின்றது. இது ஆங்கில h அல்லது கிரந்த ஹ் போல் ஒலிக்கப்படுகின்றது. தனிக் குற்றெழுத்துக்கும் வல்லினத்துக்கும் இடையே ஆய்தம் வரும் என்று தமிழ் இலக்கண நூல்கள் கூறும். அ∴து, இ∴து, உ∴து, எ∴கு, க∴சு, ம∴கான் போன்ற சொற்கள் பழந்தமிழில் வழங்கின. ஆய்தம் மெய்போல் அரை மாத்திரை அளவு ஒலிக்கும் என்பர். தற்காலத் தமிழில் ஆய்த எழுத்து சிறுபான்மையாக வழக்கில் உண்டு. உம்: அ∴து, இ∴து, எ∴கு, நு∴மான்

ஆய்த எழுத்தும் தமிழில் உள்ள வேர்ச்சொல் அல்லது அடிச் சொல்லின் அங்கமாக அமைவதில்லை. எ∴கு என்ற சொல்லைப் பார்க்கும் போது இந்தக் கருத்தில் ஐயம் எழலாம், எ∴கு என்ற சொல் எவ் + கு என்று பிரிக்கத் தக்க வகையிலேயே அமைந்துள்ளது. எவ் என்பதில் உள்ள வகரம் வருமொழியில் ககரம் வரும்பொழுது

ஆய்தமாக ஒலிக்கிறது. அவ்- கடிய , அஃகடிய என்று மாறும் என்பதற்குத் தொல்காப்பியப் பெருந்தகையே சொல்வது இங்கு நினையத் தகுந்தது. எவ் சொல்லும் ஏ என்ற சொல்லும் ஒரு பொருள். சொல்லின் முதன்மைப் பொருள் இரும்பு என்பதேயாம். பிற்காலத்தில் இச்சொல் இரும்பினாலாகிய அம்பைக் குறித்தது. அஃது இஃது முதலாய சொற்களும் கஃசு, கஃபு முதலிய சொற்களும் மேற்கூறியவாறே பிரிக்கத்தக்க சொற்கள் என்பதையும் ஒரு மொழியில் வல்லினம் வரும் போது நிலை மொழியில் உள்ள வகரவீறு ஆய்தமாக ஒலிக்கிறது என்பதையும் இங்கே நன்கு எண்ணிப் பார்த்து உணர்ந்து கொள்ளலாம்.

முன்பே நாம் குறிப்பிட்டபடி, சார்பெழுத்துகள் வேர்ச் சொல் அல்லது அடிச்சொல்லில் ஒரு அங்கமாக வாரா என்பதும் அவை தொடர்ச்சொல்லிலேயே அமைகின்றன என்பதும் இப்போது நன்கு விளங்கியிருக்கும். இதையே சற்று வேறு விதமாகச் சொன்னால் சார்பெழுத்துகளைத் தமிழ் மொழியின் அடிப்படை எழுத்துகளாகக் கொள்ள இயலாது எனலாம். இந்த எழுத்துக்களுக்குத் தமக்கென்று தனிப்பட்ட பிறப்பிலக்கணம் இல்லை. இன்ன உறுப்பு, இன்ன உறுப்போடு இன்ன முறையில் பொருந்துவதா இன்ன எழுத்து பிறக்கும் என்று தொல்காப்பியர் முதலெழுத்துகளுக்குப் பிறப்பிலக்கணம் கூறுகிறார்.

ஆனால் சார்பெழுத்துக்களுக்கு அவர் அவ்வாறு பிறப்பிலக்கணம் கூறவில்லை. சார்பெழுத்துகள் என்று தொல்காப்பியர் மூன்றை மட்டும் குறிப்பிட்டிருப்பதையும் பிற்கால இலக்கண ஆசிரியர்கள் சார்பெழுத்துகளைப் பற்றிப் பல்வேறு வகையில் பேசியிருப்பதையும் இங்கே சற்று எண்ணிப் பார்ப்பது தகும்.

தொல்காப்பிய ஒலி வடிவ அடிப்படையில் சார்பெழுத்துகளைப் பற்றிப் பேசியிருக்கிறார் என்று தெளிவாக மேலே விளக்கிக் காட்டினோம். பிற்கால இலக்கணப் புலவர்கள் ஒலிவடிவ அடிப்படை, அடிப்படை ஆகிய இரண்டுக்குமே சார்பெழுத்துகளைப் பற்றிப் பலவாறாக கூறுகின்றார்கள். சார்பெழுத்துகளை நன்னூலார் பத்து வகையாகப் பிரித்திருக்கிறார். அவற்றையே அவர் 369 என்று விரித்துப் பேசுகிறார். 12 சார்பெழுத்துகளை மிகக் குறைந்த எண்ணிக்கையில் வகைப்படுத்தியவர் முத்துவீரிய ஆசிரியர். மிகுதியான எண்ணிக்கையில் வகைப்படுத்தியவர் நன்னூலார். முத்துவீரிய ஆசிரியரின் கருத்துப்படி உயிர்மெய் ஆய்தம் ஆகிய இரண்டு மட்டுமே சார்பெழுத்துகளாம். இவர் வரி வடிவ அடிப்படையில் மட்டும் சார்பெழுத்துகளைப் பிரித்திருக்கிறார்.

தமிழ் நெடுங்கணக்கில் உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது போக எஞ்சிய 217 எழுத்துகளையும் (உயிர் மெய் 216, ஆய்தம் 1) முத்துவீரிய ஆசிரியர் சார்பெழுத்தாகக் கொண்டிருக்கிறார். 13 வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்களில் சார்பெழுத்துகளைப் பற்றிக் கூறப்பட்டுள்ள செய்திகளைத் தொகுத்து எண்ணிப் பார்த்தால் இவர்கள் எல்லோரும் தொல்காப்பியரையும் சாராமல் முத்து வீரியமுடையாரையும் சாராமல் வேறொரு மூன்றாவது நெறியில் நிற்கிறார்கள் என்பது விளங்கும். இவர்கள் தமக்குரிய ஒலியினின்றும் குறுகி ஒலித்த எழுத்துகளையும் நீண்டொலித்து அளபெடுத்த எழுத்துகளையும் தமக்கெனத் தனி

வரிவடிவம் பெற்ற உயிர்மெய் எழுத்துகளையும் முதலெழுத்துகளோடு அடங்காமல் தனியே நின்று தனக்கெனத் தனி வரி வடிவம் பெற்ற ஆய்த எழுத்தையும் சார்பெழுத்து என்று கொண்டனர். அவற்றை மேலும் வகைப்படுத்தி விரித்துப் பேசும்போது அவை மொழியில் தோன்றும் இடங்களுக்கு ஏற்பவும் அவற்றுக்கு எய்திய வரிவடிவங்களுக்கு ஏற்பவும் அவற்றை வகைப்படுத்திச் சொல்லுகிறார்கள்.

இதுகாறும் கூறியவற்றால் தொல்காப்பிய சார்பெழுத்துக் கோட்பாடு ஏனைய இலக்கணப் புலவர்களின் சார்பெழுத்துக் கோட்பாட்டினின்றும் பெரிதும் வேறுபட்ட ஒன்று என்பதும் அது முழுக்க முழுக்க ஒலியியல் அடிப்படையிலும் சந்தி இலக்கண அடிப்படையிலும் அமைந்த ஒன்று.

எ∴கு - இச்சொல்லில் மத்தியில் இருக்கும் எழுத்தைக் கவனி. இது சமைத்தற் கருவியாகிய அடுப்புக் கட்டி போன்று இருக்கின்றது. இது போரில் உபயோகப்படும் கேடயத்தில் உள்ள மூன்று ஆணிகள் போன்றும் காணப்படுகின்றது. இது இவ்விருவகை ஆய்தங்களைப் போன்று இருப்பதால் இது ஆய்தவெழுத்து என்று பெயர் பெற்றது.

இச்சொல்லின் முதலில் “எ“ என்ற எழுத்து இருக்கின்றது. இது குற்றெழுத்தாகும். இறுதியில் “கு“ (க்+உ) இருக்கின்றது. இது வல்லெழுத்தாகும் இவ்வாறு இந்த ஆய்த வெழுத்து குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையிலேயே எப்பொழுதும் வரும். இது உயிர் எழுத்தையும், மெய்யெழுத்தையும் சார்ந்து வந்தாலும் உயிருமாகாமல், மெய்யுமாகாமல் தனி நிலையாகவே வரும். இதற்குத் தனி நிலை என்ற பெயரும் உண்டு.

மூன்று புள்ளி வடிவால் ஆகிய எழுத்தே ஆய்தவெழுத்தாம். இது தனித்து வழங்காது. இது குற்றெழுத்திற்கும் வல்லெழுத்திற்கும் இடையில் தான் வரும்.

### 1.8.2.1.3 உயிரளபெடை

அளபெடை என்பது எழுத்தின் ஒலிக்கு மாத்திரை கூட்டுதல். செய்யுளில் இசையைக் கூட்டுவதற்குப் பயன்படுத்தினால் அது செய்யுளிசை அளபெடை. இதனை இசைநிறை அளபெடை என்றும் வழங்குவர். வினையெச்ச வாய்பாட்டை இசையாக்கி ஒலித்துக் காட்டுவது சொல்லிசை அளபெடை. இந்த இரு காரணங்களும் இல்லாமல் வெறுமனே இனிய பாரதியார் இசைக்காக இசை கூட்டி எழுதுதல் இன்னிசை அளபெடை. இவற்றை எழுத்துப் பாங்கு நோக்கி உயிரளபெடை, ஒற்றளபெடை என இரண்டாகப் பகுத்துக் காண்பர்.

பழங்காலத்தில் தமிழ் மொழியில் இலக்கியங்கள் பெரும்பாலும் செய்யுள்களாகவே இருந்தன. செய்யுள், ஓசையை அடிப்படையாகக் கொண்டது. குறள் வெண்பா முதல் பல வகையான செய்யுள் வடிவங்கள் இருந்தன. செய்யுளில் ஓசை குறையும் இடங்களில் ஓசையை நிறைவு செய்வதற்காக எழுத்துகள் நீண்டு ஒலிக்கும். இவ்வாறு நீண்டு ஒலிப்பதை, அளபெடுத்தல் என்று கூறுவர். அளபெடை இரண்டு வகைப்படும். அவை, 1. உயிரளபெடை 2. ஒற்றளபெடை என்பவை ஆகும்.

நெடில் எழுத்துகளே அளபெடுக்கும். நெடில் எழுத்து அளபெடுக்கும் போது, அந்த நெடில் எழுத்திற்கு இனமான குறில் எழுத்து அளபெடுப்பதற்கு அடையாளமாக அதன் அருகில் எழுதப்படும். செய்யுளில் இவ்வாறு எழுதப்பட்டுள்ள இடங்களில் நீட்டி ஒலிக்க வேண்டும் என்பது அதன் கருத்தாகும். நெடில் எழுத்து இரண்டு மாத்திரை. அளபெடுக்கும்போது அதற்கு இனமான குறில் எழுத்தையும் எழுதுவதால், குறிலுக்கு உரிய ஒரு மாத்திரையும் சேர்த்து உயிரளபெடை மூன்று மாத்திரை நேரம் ஒலிக்கும்.

இன எழுத்துகள் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என்பனவாகும், ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் இணையான குறில் இல்லை என்பதால், முறையே இகரம், உகரம் ஆகியவை அடையாளமாக எழுதப்படும். மாஅயோள் பேஎய்ப் பக்கம் இசை கெடின் மொழி முதல் இடை கடை நிலை நெடில் அளபு எழும் அவற்று அவற்று இனக் குறில் குறியே (நன்னூல் 91) (பொருள்: செய்யுளில் ஓசை குறையும்போது சொல்லுக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும் நெடில் எழுத்து நீண்டு ஒலிக்கும். அதற்கு அடையாளமாகக் குறில் எழுத்து எழுதப்படும்.) பொதுவாக, செய்யுளில் ஏற்படும் ஓசைக் குறைவை நிறைவு செய்யவே அளபெடுக்கிறது. எனினும் வேறு காரணங்களுக்காக அளபெடுப்பதும் உண்டு.

நெட்டெழுத்துக்கள் ஏழும் மொழிக்கு முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களிலும் அளபெடுக்க (7X3 = 21) இருபத்தொன்றாகும். இவற்றுள் ஔகாரம் மொழிக்கு இடையிலும் கடையிலும் வராததால். இவ்விரண்டையும் கழிக்க இசைநிறை அளபெடை 19 ஆகும். மேற்கூறியவற்றுடன் இன்னிசை அளபெடை ஒன்றும் சொல்லிசை அளபெடை ஒன்றும் சேர்க்க உயிரளபெடை இருபத்தொன்றாகும்.

செய்யுளிலே ஓசை குறையுளம் இடத்து நெட்டுயிர்கள் சொல்லின் முதல், இடை, கடை நிலைகளில் தமக்குரிய இரண்டு மாத்திரையை விட நீண்டொலித்தல் உயிர் அளபெடை எனப்படும். ஒரு நெட்டுயிர் நீண்டொலிப்பதற்கு அடையாளமாக அதற்கு இனமான குறில் அதன் பக்கத்தில் எழுதப்படும். பழந்தமிழ் இலக்கியங்களில் இதற்குப் பல உதாரணங்களைக் காணலாம்.

1. தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை.

2. ஓஒதல் வேண்டும் ஒளி மாழ்கும் செய்வினை

3. அனிச்சப்பூ கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை

மேற்காட்டிய பாடல் வரிகளில் தொழாள் தொழாஅள் ஓதல் ஓஒதல் படா→ படாஅ என அளபெடுத்தன. அளபு மாத்திரை என்பன ஒரு பொருட் சொற்கள் அளபெடை, (அளபு எடுத்தல்) என்பது ஓர் எழுத்து தனக்கு உரிய மாத்திரையில் இருந்து நீண்டு ஒலித்தல் எனப் பொருள்படும். தற்காலத் தமிழில் அளபெடையை யாரும் பயன் படுத்துவதில்லை.

உயிரளபெடை நான்கு வகைப்படும். 1. இயற்கை அளபெடை 2. சொல்லிசை அளபெடை 3. இன்னிசை அளபெடை 4. செய்யுளிசை அளபெடை.

### 1.8.2.1.3.1 இயற்கை அளபெடை

இயல்பாகவே சொல்லில் வரும் எழுத்துகள் அளபெடுத்து நின்றால் அதை இயற்கை அளபெடை என்று கூறுவர்.

ஆடூஉ, மகடூஉ, இதில் குழு ஈ குழுவு என்னும் சொல் குழூஉ எனத் தொன்று தொட்டு மருவி வந்துள்ளது.

மரூஉ, ஒரூஉ, குழூஉக்குறி, குரீஇ இவை இயற்கையாகவே அளபெடுப்பதால் இயற்கை அளபெடை எனப்படுகின்றன.

### 1.8.2.1.3.2 சொல்லிசை அளபெடை

ஒரு பெயர்ச் சொல்லை வினை எச்சமாக மாற்றுவது சொல்லிசை அளபெடை எனப்படும். நசை என்பது விருப்பம் என்று பொருள்படும். அதையே நசைஇ என்று அளபெடை ஆக்கினால், விரும்பி என்று பொருள் தரும். இதுவே சொல்லிசை அளபெடை ஆகும்.

தொகை தொகைஇ (தொகுத்து) வளை வளைஇ (வளைத்து)

### 1.8.2.1.3.3 இன்னிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசை தருவதற்காக குறில் எழுத்துகள் நெடில் எழுத்துகள் ஆகி, அளபெடுத்தல் இன்னிசை அளபெடை ஆகும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற்று ஆங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

கெடுப்பதும் என்ற சொல்லில் உள்ள து என்ற குறில் எழுத்து, தூ என நெடில் எழுத்தாகி, கெடுப்பதூஉம் என அளபெடுத்தல் இன்னிசை அளபெடை ஆகும்.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்

உண்பதூஉம் இன்றிக் கெடும்

இந்தக் குறளில் உள்ள உடுப்பதூஉம்இ உண்பதூஉம் என்ற இரண்டும் இன்னிசை அளபெடைகளே.

### 1.8.2.1.3.4 செய்யுளிசை அளபெடை

செய்யுளில் ஓசை குறையும்போது அளபெடுத்து ஓசையை நிறைவு செய்வது செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை ஆகும்.

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை

இந்தக் குறளில் தொழாள் என்று இயல்பாக இருந்தால், அது ஒரே நிரை அசை ஆகிவிடும். இந்த இடத்தில் ஓசை கெடாமல் இருக்க நிரை, நேர் என்ற இரு அசைகள் தேவை. தொழாஅள் என்று அளபெடுத்தபின் தொழா என்பது நிரை அசையாகவும், அள் என்பது நேர் அசையாகவும் அமைந்து ஓசையை நிறைவு செய்கின்றன.

செய்யுளிசை அளபெடையை அறிந்துகொள்ள யாப்பிலக்கணம் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். யாப்பிலக்கணப் பாடங்களில் அளபெடை பற்றி விரிவாக விளக்கப்படும்.

பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை

ஆஅதும் என்னு மவர்

நற்றாள் தொழாஅர் எனின்

என்று வரும் இவையும் செய்யுளிசை அளபெடை ஆகும். செய்யுளிசை அளபெடை சொல்லின் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வரும். செய்யுளிசை அளபெடையை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

அளபெடைச் சொற்களைச் சொல்லும் போது, நெடில் எழுத்தைத் தனியாகவும் அதனோடு ஒட்டி வரும் குறில் எழுத்தைத் தனியாகவும் ஒலிக்கக் கூடாது. இரண்டு எழுத்துகளின் ஓசையும் ஒட்டி வரும்படியே நீட்டி ஒலிக்க வேண்டும். அளபெடையில் எழுத்துகளை விட்டு இசைப்பது ஓசை இனிமையைக் கெடுக்கும்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்று ஆங்கே

எடுப்பதூஉம் எல்லாம் மழை

### 1.8.2.1.4 ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போது அவ்வோசையை நிறைவு செய்வதற்கு மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து நீண்டு ஒரு மாத்திரை ஒலியாக ஒலிப்பது ஒற்றளபெடையாகும்.

**“ஙஞண நமன வயலள ஆய்தம்**

**அளபாம் குறிலிணை குறில்கீழ் இடைகடை**

**மிகவே அவற்றின் குறியாம் வேறே”நூற்பா 92**

செய்யுளில் ஓசை குறையின் ங, ஞ, ண, ந, ம, ன, வ, ய, ல. ள. ஆய்தம் என்னும் பதினோ எழுத்துக்களும் குறிலிணையின் பின்னும், குற்றெழுத்துக்கள் பின்னும் மொழிக்கு இ அவ்வோசையை நிறைவு செய்வதற்காக தத்தம் மாத்திரையின் மிகுந்து ஒலிக்கும். அளபெடுத்தமையை அறிதற்கு அவற்றுக்குப்பின் அவ்வவ் மெய்யெழுத்துக்களே இ

(எ.டு இலங்ங்கு வெண்பிறை - குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில்யிலும்

எங்ங்கு இறைவன் - குறிற்கீழ் மொழிக்கு இடையில் அளபெடுத்தது.

மடங்ங் கலந்த- குறிலிணையின் கீழ் மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது.

அங்ங் கனிந்த - குறிற்கீழ் மொழிக்கு இறுதியில் அளபெடுத்தது.

விலக்.ஃ.ஃ.கி வீங்கிருள் - குறிலிணையின் கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தல்.

எ.ஃ.ஃ.கு இலங்கிய - குறிற்கீழ் மொழிக்கு இடையில் ஆய்தம் அளபெடுத்தது. மேற்கூறியவாறு பதினோரு எழுத்துக்களும் குறிலிணைக்கீழ் இடை, குறிற்கீழ் இடை குறிலிணைக்கீழ் கடை, குறிற்கீழ்க் கடை என்னும் நான்கிடத்தும் அளபெடுக்க (11X4 = 44) ஒற்றளபெடை நாற்பத்து நான்காகும். ஆய்தம் மொழிக்கு இறுதியில் வராது. எனவே, குறிலிணைக்கீழ்க் கடை, குறிற்கீழ்க் கடை என்னும் இரண்டிடத்திலும் ஆய்தத்தைக் கழிக்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டாகும்.

செய்யுளில் ஓசை குறையும் இடத்து மெல்லின எழுத்துக்கள் ஆறும், ர், ழ் தவிர்ந்த நான்கு இடையின எழுத்துகளும், ஆய்தமும் தமக்குரிய அரை மாத்திரையில் இருந்து நீண்டொலித்தல் ஒற்றளபெடை எனப்படும். ஒரு மெய் நீண்டு ஒலிப்பதற்கு அடையாளமாக அதே மெய் அதன் பக்கத்தில் எழுதப்படும்.

மெய், ஒற்று என்பன ஒரு பொருட் சொற்கள். பழந்தமிழ் இலக்கியங்களில் ஒற்றளபெடைக்குப் பல உதாரணங்களைக் காணலாம். இலங்ங்கு வெண்பிறை என்ற தொடரில் இலங்கு என்ற சொல் இலங்ங்கு என நீண்டொலித்தது. தற்காலத் தமிழில் ஒற்றளபடை பயன்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை.

### 1.8.2.1.5 குற்றியலுகரம்

உகர உயிரானது தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலித்தால் குற்றியலுகரம் எனப்படும். உகரத்தை ஒலிக்கும் போது இதழ் குவியும். ஆனால் குற்றியலுகரத்தை ஒலிக்கும் போது இதழ் குவிவதில்லை.

**“நெடிலொடு ஆய்தம் உயிர்வலி மெலியிடைத்**

**தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்**

**அ.ஃ.கும் பிறமேன் தொடரவும் பெறுமே” நூற்பா 94**

நெட்டெழுத்துக்கள் ஏழுடன் ஆய்தம் ஒன்றும், மொழிக்கு (சொல்) நடுவிலும் இடையி நீங்கிய பதினொரு உயிர் எழுத்துக்களும், வல்லின மெய் ஆறும், மெல்லின மெய் இடையின மெய் ஐந்தும் ஆகிய முப்பத்தாறு எழுத்துக்களும் ஒன்றினால் ஈற்றுக்கு தொடரப்பெற்றுச் சொல்லின் இறுதியில், வல்லின மெய்களுள் யாதாயினும் ஒன்றின் காரமாக வரும்.

உரல், உயிர், முயல் ஆகிய சொற்களில் இடம் பெறும் உகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படுவது. இதனை முற்றியல் உகரம் என்பர். முழுமையாக ஒலிக்கும் உகரம் என்பது பொருள். இதன் மாத்திரை ஒன்று என்பர். இந்த உகரம் சொல்லில் சில இடங்களில் வரும் போது இதழ் குவியாது உச்சரிக்கப்படுகின்றது.

நாக்கு, காற்று, பட்டு, பயறு முதலிய சொற்களை உச்சரித்துக் காண்க. இவ்வாறு இதழ் குவியாது உச்சரிக்கப்படும் உகரமே குற்றியலுகரம் எனப்படுகின்றது. குறுகி ஒலிக்கும் உகரம் என்பது இதன் பொருள். இவ்வாறு ஒலிக்கும் உகரத்துக்கு மாத்திரை அரை என இலக்கண நூல்கள் கூறுகின்றன.

தமிழ் மொழியில் நாம் காணும் குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் யாவும் பொதுவாக வேர்ச்சொல்லை சற்று நீளமானவையே எனலாம். குற்றியலுகர ஈற்றுகளோடு வருமொழி முதலில் உயிர் பெற்றுச் சேரும் பொழுதுதான் ஏனைய உகரத்துக்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக உணருகிறோம்.

வருமொழி முதலில் உயிர் வரும் பொழுது குற்றியலுகரம் அறவே மறைந்து எஞ்சி நின்ற மெய்யின் மேல் உயிர் ஏறுகிறது. இத்தகைய மாற்றம் முற்றியலுகரங்களுக்கு நடப்பதில்லை. இதிலிருந்து நாம் ஊகித்துணரும் செய்தி வருமாறு: இன்று நாம் முற்றுகரமாகக் கருதும் உகரம் சொல்லின் ஒரு அங்கமாவதால் அது மறைவதில்லை. குற்றுகரம் என்று கருதும் உகரம் சொல்லின் அங்கமாக அமையாமல் முயற்சி எளிமைக்காக வல்லொற்றுகளின் பின் சேர்க்கப் பட்டிருத்தலால் வருமொழியில் உயிர் வரும் பொழுது நிலைமொழி ஈற்றில் நாம் சேர்த்த உகரம் மறைகிறது. ஆகவே குற்றியலுகரம் வேர்ச்சொல் அல்லது அடிச்சொல்லின் ஒரு அங்கமல்ல என்பது தெளிவு.

(எ-டு) நாடு + அல்ல = நாடல்ல

ஆறு + அல்ல = ஆறல்ல

கரு + அல்ல = கருவல்ல

மறு + அல்ல = மறுவல்ல

குற்றியலுகரத்தை உகரத்தோடு ஒப்ப வைத்து நோக்குதல் தொல்காப்பியர்க்கு உடன்பாடில்லை. குற்றியலுகரப் புணரியல் என ஒரு தனி இயலை அவர் அமைத்திருப்பதே இக்கருத்தை விளக்கும்.

உரல், உயிர், முயல் ஆகிய சொற்களில் உள்ள உகரத்தை உச்சரிக்கும்போது இதழ் குவிகின்றது நாக்கு மேல் நோக்கி உயர்ந்திருக்கின்றது நாக்கின் பின்பகுதி விறைப்படைகின்றது. இவ்வகையில் இந்த உகரத்தை இதழ் குவிந்த மேல் பின் உயிர் என்று கூறலாம். இதுவே முற்றியலுகரம்.

நாக்கு, காற்று, பட்டு, பயறு ஆகிய சொற்களில் இறுதியில் உள்ள உகரத்தை உச்சரிக்கும் போது இதழ்கள் குவிவதில்லை நாக்கு மேல் நோக்கி உயர்ந்தே இருக்கிறது நாக்கின் பின்பகுதி அன்றி நாக்கின் நடுப்பகுதி விறைப்படைகின்றது. இவ்வகையில் இந்த உகரத்தை இதழ் குவியாத மேல் இடை உயிர் என்று கூறலாம். இதுவே குற்றியலுகரம். முற்றியலுகரம் எப்போது குற்றிய லுகரமாக ஒலிக்கும்? தனிக் குற்றெழுத்து அல்லாத ஏனைய எழுத்துக்களின் பின் சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின்மேல் எறிவரும் உகரம் குற்றியலுகரமாக ஒலிக்கும் என தமிழ் இலக்கண நூலாசிரியர்கள் கூறுவர். அதாவது, அது, இது, பசு, கொக, படு, விடு, பெறு, வறு, நகு முதலிய சொற்களில் தனிக்குற்றெழுத்தை அடுத்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் வரும் உகரம் முற்றியலுகரம். இவை தவிர ஆடு, எஃகு, வயிறு, நாக்கு, பங்கு, செய்து முதலிய சொற்களில் சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம் குற்றியலுகரம். இவ்வாறு வரும் குற்றியலுகரத்தை அதற்கு முன்வரும் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு ஆறுவகையாகப் பாகுபடுத்துவர்.

நகு - நாகு  படு - பண்டு  தபு - தப்பு

கசு - கச்சு  அது - அஃது  வறு - வயிறு

மேலுள்ளவற்றை இரண்டு இரண்டாக உச்சரித்துப் பார்த்து எச்சொற்களில் உள்ள உகரம் ஒலியில் நிறைந்திருக்கிறது. அஃதாவது முற்றும் உகர ஒலி உடையதாய் இருக்கின்றது என்றும் எச்சொற்களில் இருக்கும் உகரம் ஒலியில் குறைந்திருக்கிறது என்றும் கண்டுபிடியுங்கள். குறுகிய ஒலியுடைய உகரமே குற்றியலுகரமாகும்.

குற்றியல் உகரம் இருக்கிற சொற்களின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஏதாவது ஒன்று கட்டாயம் இருக்க வேண்டும். ஆனால் இதை மட்டும் கண்டு குற்றியலுகரம் என்று கொண்டு விடுவது சரியே.

ஈற்றுக்கு அயல் எழுத்து, அஃதாவது கடைசி எழுத்துக்கு முந்தைய எழுத்து நெட்டெழுத்தாகவாவது, வல்லின மெய்யாகவாவது, மெல்லின மெய்யாகவாவது, இடையின மெய்யாகவாவது, ஆய்தமாகவாவது உயிர்மெய்யெழுத்தாகவாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இப்படியிருக்குமாயின் ஈற்றுக்கு அயலெழுத்தைக் கொண்டு இன்னவகைக் குற்றியல் உகரம் என்று கூற வேண்டும்.

### 1.8.2.1.6 குற்றியலுகர வகை

#### 1.8.2.1.6.1 நெடில் தொடர் குற்றியலுகரம்.

நெட்டெழுத்தை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவருவது.

ஆடு, காடு, காசு, நீறு, தூது

பாகு, மாசு, ஆடு, ஏது, பாபு, வேறு.

இ.்.து இரண்டு எழுத்துக்களில் வரும். இதில் முதலெழுத்து நெட்டெழுத்தாக இருக்கும். கடைசி எழுத்தானது கு ,சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஏதாவது ஒன்றாக இருக்கும்.

#### 1.8.2.1.6.2 வன்றொடர்க் குற்றியலுகரம்.

வல்லினமெய்யை அடுத்து வல்லினமெய்யில் ஏறி வருவது.

நாக்கு, பட்டு, பத்து, பற்று, பேச்சு

மக்கு, தச்சு, விட்டு, பத்து, உப்பு, பற்று.

இ.்.து இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும் ஈற்றெழுத்தானது கு, சு, டு, து, பு, று என்பனவற்றுள் ஏதாவது ஒன்றாக இருக்கும். க்கு, ச்சு, ட்டு, த்து, ப்பு, ற்று என்பனவற்றுள் எதையாவது கொண்டு ஒரு சொல் முடித்தால் அதன் ஈற்றிலுள்ள உகரம் வன்தொடர்க் குற்றியல் உகரம் என்க.

#### 1.8.2.1.6.3 மென்றொடர்க் குற்றியலுகரம்.

மெல்லின மெய்யை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறி வருவது.

அங்கு, பஞ்சு, பண்டு, என்று, பந்து, அம்பு

இங்கு பஞ்சு, கண்டு, பந்து, அம்பு, கன்று.

இதுவும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். ஈற்றெழுத்தானது கு, சு, டு, து, பு, று என்பனவற்றுள் ஒன்றாக இருக்கும். ஈற்றுக்கு அயலெழுத்து மெல்லினமெய்யாக இருக்கும். ஒரு சொல்லானது ங்கு, ஞ்சு, ண்டு, ந்து, ம்பு, ன்று என்பனவற்றுள் ஏதாவது ஒன்றைக் கொண்டு முடிந்தால் இதன் ஈற்றிலுள்ள உகரம் மென்தொடர்க்குற்றியலுகரம் என்க.

#### 1.8.2.1.6.4 இடைத் தொடர்க் குற்றியலுகரம்

இடையின மெய்யை அடுத்து வல்லினமெய்யின் மேல் ஏறிவரும் உகரம். பெய்து, செய்து, நல்கு. சால்பு வீழ்து.

ஈற்றெழுத்தாவது கு, சு, டு, து, பு, று என்பனவற்றுள் ஒன்றைப்பெற்றும், ஈற்றுக்கு அயலெழுத்து இடையினமெய்யெழுத்தைப் பெற்றும் வரின் இறுதி எழுத்திலுள்ள உகரம் இடைத்தொடர்க்குற்றியல் உகரமாகும். ய்து, ர்பு, ல்பு, ழ்து என்பனவற்றைக் கொண்டு ஒரு சொல் முடிந்தால் அதன் ஈற்றிலுள்ள உகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்க. இதுவும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டுவரும்.

### 1.8.2.1.6.5 ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.

ஆய்த எழுத்தை அடுத்து வல்லினமெய்யின் மேல் ஏறிவருவது.

அ∴து, இ∴து, எ∴கு, க∴சு,

இ∴தும் இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். ஒரு சொல்லின் ஈற்றில் கு, சு, டு, து, பு, று என்பனவற்றுள் ஒன்றைப் பெற்றும், ஈற்றுக்கு அயலெழுத்து ஆய்த எழுத்தைப் பெற்றும் வரின் அச்சொல்லின் ஈற்றிலுள்ள உகரம் ஆய்தத்தொடர்க் குற்றியல் உகரம் என்க.

### 1.8.2.1.6.6 உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

தனி நெடிலை அடுத்து அன்றி, இருகுறில் அல்லது குறில் நெடிலை அடுத்து வல்லின மெய்யின் மேல் ஏறிவரும் உகரம்.

வயிறு, வரகு, விடாது.

அழகு, முரசு, கரடு, தெரியாது, மரபு, பயறு

இ∴து இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டு வரும். உயிர்த்தொடர்க் ˙குற்றியல் உகரத்தின் ஈற்றெழுத்தானது கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஒன்றாகவும், ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய்யெழுத்துக்களுள் ஒன்றாகவும் இருக்கும். அழகு- ழ என்பது உயிர்மெய். இந்த உயிர்மெய்யில் மெய்யை நீக்கி உயிரை மட்டும் நோக்கி உயிர்த்தொடர்க் குற்றியல் உகரம் என்க. உயிர்த்தொடர்க் குற்றியல் உகரத்தில் ஈற்றுக்கு அயலெழ்த்து உயிர்மெய்யாக இருக்கும் என்பதறிக.

தனி நெடிலாவது வல்லின மெய்யாவது, மெல்லினமெய்யாவது இடையின மெய்யாவது ஆய்தமாவது உயிராவது தொடர்ந்து வரும் சொல்லினது இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஒன்று இருக்குமானால் அதில் இருக்கும் உகரம் ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரைமாத்திரையாக ஒலிக்கும். இப்படி குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரமாகும். இ∴து இலக்கண முறைப்படி கூறுவது. ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய்யாக வருவதை இலக்கண உயிர் என்று கூறும். வல்லின மெய், மெல்லினமெய், இடையின மெய் என்று கூறுவதால் உயிர்மெய் எழுத்து வரும்போது அதிலுள்ள மெய்யை நீக்கி உயிரை மட்டும் கொண்டு உயிர் என்று கூறுவது தமிழ் இலக்கண மரபு என்பதறிக. மாத்திரை என்பது ஒலிக்கும் நேர அளவு, குற்றியலுகரத்தைப் பற்றித் தெரிந்துகொள்வது

தமிழ் அறிவுக்கு இன்றியமையாதது.

### 1.8.2.1.7 குற்றியலிகரம்

குறைந்த ஒலியுடைய இகரம் குற்றியலிகரமாகும். குற்றியலுகரம் தெரிந்த பின்பே குற்றியலிகரம் விளங்குமாதலால், இக்குற்றியலிகரம் பின் கூறப்பட்டிருக்கிறது.

குற்றியலுகரச் சொற்களுக்கு முன் யகரத்தை முதலாவதாக உள்ள சொல் வருமானால், அக்குற்றியலுகரம் இகரதமாகத் திரியும். அவ்விகரம் குறுகியொலித்தலின் குற்றியலிகரம் எனப்படும்.

வாத்து + யாது = வாத்தியாது

நாடு + யாது = நாடியாது

இது செய்யுளில் வரும். உரைநடைக்கு இது வேண்டுவதில்லை. காடியாது என்று செய்யுளில் கண்டால் காடு யாது என்று பிரிக்கத்தெரிந்து கொள்க.

நிலைமொழியின் ஈற்றில் குற்றியலுகரம் அமைந்து, வருமொழியின் முதலில் யகரம் இடம் பெறின். நிலைமொழியின் இறுதியில் நிற்கும் உகரம் இகரமாகத் திரியும். இக்குற்றியலிகரம் தனக்குரிய ஒரு மாத்திரையிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவு ஒலிக்கும்.

**“யகரம் வரக்குறள் உத்திரி இகரமும்**

**அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய” நூற்பா 93**

ஒரு சொல்லின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் யகர உயிர்மெய் இடம் பெறுகையில் குற்றியலிகரமாகத் திரியும்.

இ கரம் தன் மாத்திரையில் குறைந்து ஒலிப்பது குற்றியலிகரம் எனப்படும். பழந்தமிழில் யகரத்துக்கு முன் வரும் குற்றியலுகரம் புணர்ச்சியில் இகரமாகத் திரியும். அந்த இகரம் தன் மாத்திரையில் குறுகி ஒலிக்கும்.

நாகு + யாது = நாகியாது

எ.்.து + யாது = எ.்.கியாது

வரகு + யாது = வரகியாது

இவ்வாறு திரிந்து குறுகி ஒலிக்கும் இகரம் குற்றியலிகரம் எனப்பட்டது. இதுபோல் மியா என்ற அசைச் சொல்லில் யகரத்துக்கு முன்வரும் இகரமும் குற்றியலிகரம் என்பர். தற்காலத் தமிழில் மியா என்ற அசைச்சொல் வழக்கில் இல்லை.

குற்றியலுகர ஈற்றுச் சொற்கள் யகரத்தின் முன் இகரமாகத் திரிதலும் தற்கால வழக்கில் இல்லை. பின்வரும் உதாரணங்களை நோக்குக எனக்கு யாரும் உதவிசெய்யவில்லை. அவனுக்கு யாரையும் தெரியாது. நாடு யாவருக்கும் சொந்தம். இவை, எனக்கியாரும், அவனுக்கியாரையும், நாடியாவருக்கும் எனத் தற்காலத் தமிழில் புணர்வதில்லை. இதுவரை நோக்கியதில் இருந்து உயிரளபெடை, ஒற்றளபெடை, மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம், குற்றியலிகரம் போன்ற ஒலித்திரிபுகள் தற்காலத் தமிழில் பொது வழக்கில் இல்லை என்பதை அறியலாம்.

நிலை மொழியீற்றுக் குற்றியலுகரம் வருமொழி யகரம் வரும் பொழுது இகரமாய்த் திரியும். மியா என்ற அசைச் சொல்லில் உள்ளதையும் குற்றியலிகரம் என்பர். இந்த இருவகைக் குற்றியலிகரமும் தனிப்பட்ட வேர்ச்சொல்லில் அமைந்திருத்தல் காண்க.

(எ-டு) கொக்கு + யாது = கொக்கியாது

### 1.8.2.1.7.1 முற்றியலுகரம்

தற்காலத் தமிழில் குற்றியலுகர உச்சரிப்பில் பல மாற்றங்களைக் காண்கின்றோம். பழந்தமிழில் முற்றிய லுகரமாக ஒலித்த அது, இது, பசு, கொசு, படு, விடு, பெறு, வறு, நகு முதலியவை தற்காலத் தமிழில் இதழ் குவித்து முற்றியலுகரமாக ஒலிக்கப்படுவதில்லை. இதழ் குவியாது குற்றியலுகரமாகவே ஒலிக்கப்படுகின்றன.

மேல் உள்ள சொற்களை இதழ் குவித்தும் குவியாதும் உச்சரித்து வேறுபாடு காண்க. தற்காலத் தமிழில் சொல்லின் இறுதியில் இடையின, மெல்லின மெய்களை அடுத்து வரும் உகரமும் இதழ் குவியாது குற்றியலுகரமாகவே ஒலிக்கப்படுகின்றன. பின்வரும் சொற்களை இதழ் குவித்தும் குவியாதும் உச்சரித்து வேறுபாடு காண்க: கதவு, வரவு, மேரு, பல்லு, பள்ளு, எள்ளு, மண்ணு, பின்னு, மின்னு, அழு, பழு, தெரு, பரு.

இலக்கண நூல்களின் வரைவிலக்கணப்படி இவை முற்றியலுகரமாகும். தற்காலத்தில் இவை குற்றியலுகரமாகவே ஒலிக்கப்படுகின்றன. இவ்வகையில், இக்காலத் தமிழில் சொல்லின் இறுதியில் வரும் உகரம் இதழ் குவியாது குற்றியலுகரமாகவே ஒலிக்கப்படுகின்றது எனலாம். எனினும் புழு, புது, முழு, குழு, குரு போன்ற சொற்களில் ஈற்றில் வரும் உகரம் பெரிதும் இதழ் குவித்தே ஒலிக்கப்படுகின்றது. முதலில் உகரம் இருப்பது இதற்கும் காரணம் எனலாம். சொல்லின் இடையில் வரும் உகரம் முற்றியலுகரமாக ஒலிக்கப்படுகின்றதா? குற்றியலுகரமாக ஒலிக்கப்படுகின்றதா? பின்வரும் சொற்களை இதழ் குவி குவியாமலும் உச்சரித்து வேறுபாடு காண்க :- இறுங்கு, எழுது, பகுதி,இவை இதழ் குவியாமலேயே உச்சரிக்கப்படுகின்றன. அவ் இவற்றையும் குற்றியலுகரம் எனல் வேண்டும். எனினும், சொல்லின் முதலில் வந்தால் சொல் இடையில் அதை அடுத்து வரும் உகரமும் இதழ் குவித்து முற்றியலுகரமாகவே பெரிதும் உச்சரிக்கப்படுகின்றது. பின்வரும் சொற்களை ஒலித்துக் காண்க :- புதுமை, முதுமை, உருவம், குறும்பு, உழுதேன்.

1. உ, சு – தனியாக உள்ள உயிரெழுத்து உகரமும் தனியாக உள்ள உயிர்மெய் எழுத்திலுள்ள உகரமும் முற்றியல் உகரமாகும்.

2. நகு, பசு, எது, தபு, மறு, அணு இரண்டு குறிலாக வருகின்ற சொல்லின் ஈற்றில் கு, சு, டு, து, பு, று, மு, னு, யு, ரு, லு, வு, ழு, ளு என்னும் எழுத்துகளுள் எது இருந்தாலும் அவ்வெழுத்திலுள்ள உகரம் முற்றியல் உகரமாகும்.

3. வேணு, கதவு, வேலு, இரண்டு எழுத்திலோ இரண்டு எழுத்துகளுக்கு மேற்பட்டோ வரும் சொல்லின் ஈற்றில் கு, சு, டு, து, பு, று, தவிர மற்ற ணு, மு, னு, யு, ரு, லு, வு, ழு, ளு என்னும் எழுத்துகளுள் ஏதாவது ஒன்றிலிருந்தாலும் அதிலுள்ள உகரமும் முற்றியல் உகரமாகும்.

   முற்றியல் உகரத்திற்கு வகை இல்லை.

### 1.8.2.1.8 ஐகாரக் குறுக்கம்

ஐகாரம் நெடில் என்றும், அது இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும் என்றும் இலக்கண நூல்கள் கூறும். ஆயினும், தனித்து ஐ என்று தன்னைச் சுட்டும் போதும் அளபெடுக்கும் போதும் மட்டும்தான் அது இரண்டு மாத்திரை அளவு நீண்டொலிக்கும். ஏனைய இடங்களில் அது குறில் போல் ஒரு மாத்திரை அளவே ஒலிக்கும். அவ்வாறு ஒலிப்பதையே ஐகாரக் குறுக்கம் என்பர்.

"ஐ" என்னும் எழுத்து தனியாக உச்சரிக்கப்படும் பொழுது இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும். ஆன சொல்லின் முதல், இடை, கடை என்னும் மூன்று இடங்களில் அமைந்து உச்சரிக்கும் போது தன் மாத்திரையிலிருந்து குறுகி ஒரு மாத்திரை அளவு ஒலிப்பதால் ஐகாரக் குறுக்கம் என்பர். (எ.டு) ஐப்பசி, இடையன் குவளை முதலியன.

**"தற்சுட்டளபொழி யைம்மூ வழியும்**

**நையு மௌவு முதலற் றாகும்"**

என்னும் நூற்பா (95) ஐகாரக் குறுக்கம், ஔகாரக் குறுக்கம் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

ஐயர், ஐப்பசி, ஐம்பது, தையல், வையகம், கலைஞர், தலை, வளையம், பனை, கைது, மனைவி, பூனை

மேல் உள்ள சொற்களில் முதல், இடை, கடை நிலைகளில் ஐகாரம் அய் போல் குறுகி ஒலிப்பதைக் காணலாம். முதல் மூன்று சொற்களும் அய்யர், அய்ப்பசி, அய்ம்பது என இன்று பலராலும் எழுதப்படுகின்றன. ஐ காரத்தைத் தமிழ் அரிச்சுவடியில் இருந்து அகற்றிவிடலாம் என்போரும் உளர். அவ்வாறு அகற்றிவிட்டால், தையல், வையகம், கைது முதலிய

சொற்களையும் தய்யல், வய்யகம், கய்து என எழுத வேண்டி வரும். தலை, பனை, பூனை போன்ற சொற்களையும் தலய், பனய், பூனய் என எழுத வேண்டி வரும்.

### 1.8.2.1.9 ஒளகாரக் குறுக்கம

ஒளகாரம் தன்னைக் குறிக்கும் போது இரண்டு மாத்திரையாகவும் சொல்லுக்கு முதலில் வரும்போது மாத்திரையாகவும் குறுகி ஒலிக்கும். (எ.டு ஒளவையார்.

ஐகாரம் போல் ஒளகாரமும் நெடிலாகவே கருதப்படுகின்றது. ஆயினும், ஒள என்று தன்னைச் சுட்டும் போதும், அளபெடுக்கும் போதும் மட்டுமே இது நெடிலாக இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கப்படுகின்றது. ஏனைய இடங்களில் குறில்போல் ஒரு மாத்திரை அளவே ஒலிக்கப்படுகின்றது. இவ்வாறு ஒளகாரம் தன் மாத்திரையில் குறுகி ஒலிப்பதே ஒளகாரக் குறுக்கம் எனப்படும்.

ஒளவையார், வெளவால், சௌகரியம் முதலிய சொற்களில் ஒளகாரம் அவ்போல் குறுகி ஒலிப்பதைக் காணலாம். ஒளவையார் என்பது அவ்வையார் என்றும் வெளவால் என்பது வவ்வால் என்றும் எழுதப்படுவதைக் காண்க. ஒளகாரத்தையும் தமிழ் அரிச்சுவடியில் இருந்து அகற்றிவிடலாம் என்போரும் உளர்.

### 1.8.2.1.10 மகரக் குறுக்கம்

ஒரு சொல்லில் ணகர அல்லது னகர மெய்கள் வந்து, அதன்பின் மகர மெய் வந்தால் அம் மகர மெய்யானது தன் அரை மாத்திரை அளவிலிருந்து குறுகி ஒலிக்கும். இம்மகரக் குறுக்கம் இட வகையில் மூன்றாகும்.

மருணம் - ணகரத்தின் பின் குறுகியது.

போன்ம் - னகரத்தின் பின் குறுகியது.

தரும் வளவன் - வகரத்தின் முன் குறுகியது.

**“ணன முன்னும் வ.ஃகான் மிசையுமக் குறுகும்” நூற்பா 96**

மகரத்துக்கு உரிய மாத்திரை அரை, ஆயினும், பழந்தமிழில் னகர, ணகரங்களை அடுத்தும், வகரத்தின் முன்னும் வரும்போது மகரம் தன் மாத்திரையில் குறுகி ஒலித்தது. இவ்வாறு குறுகி ஒலித்ததையே மகரக் குறுக்கம் என்றனர். போன்ம், மருணம், தரும் வளவன் என்பவற்றை இலக்கண நூல்கள் உதாரணமாகத் தருகின்றன.

தற்காலத் தமிழில் போன்ம், மருணம் என்பன போலும், மருளும் என்றே வழங்குகின்றன. இன்று வகரத்தின்முன் வரும் மகரம் குறுகி ஒலிப்பதாகத் தெரியவில்லை. வரும் வழியில், நாங்களும் வந்தோம், நானும் வருவேன், போகும் வழி தெரியவில்லை, வாரி வழங்கும் வள்ளல், போன்ற உதாரணங்களைக் காண்க.

### 1.8.2.1.11 ஆய்தக் குறுக்கம்

ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரை ஒலியளவிலிருந்து குறுகி, கால் மாத்திரையாக ஒலித்தல் ஆய்த குறுக்கமாகும்.

**"லளவீற்று இயைபினால் ஆய்தம் அஃகும்" நூற்பா 97**

லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சியினால் வருகின்ற ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறுக் ஒலிக்கும்.

ஆய்த எழுத்து மெய்போல் அரை மாத்திரை ஒலிக்கும் என்பர். அஃது, இஃது, எஃகு போன்றவை அரை மாத்திரை ஒலிக்கும் முற்றாய்தம் எனப்படும். சொற்புணர்ச்சியின் போது லகர, ளகர ஈற்றுச் சொற்களின்முன் தகரம் வரின் லகர, ளகர ஈறுகள் ஆய்தமாகத் திரிவது பழந்தமிழ் வழக்கு. உதாரணம்:

அல் + திணை → முள் + தீது அஃறிணை

பல் + துளி → பஃறுளி

இவ்வாறு புணர்ச்சியில் லகர, ளகரங்கள் திரிந்து தோன்றும் ஆய்தம் தனக்குரிய அரை மாத்திரையில் குறுகி ஒலிக்கும் என்பர். இதனையே ஆய்தக் குறுக்கம் என தமிழ் இலக்கண நூலார் கூறுவர். தற்காலத் தமிழில் லகர, ளகர ஈறுகள் தகரத்தின் முன் வரும்போது ஆய்தமாதத் திரிதல் இல்லை. உதாரணம் : பல் + துறை = பல்துறை. அஃறிணை, பஃறொடை போன்ற சொற்களை நாம் தற்காலத்திலும் பயன்படுத்துகின்றோம். ஆயினும், அஃது, இஃது, எஃகு போன்ற சொற்களில் வரும் முற்றாய்தம் போலவே இவற்றையும் உச்சரிக்கின்றோம்.

## 1.9 எழுத்துக்களின் பிறப்பு - பொதுவிலக்கணம்.

அ, ஆ - இவ்வெழுத்துக்களை உச்சரித்துப் பார். இவற்றை உச்சரிக்கும் பொழுது உடலின் உள்ளிருக்கும். காற்றானது உயிரினது முயற்சியால் வெளி வருகின்றது. அப்பொழுது வாய் திறக்கப்படுகின்றது. அ, ஆ என்ற ஒலிகள் கண்டத்தினின்று எழுகின்றன.

க -இவ்வெழுத்தை உச்சரித்துப் பார். வாய் திறக்கப்படுகின்றது. அப்பொழுது அடிநாக்கு மேல் வாய் அடியைச் சேர இவ்வொலி மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றது. இவை போல மற்றைய எழுத்துக்களும் பிறக்கின்றன.

உடலின் உள்ளே இருக்கும் காற்றானது உச்சரிக்க வேண்டுமென்ற உயிரினது முயற்சியால் எழுப்பப்பட்டு செவிப்புலனாம் அணுத்திரளின் கூட்டம் மார்பு, கழுத்து, தலை, மூக்கு ஆகிய நான்கு இடங்களையும் பொருந்தி இதழ் (உதடு) நாக்கு, பல், அண்ணம் (மேல்

வாயும் கீழ் வாயும்) ஆகிய நான்கினுடைய முயற்சி வேறு பாட்டால் பலவகைப்பட்ட எழுத்துக்களாலாகிய ஓசைகளாய்த் தோன்றுதலே எழுத்துக்களின் பிறப்பாகும்.

### 1.9.1 எழுத்துக்களின் இடப்பிறப்பு

அ - என்பது உயிரெழுத்து. இதை உச்சரித்துப் பார். இது கண்டத்தினின்று பிறப்பதை அறியலாம்.

க் - என்பது மெய்யெழுத்தில் வல்லினம் ஆகும். இதை உச்சரித்துப் பார். இது மார்பை இடமாகக்கொண்டு பிறத்தலை அறியலாம்.

ங் -என்பது மெய்யெழுத்தில் மெல்லினமாகும். இதை உச்சரித்துப்பார். இது மூக்கை இடமாகக்கொண்டு பிறத்தலை அறியலாம்.

ய் - என்பது மெய்யெழுத்தில் இடையினமாகும். இதை உச்சரித்துப் பார். இது கண்டத்தை இடமாகக் கொண்டு பிறத்தலை அறியலாம்.

ஃ - இது ஆய்த எழுத்தாகும். இதை உச்சரித்துப் பார். இது தலையை இடமாகக் கொண்டு பிறத்தலை அறியலாம்.

மார்பு, கழுத்து, மூக்கு, தலை ஆகிய நான்கு இடங்களில் ஒலி பொருந்திப் பிறப்பதே இடப் பிறப்பாம்.

#### 1.9.1.1 முதல் எழுத்துக்களின் பிறப்பிடம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ - இவை உயிர் எழுத்துக்கள். ய, ர, ல, வ, ழ, ள - இவை இடையெழுத்துக்கள். மேற்கூறிய பதினெட்டு எழுத்துக்களையும் உச்சரி. இவை கழுத்தை இடமாகக் கொண்டு பிறத்தலை அறியலாம்.

ங, ஞ, ண, ந, ம, ன - இவை மெல்லெழுத்துக்கள். இவைகளை உச்சரித்துப் பார். இவைகள் மூக்கை இடமாகக் கொண்டு பிறத்தலை அறியலாம்.

க, ச, ட, த, ப, ற - இவை வல்லெழுத்துக்கள். இவைகளை உச்சரித்துப் பார். இவைகள் மார்பை இடமாகக் கொண்டு பிறத்தலை அறியலாம்,

முதலெழுத்துக்கள் கழுத்து. மூக்கு, மார்பு ஆகிய மூன்று இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டு பிறக்கின்றன

1. உயிரெழுத்துக்கள் - மிடறு (கழுத்து)

2 மெய்யெழுத்துக்கள்

இடையினம் - மிடறு - (கழுத்து)

மெல்லினம் - மூக்கு

வல்லினம் - மார்பு

**“அவ்வழி**

**ஆவி இடைமை இடம்மிடறு ஆகும்**

**மேவும் மென்மை மூக்கு உரம்பெறும் வன்மை” நூற்பா 75**

(ஆவி-உயிர், இடைமை - இடையினம்).

என்னும் நூற்பா முதலெழுத்துக்கள் பிறக்கும் இடங்களை உணர்த்தியது. முதலெழுத்துக்கள் பிறப்பதற்குரிய முயற்சிகள் ஆகும்.

“முதலெழுத்துக்கள் முப்பதுள் உயிர் பன்னிரண்டும், இடையினமாறுமாகப் பதினெட்டு எழுத்துகள் கழுத்தை இடமாகவும், மெல்லினமாறும் மூக்கை இடமாகவும், வல்லினமாறும் மார்பையிடமாகவும் கொண்டு பிறக்கும்.”

“உ,ஊ, ஒ, ஓ, ஔ - இவ்வைந்து எழுத்துக்களை யும் உச்சரித்துப் பார், இவை வாய் திறத்தலுடனே உதடுகளின் குவிதலாகிய முயற்சியால் பிறத்தலை அறியலாம்.

**உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே**

மெய் எழுத்துகளை அவற்றின் உச்சரிப்பு அல்லது பிறப்பு அடிப்படையில் பல்வேறு வகைப்படுத்தலாம்.

க், ங், என்ற இரு மெய்யெழுத்துக்களும் வாயைத் திறத்தலுடனே அடிநாக்கு மேல்வாயடியைச் வருடலாகிய முயற்சியால் பிறக்கும்.

ச், ஞ் என்ற இரு மெய்யெழுத்துக்களும் வாயைத் திறத்தலுடனே நடுநாக்கு மேல் வாயின் நடுப்பகுதியைச் சேர்தலாகிய முயற்சியால் பிறக்கும்.

ட், ண் - இம்மெய்யெழுத்துக்களை உச்சரித்துப் பார் - இவை இரண்டும் வாயைத் திறத்தலுடனே நுனி நாக்கு மேல் வாயின் நுனிப் பகுதியைச் சேர்தலாகிய முயற்சியால் பிறத்தலையறியலாம்.

ட், ண் என்ற இரு மெய்யெழுத்துக்களும் வாயைத் திறத்தலுடனே நுனிநாக்கு மேல் வாயின் நுனிப் பகுதியைச் சேர்த்தலாகிய முயற்சியால் பிறக்கும்.

**“கஙவும் சஞவும் டணவும் முதலிடை நுனிநா அண்ணம் உறமுறை வருமே.“**

த், ந் வாய் திறத்தலோடு மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்தும் முயற்சியால் இரு மெய்யெழுத்துக்களும் பிறக்கும்.

**"அண்பல் அடிநா முடியுறத் தந வரும்.""**

ப், ம் - வாய் திறத்தலோடு மேலுதடும், கீழுதடு பொருந்தும் முயற்சியால் ப, ம என்ற இரு மெய்யெழுதுக்களும் பிறக்கும்.

ல் - வாய் திறத்தலோடு மேல் வாய்ப் பல்லின் அடிநாக்கின் ஓரமானது தடித்துப் பொருந்தும் முயற்சியால் ல என்ற மெய்யெழுத்துப் பிறக்கும்.

வாய் திறத்தலோடு மேல் வாயை நாக்கின் ஓரமானது தடித்துத் தடவும் முயற்சியால் ள என்ற மெய்யெழுத்துப் பிறக்கும்.

அண்பல் **முதலும் அண்ணமும் முறையின்**

**நா விளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்**

**லகார ளகாரமாய் இரண்டும் பிறக்கும்**

வ் - வாய் திறத்தலோடு மேல் வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துதலாகிய முயற்சியால் வ என்ற மெய்யெழுத்துப் பிறக்கும்.

**"மேற்பல் இதழ் உற மேவிடும் வவ்வே."**

ற், ன் - வாய் திறத்தலோடு மேல்வாயை நாக்கி மிகப் பொருந்துதலாகிய முயற்சியால் ற, ன என்ற இரு எழுத்துக்களும் பிறக்கும்"

### 1.9.1.2 மெய் எழுத்துகளின் உச்சரிப்பு முறை

ப, ம ஆகியவற்றை இரண்டு இதழ்களும் பொருந்த உச்சரிக்கின்றோம். ஆகவே, இவற்றை ஈரிதழ் ஒலிகள் என்பர்.

வ கரத்தை கீழ் உதட்டில் மேற் பல் பொருந்த உச்சரிக்கின்றோம். அதனால், இதனை உதட்டுப்பல் ஒலி என்பர்.

த, ந ஆகியவற்றை நுனி நா, மேற்பல்லின் உட்புறத்தைப் பொருந்த உச்சரிக்கின்றோம். அதனால், இவற்றை பல் ஒலிகள் என்பர்.

ல, ர, ற, ன ஆகியவற்றை நுனி நா, நுனி அண்ணத்தைப் பொருந்த உச்சரிக்கின்றோம். அதனால், இவற்றை நுனி அண்ண ஒலிகள் என்பர்.

ட, ண, ழ, ள ஆகியவற்றை நுனிநா மேல் நோக்கி வளைந்து நடு அண்ணத்தைத் தொட உச்சரிக்கின்றோம். அதனால், இவற்றை வளைநா ஒலிகள் என்பர்.

ச, ஞ, ய ஆகியவற்றை நடுநா நடு அண்ணத்தைத் தொட உச்சரிக்கின்றோம்.

அதனால், இவற்றை அண்ண ஒலிகள் என்பர்.

க,ங ஆகியவற்றை கடைநா கடை அண்ணத்தைத் தொட உச்சரிக்கின்றோம். அதனால், இவற்றை கடை அண்ண ஒலிகள் என்பர்.

ப,ம ஆகியவை ஈரிதழ் ஒலிகள் என்றோம். இரண்டு இதழ்களும்

ஒன்றோடு ஒன்று பொருந்த இவை இரண்டும் ஒலிக்கப்படுகின்றன. இவை இரண்டும் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன. அது ஏன்? முறையில் உள்ள வேறுபாடே அதற்குக் காரணம். பவை உச்சரிக்கும்பே உதடுகளையும் பொருந்த வைத்து வாய்க்குள் காற்றைத் தடைசெய்து வெளி விடுகின்றோம். காற்று வாயினாலேயே வெளிவருகின்றது. இவ்வாறு ஒலிக்கப்படுவதை வெடிப்பொலி அல்லது தடை ஒலி என்பர். க, ச, ட, த, ப, ற ஆகிய ஆறு வல்லினங்களும் இவ்வாறு ஒலிக்கப்படும் வெடிப்பொலிகளாகும்.

ப் ஈரிதழ் வெடிப்பொலி

த் பல் வெடிப்பொலி

ற் நுனி அண்ண வெடிப்பொலி

ட் வளை நா வெடிப்பொலி

ச் அண்ண வெடிப்பொலி

க் கடை அண்ண வெடிப்பொலி

ம - வை உச்சரிக்கும் போதும் இரண்டு இதழ்களையும் ஒன்றோடு ஒன்று பொருந்தவைக்கின்றோம். ஆனால், காற்றை வாய்க்குள் தடை செய்யாமல் மூக்கு வழியாக வெளிச் செல்லவிட்டு இதனை உச்சரிக்கின்றோம். இவ்வாறு ஒலிக்கப்படும் ஒலிகளை மூக்கொலி என்பர். ங ஞ ண ந ம ன ஆகிய ஆறு மெல்லினங்களும் மூக்கொலிகளாகும். மூக்கைப் பொத்திக்கொண்டு இவற்றை ஒலிக்க முடியாது.

ம் ஈரிதழ் மூக்கொலி

ப் மூக்கொலி

ன் நுனி அண்ண மூக்கொலி

ண் வளை நா மூக்கொலி

ஞ் அண்ண மூக்கொலி

ங் கடை அண்ண மூக்கொலி

ல, ள, ழ ஆகியவற்றை உச்சரிப்பதிலும் ஒரு பொதுத்தன்மை உண்டு. ல வை உச்சரிக்கும்போது நுனி நா நுனி அண்ணத்தைத் தொட, காற்று நாவின் இரண்டு விளிம்புகளாலும் வெளியேறுகின்றது. அதுபோல் ள, ழ ஆகியவற்றை உச்சரிக்கும்போது நுனி

நா மேல்நோக்கி வளைந்து நடு அண்ணத்தைத் தொட காற்று நாக்கின் இரண்டு விளிம்புகளாலும் வெளியேறுகின்றது. இவ்வாறு காற்று நாக்கின் இரு மருங்காலும் வெளியேற உச்சரிக்கப்படுவதால் இவற்றை மருங்கொலிகள் என்பர்.

ர - வை உச்சரிக்கும்போது நுனி நா நுனி அண்ணத்தை வருட ஒலி பிறப்பதால் இதனை வருடொலி என்பர்.

ற - வை (அறம், முறி, விறகு) உச்சரிக்கும்போது நுனி நா நுனி அண்ணத்தைப் பொருந்தி அதிர்வதால் இதனை ஆடொலி என்பர்.

### 1.9.2.1. சார்பெழுத்துப் பிறக்குமிடங்கள்

ஃ - இது ஆய்தவெழுத்து. வாயைத் திறத்தலாகிய முயற்சியால் ஆய்த வெழுத்துப் பிறப்பதாகும். மற்றைய சார்பெழுத்துக்கள் தத்தம் முதல் எழுத்துக்களை ஒத்து முயற்சி வகையால் பிறப்பதாகும்.

**“ஆய்தக்கு இடம்தலை அங்கா முயற்சி**

**சார்பு எழுத்து ஏனவும் தம்முதல் அனைய”**

## 1.10. எழுத்து நிலை

எல்லா எழுத்துகளும் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய எல்லா இடங்களிலும் வருவதில்லை. ஒரு எழுத்து ஏனைய எல்லா எழுத்துகளுடன் சேர்ந்தும் சொற்களில் இடம் பெறுவதில்லை.

எந்த எந்த எழுத்துகள் சொல்லின் முதலில் இடம்பெறும், எந்த எந்த எழுத்துகள் சொல்லின் இறுதியில் இடம்பெறும், சொல்லுக்கு இடையில் எந்த எந்த எழுத்துகள் எந்த எந்த எழுத்துக்களுடன் சேர்ந்து வரும் என்பவற்றை நாம் வரையறுத்துக் கூறமுடியும். இவ்வாறு சொல்லாக்கத்தில் எழுத்துகள் பயின்று வரும் முறைமையே எழுத்தின் பரம்பல் எனப்படுகின்றது. இதனை முதல்நிலை, இறுதிநிலை, இடைநிலை என மூன்றாக வகைப்படுத்தி நோக்கலாம்.

### 1.10.1 மொழி முதல்நிலை எழுத்துகள்

முதல் நிலை என்பது ஒரு எழுத்து சொல்லாக்கத்தில் சொல்லின் முதலில் இடம் பெறுவதைக் குறிக்கும்.

(1) 12 உயிர் எழுத்துகளும் சொல்லாக்கத்தில் முதல்நிலையில் வருகின்றன.

உதாரணம்:- அது, ஆடு, இது, ஈசல், உரல், ஊர்,எது, ஏன் ஐந்து, ஒன்று, ஓடு,ஔவை

(2) வல்லின மெய்களில் க, ச, த, ப ஆகிய நான்கும் 12 உயிர்களுடனும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும்.

உதாரணம்:- கடல், காகம், கிளி, கீரை, குயில், கூடு, கெடு, கேடு,கை, கொடு, கோபம், கௌரி

(3) மெல்லின எழுத்துக்களில் ந, ம ஆகிய இரண்டும் 12 உயிர்களுடனும் சேர்ந்து சொல்லுக்கு முதலில் வரும். உதாரணம்:- நன்று, நான், நிலம், நீ, நுனி, நூல், நெல், நேற்று, நைடதம், நொண்டு, நோன்பு, நௌவி (மான்)

(4) வ, ய, ஞ ஆகிய மெய்கள் எல்லா உயிர்களுடனும் சேர்ந்து முதல் நிலையில் வருவதில்லை. சில சில உயிர்களுடன் சேர்ந்தே வருகின்றன.வகரம் உ, ஊ, ஒ, ஓ ஆகியவை தவிர்ந்த உயிர்களுடன் முதல் நிலையில் வருகின்றது. உம்: வயல், வாய், விலை, வீடு, வெயில், வேலை, வையம், வௌவால். வோட்டு என்ற ஆங்கிலச் சொல்லும் (ஏழவந) தற்காலத்தில் வழக்கில் உள்ளது.

(5) ட, ற, ர, ல ஆகிய மெய் எழுத்துக்கள் தமிழில் வந்து சேர்ந்த பிறமொழிச் சொற்களில் முதல் நிலையில் வருகின்றன. உதாரணம்:-

ட- டம்பம், டாக்டர், டிமிக்கி, டீசல், டுமீல், டூப்பு, டை, டோபி

ற - றக்கு, றாத்தல், றேடியோ, றைவர், றோட்டு

ர ரசம், ரசிகன், ராகம், ரீங்காரம், ருசி

ல - லட்டு, லாம்பு, லிங்கம், லீலை, லுங்கி, லூர்த்து, லைலா, லொத்தர், லோபி, லௌகீகம்

(6) ஜ, ஷ, ஸ, ஹ ஆகிய கிரந்த எழுத்துகளும் தமிழில் வந்து சேர்ந்த பிறமொழிச்

சொற்களில் முதல் நிலையில் வருகின்றன. உதாரணம்:-

ஜனாதிபதி, ஜமீன்தார், ஜரிகை, ஜல்லிக்கட்டு, ஜனநாயகம்

(7) ங், ண், ன், ள், ழ் ஆகிய மெய் எழுத்துகள் சொல்லின் முதல் நிலையில் வருவதில்லை. எனினும் தத்தம் பெயரைச் சுட்டும்போது அவையும் சொல் முதலில் வருகின்றன. உதாரணம் :- ஙகரம், ணகரம், னகரம், ளகரம் ழகரம்

தற்காலத்தில் சில எழுத்தாளர்கள் சில பிரஞ்சு நாட்டு அறிஞர்களின் பெயர்களைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது ழகரத்தை முதல் நிலையில் பயன்படுத்துகின்றனர்.

(8) தமிழ்ச் சொற்களில் உயிர்மெய் எழுத்துகளே சொல் முதலில் வருகின்றன. தனி

மெய்கள் அவ்வாறு வருவதில்லை. எனினும், பிறமொழிப் பெயர்கள் சிலவற்றை எழுதுகையில் தனிமெய் எழுத்துகள் முதலில் வரக் காணலாம்.

உம் : ஸ்பானியா (Spain), ஸ்ரொக்ஹோம் (Stockhom).

### 1.10.2 மொழி இறுதிநிலை எழுத்துகள்

இறுதிநிலை என்பது ஒரு எழுத்து சொல்லாக்கத்தில் சொல்லின் இறுதியில் இடம்பெறுவதைக் குறிக்கும்.

(1) எ, ஒ, ஔ தவிர்ந்த ஏனைய உயிர் எழுத்துகள் சொல்லாக்கத்தில் இறுதி நிலையில் வருகின்றன. உதாரணம்:-

அ - நட, கட, நல்ல, பெரிய, பல, சில

இ - படி, தடி, கனி, பனி, புலி, எலி, நன்றி

ஏ - நானே, அவனே, என்னே.

ஓ - போ, நீயோ, யாரோ, அறிந்தோ, அறியாமலோ

எகரம் பழந்தமிழிலும் சொல் இறுதியில் இடம் பெறவில்லை.

ஒகரம் பழந்தமிழில் நொ என்ற சொல்லில் மட்டும் சொல் இறுதியில் இடம் பெற்றது. ஔகாரம் பழந்தமிழில் கௌ, வெள ஆகிய சொற்களில் மட்டும் இறுதி நிலையில் இடம் பெற்றது. இச் சொற்கள் கௌவு, வெளவு என பிற்காலத்தில் வடிவ மாற்றம் அடைந்தன.

### 1.9.3 மொழி இடைநிலை எழுத்துகள்

சொல்லாக்கத்தின்போது சொல்லின் இடையில் தனித்தோ பிற எழுத்துகளுடன் இணைந்தோ இடம் பெறும் எழுத்துகள் இடைநிலை எழுத்துகள் எனப்படும்.

(1) 12 உயிர் எழுத்துகளும் சொல் இடையில் வருகின்றன. உதாரணம்:-

அ - மகன், அகலம்

இ - நிலம், கனிவு

(2) ங தவிர்ந்த 17 மெய் எழுத்துகளும் சொல் இடையில் தனித்து வருகி உதாரணம்:- பகல், முகில்

### 1.10.3.1 இடைநிலை மெய்மயக்கம்

மெய் எழுத்துகள் இரட்டித்து அல்லது பிற மெய்களுடன் இணைந்து இடையில் வருவதை இடைநிலை மெய்மயக்கம் என்று தமிழ் இலக்கணமாகக் கூறுவர். இடைநிலை மெய்மயக்கம் இரண்டு வகைப்படும்.

### 1.10.3.1.1 உடன் நிலை மெய்மயக்கம்:

ஒரே மெய் இரட்டித்து வருவது உடன் நிலை மெய்மயக்கம் எனப்படும்.

ர, ழ தவிர்ந்த 16 மெய்களும் சொல் இடையில் இரட்டித்து வரும். உதாரணம்

த்த் - பத்து, மெத்தை

ப்ப் - அப்பா, தப்பு

ற்ற் - வெற்றி, ஒற்றை

ங்ங் - அங்ஙனம், எங்ஙனம்

### 1.10.3..1.2 வேற்று நிலை மெய்மயக்கம் :

வெவ்வேறு மெய்கள் இணைந்துவருவது வேற்றுநிலை மெய்மயக்கம் எனப்படும்.

தமிழ்ச் சொற்களில் க, ச, த, ப தவிர்ந்த 14 மெய்களும் சொல் இடையில் குறிப்பிட்ட சில பிற மெய்களுடன் இணைந்து வரும்.

1. டவும் றவும் க், ச், ப் ஆகியவற்றுடன் மயங்கும்.

   ட்க் - வெட்கம்

2. ம, ப வுடன் மயங்கும்

   ம்ப் - அம்பு, தம்பி

3. ந, த வுடன் மயங்கும்

   ந்த் - தந்தை, பந்து

4. ப், ற், க்,ச்,ம் ஆகியவற்றுடன் ன மயங்கும்

   ன்ப் - அன்பு, இன்பம்

   ன்க் - நன்கு, என்சு

   ன்ற - அன்று, நன்றி

   ன்ச் - இன்சொல், நன்செய்

   ன் - நன்மை, புன்மை

5. ப், ட், க், ம் ஆகிய மெய்களுடன் ண் மயங்கும்

   ண்ப் - நண்பர், வெண்பா

6. ஞ, சவுடன் மயங்கும்

   ஞ்ச் இஞ்சி, மஞ்சள்

7. ங, க வுடன் மயங்கும்

8. க, ச, த, ப, ம, வ ஆகியவற்றுடன் ய மயங்கும்

9 க, ப, வ ஆகியவற்றுடன் ள மயங்கும்

ள்க் - கொள்கை, கொள்க

ள்ப் - கொள்பவன், ஆள்பவன் கள்வன், கொள்வேன்

10. க, த, ப, ம, வ ஆகியவற்றுடன் ழ மயங்கும்

ழ்க்- வாழ்க, வீழ்க

11. வ, ய வுடன் மயங்கும்

வ்ய் - காவ்யம் இது தற்காலத்தில் அருகிய வழக்கு. காவியம் - இது பெருவழக்கு.

## 1.11 சொல்லுக்கு முதலில் வரும் எழுத்துக்கள்

12 உயிரெழுத்துக்களும், க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ என்னும் மெய்யெழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வரும்.

ங,ட ண,ர,ல ழ, ள, ற, ன ஆகிய எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வாரா.

ங என்னும் எழுத்து சொல்லுக்கு முதலில் வருவதாய்ச் சொல்லப்பட்டிருப்பினும், இக்காலத்தில் அது வருவதில்லை.

அ, இ என்னும் சுட்டெழுத்துக்களோடும், எ, யா என்னும் வினா எழுத்துக்களோடும் சேர்த்து அங்ஙனம், இங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் என்றெழுதுவதும் உண்டு.

உயிர் - அறம், ஆடு, இலை, ஈட்டி, உரல், ஊர், எருது, ஏர், ஐயம், ஒன்று, ஓடம், ஔவை.

க - கல், கால், கிளி, கீரி, குறி, கூறு, கெடுதல், கேடு, கைப்பு, கொக்கு, கோது, கௌவை.

ங - இக்காலத்தில் இது சொல்லுக்கு முதலில் வாராது.

ச - சட்டி, சார்தல், சிரிப்பு, சீர், சுடுதல், சூடு, செதில், சேர், சைகை, சொல், சோர்வு, சௌக்கியம்.

ஞ - ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல், ஞகர வரிசையில் ஞ, ஞா, ஞெ, ஞொ என்பவை மட்டும் சொல்லுக்கு முதலில் வரும். மற்றவை வாரா. (ஞமலி –நாய், ஞாலம்- உலகம், ஞெகிழி- கொள்ளிக்கட்டை, ஞொள்கல் - இளைத்தல்.

ட - டகரம் சொல்லுக்கு முதலில் வாராது என்று கூறியது தமிழ்ச்சொற்களைக் குறித்ததே ஆகும்.

டங்கன் துரையை இடங்கன் துரை என்று எழுதலாமா? டயர் என்னுஞ் சொல்லை இடயர் என்று சொன்னால் பொருள் மாறாதா? டில்லி என்று எழுதாமல் இடில்லி என்று எழுதினால் என்ன பொருள் ஏற்படும்? அதனால், இச்சொல் இக்காலத்தில் தில்லி என்று எழுதப்படுகிறது. டென்மார்க் என்னுஞ் சொல்லை இடென்மார்க்கு என்று எழுதினால் பொருள் மாறுபடாதா? ஆதலின், இக்காலத்தில் டகரம் பிறமொழிச் சொற்களில் மொழி முதல் எழுத்தாக வரும் எனக் கொள்க.

ண - இது சொல்லுக்கு முதலில் வாராது.

த - தந்தை, தாய், தினை, தீமை, துணை, தூண், தென்னை, தேன், தையல், தொன்மை, தோள், தௌவல் (தௌவல்- கெடுதல்)

ந - நன்றி, நாடு, நிலம், நீர், நுனி, நூல், நெல், நேர்மை, நைந்து, நொச்சி, நோக்கம், நௌவி.

ப - பன்றி, பாடு, பிஞ்சி, பீடு, புலி, பூடு, பெண், பேதை. பையன், பொன், போதல், பௌர்ணமி.

ம - மண், மான், மின்னல், மீன், முளை, மூளை, மெய், மேன்மை, மையம், மொட்டு, மோனை, மௌனம்.

ய - யமன், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.
யகர வரிசையில் யி, யீ, யெ, யே, யை, யொ ஆகியவை சொல்லுக்கு முதலில் வாரா.

ர - இக்காலத்தில் ரகரமும் பிறமொழிச் சொற்களில் மொழி முதல் எழுத்தாக வரலாம். தொன்று தொட்டு அரங்கநாதன், இராமன், இராமாயணம் என்று எழுதுவதை நாம் இன்று மேற்கொள்வதில் தவறில்லை. ஆனால் எல்லாவற்றையும் அப்படியே எழுத வேண்டுவதில்லை. ரதம் என்னும் இரதம் என்று எழுதவேண்டுவதில்லை. ரப்பர் என்னும் சொல்லை இரப்பர் என்று எழுதினால் யாசிப்பர் என்றன்றோ பொருள்படும்? ஆதலால், தொன்றுதொட்டு எழுதி வருவதற்கு மட்டும் அகரம் இகரம் பெய்து எழுதுவோம். மற்றவற்றிற்கு அவ்வாறு செய்ய வேண்டுவதில்லை.

ல - இதுவும் சொல்லுக்கு முதலில் பிறமொழிச் சொற்களில் வருவதைக் கொள்ளலாம். லங்காஷயரை இலங்காஷயர் என்றெழுத மயக்கம் ஹ ஏற்படும். லூக்கா என்னுஞ் சொல்லை உலூக்கா என்று எழுதினால் நன்றாயிராது. லூயிபிஷர் என்னும் பெயரை உலூயிபிஷர் என்று எழுதுவது கூடாது. லட்டு

என்பதை இலட்டு என்று எழுதுவது நன்நன்று.

வ - வருகை, வாடல், விளைவு, வீணை, வெல், வேலை, வையகம், வெளவுதல். வகர வரிசையில் வு, வூ, வொ, வோ என்னும எழுத்துக்கள் சொல்லுக்கு முதலில் வாரா.

ழ - சொல்லுக்கு முதலில் வாராது.

ள - சொல்லுக்கு முதலில் வாராது.

ற - சொல்லுக்கு முதலில் வாராது.

ன - சொல்லுக்கு முதலில் வாராது.

ய - யகர வரிசையில் யி, யீ, யெ, யே, யை, யொ என்னும் 6 எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வாரா என்பதறிக.

யிலை, யீது, யொன்று என்று எழுதுவது தவறு.

இலை, ஈது என்று எழுதுக.

வ - வகர வரிசையிலும் வு, வூ, வொ, வோ ஆகிய 4 எழுத்துக்களும் சொல்லுக்கு முதலில் வாராது என்பதறிக.

வுடு, வூடு, வொன்று என்று எழுதுவது பிழையாகும். விடு, வீடு என்று எழுதுக.

றா முதலில் வாராது. றாமசாமி என்று எழுதுவது தவறு.

இராசாமி என்று எழுதுக.

ட, ற என்னும் எழுத்துகளுக்குப் பக்கத்தில் எந்த மெய்யும் வாராது.

அதற்கு, முயற்சி, நட்பு, தட்பம்.

பார்ப்பதற்கு- இச்சொல்லை, நினைவில் வைத்துக்கொண்டால் இடையில் ர் என்னும் இடையின மெய்க்கு முன் வேறு மெய் வரும் என்றும், வல்லின ற் என்னும் மெய்க்கு முன் வேறு மெய் வாராது என்றும் தெரிந்துகொள்ளலாம்.

## 1.12 சொல்லுக்கு இறுதியில் வாராத எழுத்து

ற் என்னும் எழுத்துச் சொல்லுக்கு இறுதியில் வாராது. கதிற் என்று எழுதுவது தவறு. கதிர் என்று எழுதுவதுதான் சரி.

நெல் பயிர் நெற்பயிர். இப்படிச் சந்தியில் ‘ல்’, ‘ற்’ ஆகுமேயன்றி ‘ற்’ சொல்லுக்கு ஈற்றில் நிற்காது.

நெற்பயிர் - இத்தொடரைப் பிரித்தால் நெல் பயிர் என்றே பிரிக்கவேண்டும்.

## தொகுப்புரை

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி இலக்கணங்களின் வகைப்பாட்டை அறிந்து கொள்கின்றனர். ஒலி எழுத்துக்களையும் வரிவடிவ எழுத்துக்களையும் அறிந்துகொள்ள முடிகின்றது. எழுத்துக்களின் இடபிறப்பு முயற்சிபிறப்பு போன்றவை வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளதால் அவற்றின் பிறப்பு நிலைகளை உணர்ந்துகொள்ள முடிகின்றது. உயிர் எழுத்து, மெய் எழுத்து, சார்பெழுத்து போன்ற எழுத்துக்களின் வகைப்பாட்டினை தெரிந்துணர்கின்றனர். சார்பெழுத்துக்களின் வகைப்பாட்டினை தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. இலக்கணம் என்றால் என்ன? அதன் வகைகளை கூறுக.
2. ஐந்து இலக்கண நூல்கள் யாவை?
3. எழுத்து என்றால் என்ன?
4. எழுத்துக்களின் பிறப்பிடங்கள் யாவை?
5. எழுத்துக்களின் முயற்சி பிறப்பு யாது?
6. முதல் எழுத்துக்களின் பிறப்பிடங்கள் எவை?
7. முதல் எழுத்துக்கள் என்றால் என்ன?
8. மெய் எழுத்துக்கள் எது?
9. தமிழ் எழுத்து வடிவம் யாது?
10. ஒலி எழுத்து என்றால் என்ன?
11. தமிழ் எழுத்துக்களும் அதன் வகைகள் யாது?
12. உயிர்மெய் என்பது யாது? சான்று தருக.
13. அளபெடை என்றால் என்ன அவற்றின் வகைகள் யாது?
14. சுட்டெழுத்துக்கள் என்றால் என்ன?

### குறு வினாக்கள்

1. எழுத்துக்களின் பிறப்பை விளக்கி எழுதுக எழுத்துக்களின் வகைகளை விளக்கி எழுதுக.
2. மொழி முதல் எழுத்துகள் யாவை தமிழ் எழுத்துக்களும் அவற்றின் வகைகளை விளக்குக.
3. அளபெடை மற்றும் அதன் வகைகளை விளக்கி எழுதுக.
4. குற்றியலுகரத்தின் வகைகளை விளக்குக.
5. குற்றியலிகரம் எவ்வாறு புணரும்.

### பெரு வினாக்கள்

1. தமிழ் எழுத்துக்களின் பிறப்பினை ஆராய்க
2. சார்பெழுத்துக்களின் வகைகளை விளக்கி கட்டுரை வரைக.
3. எழுத்துக்களின் வகைகளை தொகுத்து எழுதுக.

# அலகு - II

## 2.0 பாட அறிமுகம்

எழுத்துக்களானது சொல் என்று வரையறைப்படுத்தப்படுகின்றது. பகுபதம், பகாப்பதம் என்ற நிலையில் அவற்றின் வகைகள் விளக்கப்படுகின்றன. பெயர்ச்சொற்களும் வினைச் சொற்களும் இடைச்சொற்களும் உரிச்சொற்களும் பாகுபடுத்தப்படுகின்றன.

## 2.1 பாட நோக்கம்

சொல் என்பதன் பொருளை உணர்தல். சொல்லின் வகைப்பாட்டை நன்கு அறிதல். சொற்கள் உணர்த்தும் திணை பால் எண் இடம் போன்றவற்றின் வேறுபாட்டை பகுத்தல், வினை, வினைமுற்று, வினையெச்சம் வினையாலணையும் பெயர்களின் மாற்றத்தை அறிதல். சொற்களின் வகைப்பாட்டை கற்றல்.

## 2.2 சொல்

எழுத்து தனித்து நின்றாயினும் பல எழுத்துக்கள் தொடர்ந்து நின்றாயினும் பொருள் தருமாயின் அது சொல் எனப்படும். பொருளை அறிவதற்குக் கருவியாய் இருப்பது சொல்.

ஒரு சொல் இன்ன திணை என்றும், இன்ன பால் என்றும், இன்ன எண் என்றும், இன்ன இடம் என்றும், இன்ன வேற்றுமையினைக் கொண்டு வருகிறது என்றும் தெரிவிக்கும். வெளிப்படையாகவும், குறிப்பாகவும் பொருளை அறிவிக்கும்.

சொல்லை வடமொழியில் பதம் என்பர். இப்பதம், பகுபதம் என்றும், பகாபதம் என்றும் இருவகைப்படும். பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை சந்தி என்று பிரிக்கப்படும் சொல் அல்லது பதம் பகுபதமாகும். இவ்வாறு பிரிக்க முடியாதது பகாபதமாகும்.

பகுபதம் - பார் +க் + கின்று+ அன்

பார்க்கின்றனன்

பகாப்பதம் கண்

இது க என்றும் எண் என்றும் பிரிக்க முடியாது; பிரித்தால் பொருள் வாராது.

பகுபதம், பகாப்பதம் ஆகிய சொற்களை இலக்கணத்திற்குப் பயன்படும் வகையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று பிரிக்கலாம். இலக்கியத்திற்குப் பயன்படும் வகையில் இச்சொற்களை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என்று பிரிப்பர்.

கை - என்பது ஓர் உயிர் மெய் எழுத்து. ஆனால் அது ஒருவனின் அங்கமாகிய ஒரு பொருளைக் குறிக்கின்றது. இதுபோலவே தீ, பூ பை, முதலிய உயிர்மெய் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றன. இவ்வாறு எழுத்துக்கள் தனித்து நின்று பொருள் தருவதும் உண்டு, அப்பொழுது அவை சொல் எனப்படும்.

ஆடு, படம், நாற்காலி - இவைகள் ஒன்றிற்கு மேற்பட்ட பல எழுத்துக்களைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளை உணர்த்துகின்றது. இவ்வாறு பல எழுத்துக்கள் தொடர்ந்து வந்து பொருள் தருவதும் சொல்லெனப்படும். எழுத்துத் தனித்தாயினும், ஒன்றுக்கு மேற்பட்டுத் தொடர்ந்தாயினும் வந்து ஒரு பொருளைத் தருமாயின் அது சொல்லாம்.

## 2.3 சொற்றொடர்

சொற்றொடர் என்பது வாக்கியத்தின் ஓர் உறுப்பாகும். இது ஒரு சொல்லாகவும், சொற்களின் தொகுதியாகவும் அமையலாம்.

பூ- பெயர்த்தொடர் படித்தான் - வினைமுற்றுத்தொடர்

வாக்கியங்களில் சொற்றொடரை அவதானிக்கலாம். அம்மா சோறு சமைத்தாள். இங்கு

அம்மா - எழுவாய்த்தொடர்

சோறு சமைத்தாள் என்பது வினை முற்றுத்தொடர்.

### 2.3.1 பகுபதம்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றின் காரணமாக வருகின்ற பெயர்ச் சொற்களும் தெரிநிலையாகவும் குறிப்பாகவும் காலத்தைக் கொள்ளும் வினைச் சொற்களும் பகுபதங்களாகும்.

"பொருளிடங் காலஞ் சினைகுணந் தொழிலின்

வருபெயர் பொழுதுகொள் வினைபகு பதமே" நூற்பா 132

மரங்கள், மாடுகள், நாய்கள், பூனைகள் இச்சொற்களைப் பொருள்தரக் கூடிய கூறுகளாக நாம் பிரிக்கலாம். பிரித்தால் மரம், மாடு, நாய், பூனை ஆகிய ஒருமைப் பெயர்களும் - கள் என்ற பன்மை உணர்த்தும் விகுதியும் நமக்குக் கிடைக்கின்றன.

ஓடுதல், பாடுதல், ஆடுதல், நாடுதல் ஆகிய சொற்களைப் பிரித்தால் ஓடு, பாடு, ஆடு, நாடு ஆகிய வினைச் சொற்களும் -தல் என்ற தொழிற் பெயர் விகுதியும் நமக்குக் கிடைக்கின்றன.

இவ்வாறு பொருள்தரக் கூடிய உறுப்புகளாகப் பிரிக்கக் கூடிய சொற்களைப் பகுபதம் என்பர். ஒரு பகுபதத்தில் குறைந்தபட்சம் இரண்டு கூறுகளாவது இருக்க வேண்டும்.

ஓடிக்கொண்டிருந்திருப்பான். இதுவும் ஒரு பகுபதம் தான். இதனைப் பிரித்துப் பார்க்கலாம்.

ஓடு + இ +கொள் +ட் +உ +இரு +ந்த் +உ +இரு +ப் +ஆன் எத்தனை கூறுகள்? 11 கூறுகள் உள்ளன. - ந்த் - என்ற இடைநிலையை த் +த் என்று பிரித்தால் 12 கூறுகளாகும்.

## 2.3.2 பகுபத உறுப்புகள்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் உறுப்புக்களாகப் பிரியும் தன்மையது. பிரித்தால் ஒவ்வோர் உறுப்பும் பொருள் பயனைத் தருவதாகும். இப்பகுபதங்கள் பெயர், வினை என்னும் இரண்டு அடிப்படையில் அமையும்.

**“பகுதி விகுதி இடைநிலை சாரியை**

**சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை**

**முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்” (133)**

என்னும் நன்னுல் நூற்பா (133) பகுபத உறுப்புக்களைப் பற்றிக் கூறுகின்றது.

பகுபத உறுப்புக்கள் ஆறினுள் பகுதி, விகுதி, இடைநிலை என்னும் மூன்றையும் பதவியலில் விளக்குகின்றார். மற்ற மூன்றாகிய சாரியை, சந்தி, விகாரம் ஆகியவற்றைப் புணரியலில் கூறுகின்றார். பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் ஆகியவற்றில் முதலில் நிற்கும் பகாப்பதங்களே பகுதிகளாகும்.

ஒரு பகுபதத்தில் இடம்பெறும் கூறுகளை அவற்றின் தொழிற் அடிப்படையில் ஆறு உறுப்புகளாக வகைப்படுத்துவர். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பப்டும். ஏதாவது இரண்டு உறுப்புகள் கட்டாயம் இருக்கும். சில பகுபதங்களில் உறுப்புகளும் இருக்கும்.

### 2.3.2.1 பகுதி

மாடுகள், அரசன், ஓடினான் ஆகிய பகுபதங்களை மாடு+கள், அரசு+அன், ஓடு+இன் +ஆன் எனப் பிரிக்கலாம். இவற்றுள் மாடு, அரசு, ஓடு ஆகியவற்றை அடிச்சொல் எனவும் கள், அன், இன், ஆன் ஆகியவற்றை ஒட்டுகள் எனவும் அழைப்போம். ஒரு பகுபதத்தில் ஓர் அடிச் சொல்லும் ஒன்று அல்லது பல ஒட்டுகளும் இருக்கும். ஒரு பகுபதத்தின் அடிப்படை வடிவம் அதன் அடிச்சொல்லாகும். அதனுடன் ஒட்டப்படும் அல்லது இணைக்கப்படும் ஒவ்வொரு கூறும் ஒட்டு எனப்படும். ஒரு பகுபதத்தின் அடிச் சொல்லையே தமிழ் இலக்கண நூல்கள் பகுதி எனக் கூறுகின்றன.

**“தத்தம்**

**பகாப்ப தங்களே பகுதியாகும்”நூற்பா** 134

அவன், இவன், எவன் என்பனவும் பகுபதங்களே. இவற்றை அ +வ் +அன், இ +வ் +அன், எ +வ் +அன் எனப் பிரிக்கலாம். அ, இ, எ என்பன இவற்றின் பகுதிகளாகும்.

முன்னோர், பின்னோர், பிறர், நல்லோர் என்பவற்றை முன் + ஓர், பின் + ஓர் பிற + அர், நல் +ஓர் எனப் பிரிக்கலாம். முன், பின், பிற, நல் என்பன இவற்றின் பகுதிகளாகும்.

### 2.3.2.2 விகுதி

பகுபதத்தில் ஈற்றில் நின்று திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்தும் உறுப்பு விகுதியாகும். இது சொல்லின் இறுதியில் உள்ள பகுதியாகும். இதனை இறுதிநிலை என்றும் அழைப்பர்.

- அன், ஆன் - ஆண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தனன், நடந்தான்).
- அள், ஆள் - பெண்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். ((நடந்தனள், நடந்தாள்).
- அர்.ஆர்.ப,மார் - பலர்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தனர் நடந்தார் நடப்ப, நடமார்)
- கு, டு, து, று, என். ஏன், அல், அன் - தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள்.
- து, று, டு - ஒன்றன்பால் படர்க்கை வினைமுற்று விகுதிகள். (நடந்தது, கூயிற்று, குண்டுகட்டு அம். ஆம். எம். ஏம். ஓம். கும். டும். றும் - தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்.
- ஆய், இ - முன்னிலை ஒருமை
- மின், இர், ஈர் - முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள். (நடமின், நடந்தனிர், நடந்தீர்.)
- ஈயர், க.ய - வியங்கோள் வினைமுற்று விகுதிகள். (நிலீயர், நடக்க வாழிய).
- உம் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று விகுதி. (நடக்கும்)

“அன் ஆன் அள ஆள் அர் ஆர்பம் மார்

அ ஆ குடு துறு என் ஏன் அல் அன்

அம் ஆம் எம் ஏம் ஓமொடு உம் ஊர்

கடதற ஐ ஆய் இம்மின் இர் ஈர்

ஈயர் க யவும் என்பனவும் பிறவும்

வினையின் விகுதி பெயரினும் சிலவே" நூற்பா 140

மேற்கூறிய சூத்திரத்தில் பெயரினும் சில என்றதனால் மேற்கூறிய விகுதிகளுள் சில. பெயருக்கும் விகுதியாக வரும் தன்மையதாகும்.

விகுதி (termination) என்பது ஒரு சொல்லின் ஈற்றில் நிற்பது. விகுதியினால்தான் திணை, பால், எண் இவற்றிலுள்ள வேறுபாட்டைக் கண்டுபிடிக்கலாம். வித்தியாசம் காட்டுவது விகுதி இதற்குக் கடைநிலை என்பது தமிழ்ப்பெயர்.

கீழ்வரும் விகுதிகளைக் கவனமாகப் பார்த்துத் தெரிந்துகொள்க.

### 2.3.2.2.1 தன்மை வினைமுற்று விகுதிகள்

தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் - அன், என், ஏன்

(நான்) செய்வன் - அன்

(நான்) செய்வென் - என்

(நான்) செய்வேன் - ஏன்

தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள்

அம், ஆம், எம், ஏம், ஓம்

(நாம்) கூறுவம் - அம்

(நாம்) கூறுவாம் - ஆம்

(நாம்) கூறுவெம் - எம்

(நாம்) கூறுவேம் - ஏம்

(நாம்) கூறுவோம் - ஓம்

குறிப்பு: ஏன் விகுதி தன்மை ஒருமைக்கும், ஓம்விகுதி தன்மைப் பன்மைக்கும் பெரும்பாலும் வழக்கில் பயன்படக் காணலாம்.

### 2.3.2.2.2 முன்னிலை வினைமுற்று விகுதிகள்

முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள்- இ, ஐ, ஆய்

(நீ) பாடுதி - இ

(நீ) பாடினை – ஐ

(நீ) பாடினாய் - ஆய்

முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் - இர், ஈர், ஈர், கள்

(நீர்) காண்பீர் - இர்

(நீர்) காண்பீர் - ஈர்

(நீங்கள்) காண்பீர்கள்- ஈர், கள்

குறிப்பு: முன்னிலைப்பன்மையில் ஈர் விகுதி வரும்போது சில வேளைகளில் கள் விகுதியைச்சேர்த்து எழுதுவது இக்கால வழக்கு.

### 2.3.2.2.3 ஏவல் வினைமுற்று விகுதிகள்

ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி –ஆய்

ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகள் - ஈர், மின்

(நீ ) கேளாய் (நீர் ) கேளீர்

(நீ ) பாராய் (நீர்) பார்மின்

### 2.3.2.2.4 வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

வியங்கோள் வினைமுற்று விகுதிகள்- க, ய, அல், இயர், தல், இ, உம்

வாழ்க – க வாழியர் - இயர்

வாழிய – ய மாசிலனாதல் - தல்

செயல்- அல் போற்றி- இ (போற்று இ)

வேண்டும் - உம் (வேண்டு உம்)

படர்க்கை வினைமுற்று விகுதிகள்

1. ஆண்பால் விகுதிகள் - அன், ஆன்

   (கண்ணன்) எழுதுவான்- அன்

   (நண்பன்) எழுதுவான் - ஆன்

2. பெண்பால் விகுதிகள் - அள், ஆள்

   (மணிமேகலை) கூறினள் - அள்

   (கண்ணகி) கூறினாள் - ஆள்

3. பலர்பால் விகுதிகள் - அர், ஆர், ஆர் கள், ப

(நண்பர்) கூறுவர் – அர்

(பரிமேலழகர்) கூறுவார் –ஆர்

(பெரியோர்கள்) கூறுவார்கள்- ஆர் கள்

(அறிஞர்) கூறுப, என்ப- ப

4. ஒன்றன் பால் விகுதிகள் - து, று

(நாய்) ஓடியது – து

(பன்றி) உறுமிற்று – று

5. பலவின்பால் விகுதிகள் - அ, ஆ

அ- உடன்பாட்டு விகுதி

ஆ- எதிர்மறை விகுதி

(மாடுகள்) ஓடின – அ (உடன்பாடு)

(செய்திகள்)வாரா - ஆ (எதிர்மறை)

கீழ்வரும் வாக்கியங்களைக் கவனித்துப்படியுங்கள்.

| **ஒன்றன்பாலில் உடன்பாடு** | **பலவின்பாலில் உடன்பாடு** |
|---|---|
| வண்டி ஓடியது | வண்டிகள் ஓடின |
| சேவல் கூவிற்று | சேவல்கள் கூவின |
| **ஒன்றன்பாலில் எதிர்மறை** | **பலவின்பாலில் எதிர்மறை** |
| வண்டி ஓடாது | வண்டிகள் ஓடா. |
| செய்தி வராது | செய்திகள் வாரா. |

பகுபதத்தின் இறுதியில் திணை, பால், எண், இடம், வேற்றுமை, வினை, ஏவல், வியங்கோள் போன்ற பல்வேறு பொருள்களை உணர்த்தப் பயன்படும் உறுப்பை விகுதி என்பர்.

உதாரணமாக மாடுகளையா என்ற சொல்லை பின்வருமாறு பிரிக்கலாம்: மாடு +கள் + ஐ +ஆ. இச்சொல்லில் மாடு என்பது பகுதி. கள், ஐ, ஆ என்பன விகுதிகள்.

### 2.3.2.3 இடைநிலை

பகுதிக்கும் விகுதிக்கும் இடைப்பட்ட உறுப்பு இடைநிலையாகும். பகுபத உறுப்புகளில் பகுதி, விகுதி தவிர மற்ற நான்கும் இடையில் நிற்பனவே எனினும் அந்நான்கில் சாரியை, சந்தி, விகாரம் ஆகிய மூன்றையும் பின்னர் விளக்குகின்ற காரணத்தால் எஞ்சிய ஒன்றினையே இங்கு இடைநிலை என்று அழைப்பர். இவ் இடைநிலை பெயரிடை நிலை, வினையிடை நிலை என்று இரு வகைப்படும். காலம் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும்.

இறந்தகாலமாவது தொழிலது கழிவு. நிகழ்காலமாவது தொழில் தொடங்கிப் பெறாதநிலைமை. எதிர்காலமாவது தொழில் பிறவாமை. தமிழில் வினைச்சொல்லில் இடைநிலைகளே பெரும்பாலும் காலம் காட்டும்.

#### 2.3.2.3.1 இறந்தகால இடைநிலை

த், ட், ற், இன், ன், ய்

செய்தான்- செய் த் ஆன் - த் -இறந்தகால இடைநிலை

கண்டாள்- காண் ட் ஆள் - ட் - இறந்தகால இடைநிலை 106 முதல் 109

கற்றான் - கல் + ற் + ஆன் -ற் - இறந்தகால இடைநிலை.

ஓடின- ஓடு + இன் + அ -இன்- இறந்தகால இடைநிலை.

போனது - போ + ன் + அ + து- ன்- இறந்தகால இடைநிலை.

போயது - போ + ய் + அ + து- ய்- இறந்தகால இடைநிலை.

பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் பகுபத உறுப்பு இடைநிலை எனப்படும். பகுபதங்களில் இறந்த காலத்தைக் காட்டும் இடைநிலைகளுக்கு இறந்தகால இடைநிலை என்று பெயர். த், ட், ற் என்னும் மெய்களும் இன் என்பதும் ஐந்து பால்கள்.

(எ.டு நடந்தான் - நட +கு +த் +ஆன்

உண்டான் - உண் +ட் +ஆன்

சென்றான் - சென் +ற் +ஆன்

உறங்கினான் - உறங்கு+இ

மூன்று இடங்களிலும் இறந்த காலத்தைக் காட்டுகின்ற வினைப் பகுதிகளின் இடைநிலைகளாகும். இது (1) வினை இடைநிலை (2) பெயர் இடைநிலை (3) எதிர்மறை இடைநிலை என மூன்று வகைப்படும்.

### 2.3.2.3.1.1 வினை இடைநிலை

ஒரு வினைப் பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து காலம் உணர்த்தும் உறுப்பு வினை இடைநிலை எனப்படும்.

போனான், போகிறான், போவான் ஆகிய வினைச் சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்: போ + ன் + ஆன், போ +கிறு +ஆன், போ + வ் +ஆன்

இங்கு போ என்பது பகுதி, ஆன் என்பது விகுதி. -ன்-, -கிறு-, -வ்- என்பன இடைநிலைகள். இவை முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றை உணர்த்துகின்றன. இடைநிலைகள் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வருவன என்பதைக் காட்டுவதற்காக அவற்றின் இரு பக்கங்களிலும் மேலே காட்டியிருப்பது போல் சிறு கோடு இடுவது நன்று.

வினைச் சொற்கள் என்ற பகுதியில் காலம் காட்டும் இடைநிலைகள் பற்றி விளக்கப்படும்.

### 2.3.2.3.1.2 பெயர் இடைநிலை

அறிஞன், கலைஞன், கவிஞன், வலைஞன் ஆகிய சொற்களைப் பின்வருமாறு பிரிக்கலாம்:

அறி + ஞ் +அன், கலை +ஞ் +அன், கவி + ஞ் +அன், வலை + ஞ் + அன் இங்கு அறி, கலை, கவி, வலை என்பன பகுதிகள், -அன் என்பது விகுதி. – ஞ் - இடைநிலை எனப்படும்.

இங்கு வந்துள்ள -ஞ- கரத்தை புணர்ச்சியில் தோன்றிய ஓர் எழுத்தாகக் கருத முடியாது. காரணம் - ஞ - கரம் தோன்றுவதற்கு புணர்ச்சி விதிகள் எவையும் இல்லை. புணர்ச்சி விதிகளுக்குப் புறம்பாக ஞகரமெய் தோன்றியுள்ளது. அதனால், நமது இலக்கண ஆசிரியர்கள் இதனைப் பெயர் இடைநிலை என்றார்கள்.

பொருநர், பெறுநர், ஓட்டுநர் போன்ற சொற்களை பொரு+நர், பெறு+நர், ஓட்டு+நர் எனப்பிரித்து - நர் என்பதை விகுதியாகக் கொள்வர். இவற்றை பொரு + ந் +அர், பெறு + ந் +அர், ஓட்டு +ந் +அர் எனப் பிரிப்பதில்லை. அப்படிப் பிரித்தால் - ந் - இடைநிலை என்று கொள்ள வேண்டி வரும். அறிஞன், கவிஞன் போன்றவற்றை அறி+ஞன், கவி+ஞன் எனப் பிரித்தால் - நர் என்பது போல் - ஞன் என்பதையும் விகுதியாகக் கொள்ளலாம். நமது இலக்கண ஆசிரியர் அவ்வாறு கொள்ளவில்லை. அதனால், - ஞ் - பெயர் இடைநிலை ஆயிற்று.

பெயர் இடைநிலைகள் மிகச் சிறுபான்மை வழக்காகும். வினை இடை நிலைகளே பெரு வழக்கு.

### 2.3.2.3.1.3 எதிர்மறை இடைநிலை

எதிர்மறை வினைச் சொற்களில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வந்து எதிர்மறை உணர்த்தும் இடைநிலை எதிர்மறை இடைநிலை எனப்படும்.

செய்யாது, போகாது, நிற்காது, செய்யமாட்டான் போகமாட்டான் வரமாட்டான்.

மேல் உள்ள எதிர்மறை வினைகளில் -ஆ- , -மாட் ஆகிய இடைநிலைகள் எதிர்மறை உணர்த்துகின்றன. எதிர்மறை வினைகள் பற்றிய பகுதியில் இது பற்றி விளக்கப்படும்.

### 2.3.2.3.2 நிகழ்கால இடைநிலை (Signs of Present Tense)

கிறு, கின்று, ஆநின்று.

செய்கிறான்- செய் + கிறு + ஆன்- கிறு- நிகழ்கால இடைநிலை. நிகழ்காலஇடைநிலை.

செய்கின்றார் - செய் + கின்று + ஆர் - கின்று- நிகழ்கால இடைநிலை

செய்யாநின்றார் - செய் + ஆநின்று + ஆர் - ஆநின்று- நிகழ்கால இடைநிலை.

கிறு, கின்று, ஆநின்று என்னும் மூன்றும் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்தையும். ஆண், பெண், பலர், ஒன்று. பல என்னும் ஐந்து பாலையும் சேர்ந்த நிகழ்கால வினைப் பகுபதங்களுக்கு இடைநிலைகளாக அமையும்.

(எ.டு) நடக்கிறான் - நட+கிறு+ஆன்

செய்கின்றான் - செய் +கின்று+ஆன்

கூறாஆநின்றான் கூறு+ஆநின்று+ஆன்

**“ஆநின்று நின்று கிறுமூ விடத்தின்**

**ஐம்பால் நிகழ்பொழுது அறைநனை இடைநிலை”நூற்பா 143**

### 2.3.2.3.3 எதிர்கால இடைநிலை (Signs of Future Tense)

ப்,வ்,க்

நடப்பேன்- நட + ப் + ஏன் - ப்- எதிர்கால இடைநிலை.

செய்வேன்- செய் + வ் + ஏன்- வ்- எதிர்கால இடைநிலை.

பாடுகம் -- பாடு + க் + அம்- க்- எதிர்கால இடைநிலை.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் 202-ஆம் நூற்பாவின் உரையில் சேனாவரையர், "எதிர்காலத்திற்குக் ககரம் பெறுதலும் கொள்க" என்று கூறுவது காண்க.

**"பகுதி விகுதி பகுத்து இடைநின்றதை**

**வினைப்பெயர் அல்பெயருக்கு இடைநிலை எனவே" நூற்பா 141**

பகுபதங்களில் எதிர்காலத்தைக் காட்டும் என்று கூறாமல் பண்பிற் பகாநிலைப் பதம் என்று கூறியது சொற்பொருள் விரித்தல் என்னும் உத்தியாகும். மெயீற்றுப் பண்புப் பெயர்களின் இயல்புகள் மெயீற்றுப் பண்புப் பெயர்கள் விகுதி முதலியவற்றோடும் வேறு பதங்களோடும் சேரும் போது சில இயல்புகளைப் பெறும்.

**"ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல்**

**ஆதிநீடல் அடிஅகரம் ஐயாதல்**

**தன்ஒற்று இரட்டல் முன்நின்ற மெய்திரிதல்**

**இனம்மிகல் இன்னபிறவும் பண்பிற்கு இயல்பே" நூற்பா 136**

1. ஈறு போதல் - நல்லன் (நன்மை+அன்) - ஈற்றில் உள்ள மை விகுதி கெடல்.

2. இடை உகரம் இய்யாதல் - இடையில் நின்ற உகரம் இகரமாதல். கரியன் (கருமை+ய் +அன்).

3. ஆதிநீடல் - முதலில் உள்ள குற்றெழுத்து நெட்டெழுத்தாக மாறுதல். பசி (பசுமை+இ) - இதில் மை விகுதி கெட்டது. இடைநின்ற உகரம் இகரமாகி, முதலெழுத்து நீண்டது.

4. அடி அகரம் ஐயாதல் பைந்தார் (பசுமை+தார்) - பசுமை என்பதால் மை விகுதியும் இடை நின்ற உயிர்மெய்யும் கெட்டு வரும் எழுத்திற்கு இனவெழுத்து மிகுந்தது. முதலில் இருந்த அகரம் ஐகாரமாயிற்று.

5. தன்ஒற்று இரட்டல் வெற்றிலை (வெற்று+இலை) - வெறுமை என்பதில் மை விகுதி கெட்டு, தன் ஒற்று இரட்டியது.

6. முன்நின்ற மெய் திரிதல் - சேதாம்பல் (செம்மை+ஆம்பல்) - இச்சொல்லில் மை விகுதி கெட்டு, முதல் நீண்டு முன்னின்ற மகர மெய் தகர மெய்யாகத் திரிந்தது.

7. இனம் மிகல் - வரும் எழுத்திற்கு இனமாகிய எழுத்து மிகுதல். பைங்கண் (பசுமை+கண்). இதில் மை விகுதி கெட்டு, இடை மறைந்து இனமாகிய எழுத்து மிகுந்தது.

மேற்கூறிய விதிகள் செம்மை, சிறுமை முதலாக எடுத்துக்காட்டிய சொற்களுக்கே உரியன. எனவே, இது எடுத்த மொழியின் எய்த வைத்தல் என்னும் உத்தியாகும்.

### 2.3.2.4 சாரியை

பகுபத உறுப்புகளான பகுதியையும் விகுதியையும் அல்லது இடை நிலையையும் விகுதியையும் இணைப்பதற்கு, அல்லது கூட்டுப் பெயராக்கத்தில் இரண்டு சொற்களை இணைப்பதற்குப் பயன்படும் பகுபத உறுப்பு சாரியை எனப்படும். பகுதி, விகுதி, இடைநிலை ஆகியவற்றுக்குப் பொருள் உண்டு. (பெயர் இடைநிலை தவிர) ஆனால் சாரியைக்குப் பொருள் இல்லை. இரண்டு பகுபத உறுப்புகளுக்கு இடையில் வந்து அவற்றை இணைப்பதே சாரியையின் செயற்பாடாகும்.

பழந்தமிழில் வழங்கிய இருபதுக்கு அதிகமான சாரியைகள் பற்றி நமது இலக்கண நூல்கள் கூறுகின்றன. தற்காலத் தமிழில் அவற்றுள் சில சாரியைகளே வழங்குகின்றன. அன், அம், அத்து, அற்று, இன் முதலிய சாரியைகள் இன்று வழக்கில் உள்ள மரம் + ஐ, பணம் + கு ← மரம் + அத்து + ஐ, பணம் +அத்து + கு துன்பம் + அத்து + ஆல் → பணத்துக்கு ← மகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது - அத்து சாரியை பெறுகின்றன.

சாரியை என்பது சார்ந்து இயைந்து நிற்பது. இது காதுக்கு இனிமை தருவதற்கு வருவது. அன், இன், ன், அ, கு, அற்று, அத்து முதலியவை பொதுச் சாரியைகளாகவும் அ, கரம், காரம், கான் என்பவை எழுத்துகளுக்குச் சாரியைகளாகவும் வரும்.

#### 2.3.2.4.1 பொதுச்சாரியை

செய்தனன்- செய்+த் +அன் +அன்- அன்- சாரியை

வண்டின்கால் - வண்டு+இன் +கால்- இன்-சாரியை

கோன் - கோ + ன்- ன்-சாரியை

ஈமக்கடன் - ஈம் +அ+க் +கடன்- அ-சாரியை

செய்குவாய் - செய் + கு + வ் + ஆய்- கு-சாரியை

பலவற்றை- பல + அற்று + ஐ- அற்று -சாரியை

மரத்தை- மரம் + அத்து + ஐ- அத்து சாரியை

#### 2.3.2.4.2 எழுத்துச் சாரியை

“க, ச, ட, த, ப, ற என ஆறே“ - அ - சாரியை. இவை க், ச், ட், த், ப், ற் என்றே இருக்க வேண்டும். நூற்பாவில் இப்படி எழுதுவது இயலாது. ஆதலால், அவ்வெழுத்துகளோடு அகரம் சேர்க்கப்பட்டது.

அகரம், மகரம், னகரம் - கரம் சாரியை

ஆகாரம், ஊகாரம், ஐகாரம் - காரம் சாரியை

ஐகான், ஔகான் - கான் சாரியை

### 2.3.2.5 சந்தி

சந்தி என்பது பகுதியையும் இடைநிலையையும் சேர்க்கும் எழுத்தாகும்.

பார்த்தனன் - பார் + த் + த் + அன் + அன்.

பார் என்னும் பகுதிக்கு முன்னுள்ள ‘த்’ சந்தி.

சந்தி என்பதும் புணர்ச்சி என்பதும் ஒரு பொருட் சொற்கள். சந்தி வடசொல். புணர்ச்சி தமிழ்ச் சொல். சந்திகளாவன புணரியலிற் சொல்லப்படுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரங்களாம் என ஆறுமுகநாவலர் தனது “இலக்கணச் சுருக்கம்“ என்னும் நூலில் குறிப்பிடுகிறார். எனினும் பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புகள் புணரும் போது இடையில் தோன்றும் எழுத்தையே சந்தி என நமது இலக்கண ஆசிரியர்கள் கருதினர் எனக் கொள்ளலாம். இல்லையெனில் திரிதல், கெடுதல் போன்ற புணர்ச்சியில் தோன்றும் பிற விகாரங்களை விகாரம் என்னும் பகுபத உறுப்பில் அவர்கள் சேர்க்க வேண்டியதில்லை.

பகுதி, விகுதி, இடை நிலை ஆகிய பகுபத உறுப்புகள் இணையும்போது, அல்லது இரண்டு சொற்கள் சேர்ந்து தொகைச் சொல்லாகும்போது இடையில் ஓர் எழுத்துத் தோன்றின் அது சந்தி எனப்படும்.

எமது இலக்கண ஆசிரியர்கள் படித்தான், படிப்பான் போன்ற வினைகளை படி + த் + த் + ஆன், படி + ப் + ப் +ஆன் எனப்பிரித்து த் + த், ப் + ப் ஆகியவற்றுள் இரண்டாவதாக வரும் த், ப் ஆகியவற்றை இடைநிலை என்றும் முதலில் நிற்கும் த்ப் ஆகியவற்றை சந்தி என்றும் விளக்குவர். தற்காலத்தில், நவீன மொழியியலாளர்கள் இச்சொற்களை படி + த்த் + ஆன், படி + ப்ப் + ஆன் எனப் பிரித்து -த்த்-, -ப்ப்- ஆகியவற்றை இடைநிலைகளாகக் கொள்வர். மொழியியலாளர் பிரிக்கும் முறை இலக்கணத்தை எளிமைப்படுத்த உதவும்.

### 2.3.2.6 விகாரம்

விகாரம் என்று தனியாக ஓர் உறுப்பு இல்லை. பகுதியும் சந்தியும் மாற்றம் அடையலாம். அல்லது சந்தி மட்டும் மாற்றம் அடைந்து வரலாம். இவ்வாறு மாற்றம் பெறுவதை ‘விகாரம்‘ என்பர். எடுத்துக்காட்டு : வந்தனன்- வா - த் - த் - அன் - அன்

வா - பகுதி

த் - சந்தி

த் - இடைநிலை

அன் - சாரியை

அன் - விகுதி

இதில் வரும் வா என்னும் பகுதி வ எனக் குறுகியும், த் என்னும் சந்தி ந் என்று மாற்றம் அடைந்தும், விகாரமாகியுள்ளன.

### 2.4.2.6.1 கால வேறுபாடுகள்

தமிழ்மொழியில் பன்னெடுங்காலமாய் இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று காலங்களே சொல்லப்பட்டு வருகின்றன. ஆங்கிலத்தில் காலவேறுபாடுகள் காட்டும் சொற்கள் இருக்கின்றன. அதுபோலத் தமிழில், எழுதுவதிலும், பேசுவதிலும் கால வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. ஆனால், அவற்றைக் குறித்து இலக்கணங்கள் கூறுவதில்லை. எனினும், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் தமது "தமிழ்மொழி வரலாறு" என்னும் நூலில் இறப்பில் இறப்பு, இறப்பில் நிகழ்வு, இறப்பில் எதிர்வு என்றும்' நிகழ்வில் இறப்பு, நிகழ்வில் நிகழ்வு, நிகழ்வில் எதிர்வு என்றும்' எதிர்வு ஒன்றே என்றும் காலவேறுபாட்டைப் பிரித்துக் காட்டியுள்ளார். பெருந்தமிழ்ப் புலவராயும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராயும் இருந்து மறைந்த டாக்டர் மு. வரதராசனார் தமது "மொழி நூலில்" இறப்பு, இறப்பில் இறப்பு, இறப்பில் நிகழ்வு, இறப்பில் எதிர்வு, தொடரும் இறப்பு எனவும்' நிகழ்வு எனவும், தொடரும் நிகழ்வு எனவும்' எதிர்வு எனவும், தொடரும் எதிர்வு எனவும் கால வேறுபாடுகளைக் காட்டியிருப்பதைக் காண்கிறோம். கால வேறுபாட்டைக் காட்டு வதில் தமிழ் முன்னேற்றம் அடைந்திருப்பதை அறிக.

#### 2.4.2.6.2.1 இறந்த காலம்

எழுதினான்- இறப்பு.

எழுதிவிட்டான் இறப்பில் இறப்பு.

எழுதியுள்ளான் இறப்பில் இறப்பு.

எழுதியிருக்கிறான் இறப்பில் நிகழ்வு.

எழுதியிருப்பான் இறப்பில் எதிர்வு.

எழுதிக்கொண்டிருந்தான் தொடரும் இறப்பு.

#### 2.4.2.6.2.2 நிகழ்காலம்

எழுதுகிறான் - நிகழ்வு.

எழுதிக்கொண்டிருக்கிறான்- தொடரும் எதிர்வு.

### 2.4.2.6.2.3 எதிர்காலம்

எழுதுவான்- எதிர்வு.

எழுதிக்கொண்டிருப்பான்- தொடரும் எதிர்வு.

இவ்வாறு துணைவினைகளைச் சேர்த்துப் பயன்படுத்துவ தால் வினைச் சொற்களில் கால வேறுபாடுகள் தோன்றுவதைக் காண்க.

## 2.5 பகாபதம்

எழுத்தியலில் எழுத்துகளின் வகை, அவற்றின் உச்சரிப்பு, அவை சொல்லாக்கத்தில் பயன்படும் முறை என்பன பற்றிப் பார்த்தோம். இவ்வதிகாரத்தில் சொற்களின் அமைப்புப் பற்றி விளக்கப்படுகின்றது.

**“பகுப்பாற் பயனற் றிடுகுறி யாகி**

**முன்னே யொன்றாய் முடிந்தியல் கின்ற**

**பெயர்வினை யிடையுரி நான்கும் பகாப்பதம்” நூற்பா 131**

எழுத்துகள் ஒலிகளைக் குறித்து நிற்கின்றன. எழுத்து என்ற நிலையில் அவற்றுக்குப் பொருள் இல்லை.

நிலம் - நீர் - பெயர்ப் பகாப்பதம்

நட, வா - வினைப் பகாப்பதம்

மண். கொல் -இடைப் பகாப்பதம்

உறி, கழி - உரி பகாப்பதம்

அ, ஆ, ப், ட், ம் என்பன எழுத்துகள். இவற்றுக்குப் பொருள் இல்லை. ஆனால் இவை ஒன்றுடன் ஒன்று சேர்ந்து பொருள் உள்ள சொற்களை ஆக்குகின்றன. மேலுள்ள ஐந்து எழுத்துகளும் எத்தனை சொற்களை ஆக்க முடியும்?

ஆ, மா, பா, படம், பட்டம், மடம், மட்டம், அப்பம், அப்பா, ஆம், பப்படம், மாடம், ஆட்டம் இவ்வாறே மேலுள்ள ஐந்து எழுத்துகளையும் கொண்டு இன்னும் சில சொற்களை ஆக்கலாம்.

ஆ, மா, பா ஆகியன ஓர் எழுத்தாலான சொற்கள். ஏனையவை பல எழுத்துகளாலான சொற்கள். எழுத்துகள் ஒன்றோ பலவோ சேர்ந்து பொருள் தருமாயின் அதனைச் சொல் என்பர். சொல் என்பதும் பதம் ஏன்பதும் ஒரே பொருள் தரும் சொற்களாகும்.

உதாரணமாக படம் என்ற சொல்லை ப + டம் என்றோ, பட்டம் என்பதை பட் +டம் என்றோ பிரித்தால் அவற்றுள் எந்தக் கூறும் பொருள் தருவதில்லை. ப, டம், பட் என்று தமிழில் சொற்கள் இல்லை.

பப்படம் என்பதை பப் + படம் என்றும் மாடம் என்பதை மா+டம் என்றும் அவற்றில் இடம்பெறும் படம், மா என்பன பொருள் தருகின்றன. ஆனால் அவற்றுடன் இருக்கும் பப், டம் என்பவற்றுக்குப் பொருள் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, மேல் உள்ள சொற்களைப் பொருள் தரக்கூடிய கூறுகளாக நாம் பிரிக்க முடியாது. இவ்வாறு பிரிக்க முடியாத சொற்களைப் பகாப்பதம் என்பர்.

## 2.6 சொல்லின் வகைகள்

இயற்சொல், திரிசொல் என்னும் தன்மையுடையதாய் பெயர் வினை என்னும் இரண்டு சொற்களாக அவற்றுடன் இடை, உரி என்னும் சொற்கள் சேர்ந்து நான்கு சொற்கள் அமையும். இவற்றுடன் திசைச்சொல்லும் வடசொல்லும் சேராமல் இருக்கும்.

**"அதுவே.**

**இயற்சொல் திரிசொல் இயற்பிற் பெயர்வினை**

**எனஇரண்டு ஆகும் இடைஉரி அடுத்து**

**நான்கு மாம்திசை வடசொல்அணு காவழி" (270)**

என்னும் நூற்பா (270) இலக்கிய பயன்பாட்டுச் சொற்களையும், இலக்கண அடிப்படைச் சொற்களையும் அடையாளப்படுத்துகின்றது. இனி, இலக்கியப் பயன்பாட்டுச் சொற்கள். இலக்கண அடிப்படைச் சொற்கள் முதலியவற்றை நிரல்படக் காணலாம். இலக்கியத்தின் அடிப்படையில் இயற்சொல், திரிசொல் திசைச்சொல் வடசொல் எனவும் இலக்கணத்தின் அடிப்படையில் பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல் எனவும் அமையும்.

### 2.6.1 இயற்சொல்

செந்தமிழ் நிலத்து வழங்கும் சொல்லாகித் திரிசொல் போலில்லாமல் கற்றார் கல்லா அனைவருக்கும் தமது பொருளை விளக்கும் தன்மையை உடைய சொல் இயற் சொல்லாகும். இய என்பது இயல்பாகப் பொருள் உணர்த்தும் சொல்லாகும்.

(எ.டு) மண், பொன், நடந்தான், வந்தான் முதலியன.

**"செந்தமி ழாகித் திரியாது யார்க்கும்**

**தம்பொருள் விளக்கும் தன்மையை இயற்சொல் " நூற்பா 271**

### 2.6.2 திரிசொல்

ஒரு பொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என்று இரண்டு வகை அரிதாகக் கற்றோரால் மட்டும் பொருள் உணரத்தக்கனவாகிய சொல் திரிசொல்லாகும்.

(எ.டு) கிள்ளை, சுகம், தத்தை, வன்னி முதலிய பல சொற்கள் கிளி என்னும் ஒரு பொருளைக் குறித்த "வாரணம்" என்னும் சொல் யானை, கோழி, சங்கு என்னும் பல பொருளைக் குறித்து வந்தது.

படர்ந்தான், சென்றான் முதலான சொற்கள் போயினான் என்னும் ஒரு பொருள் குறித்த பல வினைத் திரி சொல்லாகும். சேறும், வருதும் என்பனவற்றுள்ளும், தும் என்னும் விகுதிகள், தன்மைப் பன்மை எதிர்காலம் என்னும் ஒரு பொருள் குறித்த பல இடைத்திரி சொல்லாகும்.

கொல் - இது ஐயம், அசைநிலை என்னும் பல பொருள் குறித்த ஒரு திரி சொல்லாகும்.

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் சொற்கள் மிகுதி என்னும் ஒருபொருள் குறித்த பல உரித் திரிசொல்லாகும்.

கடி என்னும் சொல் காப்பு, கூர்மை, அச்சம், கரிப்பு, விளக்கம். சிறப்பு, மணம் முதலிய பலபொருள் குறித்த ஓர் உரித் திரிசொல்லாகும்.

ஒருபொருள் குறித்த பலசொல்லாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் அரிதுணர் பொருளன திரிசொல்லாகும்.

**"ஒருபொருள் குறித்த பலசொல் ஆகியும்**
**பலபொருள் குறித்த ஒருசொல் ஆகியும்**
**அரிதுணர் பொருளண திரிசொல் ஆகும்"**

என்னும் நூற்பா (272) திரிசொல்லின் இலக்கணத்தையும், வகைகளையும் கூறியது.

### 2.6.3 திசைச்சொல்

செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு நிலங்களிலும், பதினெட்டு மொழிகளில் தமிழ் நிலம் ஒழிந்த பதினேழு மொழி வழங்கும் நிலங்களிலும் வழங்கி, அத்திசைகளிலிருந்து செந்தமிழ் நிலத்தில் வந்து தம் குறிப்பாகிய பொருளைத் தரும் சொல் திசைச் சொல்லாகும்.

**"செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினும்**
**ஒன்பதிற்று இரண்டினில் தமிழ்ஒழி நிலத்தினும்**
**தம்குறிப்பினவே திசைச்சொ லென்ப" நூற்பா 273**

(எ.டு) கொடுந்தமிழ்நாடு தமிழ்ச்சொல் திசைச்சொல்

1. தென்பாண்டி நாட்டார் கவினைப் பெற்றம் என்றும் சோற்றைச் சொன்றி என்றும் கூறுவர்.

குட்டம் தாய் தன்னை

குடம் தந்தை அச்சன்

கற்கா வஞ்சர் கையர்

(எ.டு) 1. பசுவைப் பெற்றம் என்பது சோற்றைச் சொன்றி என்பதும் - தென்பாண்டி நாட்டுச்சொல்.

2. தாயைத் தள்ளை என்பது குட்டநாட்டுச் சொல்.

3. தந்தையை அச்சன் என்பது - குடநாட்டுச் சொல்.

4. வஞ்சகரைக் கையர் என்பது - கற்கா நாட்டுச் சொல்.

5. தோட்டத்தைக் கிழார் என்பது - வேணாட்டுச் சொல்

6. சிறுகுளத்தைப் பாழி என்பது பூழி நாட்டுச் சொல்.

7. வயலைச் செய் என்பது - பாண்டி நாட்டுச் சொல்.

8. சிறுகுளத்தைக் கேணி என்பது - அருவா நாட்டுச்சொல்.

9. புளியை எகின் என்பது அருவா வடதலை நாட்டுச்சொல்.

10. தோழனை எலுவன் என்பதும் தோழியை இகுளை என்பதும் - சீத நாட்டுச் சொல்.

11. நல்ல நீரை வெள்ளம் என்பது - மலையமாநாட்டுச் சொல்.

12. தாயை ஆய் என்பது - சோழ நாட்டுச் சொல்.

தமிழகம் தவிர்த்த பதினேழு நாடுகள்: சிங்களம், சோனகம், சாவகம், சீனம். துளுவம், குடகம். கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம், கங்கம், மகதம், கடாரம், கௌடம், குசலம் ஆகியன.

அந்தோ என்பது - சிங்களச்சொல்

மாமரத்தைக் கொக்கு என்பது - துளுவ நாட்டுச் சொல்.

எருத்தைப் பாண்டில் என்பது - தெலுங்கு நாட்டுச் சொல்.

### 2.6.4 வடசொல்

ஆரியத்திற்கும் தமிழுக்கும் உரிய பொது எழுத்தாலும் ஆரியத்திற்கே உரிய சிறப்பெழுத்தாலும் பொது. சிறப்பு என்னும் இவ்விரண்டு எழுத்தினாலும் செந்தமிழ்ச் சொல்லை ஒப்பனவாகி வடதிசையிலிருந்து வந்து வழங்குவன வடசொல்லாகும். (நூ.274)

(எ.டு அமலம், கமலம், மேரு, காரணம். காரியம் ஆகியவை பொது எழுத்தால் இயைந்தன.

சுகி, போகி, சுத்தி முதலியவை வடமொழியின் சிறப்பெழுத்தால் இயைந்தன.

அரன், அரி, கடினம், சலம் முதலியன பொது, சிறப்பு எழுத்துக்களால் இயைந்தன.

இதுவரை சொல்லின் பாகுபாடுகளையும் இலக்கியப் பயன்பாட்டுச் சொற்களையும் கண்டோம். இனி, இலக்கண அடிப்படையில் நால்வகைச் சொற்களில் பெயர்ச்சொல் தொடர்பான செய்திகளைப் பார்ப்போம்.

## 2.7 பெயர்ச்சொல்

பொருளின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். பொருளை உணர்த்தி வேற்றுமை உருபுகளை ஏற்க நிற்பது பெயர்ச்சொல். வினையாலணையும் பெயர் தவிர மற்றைய பெயர்ச்சொற்கள் காலம் காட்டா என்பதறிக.

பூனை, மதுரை, கண்ணன்.

பூ, சோலை, கடை, முருகன் - இவை சொற்கள். இவை பொருட்களின் பெயர்களாக வழங்கப்படுகின்றன. இவ்வாறு வருவது பெயர்ச் சொல்.

ஒரு பொருளின் பெயரைக் குறிக்குஞ் சொல்லே பெயர்ச் சொல்லாம்.

இடுகுறியும் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையும் தொடர்ந்து வினையாலனையும் காரணக் குறியொன்று காலம் காட்ட, அல்லாதன காலம் காட்டாதனவாய் எட்டு வேற்றுமைகளையும் சார்தற்கு இடமாய் இருதிணை ஐம்பாலிலும் மூவிடத்தும் ஒன்றனை ஏற்பனவும். பலவற்றினை ஏற்பனவும் ஆகிவருவன பெயர்களாகும்.

(எ.டு மரம், விள. பனை - இடுகுறி மரபு

அவன், அவள், விலங்கு. பறவை - காரணக்குறி மரபு பொன்னன், பூனன் - காரணக்குறியாக்கம்

நடந்தவனை, நடந்தோனை - வினையாலனையும் காரணப் பெயர்கள் காலம் காட்டும் இடைநிலை

மரம், பனை முதலிய இடுகுறிப் பெயரும், அவன், அவள் முதலிய காரணப் பெயரும் மரபு பற்றி வருவன. முட்டை முதலாகிய இடுகுறிப் பெயர், பொன்னன் முதலாகிய போலத் தொன்றுதொட்டு வருதலின்றி நடுவிலே ஒருவரால் ஆக்கப்பட்டு வருவனவாக

**"இடுகுறி காரணம் மரபோ டாக்கம்**
**தொடர்ந்து தொழிலல காலந் தோற்றா**
**வேற்றுமைக் கிடனாய்த் திணைபால் இடத்தொன்று**
**ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே"**

என்னும் நனனுல் நூற்பா (275) பெயர்ச்சொல்லின் பொது இலக்கணத்தைக் கூறியது.

### 2.7.1 இடுகுறிப்பெயர்

காரணம் இல்லாமல் முன்னோர் இட்டபெயரே இடுகுறிப்பெயர்.

### 2.7.2 காரணப்பெயர்

காரணம் குறித்து வருவது காரணப்பெயர்.

வயிறு – வாயின் இறுதி

சுவர் - தோள் போல் இருப்பது, சுவல்-தோள், சுவர்-போலி

மரம்- தரையுடன் மருவியிருப்பது

குறிச்சி - குறிஞ்சி நிலத்தில் அ.ஃதாவது மலைப்பகுதியில் இருக்கும் ஊர்

ஒத்திகை – ஒத்து இருக்கை

விலங்கு – முதுகெலும்பு குறுக்கே இருப்பது

### 2.7.3 காரண இடுகுறிப்பெயர்

காரண இடுகுறிப்பெயர் என்பதும் ஒன்று உண்டு. ஒரு பெயர் காரணமுடையதாய் இருந்தும், அ.ஃது அக்காரணமுடைய பலவற்றிற்கும் செல்லாது. ஒன்றற்றே உரியதாய் வருவது காரண இடுகுறிப்பெயர் என்பது.

நாற்காலி, காற்றாடி, முள்ளி

நான்கு கால்களையுடைய கட்டில் முதலியவை பல இருப்பினும், நாற்காலி என்பது ஒருவகை இருக்கைக்கே இடுகுறியாக அமைகிறது. இப்படி வருவது காரண இடுகுறிப்பெயர். இது போல் மற்றவற்றிற்கும் கொள்க.

### 2.7.4 குறிக்கும் பொருள் பற்றிய பெயர்கள்

இப்படி இடுகுறியாகவோ, காரணமாகவோ வரும் பெயர்களைக் குறிக்கும் பொருள் கருதியும், பிறப்பு நோக்கியும், சொற்கள் பயன்படுத்தாமை கருதியும் பலவாறாகப் பிரிப்பதுண்டு.

## 2.8 அறுவகைப் பெயர்ச் சொற்கள்

பொருள் இடம் காலம் சினை குணம் தொழில் போன்ற அறுவகைப் பெயர்ச் சொற்கள் உள்ளன.

### 2.8.1 பொருட்பெயர்:

பொருளைக் குறிப்பது பொருட்பெயர். இ∴து உயர்திணையாகவும் இருக்கும். அ∴றிணையாகவும் இருக்கும்.

கண்ணன், வள்ளி, நாய்.

மரம், மலர், படம், செடி - இவை பொருளைக் குறிக்கும் சொற்கள். இவைகளே பொருட்பெயர்.

**"ஏதேனும் ஒரு பொருளின் பெயரே பொருட் பெயராம்"**

### 2.8.2 இடப்பெயர்

இடத்தைக் குறிப்பது இடப்பெயர்.

வீடு, கல்லூரி, மதுரை, திண்டுக்கல், வடக்கன்குளம் - இவை பெயர்ச் சொற்கள்.

ஆனால் இவை இடத்தைக் குறிக்கின்றன. ஆகவே இவை இடப்பெயர்.

**"ஏதேனும் ஓர் இடத்தின் பெயரே இடப் பெயராம்"**

### 2.8.3 காலப்பெயர்

காலத்தைக் காட்டுவது காலப்பெயர்.

திங்கட்கிழமை, ஆடித்திங்கள், பகல், கார்த்திகை, திங்கள், மாலை –

இவை பெயர்ச் சொற்களென்றாலும், காலத்தைக் குறிப்பதால் காலப் பெயர்.

**"எதேனும் ஒரு காலத்தின் பெயரே காலப் பெயராம்.."**

### 2.8.4 சினைப்பெயர்

சினையைக் காட்டுவது சினைப்பெயர், சினை- உறுப்பு.

கை, தலை, இலை, கிளை, கண், கிளை, வேர் -

இவை பெயர்ச்சொற் கள். இவை உறுப்பைக் காட்டுகின்றன. ஆகவே இவ சினைப்பெயர்.

**“ஏதேனும் ஓர் உறுப்பின் பெயரே சினைப் பெயராம்”**

### 2.8.5 குணப்பெயர்

பண்பை அல்லது குணத்தைக் காட்டுவது குணப்பெயர். குணமாவது ஒரு பொருள்தோன்றும் காலத்துடன் தோன்றி அது அழியும் அளவும் நிற்பது.

அன்பு, கருமை, சதுரம், குட்டை, இனிப்பு, அழகு, உருண்டை, வட்டம், நன்மை, தீமை, வெண்மை - இவை பெயர்ச் சொற்களே. இவை குணத்தைக் காட்டுவதால் குணப்பெயர்.

**“ஏதேனும் ஓர் குணத்தின் பெயரே குணப் பெயராம்”**

### 2.8.6 தொழிற்பெயர்

**“ஏதேனும் ஒரு தொழிலைக் குறிப்பதே தொழிற் பெயராம்”**

தொழிலைக் காட்டுவது தொழிற்பெயர். இதில் விகுதி பெற்ற தொழிற்பெயர், விகுதிபெறாத தொழிற்பெயர், முதன்நிலைத் தொழிற்பெயர், முதனிலைத் திரிந்த தொழிற்பெயர், காலங்காட்டும் தொழிற்பெயர், உடன்பாட்டுத் தொழிற்பெயர், எதிர்மறைத் தொழிற்பெயர் என்று பலவகைகள் உண்டு.

#### 2.8.6.1 விகுதி பெற்ற தொழிற்பெயர்

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, தி, சி, வி, வு, உள், காடு, இ, மதி, து, மை, அடம், ஆனை அரவு வான் முதலிய விகுதிகளுள் ஏற்ற ஒன்றைப்பெற்று வருவது விகுதி பெற்ற தொழிற்பெயராகும்.

தல்- செய்தல்

அல்- ஓடல்

அம்- நோக்கம்

ஐ- கொலை

கை- வருகை

வை- பார்வை

கு- போக்கு

பு – மடிப்பு

தி- மறதி

சி- உணர்ச்சி

வி- கல்வி

வு – நினைவு

உள்- கடவுள்

காடு – வேக்காடு

இ - வெகுளி

மதி – ஏற்றுமதி, இறக்குமதி

து - வருவது

மை - வாராமை

அடம் - கட்டடம் (இதைக் கட்டிடம் என்று எழுத வேண்டுவதில்லை)

அரவு – தோற்றரவு

வான் - செய்வான், ஏன்? (செய்தல் என்பது பொருள்)

ஆனை- வாரானை

### 2.8.6.2 விகுதி பெறாத தொழிற்பெயர்

### 2.8.6.3 முதனிலைத் தொழிற்பெயர்

பகுதியே தொழிற்பெயராக வருவது முதனிலைத் தொழிற்பெயராகும்.

ஓர் அறை அறைந்தான்.

ஓர் அடி அடித்தான்

ஒரு குட்டு குட்டினான்

இங்கு அறைதல், அடித்தல், குட்டுதல் ஆகிய தொழிற்பெயர்களின் பகுதிகள் மட்டும் தொழிற்பெயராகி நிற்கின்றன. முதனிலையே தொழிற்பெயராகி நிற்பதால் இவை முதனிலைத் தொழிற்பெயர்களாகும். முதனிலைத் தொழிற்பெயர்கள் மிகமிகச் சிலவே உண்டு.

### 2.8.6.4 முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

சூடு, பாடு, பேறு, வீடு, வழிபாடு, வேறுபாடு.

சுடுதல், படுதல், பெறுதல், விடுதல், வழிபடுதல், வேறுபடுதல் என்னும் தொழிற்பெயர்களின் முதனிலைகளே மேற்குறித்தவாறு முறையே திரிந்துள்ளன என்பதறிக. (சுடுதல், சுடு- சூடு)

### 2.8.6.5 காலம் காட்டும் தொழிற்பெயர்

நேற்று வந்தது நல்லது - இறந்தகாலத் தொழிற்பெயர்.

இன்று வருகிறது எதற்கு? – நிகழ்காலத்தொழிற்பெயர்

நாளைக்கு வருவது கூடாது- எதிர்காலத் தொழிற்பெயர்.

### 2.8.6.6 உடன்பாட்டுத் தொழிற்பெயர்

செய்தல், வணங்கல்

### 2.8.6.7 எதிர்மறைத் தொழிற்பெயர்

செய்யாமை, வணங்காமை.

### 2.8.6.8. பயன்படுத்தும் முறையால் வரும் பெயர்கள்

பல்வேறு பெயர்கள் பயன்படுத்துவதால் தோன்றுகின்றன.

### 2.8.7.1. ஆகுபெயர்

ஒன்றன் பெயர் அதனோடு தொடர்புடைய மற்றொன்றற்கு ஆகி வருவது ஆகுபெயர்.

தலைக்கு இரண்டனா கொடு.

தலை என்பது இங்கு ஆளைக் குறிப்பதால் ஆகுபெயர்.

தயிரை இறக்கு.

தயிர் இருக்கும் பானையைக் குறிப்பதால் தயிர் என்பது ஆகுபெயராகும்.

என் வீடு பட்டினி

வீடு என்பது வீட்டிலுள்ளவர்களைக் குறிப்பதால் வீடு என்பது ஆகுபெயராகும்.

### 2.8.7.2. குடிப்பெயர்

சாதியைக் குறிப்பது குடிப்பெயர்.

அந்தணன், அரசன், வணிகன், வேளாளன், குறவன், இடையன், மறவன், உழவன், பரதவன் முதலியன.

### 2.8.7.3 கிளைப்பெயர்

உறவினைக் குறித்து வருவது கிளைப்பெயர்.

தந்தை, தாய், அண்ணன், தமக்கை, தம்பி, மாமன், மாமி.

### 2.8.7.4 அளவுப்பெயர்

எண்ணல் நீட்டல், முகத்தல், எடுத்தல் ஆகிய நான்கு வகை அளவின் பெயரைக்காட்டும் பெயர் அளவுப்பெயராகும்.

ஒன்று நூறு, சாண் அடி, வீசை, கழஞ்சு, ஆழாக்கு, படி, கிராம், மீட்டர்.

### 2.8.7.5 சுட்டுப்பெயர்

சுட்டின் அடியாய் பிறர்க்கும் பெயர் சுட்டுப்பெயர்.

அவன், அவள், அவர், அது, அவை

இவன், இவள், இவர், இது, இவை

### 2.8.7.6. வினாப்பெயர்

வினா அடியாகப் பிறக்கும் பெயர் வினாப்பெயராகும்.

எவன், யாவன், யாது, யா (யா- பன்மை வினாப்பயர்)

எவள், யாவள், யாது, யாவை

எவர், யாவர், எது, எவை

### 2.8.7.7 தொகுதிப்பெயர்

தொகுதியைக் குறிக்கும் பெயர் தொகுதிப்பெயர். இதனை ஒரு பெயர்ப் பொதுச்சொல் என்றும் பலவின் இயைந்த ஒரு சொல் என்றும் கூறலாம்.

சேனை, கொத்து, குழு, மாலை, தோப்பு, சோலை, மக்கள், மன்பதை, அடிசில், பண்டம், குழாம் முதலியவை.

சேனை- பலவகை வீரர்கள் அடங்கியது. அடிசில் - உண்பன, தின்பன, பருகுவன ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு சொல். இத்துணை என்று குறிப்பிடாப் பலவின் பெயர்கள். பல, சில.

### 2.8.7.8 தன்மைப்பெயர்

பேசுபவனையும், அவனைச் சார்ந்தவர்களையும் குறித்து வரும் பெயர் தன்மைப்பெயர் எனப்படும். இதில் ஒருவரைக் குறிப்பது தன்மை ஒருமை பெயர், பலரைக் குறிப்பது தன்மை, பன்மை பெயர் தன்னைப் பற்றியது தன்மைப்பெயர்.

யான், நான் - தன்மை ஒருமைப்பெயர்

யாம், நாம், யாங்கள், நாங்கள்- தன்மைப் பன்மைப்பெயர்கள்.

## 2.9. பெயரெச்சம்

செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் அமைப்பில் வரும் எச்ச வினைகளைப் பெயரெச்சம் என்பர். இவை பெயர்ச் சொற்களைக் கொண்டு முடிவதனால் பெயரெச்சம் எனப்படுகின்றன. உதாரணம்:

செய்கின்ற வேலை

செய்த வேலை

செய்யும் தொழில்

பெயரெச்சங்கள் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று காலங்களையும் உணர்த்துகின்றன. இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள் இடைநிலைகளால் காலம் உணர்த்தும். எதிர்காலப் பெயரெச்சம் விகுதியால் காலம் உணர்த்தும். அவ்வகையில் இறந்தகால நிகழ்காலப் பெயரெச்சங்கள் ஒருவகை அமைப்பும், எதிர்காலப் பெயரெச்சங்கள் வேறுவகை அமைப்பும் உடையன. உறங்கிய பையன் -உறங்கிய என்பது குறைந்த வினைச்சொல். எனவே, அஃது எச்சம் எனப்படும்.

உறங்கிய என்னும் எச்சம் பெயரைத் தழுவுவதால் அது பெயரெச்சம் எனப்படும்.

படித்தபெண்- இங்கு படித்த என்பது பெயரெச்சம் என்னகாலப்பெயரெச்சம்? இறந்தகாலப்பெயரெச்சம்.

ஓடுகிற குதிரை- ஓடுகிற என்பது பெயரெச்சம். என்ன காலப் பெயரெச்சம்? நிகழ்காலப் பெயரெச்சம்?

நாளைக்கு ஓடும் பையன்- ஓடும் என்பது பெயரெச்சம் என்ன காலப் பெயரெச்சம்? எதிர்காலப் பெயரெச்சம்?

பெயரெச்சத்திலும் தெரிநிலைப் பெயரெச்சம் என்றும் குறிப்புப் பெயரெச்சம் என்றும் இருவகை உண்டு.

அறியாத பையன் - அறியாத என்பது தெரிநிலைப் பெயரெச்சம். ஏன்? அறி என்னும் வினைச்சொல் அடியாய்ப் பிறந்தது அது?

இல்லாதபொருள் - இல்லாத என்பது குறிப்புப் பெயரெச்சம் ஏன்? இன்மை என்னும் பண்புச் சொல்லடியாய்ப் பிறந்தது அது.

அறிந்த பையன் - அறிந்த என்பது உடன்பாட்டுப் பெயரெச்சம்.

அறியாப் பையன் - அறியாத என்பது எதிர்மறைப்பெயரெச்சம்.

அறியாப்பையன் - இத்தொடரிலிருக்கும் அறியா என்பது ஈறுகெட்டு வந்திருக்கிறது. ஆதலால் இதனை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்பர். இதை ஏன் தெரிந்துகொள்ள வேண்டும்? இங்கே வல்லெழுத்து மிகும் என்பதற்கு இதைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

ஈறுகெடாத பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகாது.

அறியாத குழந்தை

ஆனால் ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லெழுத்து மிகும்.

அறியாச் சிறுவன்; இல்லாப்பொருள்.

இறந்தகால, நிகழ்காலப் பெயரெச்சங்கள் பின்வரும் அமைப்புடையன : வினையடி + காலஇடைநிலை + பெயரெச்ச விகுதியாகும். உதாரணம்:

இறந்தகாலப் பெயரெச்சம்

செய்த → செய் + த் + அ

வந்த → வா +ந்த் +அ

படித்த → படி +த்த் +அ

### 2.9.1 நிகழ்காலப் பெயரெச்சம்

செய்கிற → செய் +கிற் +அ

வருகிற → வா +கிற் +அ

படிக்கிற → படி +க்கிற் +அ

இப்பெரெச்சங்களில் - கிற் - இடநிலைக்குப் பதிலாக -கின்ற்- இடைநிலையும் வரலாம்.

## 2.9.2 எதிர்காலப் பெயரெச்சம்

எதிர்காலப் பெயரெச்சம் வினையடி + உம் என்ற அமைப்புடையது.

செய்யும் → செய் +உம் வரும்

எதிர்காலப் பெயரெச்சமும், அஃறிணை ஒன்றன்பால், பலவின்பால் வினைமுற்றும் ஒரே வடிவம் உடையன என்பது கவனிக்கத் தக்கது. அதாவது அவையெல்லாம் வினையடி +உம் என்ற அமைப்புடையன.

நாளை வரும் மனிதன்

நாளை வரும் கடிதம்

நாளை வரும் பிள்ளைகள்

நாளை வரும் மாடுகள் மேல் உள்ள தொடர்களில் வரும் என்பது பெயரெச்சமாகும்.

நாளை கடிதம் வரும் நாளை பணம் வரும் நாளை வண்டி வரும்.

## 2.9.3 எதிர்மறைப் பெயரெச்சம்

செய்யாத, வராத, போகாத போன்ற எச்சம் எதிர்மறைப் பெனப்படும். எதிர்மறைப் பெயரெச்சம் கால இடைநிலை பெற்று காட்டுவதில்லை. அது முக்காலத்துக்கும் பொதுவானது.

உதாரணம்:

நேற்றுச் செய்யாத வேலை

இப்போது செய்யாத வேலை

நாளைக்குச் செய்யாத வேலை

எதிர்மறைப் பெயரெச்சம் வினையடி +ஆத் +அ என்ற அமைப்புடையது.

செய்யாத → செய் +ஆத் +அ

வராத → வா+ஆத் +அ

படிக்காத → படி+ஆத் +அ

காணாத → காண் +ஆத் +அ

## 2.10 பெயர்ச்சொற்கள் திணை பால் எண் இடம்

திணை, பால், எண் பாகுபாடு வாக்கிய அமைப்பில் வெவ்வேறு வகையில் வெளிப்படுவதனால் இவற்றைத் தனிமைப்படுத்தி நோக்குவது சிரமமானது, இதனாலேயே தமிழ் இலக்கண ஆசிரியர் திணை, பால், எண் இடம் ஆகியவற்றை ஒன்றாக நோக்கி, ஐம்பால் பாகுபாட்டை வகுத்தனர்.

ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் பெயர்கள் ஒருமைப் பெயர்களாகும்

பலர்பால், பலவின்பால் பெயர்கள் பன்மைப் பெயர்களாகும்

உயர்திணையில் ஆண், பெண் வேறுபாடு காட்டாது மரியாதை உணர்த்தும் ஒருமைப் பெயர் உள்ளது. (அவர்) இதனை உயர்பால் என அழைக்கலாம் என சில அறிஞர்கள் கூறுவர்.

## 2.11 திணை

தமிழில் பெயர்ச் சொற்கள் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர் என இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. பொதுவாக மனிதரைச் சுட்டும் பெயர்கள் உயர்திணை என்றும், மனிதர் அல்லாத ஏனைய உயிருள்ள உயிரற்ற பொருள் அனைத்தையும் சுட்டும் பெயர்கள் அஃறிணை என்றும் வகைப்படுத்தப்படும்.

இப்பாகுபாடு வாக்கியத்தில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் உள்ள உறவின் அடிப்படையில் அமைகின்றது. உதாரணமாக: மனிதன், மாடு ஆகிய இரண்டு பெயர்ச் சொற்களும் வா என்ற வினையைப் பயனிலையாகக் கொள்ளும் போது வெவ்வேறு வினைவிகுதிகளை வேண்டி நிற்கின்றன. உம்: மனிதன் வந்தான் மாடு வந்தது.

இவ்வகையில் சில பெயர்ச்சொற்கள் இரு திணைக்கும் பொதுவாக வருகின்றன.

உம்: குழந்தை சிரித்தான் குழந்தை சிரித்தது, சூரியன் உதித்தான் சூரியன் உதித்தது.

மேற்கட்டிய வாக்கியங்களில் குழந்தை, சூரியன் ஆகிய பெயர்ச் சொற்கள் உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் பொதுவாக உள்ளன.

தெய்வம் வினையில் அஃறிணை விகுதியையே பெற்று வருகின்றது.

உம்: தெய்வம் அருளியது தெய்வம் நின்று கொல்லும்.

## 2.12 பால்

தமிழில் பால் பாகுபாடு ஆண், பெண் என்ற அடிப்படையிலும் ஒருமை, பன்மை என்ற அடிப்படையிலும் அமைந்துள்ளது. உயர்திணை ஒருமைப் பெயர்கள் ஆண்பால், பெண்பால் எனவும், உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பலர்பால் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

அ.்.றிணை ஒருமைப் பெயர்கள் ஒன்றன்பால் எனவும், அ.்.றிணைப் பன்மைப் பெயர்கள் பலவின்பால் எனவும் பாகுபடுத்தப்படுகின்றன. இவ்வகையில் பெயர்ச் சொற்கள் பால் அடிப்படையில் ஐந்து வகைப்படும். பின்வரும் வரைபடம் சொற்களின் திணை, பால் அமைப்பை விளக்கும்.

### 2.12.2.1 பால்பாகுபாடு

தமிழில் உள்ள சொற்களை எல்லாம் இலக்கணப் புலவர்கள் ஐந்து வகையாகப் பகுத்திருக்கிறார்கள். பால் என்ற சொல்லுக்கே பகுப்பு அல்லது பகுதி என்று பொருள். நாளடைவில் பால் என்ற சொல் ஆண், பெண் என்ற சொற்களோடு சேர்ந்து பயின்று வந்த காரணத்தால் இக் காலத்தில் நாம் வழங்குகின்ற பாலுணர்ச்சி என்ற பொருளையும் விளக்கத் தொடங்கிற்று. இலக்கணங்கள் கூறும் பால் பாகுபாட்டைப் புரிந்து கொள்ள பால் என்ற சொல்லின் வேர்ப் பொருளை உணர்ந்து கொள்வது இன்றியமையாதது. பகு என்ற அடிச் சொல்லும் அல் என்ற விகுதியும் சேர்ந்து பகல் என்ற சொல்லையும் பால் என்ற சொல்லையும் உருவாக்கியிருக்கிறது. பால் என்ற சொல்லின் வேர்ப்பொருள் பகுதிதான் என்பதை மீண்டும் நினைவு கூர்ந்து மேலே செல்வோம்.

சொற்கள் பொதுவாக ஐந்து பாலாகப் பிரிக்கப்படும் என்று இலக்கணங்கள் கூறினாலும் இந்தப் பால் பகுப்பும் திணைப் பகுப்பும் சிறப்பாகப் பெயர்கட்கே உரியன என்பது எல்லோருக்கும் தெளிவாக விளங்கிய செய்தி. அப்படியானால் பெயர்ச் சொற்களை இருதிணை என்றும் ஐம்பால் என்றும் பிரித்ததற்குரிய அடிப்படை என்ன? இந்த வினாவிற்கு உரிய விடையை யை நாம் விளங்கிக் கொண்டால் தமிழிலக்கணப் புலவர்களின் பால்பாகுபாட்டுக் கோட்பாடு நமக்குத் தெளிவாக விளங்கும். பால் பாகுபாட்டின் அடிப்படையை ஆராய்ந்த பிறகு திணைப் பாகுபாடு பற்றியும் சிந்திப்போம்.

இலக்கிய வழக்கில் நாம் காணும் பெயர்ச் சொற்களில் இடப்பெயர்கள் தவிர ஏனையவற்றையெல்லாம் அவன். அவள், அவர், அது, அவை முதலாகிய ஐந்து பெயர்களையும் கொண்டு பதில் மாற்றம் (அல்லது பதிலீடு) செய்யலாம். அப்படிப் பதில் மாற்றம் செய்யும்பொழுது அவன் என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் ஆண்பால் என்ற பெயரால் சுட்டினர். அவ்வாறே அவள் என்ற பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்க எல்லாப் பெயர்களையும் பெண்பால் என்றும் அவர் என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் பலர்பால் என்றும் அது என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் ஒன்றன்பால் என்றும் அவை என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாவற்றையும் பலவின்பால் என்றும் பிரித்தனர். அ.்.றிணையில் ஆண்பால் பெண்பால் என்று இருபிரிவை அமைக்காமல் ஒன்றன் பால் என்று ஒரு பிரிவை மட்டுமே அமைத்தமைக்குக் காரணம் என்ன என்பது இப்போது விளங்கும். இதையே மேலும் விளக்கமாகக் காண்போம்.

களிறு, பிடி ஆகிய சொற்கள் முறையே ஆண் யானையையும் பெண் யானையையும் குறிக்கும். இப்படி ஒரு சில அ∴றிணைப் பெயர்கள் தனியே ஆணையும் பெண்ணையும் சுட்டுவனவாக இருந்தாலுங்கூட நமது இலக்கணங்கள் பெயர்களில் ஆண் பெண் பால் பகுப்பை அமைக்கவில்லை. ஏனென்றால் களிறு, பிடி, சேவல், பெடை ஆகிய பெயர் கள் அதுவென்னும் பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்கன. ஆகவேதான் அ∴றிணை ஆண்பால், பெண்பால் இரண்டையும் ஒன்றன் பால் என்ற ஒரு அடக்கிக் கொண்டனர். பகுப்பிலேயே தமிழிலக்கணக் கோட்பாடுகள் நாம் இதுகாறும் விளக்கிய இந்த அடிப்படையினைப் பதில் மாற்றக் கொள்கை அல்லது பதிலீட்டுக் கொள்கை என்று குறிக்கலாம். தமிழில் காணும் பால் பாகுபாடு பதில் மாற்றக் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பது இப்போது நன்கு விளங்கியிருக்கும்.

பால் பாகுபாட்டிற்கு இந்தக் கொள்கையோடு தமிழிலக்கண மரபில் இன்னொரு கொள்கையும் துணையாக அமைந்திருக்கக் காண்கிறோம். அந்தக் கொள்கை பதில் மாற்றக் கொள்கையோடு ஒருவகையில் தொடர்புடையதே எனலாம்

1. அவன் வந்தான்
2. அவள் வந்தாள்
3. அவர் வந்தார்
4. அது வந்தது
5. அவை வந்தன

மேற்காட்டிய தொடர்களில் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையே ஒரு விதமான இயைபு அமைந்திருக்கிறது. இந்த இயைபு சிதையுமானால் மேற்கண்ட தொடர்கள் பிழைபட்ட தொடர்களாக ஆகிவிடும். இதைத் தான் தொல்காப்பியர். வினையின் தோன்றும் பாலறி கிளவியும் பெயரின் தோன்றும் பாலறி கிளவியும் மயங்கல கூடா தம்மர பினவே எனக் குறிக்கின்றார், (தொல். சொல், 11).

தெரிநிலை வினைகள் காலமும் எதிர்மறையு பாலிட விகுதிகளோடு வரும்போது வினையில் பாலிட விகுதிகளுக்கும் அவற்றிற்குரிய எழுவாய்க்கும் ஒருவித இயைபு அமைந்திருக்கக் காண்கிறோம். கால இடைநிலைகளை ஏற்காத குறிப்பு வினைக்கும் இந்த இயைபு உண்டு. தெரிநிலை வினைகள் கால இடைநிலையையும் எதிர்மறை இடைநிலையினையும் ஏற்காமல் செய்க, செய்யட்டும், செய்யலாம் எனும் வாய்பாடுகளில் வரும்போதும் அவை எச்சவினைகளாக வரும்போதும் இத்தகைய இயைபுகள் அமைவதில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்க செய்தி. படர்க்கைப் பெயர்கள் மேற்காட்டிய முறையில் இலக்கியத் தமிழில் ஐந்து வகையான இயைபுகளைப் பெற்றிருக்கின்றன. இந்த இயைபினை எழுவாய் பயனிலை இயைபு என்று குறிக்கலாம். தமிழ்மொழியில் காணும் பால் பாகுபாட்டிற்கு நாம் இங்கு விளக்கிய எழுவாய் பயனிலை இயைபும் ஒரு அடிப்படை எனலாம்.

பதில் மாற்றக் கொள்கை எழுவாய் பயனிலைக் கொள்கை ஆகிய இவற்றின் துணை கொண்டே நமது பழந்தமிழ் இலக்கணப் புலவர்கள் பெயர்களை ஐந்து பாலாகப் பகுத்திருக்கிறார்கள். இன்றைய இலக்கியத் தமிழை இந்தக் கொள்கைகளின்படி ஆராய்ந்தால் பால் பகுப்பை நாம் ஆறு என்று கொள்ள வேண்டி நேரும். இன்றைய இலக்கியத் தமிழுக்குரிய பால் பகுப்பு பின் வருமாறு:

1. அவன் - ஆண்பால்
2. அவள் - பெண்பால்
3. அவர் - உயர்பால்
4. அவர்கள் - பலர் பால்
5. அது - ஒன்றன் பால்

இன்றைய இலக்கியத் தமிழில் காணும் எல்லாப் பெயர்களையும் மேலே காட்டிய ஆறு பெயர்களைக் கொண்டு பதில் மாற்றம் செய்ய முடியும். ஆகவே மேலே சுட்டிக் காட்டியபடி இன்றைய இலக்கியத் தமிழில் ஆறு பால்கள் உள்ளன எனலாம். எழுவாய் பயனிலை இயைபுக் கொள்கையும் இதே கருத்தை வலியுறுத்தும் என்பது கீழ்க்காணும் தொடர்களால் இனிது விளங்கும்.

1. அவன் வந்தான்
2. அவள் வந்தாள்
3. அவர் வந்தார்
4. அவர்கள் வந்தார்கள்
5. அது வந்தது
6. அவை வந்தன

பழந்தமிழில் காணும் பலர்பாற் சொல்லாகிய அவர் இப்போது உயர்பாலுக்கு உரியதாகவும் அவர்கள் என்பது பலர்பாலுக்கு உரியதாகவும் அமைந்தமையால் பால் பகுப்பு விரிவு பெற்றமை காண்க.

பதில் மாற்றக் கொள்கையின் அடிப்படையில்தான் உயர்திணை, அ∴றிணை என்று திணைப் பகுப்பும் அமைந்திருக்கிறது என்பது நன்கு பெயர்களை ஆராயும்போது தெளிவாகிறது. யார் என்ற வினாப் பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்க எல்லாப் பெயர்களும் ஒருவகை என்றும் என்ன அல்லது எவன் என்ற வினாப் பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்க எல்லாப் பெயர்களும் இன்னொரு வகை என்றும் கொள்ளுவோம். இரண்டு பெரும் பிரிவுக்குள் தமிழில் உள்ள எல்லாப் பெயர்களையும் அடக்கலாம். முதலாவது வகைக்குரிய பெயர்களை உயர்திணை என்றும் இரண்டாவது வகைக்குரிய பெயர்களைகளை அ∴றிணை என்றும் பிரித்திருக்கிறார்கள்.

தமிழிலக்கணங்களில் காணும் திணை பாகுபாட்டிற்கு மிக இன்றியமையாத இலக்கணக் சார்ந்த அடிப்படை உண்டு என்பது இப்போது விளங்கியிருக்கும்.

### 2.12.2.1 உயர்திணைப் பால்

உயர்திணைப் பிரிவினரைக் குறிப்பது உயர்திணைப்பால் எனப்படும். உயர்திணைப் பாலாக மூன்று இடம்பெற்றுள்ளன. அவை,

1) ஆண் பால் 2) பெண் பால் 3) பலர் பால்

### 1. ஆண்பால்

உயர்திணைப் பொருள்களில் ஆண்களைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

(எ.கா) வளவன், செழியன்

### 2. பெண்பால்

உயர்திணைப் பொருள்களில் பெண்களைக் குறிப்பது பெண்பால் எனப்படும்.

(எ.கா) யாழினி, மாலினி

### 3. பலர்பால்

உயர்திணையில் உள்ள ஆண், பெண்களில் பலரைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

(எ.கா) மக்கள், ஆண்கள், பெண்கள்

இந்த எடுத்துக்காட்டுகளில் மக்கள் என்னும் சொல் ஆண், பெண்களில் பலரைக் குறிக்கிறது. ஆண்கள் என்னும் சொல் ஆண்களில் பலரைக் குறிக்கிறது. பெண்கள் என்னும் சொல் பெண்களில் பலரைக் குறிக்கிறது.

### 2.12.2.2 அ.்.றிணைப் பால்

அ.்.றிணைப் பொருள்களைக் குறிப்பது அ.்.றிணைப் பால் எனப்படும். அவை,

1) ஒன்றன் பால் 2) பலவின் பால்

### ஒன்றன் பால்

அ.்.றிணைப் பொருள்களில் ஏதேனும் ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால் எனப்படும்.

(எ.கா) கல், மரம்

**பலவின் பால்**

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும்.

(எ.கா) அவை, வீடுகள், மாடுகள்

உயர்திணைப் பால், அஃறிணைப் பால் ஆகிய இரண்டையும் சேர்த்துப் பால்களின் எண்ணிக்கை ஐந்து.1) ஆண்பால் 2) பெண்பால் 3) பலர்பால் 4) ஒன்றன் பால் 5) பலவின் பால் என்பவை ஆகும்.

## 2.13 ஐம்பால் பெயர் விகுதிகள்

ஐம்பாலுக்கும் பெயர் விகுதிகள் கொடுக்கப்படுகின்றன.

### 2.13.1 உயர்திணைப் படர்க்கை ஆண்பால் பெயர்களுக்குரிய விகுதிகள்:

பொன்னன் (பொன் + அன்) - இதில் “அன்“ என்ற விகுதி படர்க்கை ஆண்பாலில் வந்தது.

சென்னையான் (சென்னை +ஆன்) - இதில் “ஆன்“ என்ற விகுதி படர்க்கை ஆண்பாலில் வந்தது.

மேற்கூறியவை உயர்திணைப் படர்க்கை ஆண்பால் பெயர்கள். இவை அன், ஆன் என்ற விகுதிகளைப் பெற்றன.

**“அன், ஆன் என்பன உயர்திணைப் படர்க்கை ஆண்பாற் பெயர்களுக்குரிய விகுதிகளாம்”**

### 2.13.2 உயர்திணைப் படர்க்கைப் பெண்பாற் பெயர்களுக்குரிய விகுதிகள்

தலைவி (தலை + இ) - இ அவள் (அ+அள்) - அள் இல்லாள் (இல் + ஆள்) - ஆள் இவற்றில் இ, அள், ஆள் என்ற விகுதிகள் (படர்க்கைப் பெண்பாலில் வந்தன.

மேற்கூறியவை உயர் திணைப் படர்க்கைப் பெண்பாற் பெயர்கள்.

இவை இ, அள், ஆள் என்ற விகுதிகளைப் பெற்றன.

இ, அள், ஆள் என்பன உயர்திணைப் படர்க்கைப் பெண்பாற் பெயர்களுக்குரிய விகுதிகளாம்.

### 2.13.3 உயர்திணைப் படர்க்கைப் பலர்பாற்பெயர்களுக்குரிய விகுதிகள்

பொருளர் (பொருள் + அர்) -அர் ஊரார் (ஊர் +ஆர்) - ஆர் தேவிமார் (தேவி + மார்) இவற்றில் “அர், ஆர். மார்“ என்ற விகுதி கள் படர்க்கைப் பலர் பாலில் வந்தன.

**“அர், ஆர், மார் என்பன உயர்திணைப் படர்க்கைப் பலர்பாற் பெயர்களுக்குரிய விகுதிகளாம்”.**

### 2.13.4 அ∴றிணைப் படர்க்கை ஒன்றன்பாற் பெயர்களுக்குரிய விகுதி:

சிறியது (சிறுமை+து) - இதில் “து“ என்ற விகுதி அ∴றிணை ஒன்றன்பாலில் வந்தது.

**“து என்பது அ∴றிணைப் படர்க்கை ஒன்றன்பாற் பெயர்களுக்குரிய விகுதியாம்”**

### 2.13.5 அ∴றிணைப் படர்க்கைப் பலவின்பாற் பெயா்களுக்குரிய விகுதிகள்

குழையன (குழையன் +அ) பொன்னி (பொன் +இ) குழையினை (குழையின் +ஐ)

இவற்றில் அ.இ.ஐ என்ற விகுதிகள் பலவின் வந்தன. பாலில் அ, இ, ஐ என்ற விகுதிகள் அ∴றிணையில் படர்க்கைப் பலவின்பாற் பெயர்களையுணர்த்தும் விகுதிகளாம்.

**“அன் ஆன் ஆர் ஆர் ப (ம்) மார்**
**அ ஆ குடுதுறு என் ஏன் அல் அன்**
**அம் ஆம் எம் ஏம் ஓம் (ஒடு) உம் ஊர்**
**கட தற ஐ ஆய் இ (ம்) மின் இர் ஈர்**
**ஈயர் கய உம் என்பவும் பிறவும்**
**வினையின் விகுதி பெயரினுஞ் சிலவே”**

அன், ஆன், அர், ஆர் முதலிய விகுதிகள் பெயர் களுக்கும், வினைமுற்றுக்களுக்கும் பொதுவாக வந்து திணை பால் உணர்த்தும்.

(உ-ம்) அரசன், சென்றனன் - அன்
தலைவர், வந்தனர்
ஊரார் பார்த்தார்

### 2.13.6 மதிப்புப்பன்மை

பெரியோரில் ஒருவரை அவன் என்று கூறுதல் பொருந்தாது என்று அவர் என்று பலர்பாலில் குறிப்பிடுவது உண்டு. இதை மதிப்புப்பன்மை என்று குறிப்பிடுகிறோம்.

(எ.கா) ஆசிரியர் வந்தார்

ஓர் ஆசிரியனை, மதிப்புக் கருதி ஆசிரியர் என்று பலர்பாலில் குறிப்பிடுகிறோம்.

பல ஆசிரியரைப் பலர்பாலில் குறிப்பிடுவதற்கு ஆசிரியர்கள் என்று தற்காலத்தில் குறிப்பிடுவதும் உண்டு.

**"ஆண் பெண் பலர் என முப்பாற்று உயர்திணை" (நன்னூல் : 262)**

ஆண்பால், பெண்பால், பலர்பால் என்னும் மூன்றும் உயர்திணைக்கு உரியவை என்னும் நூற்பாவும்,

**"ஒன்றே பல என்று இருபாற்று அ.்.றிணை" (நன்னூல் : 263)**

ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டும் அ.்.றிணைக்கு உரியவை என்னும் நூற்பாவும் ஐந்து பால்கள் பற்றிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

## 2.13.7 இருபால் பொதுப்பெயர்

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாய் வரும் பெயர்கள் இருபால் பொதுப் பெயர் எனப்படும்.

வில்லி, பேதை, ஊமை, கவிஞர் முதலான பெயர்கள் இரண்டு பாலுக்கும் பொதுவாய் வரும்.

(எ.கா) அவன் வில்லி, அவள் வில்லி, அவன் பேதை, அவள் பேதை, அவன் ஊமை, அவள் ஊமை, அவன் கவிஞர், அவள் கவிஞர்

## 2.13.8 பால் பகா அ.்.றிணைப் பெயர்கள்

ஒன்றன் பால், பலவின் பால் என்னும் இரண்டும் அ.்.றிணைக்கு உரிய பால்கள் என்று முன்பே படித்தோம். சில அ.்.றிணைப் பெயர்களை ஒன்றன் பாலா, பலவின் பாலா என்று அறிய இயலாது. அவற்றுடன் சேர்ந்துவரும் வினைச்சொல்லைக் கொண்டே அவை ஒன்றன் பாலா, பலவின் பாலா என்று அறிய முடியும். பறவை, மரம், பனை முதலியவை பால்பகா அ.்.றிணைப் பெயர்கள் ஆகும்.

(எ.கா) பறவை வந்தது பறவை வந்தன

மரம் வளர்ந்தது மரம் வளர்ந்தன

பனை நின்றது பனை நின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட பெயர்களை, ஒருமைக்கும் பன்மைக்கும் ஒன்றாகவே பயன்படுத்துகிறோம்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| பறவை | பறவை |
| மரம் | மரம் |
| பனை | பனை |

தற்காலத்தில் பேசும் போதும் எழுதும் போதும் மேலே காணும் பெயர்களைப் பன்மையில் குறிப்பிடும் போது பன்மைக்குரிய `கள்' விகுதி சேர்த்துப் பயன்படுத்துவதும் உண்டு.

| **ஒருமை** | **பன்மை** |
|---|---|
| பறவை | பறவைகள் |
| மரம் | மரங்கள் |
| பனை | பனைகள் |

## 2.14 பெயர்ச்சொற்கள் எண் உணர்த்துதல்

எண், ஒருமை, பன்மை என இருவகைப்படும். ஒன்றைக் குறிப்பது ஒருமை. ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை. உயர்திணையில் ஆண்பாலைக் குறிக்குஞ் சொல்லும், பெண்பாலைக் குறிக்குஞ் சொல்லும் அ.்.றிணையில் ஒன்றன் பாலைக் குறிக்குஞ்சொல்லும் ஒருமைச்சொற்களாகும். உயர்திணையில் பலரைக் குறிக்குஞ் சொல்லும் அ.்.றிணையில் பலவற்றைக் குறிக்குஞ் சொல்லும் பன்மைச் சொற்களாகும்.

| | | |
|---|---|---|
| தம்பி | - | உயர்திணை ஆண்பால் ஒருமை |
| தங்கை | - | உயர்திணை பெண்பால் ஒருமை |
| அது, நாய் | - | அ.்.றிணை ஒருமை |
| அவர், அவர்கள் | - | உயர்திணைப் பன்மை |
| அவை, நாய்கள் | - | அ.்.றிணைப் பன்மை |

### 2.14.1.1 மூவிடம்

பேசுவோன், கேட்போன், பேசப்படுபொருள் என்பவற்றின் அடிப்படையில் பெயர், வினைச் சொற்களில் காணப்படும் வேறுபாடே இடம் எனப்படுகின்றது.

பேசுவோனைச் சுட்டும் பெயர்கள் தன்மைப் பெயர்கள் என்றும் கேட்போனைச் சுட்டும் பெயர்கள் முன்னிலைப் பெயர்கள் என்றும் பேசப்படு பொருளைச் சுட்டும் பெயர்கள் படர்க்கைப் பெயர்கள் என்றும் கூறப்படும். தன்மை, முன்னிலைப் பெயர்கள் அல்லாத அனைத்துப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களாகும்.

தமிழ் வாக்கிய அமைப்பில், பெயர்ச் சொற்களின் திணை, பால், எண், இடம் என்பன (தி.பா.எ.இ) முக்கிய இடம் பெறுகின்றன. எழுவாய்ப் பெயரின் தி. பா. எ. இ. என்பவற்றுக்கு ஏற்ப பயனிலையாக வரும் வினைச்சொல்லின் விகுதி அமைய வேண்டியது கட்டாயம்.

### 2.14.1.1 தன்மை

பேசுவேன் தன்னை உணர்த்துவதே தன்மை யாம். அதாவது பேசுகிறவனே தன்மையாம். இதில் ஒருமை, பன்மை என்ற வேறுபாடு உண்டு. நான், யான் என்பவைகள் தன்மை ஒருமைச் சொற்களாம். நாம், யாம், நாங்கள், யாங்கள் என்பவை கள் தன்மைப் பன்மைச் சொற்களாம்.

நான் காலையில் எழுந்தேன்.

நாங்கள் காலையில் எழுந்து கடவுளைத் தொழுதோம்

இவற்றிலுள்ள நான், நாங்கள் என்ற சொற்கள் பேசுவோன் தன்னையும், தன்னைச் சார்ந்தோரையும் குறிக்க வழங்கும் சொற்களாம். இவ்வாறு சொல்லுவதே தன்மை இடமாகும். “நான்“ என்பது தன்மை ஒருமை, “நாங்கள்“ என்பது தன்மைப் பன்மை.

## 2.14.1.2 முன்னிலை

இதிலும் ஒருமை, பன்மை என்ற வேறுபாடு உண்டு. என்பது முன்னிலை ஒருமைச் சொல்லாம். நீயிர், நீவிர், நீங்கள் என்பன முன்னிலைப் பன் சொற்களாம்.

நீ பாடினாய்.

நீங்கள் ஆடினீர்கள்.

இவற்றிலுள்ள நீ, நீங்கள் என்ற சொற்கள் கேட்போனையும், அவனைச் சார்ந்தோர்களையும் குறிக்க வழங்கும் சொற்களாம். இவ்வாறு வருவதே முன்னிலை இடமாகும்.

“நீ“ என்பது ஒருமை. “நீங்கள்“ என்பது முன்னிலைப் பன்மை.

”முன் நிற்பவனைக் குறிப்பதே முன்னிலையாம்.

### 2.14.1.3 படர்க்கை

அதாவது கேட்பவனே படர்க்கை தன்மையும் முன்னிலையும் அல்லாத பிறர் அல்லது பிற பொருளைக் குறிப்பது படர்க்கை எனப்படும். இது இரு வகைப்படும்.

1) படர்க்கை ஒருமை 2) படர்க்கைப் பன்மை

### 2.14.1.3.1 படர்க்கை ஒருமை

படர்க்கையில் ஒருவர் அல்லது ஒரு பொருளைக் குறிப்பது படர்க்கை ஒருமை எனப்படும்.

(எ.கா) அவன் வந்தான்

அவள் வந்தாள்

அது வந்தது

### 2.14.1.3.2 படர்க்கைப் பன்மை

படர்க்கையில் பலர் அல்லது பல பொருளைக் குறிப்பது படர்க்கைப் பன்மை எனப்படும்.

(எ.கா) அவர் வந்தார்

அவை வந்தன.

தன்மை, முன்னிலை ஆகியவற்றைக் குறிக்கும் இடப்பெயர்களில் ஆண்பால், பெண்பால் என்னும் பிரிவுகள் தெரிவதில்லை. ஆனால் படர்க்கைச் சொல்லில் மட்டும் ஆண்பால், பெண்பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்னும் பிரிவுகள் தெரியும்.

**“தன்மை, முன்னிலை, படர்க்கை மூஇடனே” (நன்னூல் : 266)**

தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகியவை மூன்று இடங்கள் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

## 2.15 வினைச்சொல்

பொருளின் வினையை உணர்த்துவது வினைச்சொல்.

ஓடுகிறான், ஓடுகிறாள், ஓடுகின்றனர், ஓடுகிறது, ஓடுகின்றன.

முருகன் ஓடினான். நான் படிக்கிறேன். கப்பல் செல்லும். இவற்றில் ஓடினான், படிக்கிறேன், செல்லும் என்ற சொற்கள் முருகன் முதலிய பொருட்களின் தொழிலைக் காட்டுகின்றன. ஆகவே இவை வினைச் சொற்கள்.

ஒரு பொருளின் தொழிற் சொல்லே வினைச் சொல்லாம். அது தொழிலைக் காட்டும். இவற்றில் ஓடினான் படிக்கிறேன், செல்லும் என்ற சொற்கள் முருகன் முதலிய பொருட்களின் தொழிலைக் காட்டுகின்றன.

மொழிக்கு இன்றியமையாத உறுப்பு வினைச்சொல்லாகும். வினைச் சொல்லானது ஒரு பொருளின் புடைப்பெயர்ச்சியைக் (moverment) காட்டும். இப்புடை பெயர்ச்சி நடைபெற்றதாகவும் இருக்கலாம். கற்பனையாகவும் இருக்கலாம். கற்பனையாகவும் இருக்கலாம். வினைச்சொல், தெரியும்படியாகவாவது குறிப்பாகவாவது காலத்தைக்காட்டும். இதனால் வினைச்சொல்லைப் பொதுவாகக் காலக்கிளவி என்பர். வினைச் சொல்லுக்கு

ஜெர்மன் மொழியில் (time world) காலக்கிளவி என்னும் பெயர் வழங்குகிறதாம். வினைச்சொல் வேற்றுமையை ஏற்காது. தமிழில் வினைச்சொற்களின் தன்மைகளை நன்கு அறிந்தால்தான் மொழியில் வல்லவராதல் இயலும்.

நட, வா, போ, நில்

நடந்தான், வந்தான், போனான், நின்றான்

நடந்த, வந்த, போன, நின்ற

நடந்து, வந்து, போய், நின்று

போன்ற சொற்களை வினைச்சொற்கள் என்கிறோம். வினைச் சொற்கள் சில தனித்துவமான பண்புகளைக் கொண்டுள்ளன. வினைச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதில்லை

வினைச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதில்லை. நல்ல, அழகான முதலிய பெயரடைகளும், நன்றாக, வேகமாக முதலிய வினையடைகளும், அந்த, இந்த போன்ற சுட்டு அடைகளும் கூட வேற்றுமை உருபு ஏற்பதில்லை. அவ்வகையில் வேற்றுமை உருபு ஏற்காத சொற்கள் எல்லாம் வினைச் சொற்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் வினைச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்பதில்லை என்று கூறலாம்.

வினைச் சொற்கள் செயலை உணர்த்தும். நட, வா, இரு, நில் என்பன செயல்களை உணர்த்துகின்றன. போனேன், பார்த்தேன், ஒடினேன், எழுதுகிறேன் என்பனவெல்லாம் செயல்களையே உணர்த்துகின்றன. அவ்வகையில் வினைச் சொற்களின் பொதுவான பண்பு செயலை உணர்த்துவது எனலாம்.

வினைச் சொற்கள் ஏவல் பொருளில் வருவன. நட, வா, நில், இரு, நடங்கள், வாருங்கள், நில்லுங்கள், இருங்கள் முதலிய வினைகள் முன்நிற்போரை ஒரு செயலைச் செய்யுமாறு பணிக்கின்றன.

வினைச் சொற்கள் காலம் காட்டுவன. நடந்தேன், நடக்கிறேன், நடப்பேன், வந்தேன், வருகிறேன், வருவேன் முதலிய வினைகள் செயல் நிகழ்ந்த காலத்தை உணர்த்துகின்றன. இவ்வாறு காலம் உணர்த்துவது வினைச் சொற்களின் பொதுப்பண்பு எனலாம். தமிழ் இலக்கண நூல்கள் கூறும் குறிப்பு வினைகள் காலம் காட்டுவதில்லை.

வினைச் சொற்கள் வினை விகுதிகளைப் பெற்று வரும். திணை, பால், எண், இட விகுதிகள் பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் ஏவல், வியங்கோள் வினை விகுதிகள் எதிர்மறை இடைநிலைகள் முதலியவற்றை வினைச்சொற்கள் பெற்றுவரும்.

வந்தேன், வந்தோம், வந்தாய், வந்தான், வந்தாள் முதலிய வினைகள் ஏன், ஓம், ஆய், ஆன், ஆள் ஆகிய திணை, பால், எண், இட விகுதிகளைப் பெற்று வந்துள்ளன. வந்த, வருகின்ற, வரும் ஆகிய பெயரெச்சங்கள் - அ, உம் என்ற பெயரெச்ச விகுதிகள்

பெற்றுவந்துள்ளன. வந்து, ஓடி ஆகிய வினை எச்சங்கள் - உ, இ ஆகிய வினை எச்ச விகுதிகளைப் பெற்றுவந்துள்ளன. இவ்வாறு வினை விகுதிகளைப் பெற்று வரும் சொற்களை எல்லாம் வினைச்சொற்கள் எனலாம்.

வினைச் சொற்கள் வினையடைகளைப் பெற்றுவரும். வேகமாக ஓடினான், மெதுவாக ஓடினான். இவ்வாறு வினையடைகளைப் பெற்றுவரும் சொற்களை வினைச் சொற்கள் எனலாம்.

### 2.15.1 வினைச்சொல் வகைகள்

வினைச் சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், வாக்கியத்தில் அவற்றின் தொழிற்பாடு முதலிய அடிப்படைகளில் பல வகையாகப் பாகுபடுத்தலாம். அடுத்துவரும் பகுதிகளில் சில முக்கியமான வினை வகைகள் விளக்கப்படும்.

### 2.15.1.1 தனிவினையும் கூட்டுவினையும்

வினைச் சொற்ளை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இரு வகைப்படுத்தலாம்.

ஓடு, ஓடுங்கள், ஓடுகிறார்கள் என்பன தனி வினைகள். இவற்றில் ஓடு என்ற வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. ஓடு என்ற வினையடி பகாப்பதமாகும். அதை மேலும் பொருள்தரக் கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு பகாப்பதமாக அமையும் வினையடியை தனி வினையடி எனலாம். அவ்வகையில் தனி வினையடியைக் கொண்ட வினைச்சொற்களைத் தனி வினை என்பர்.

வா, போ, நில், குந்து, ஆடு, நட, வந்தேன், வருகிறேன், வருவேன்

போகின்ற, போய், நின்று, நின்ற, நிற்பேன் இவையெல்லாம் தனி நிலை.

### 2.15.1.2 தெரிநிலை வினையும் குறிப்பு வினையும்

வினைச்சொல் தெரிநிலைவினை (verb indicating time) என்றும் குறிப்புவினை (symbolic verb) என்றும் இருவகைப்படும். பகுதி வினைச் சொல்லாக இருந்தால் தெரிநிலை என்று கண்டுபிடிக்கலாம்.

ஓடினான்- இதில் ஓடு என்பது பகுதி. இது வினைச்சொல் ஆதலால், இது தெரிநிலை வினைமுற்று.

பகுதி பெயர்ச்சொல்லாயிருந்தால் குறிப்பு வினையென்று கண்டுபிடிக்கலாம். பெயர்ச்சொல் என்பது பண்புப்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பொருட்பெயர் முதலியவற்றைக் குறிக்கும்

அவன் நல்லன் - நல்லன் என்பது நன்மை என்னும் பண்புச் சொல்லடியாகப் பிறந்ததால் குறிப்பு வினைமுற்று.

முத்தம்மாளே மதுரையாள்- மதுரையாள் என்பது குறிப்பு வினைமுற்று. இவன் இரட்டை மண்டையன்- மண்டையன் என்பது குறிப்பு வினைமுற்று.

'நீ சொன்னது உண்டு; செய்தது வேறு; முடிவில் நடந்தது ஒன்றும் இல்லை' இங்கு வந்துள்ள உண்டு, வேறு இல்லை ஆகிய மூன்றும் குறிப்புவினை முற்றுகள்.

இன்மை என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று இல்லை என்பது.

வேற்றுமை என்னும் பண்படியாகப் பிறந்தது வேறு என்னும் குறிப்பு வினைமுற்று.

உண்மை என்னும பண்படியாகப் பிறந்தது உண்டு என்னும் குறிப்புவினைமுற்று.

இந்த வேறு, இல்லை உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுகளும், ஐம்பால்களும் மூன்று இடங்களுக்கும் பொதுவாக வரும்.

ஐம்பால்:

அவன் வேறு; அவள் வேறு; அவர் வேறு;

அது வேறு; அவை வேறு;

மூவிடங்கள் :

நான் வேறு; நாங்கள் வேறு;

நீவேறு; நீங்கள் வேறு;

நம்பி வேறு; நங்கை வேறு;

இப்படியே இல்லை, உண்டு என்பவற்றிற்கும் கொள்க.

சுருங்கச்சொன்னால் வெளிப்படையாகக் காலம்காட்டும் வினையைத் தெரிநிலை என்றும், குறிப்பாகக் காலம் காட்டுவதைக் குறிப்பு என்றும் கூறலாம்.

### 2.15.1.3 தெரிநிலை வினைச்சொல்லின் பொது இலக்கணம்

தமிழ் இலக்கண நூல்கள் வினைச்சொற்களைத் தெரிநிலை வினை என்றும், குறிப்பு வினை என்றும் இரு வகையாகப் பாகுபடுத்துகின்றன. தெரிநிலை வினை கால இடைநிலைகளைப் பெற்று காலங்காட்டும் இயல்புடைய வினைகளே தெரிநிலை வினைகள் எனப்படும். இதுவரை நாம் நோக்கிய வினைகள் எல்லாம் தெரிநிலை வினைகளாகும். வா, போ, இரு போன்ற வினையடிகள் காலம் காட்டும் இடை நிலைகளைப் பெற்றுக் காலம் காட்டும் இயல்புடையன.

உம் : வந்தேன், வருகிறேன், இருந்தார், இருக்கிறார், வருவேன் போனான், போகிறான், இருப்பார் போவான் இவையெல்லாம் தெரிநிலை வினைகளாகும். இவற்றையே பொதுவாக நாம் வினைச்சொல் என்போம். பெரும்பாலான தெரிநிலை வினையடிகள் (சில தவிர) ஏவல் பொருளில் வரும். உதாரணம்: வா, போ, இரு, நில், குந்து, உண், பார், திரும்பு, வாருங்கள், போங்கள், இருங்கள், நில்லுங்கள், குந்துங்கள், உண்ணுங்கள், பாருங்கள், திரும்புங்கள் இதிலிருந்து தெரிநிலை வினைக்கு இரண்டு முக்கிய பண்புகள் உள்ளன என்று கூறலாம்.

1. காலம் காட்டுதல் 2. ஏவல் பொருளில் வருதல்

செய்பவன் (கருத்தர்), கருவி, இடம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் அறுவகைப் பொருளையும் தருவது தெரிநிலை வினைச் சொல்லாகும். இவ்வினைச்சொல்லில் காலம் வெளிப்படையாகத் தெரியும்.

**"செய்பவன் கருவி நிலம்செயல் காலம் செய்பொருள் ஆறும் தருவது வினையே"நூற்பா 320**

"வனைந்தான்" என்பது தெரிநிலை வினைமுற்று. இது, குயவன் என்னும் கருத்தாவையும், மண் என்னும் முதற் காரணம், சக்கரம் என்னும் துணைக்காரணம் ஆகிய இரு கருவிகளையும் வீட்டு முன்றில் என்னும் இடத்தையும் வனைதல் என்னும் செயலும், இறந்த காலத்தையும் குடம் முதலிய செயப்படு பொருளையும் உணர்த்தியது.

இந்நூற்பாவில் வரும் ஆறும் என்ற உம்மையால் பிறர்க்கு வனைதலையும் இன்னதற்கு என்ற பொருளையும் பொருள் கருதி வனைந்தான் எனவும் வரும்.

## 2.15.1.4 குறிப்பு வினைச்சொல்லின் பொது இலக்கணம்

நல்லன், கரியன், பெரியன், ஊரன், குழையன் போன்ற சொற்களை, தமிழ் இலக்கண ஆசிரியர் குறிப்பு வினை எனக் கூறுவர். நேற்று நல்லன், இன்று நல்லன், நாளை நல்லன் என இவை குறிப்பால் காலம் உணர்த்தும் என்றும் கூறுவர். உண்மையில் இவை காலம் உணர்த்துவதாகக் கூற முடியாது. நேற்று, இன்று, நாளை என்ற சொற்களே காலக் குறிப்பை உணர்த்துகின்றன. பழந்தமிழில் இவை வாக்கியத்தில் பயனிலையாக வந்தன.

உதாரணம்: அவன் நல்லன், அவன் கரியன், இவன் எம் ஊரன், இவன் குழையன் அவன் பெரியன், இலக்கண ஆசிரியர் இவற்றைக் குறிப்பு வினைமுற்று என்று அழைப்பர். தற்காலத் தமிழில் இவை பயனிலையாக வருவதில்லை. இன்று இவற்றை நாம் பின்வருமாறு எழுதுவோம்:

அவன் நல்லவன், அவன் கரியவன் / கறுப்பன், அவன் பெரியவன், அவன் ஊரவன், (இவன் குழை அணிந்தவன்) இவற்றை நாம் பெயர்ப் பயனிலை என்று சொல்லுவோம். பழந் தமிழில்நல்லன், கரியன் போன்ற சொற்கள் எழுவாயாகவும், ஏனைய வேற்றுமை உருபுகள் ஏற்றும் வந்தன.

உதாரணம்: நல்லன் வந்தனன், ஊரன் வந்தனன், கரியன் வந்தனன், குழையன் வந்தனன்

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறையும் பகுதியாகக் கொண்டு அவற்றினிடமாகப் பிறந்து, செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறனுள் செய்பவனாகிய வினையை மட்டும் விளக்குவது குறிப்பு வினைச்சொல்லாகும். (காலம் இன்னதென்பதை குறிப்பால் உணர்த்துவது குறிப்பு வினையாகும்).

(எ.டு) பொன்னன் - பொருள்

அகத்தினன் - இடம்

ஆதிரையான் - காலம்

செங்கண்ணன் சினை

கரியன் - குணம்

இன்சொல்லன் - தொழில்

மேற்கூறிய எடுத்துக்காட்டுகளில் பொன்னன் என்னும் குறிப்பு வினை பொருட்பெயரைப் பகுதியாகக் கொண்டு பிறந்தது. பொன்னை உடையவனாக இருந்தான், இருக்கிறான். இருப்பான் என்னும் மூன்று காலங்களில் ஒன்று, கூறுவானது குறிப்பினால் அறியப்படும். பிறவும் இவை போன்றே அமையும்.

**“பொருள்முதல் ஆறினும் தோற்றிமுன் ஆறனுள்**

**வினைமுதன் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே”நூற்பா 321**

வினைச்சொற்களை வகுத்தல்வினையியலின் முதலிரண்டு நூற்பாக்களில் கூறியுள்ள தெரிநிலை, குறிப்பு என்னும் இருநிலைகளில் வரும் வினைச்சொற்கள், வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்னும் நிலைகளைப் பெற்று. திணை பாலிடங்களுள் ஒன்றற்கு உரியதாகவும் பலவற்றிற்கும் பொதுமையாய் நிற்பனவும் ஆகும். இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் இனி வரும் நூற்பாக்களில் முறையே கூறப்பட்டுள்ளன.

**“அவைதாம்**

**முற்றும் பெயர்வினை யெச்சமு மாகி ஒன்றற் குரியவும் பொதுவு**

**மாகும்”நூற்பா 322**

வினைமுற்று பொது இலக்கணமாகிய செய்பவன், கருவி முதலிய ஆறையும் தோன்றச் செய்து, பொருட்பெயர் முதலிய அறுவகைப் பெயரையும் பயனிலையாக ஏற்பனவாகி, தெரிநிலை, குறிப்பு ஆகிய முற்று வினைகளாக வரும். வேற்றுமை உருபு ஏற்காமை,

செயலை உணர்த்துதல், ஏவல் பொருளில் வருதல், வினை விகுதிகளைப் பெற்று வருதல். காட்டுதல், வினை அடைகளை ஏற்று வருதல் ஆகிய பண்புகளில் ஒன்றோ பலவற்றையோ கொண்டுள்ள ஒரு சொல்லை வினைச்சொல் எனலாம்.

## 2.16 வினையெச்சம்

திணை, பால், எண், இட விகுதி பெறாது, எச்சவினை விகுதிகளைப் பெற்று வரும் வினைகள் எச்சவினைகள் எனப்படும்.

வந்த, வருகின்ற, வரும் வந்து, போய், இருந்து வர, போக, இருக்க, வந்தால், போனால், இருந்தால் போன்ற அமைப்பில் வரும் வினைகள் எச்ச வினைகளாகும். தமிழ் இலக்கணகாரர் எச்சவினைகளைப் பெயரெச்சம் வினையெச்சம் தொழிலையும் காலத்தையும் வெளிப்படையாகக் காட்டி பால் மட்டும் வெளிப்படையாகத் தோன்றாமல் வினை எஞ்சி நிற்பது வினையெச்சமாகும்.

**“தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை**

**ஒழிய நிற்பது வினையெச் சம்மே”நூற்பா 342**

இந்நூற்பாவில் வினையெனப் பொதுப்படக் கூறியமையால் உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வரும் தெரிநிலையும் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் வினையாலனையும் பெயரும். தொழிற் பெயருமாகிய ஐவகை வினைச்சொற்களும் அடங்கும்.

ஏற்புழிக் கோடலால் தொழிலும் காலமும் தோன்றுதல் தெரிநிலைக்கும். பாலும் வினையும் ஒழிய நிற்றல் தெரிநிலை, குறிப்பு இரண்டிற்கும் உரியனவாகும்.

எ.டு உண்டு வந்தான் - தெரிநிலை வினையெச்சம் (காலம் வெளிப்படையாகத் தெரிவது). (அருளின்றிச் செய்தான் - குறிப்புவினையெச்சம் (காலம் குறிப்பாக உணர்த்தப்படுவது).

செய்ய, செய்து, செய்தால் என்னும் அமைப்பைக் கொண்ட எச்சவினைகளை வினை எச்சம் என்பர். இவை வினைச் சொற்களைக் கொண்டு முடிவதனால் வினை எச்சம் எனப்படுகின்றன. சில உதாரணங்கள்: செய்ய வேண்டும், தரச் சொன்னார், செய்து முடித்தேன், வந்து தருகிறேன், செய்தால் தருவேன், போனால் வரமாட்டாய், போக விரும்பினேன், போய்ப் பார்க்கிறேன் இருந்தால் பார்க்கலாம்.

நன்னூல் பின்வரும் 12 வினை எச்ச வாய்ப்பாடுகளைத் தருகின்றது.

**“செய்து, செய்பு, செய்யா, செய்யூ, செய்தென**

**செய, செயின், செய்யிய, செய்யியர்**

**வான், பான், பாக்கு”**

இவற்றுள் தற்காலத் தமிழில் செய்து, செய (செய்ய), செயின் (செய்யின், செய்தால்) ஆகிய வடிவங்களே வழக்கில் உள்ளன.

வினை எச்சங்கள் காலம் காட்டும் என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. செய்து, செய்பு, செய்யா, செய்யூ செய்தென ஆகிய ஐந்து வினையெச்ச வடிவங்களும் இறந்தகாலம் காட்டும் என்றும், செய (செய்ய) என்பது நிகழ்காலம் காட்டும் என்றும், செயின், (செய்தால்) செய்யிய, செய்யியர், வான், பான், பாக்கு ஆகிய எதிர்காலம் காட்டும் என்றும் நன்னூல் கூறுகின்றது. தற்கால மொழி அறிஞர்கள் வினையெச்சம் காலம் காட்டுவதில்லை என்பர். அவை முக்காலத்தைக் காட்ட பயன்படுத்தப்படுகின்றன என விளக்குவர்.

ஓடி விழுந்தது- ஓடி என்பது குறைந்த வினைச்சொல். இதில் தொழில் முடியவில்லை. ஓடி என்னும் எச்சம் விழுந்தது. என்னும் வினைமுற்றைத் தழுவுவதால் இது வினையெச்சம் எனப்படும்.

உறங்கி எழுந்தான் போய்ப்பார்த்தான்

காணவந்தான் எனக் கூறினான்

இங்குள்ள உறங்கி, காண, போய் என என்பன வினையெச்சங்கள்.

வினையெச்சம், மற்றொரு வினையெச்சத்தையும், பெயரெச்சத்தையும், வினைமுற்றையும், தொழிற்பெயரையும், வினையாலணையும் பெயரையும் தழுவும்.

ஓடி வந்து தேடி நிற்கிறான்.

ஓடி என்னும் வினையெச்சம் வந்த என்னும் வினையெச்சத்தைத் தழுவுகிறது. வந்து என்னும் வினையெச்சம் தேடி என்னும் வினையெச்சத்தைத் தழுவுகிறது. தேடி என்னும் வினையெச்சங்கள் நிற்கிறான் என்னும் வினைமுற்றைத் தழுவுகிறது.

ஓடி வந்த பையன்

ஓடி என்னும் வினையெச்சம் விளையாடுதல் என்னும் தொழிற்பெயரைத் தழுவுகிறது.

வழுக்கி விழுந்தவன் எழுந்து நின்றான்.

வழுக்கி என்னும் வினையெச்சம் விழுந்தவன் என்னும் வினையாலணையும் பெயரைத் தழுவுகிறது.

### 2.17.1 வினையெச்ச வகை

வினைச்சொல்லிலிருந்து வினையெச்சங்கள் பெறப்படுகின்றன. அவை பலவகைப்படும்

### 2.17.1.1 இறப்பு நிகழ்வு எதிர்வு

வினையெச்சத்தில் இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூவகை உண்டு.

இறந்தகால வினையெச்சம் உ, இ, ய் என்பதை விகுதிகளாகப் பெற்றுவரும்.

செய்து போனாள் - செய் த் உ

ஆடி ஓடினான்- ஆடு இ

போய்நின்றான் போய் ய்

நிகழ்கால வினையெச்சம் பெரும்பாலும் அ என்னும் விகுதிபெற்று வரும்.

செய்யச்சொல்கிறான் - செய் அ

ஆட வருகிறான் ஆடு அ

படிக்க வேண்டுகிறான் படி க் கு அ

இதில் கு என்பது சாரியை.

எதிர்கால வினையெச்சம் இன், ஆல், வாள், பான் என்னும் விகுதிகளுள் ஒன்றைப்பெற்றுவரும்.

செய்யின் தருவேன் (இன்) சொல்வான் புகுவேன் (வான்)

வந்தால் கொடுப்பேன் (ஆல்) உண்பான் போவேன் (பான்)

### 2.17.1.2 எதிர்மறை வினையெச்சங்கள்

எதிர்மறுப்பில் வரும் வினையெச்சம் எதிர்மறை வினையெச்சமாகும். எதிர்மறை வினையெச்சம் ஆ என்னும் எதிர்மறை இடைநிலையையும் து, மல், மே என்னும் விகுதியையும் பெற்று வரும்.

காணாது சென்றான்.

காணாது என்பது எதிர்மறை வினையெச்சம். து என்பது எதிர்மறை வினையெச்ச விகுதி.

உண்ணாமல் போனான்.

உண்ணாமல் என்பது எதிர்மறை வினையெச்சம். மல் என்பது எதிர்மறை வினையெச்சவிகுதி.

உண்ணாமே கொடுத்தான்.

உண்ணாமே என்பது எதிர்மறை வினையெச்சம். மே என்பது எதிர்மறை வினையெச்சவிகுதி.

இங்கே கூறிய வினையெச்சங்கள் எல்லாம் தெரிநிலை வினையெச்சங்களே.

### 2.17.1.3 குறிப்பு வினையெச்சம்

காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் வினையைக் கொண்டு முடியும் எச்சம் குறிப்பு வினையெச்சமாகும்.

மெல்லப்பேசினாள் - மெல்ல என்பது குறிப்பு வினையெச்சம்

இனிது பேசினாய் - இனிது என்பது குறிப்பு வினையெச்சம்

### 2.17.1.4 வினையெச்சங்கள் பயன்படும் விதங்கள்

இவ்வினையெச்சங்கள் வினைமுற்றுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகளைக் காட்டுவதாயும், ஒரே காலத்தில் நிகழ்வதைக் குறிப்பிடுவதாயும், காரணம் காட்டுவதாயும், காரியப் பொருட்டதாயும் நிபந்தனையைக் குறிப்பதாயும் வரும்.

1. நடந்துசென்றான்

   சாப்பிட்டுப்போனான்

   எழுதிப்படித்தான்

   உறங்கி எழுந்து பல் விளக்கிச் சாப்பிட்டுச் சென்றான்.

இவ்வினையெச்சங்கள் வினைமுற்றுக்கு முன்நிகழ்ந்தவற்றைக் காட்டுகின்றன.

2. கதிரவன் வரக் காரிருள் மறைந்தது.
   ஆசிரியர் வகுப்பறையில் நுழைய மாணவர் எழுந்தனர்.
   இங்கு வினையெச்சங்கள் ஒரே காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் காட்டுகின்றன.

3. மழை பெய்ய நெல் விளைந்தது.
   நீங்கள் கூப்பிட நாங்கள் வந்தோம்.

4. நெல் விளைய மழை பெய்தது.
   கல்வி கற்கப் பணவுதவி கிடைத்தது.
   இங்கு வினையெச்சங்கள் காரியப் பொருட்டாய் வந்தன.

5. மழை பெய்யின் நெல்விளையும்.
   வெயில் இருந்தால் ஆட்டம் உண்டு.
   வெற்றி பெற்றால் பரிசுபெறுவாய்
   படித்தால் தேறுவாய்
   இங்கு வினையெச்சங்கள் நிபந்தனையைக் (condition)காட்டுகின்றன.

தமிழ்மொழியில் வினையெச்சங்கள் மிகவும் அற்புதமானவை. நாம் வினையெச்சத்தை நன்கு கையாளத்தெரிந்துகொள்ள வேண்டும். மிக நீண்ட இராமாயணக் கதையையோ பாரதக் கதையையோ வினையெச்சங்களைப் பயன்படுத்தி 10 பக்கம் வரக்கூடிய ஒரே வாக்கியமாக எழுதலாம்.

## 2.19 வினைமுற்று

இவ்வியலானது முற்று என்றும், எச்சம் என்றும் இருவகைப்படும். கருத்து முற்றுப்பெற்றிருப்பது முற்றுவினை, இதனை வினைமுற்று என்கிறோம். 'பிறிதோர் சொல்லோடு இயையாது தானே தொடராதற்கு (வாக்கியமாதற்கு) ஏற்கும் வினைச்சொல் 'முற்று' என்பர் சேனாவரையர். இவ்வினைமுற்று முன்னே கண்டவாறு தெரிநிலைவினைமுற்று எனவும் குறிப்புவினைமுற்று எனவும் இருவகைப்படும்.

காக்கை பறந்தது – பறந்தது என்பது தெரிநிலை வினைமுற்று எப்படி? பகுதி வினைச்சொல். இது காலம் காட்டுகிறது. இதில் கருத்து முற்றுப்பெற்றிருக்கிறது. ஆதலால் பறந்தது என்பது தெரிநிலை வினைமுற்று.

காக்கை கரியது - கரியது என்பது குறிப்பு வினைமுற்று. ஏன்? கருமை என்னும் பண்புச் சொல்லடியாய்ப் பிறந்தது கரியது என்பது இதில் கருத்து முடிந்திருக்கிறது. அது கரியதாயிருக்கிறது என்று குறிப்பாய்க் காலம் காட்டுகிறது எனவே, கரியது என்பது குறிப்பு வினைமுற்று.

வினைச் சொற்களை அவற்றின் அமைப்பின் அடிப்படையில் முற்றுவினை என்றும் எச்சவினை என்றும் இருவகையாகப் பாகுபடுத்துவர். இவ்வதிகாரத்தில் முற்றுவினையின் அமைப்பு, அதன் வகைகள் என்பன விளக்கப்படுகின்றன.

முற்று வினையை வினை முற்று என்றும் சொல்வர். பிறிதொரு சொல்லை எஞ்சி நிற்காமல் தன்னளவில் பொருள் முடிவு உணர்த்தி நிற்கும் வினை, முற்று வினை அல்லது வினைமுற்று எனப்படும்.

வருவான், வரமாட்டான், வா, வாருங்கள், வருக என்பன முற்றுவினைக்கு உதாரணங்கள். பொருள் அடிப்படையிலும், அமைப்பு அடிப்படையிலும் முற்றுவினையை மூன்று வகையாகப் பிரிப்பர்.

1. தெரிநிலை வினைமுற்று
2. ஏவல் வினைமுற்று
3. வியங்கோள் வினைமுற்று

தெரிநிலை வினைமுற்று, ஏவல் வினைமுற்று இரண்டிலும் உடன் பாட்டுவினை,

எதிர்மறை வினை என இருவகைகள் உள்ளன. அடுத்துவரும் பகுதிகளில் அவை பற்றி நோக்கலாம்.

### 2.19.1 தெரிநிலை வினைமுற்று

வந்தான் வருகிறான் வருவான் போனான் போகிறான் போவான் நின்றாள் நிற்கிறான் நிற்பான் போன்ற வினைகள் தெரிநிலை வினைமுற்று எனப்படும். இவை ஒரு வாக்கியத்தில் பயனிலையாக வருகின்றன.

(1) கண்ணன் வத்தான் தம்பி வருகிறாள் அவன் வருவான்

(2) எழுவாய்ப் பெயரின் திணை, பால், எண், இடம் என்பவற்றை உணர்த்தும் விகுதியைப் பெற்றுள்ளன. ஆன் விகுதி மேல் உள்ள வினைகளின் இறுதியில் வந்து எழுவாய்ப் பெயர் உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை என்பவற்றை உணர்த்துகின்றது.

(3) கால இடை நிலைகளைப் பெற்றுக் காலம் உணர்த்துகின்றன. வந்தான் இறந்தகாலம் ந்த் - இறந்தகாலம் உணர்த்துகின்றது வருகிறான் வருவான் நிகழ்காலம் - கிறு - எதிர்காலம் - ல் - நிகழ்காலம் உணர்த்துகிறது. எதிர்காலம் உணர்த்துகிறது.

#### 2.19.1.1 தெரிநிலை வினைமுற்றின் அமைப்பு

தெரிநிலை வினைமுற்று மூன்று கூறுகளைக் கொண்டிருக்கும்.1. வினையடி 2. கால இடைநிலை 3. திணை, பால், எண், இடவிகுதி. இதனைப் பின்வருமாறு விளக்கலாம். வினையடி + கால. இடைநிலை + விகுதி.

உதாரணம் ஒடு+ வ் + ஆன், ஓடு+ இன்+ஆன்

மேற்காட்டிய உதாரணங்களில் ஓடு வினையடி -வ்-, -இன்- என்பன காலம் காட்டும் இடைநிலைகள், - ஆன் திணை பால் எண் இட விகுதி. தெரிநிலை வினை முற்று காலம் காட்டுதல் தெரிநிலை வினை முற்று காலம் காட்டும் இடை நிலைகள் மூலம் காலம் காட்டுகின்றது. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என காலம் மூன்று வகைப்படும். வினை நிகழ்ந்து முடிந்ததை உணர்த்தும் வினை இறந்தகால வினை, வினை நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்த்தும் வினை நிகழ்கால வினை, வினை நிகழப்போவதை உணர்த்தும் வினை எதிர்காலவினை.

### 2.19.2 ஏவல் வினைமுற்று

முன்னிலையில் இருப்போரை ஒரு வினையை நிகழ்த்துமாறு ஏவுதற்குப் பயன்படும் வினைவடிவம் ஏவல் வினை எனப்படும். ஏவல் வினைகளை ஏவல் ஒருமை, ஏவல் பன்மை என இரு வகைப்படுத்தலாம்.

### 2.19.2.1 ஏவல் ஒருமை வினைமுற்று

வினையடிகளே ஏவல் ஒருமை வினைகளாவும் பயன்படுகின்றன. வா இரு, நில், எழுது, நடத்து, உருட்டு, புரட்டு, கைவிடு, எடுத்துக்கொள், செய் என்பன ஏவல் ஒருமை வினைமுற்றுகளாகும்.

ஏவல்வினை, கட்டளைப்பொருளைத் தரும் வினைமுற்றுச் சொல். இ∴து உடன்பாட்டு ஏவல்வினை, எதிர்மறை ஏவல்வினை என இரு வகைப்படும்.

செய்யாதே - எதிர்மறை ஒருமை வினைமுற்று

செய்மின் - உடன்பாட்டுப் பன்மை வினைமுற்று

செய்யன்மின் - எதிர்மறைப் பன்மைவினைமுற்று

### 2.19.2.2 எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

இது வினையடி +ஆத் +ஏ என்ற அமைப்புடையது. இங்கு -ஆத்- எதிர்மறை ஏவல் இடைநிலையாகும். - ஏ என்பது எதிர்மறை ஏவல் விகுதிய செய்யாதே ← (செய் +ஆத் +ஏ) நில்லாதே - (நி +ஆத் +ஏ) போகாதே – (போ+ஆத்+ ஏ)

### 2.19.2.3 ஏவல் பன்மை வினைமுற்று

வினையடியுடன் ஏவல் பன்மை விகுதிகள் இணைந்து ஏவல் வினைமுற்று அமைகின்றது. இதன் அமைப்பைப் பின்வருமாறு விளக்கலாம். வினையடி + ஏவல் பன்மை விகுதி

(உ) ங்கள் என்பது ஏவல் பன்மை

விகுதியாகும். சில வினைகள் உங்கள் வருகின்றது. சில வினைகளுடன் -ங்கள் வருகின்றது.

செய்யுங்கள் (செய் + உங்கள்) நில்லுங்கள் - (நில் +உங்கள்)

பாருங்கள் ←(பார் +உங்கள்) வாருங்கள் ←(வா(ர்) +உங்கள்)

ஏவல் பன்மை வினைமுற்று பன்மையை உணர்த்தவும், ஒருமைப் பெயர்களுடன் மரியாதை உணர்த்தவும் பயன்படுகின்றன. மாணவர்களே வாருங்கள்(பன்மை) அப்பா வாருங்கள் (மரியாதை ஒருமை)

### 2.19.2.4 எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று

எதிர்மறை ஏவல் பன்மை வினை முற்று பின்வரும் அமைப்புடையது: வினையடி +ஆத் +ஈர்கள். -ஆத்- என்பது எதிர்மறை இடைநிலை. ஈர்கள் முன்னிலைப் பன்மை விகுதி.

உதாரணம்: செய்யாதீர்கள் (செய் +ஆத் +ஈர்கள்)

போகாதீர்கள் - (போ(க்) +ஆத் +ஈர்கள்)

ஓடாதீர்கள் - (ஓடு+ஆத் +ஈர்கள்)

எதிர்மறைப் பன்மை ஏவலும் பன்மைப் பொருளிலும், மரியாதை ஒருமையிலும் பயன்படுத்தப்படுகின்றது.

உதாரணம்:

பிள்ளைகளே இங்கு நிற்காதீர்கள் (பன்மை)

தம்பி இங்கு நிற்காதீர்கள் (மரியாதை ஒருமை)

### 2.19.3 வியங்கோள் வினை முற்று

வருக, வாழ்க, வளர்க, ஒழிக, வீழ்க, செல்க, எழுதுக என வினையடியுடன் - க விகுதி பெற்று வரும் வினைகள் வியங்கோள் வினை எனப்படும்.

வியங்கோள் வினைமுற்று மரியாதையாய்க் கட்டளையிடவும், வாழ்த்தவும், சபிக்கவும் வேண்டிக்கொள்ளவும் பயன்படும். இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்குப் பொதுவாக வரும். இதன் விகுதிகள் க, ய, அல், இயர், தல், இ, உம் என்பனவாகும்.

க - தமிழ் வாழ்க

ய - நீ வாழிய

அல் - நன்மை செயல்

இயர் - நீ வாழியர்

தல் - மாசிலனாதல்

இ - போற்றி, வாழி.

உம் - எழுந்தருள வேண்டும்

நீங்கள் வந்து சேரவும்.

தமிழ் நாடுவாழ்க- வாழ்த்துதல்

அவன்கெட்டொழிக- சபித்தல்

நீங்கள் எழுந்தருள்க- வேண்டிக்கோடல்

வியங்கோள் வினைமுற்று இருதிணைக்கும் மூவிடத்திற்கும் பொதுவாய்வரும்.

அரசனே வாழி!- உயர்திணை

அன்னமே வாழி! - அ.ஃறிணை

நான் செல்க
நாம் செல் } தன்மை

அவன்செல்க
அவள் செல்க
அவர் செல்க
அது செல்க
அவை செல்க } படர்க்கை

நீ செல்க
நீங்கள் செல்க } முன்னிலை

இவ்வினை வடிவம் ஒருவரை வாழ்த்துதற்கு, அல்லது அவர் எதிர்ப்பை அல்லது வெறுப்பைத் தெரிவிப்பதற்கு, அல்லது ஒருவ காரியத்தைச் செய்யுமாறு வினயமாக வேண்டிக் கொள்வதற்குப் பயன்படும்.

நீங்கள் நீடூழி வாழ்க

உங்கள் வாழ்வில் இன்பம் மலர்க

நீங்கள் எல்லாச் செல்வமும் பெறுக கல்வியில் இன்னும் இன்னும் முன்னேறுக

இங்கு வாழ்க, மலர்க, பெறுக, முன்னேறுக என்பன ஒருவரை வாழ்த்துதற்குப் பயன்பட்டுள்ளன, வறுமை ஒழிக, கொடுங்கோல் அரசு வீழ்க, அறியாமை இருள் அழிக நீ நாசமாய்ப் போக, இங்கு ஒழிக, வீழ்க, அழிக, நாசமாய்ப்போக என்பன வெறுப்பை, எதிர்ப்பைத் தெரிவிக்கப் பயன்பட்டுள்ளன.

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக உங்கள் பிரச்சினைகளை அமைச்சரிடம் கூறுக விண்ணப்பங்களை என்னிடம் தருக

இங்கு எழுதுக, கூறுக, தருக என்பன ஒருவரிடம் வினயமாக வேண்டிக் கொள்வதற்குப் பயன்பட்டுள்ளன.

பழந்தமிழில் இய, இயர் ஆகிய விகுதிகளும் வியங்கோள் வினை விகுதிகளாக வழங்கின. உதாரணம் வாழிய, வாழியர்

தற்காலத்தில் இவை வழங்குவதில்லை. வாழிய கவிதைகளில் அரிதாக வழங்குகின்றது.

உதாரணம்: வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே

தற்காலத் தமிழில் - அட்டும் என்பதும் வியங்கோள் வினை விகுதியாகப் பயன்படுகின்றது.

அவர்கள் நீடூழி வாழட்டும்

அறியாமை இருள் அகலட்டும் மழை பொழியட்டும்

அவர்கள் வாழ்வில் இன்பம் மலரட்டும் அநியாயக்காரர்கள் அழிந்து ஒழியட்டும். வையம் செழிக்கட்டும்

வாழ்த்து, வெறுப்பு, விருப்பு ஆகிய பொருள்களிலேயே வருகின்றது.

## 2.20 வினையாலணையும் பெயர்

வினைமுற்றானது பெயர்ச்சொல்லின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபை ஏற்கத் தக்கதாக இருப்பின் அது வினையாலணையும் பெயர். வினையோடு அணைந்து வருவது வினையாலணையும் பெயர்.

வினையாலணையும் பெயரானது உயர்திணையாகவும் இருக்கும். அஃறிணையாகவும் இருக்கும். மேலும், இது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும்.

- கற்றோர் கூறுவர்
- கற்றோர் என்பது உயர்திணை வினையாலணையும் பெயர்.
- ஓடியது, விழுந்தது.
- ஓடியது என்பது அஃறிணை ஒருமை வினையாலணையும் பெயர்.
- பறந்தவை விழுந்தன.
- பறந்தவை என்பது அஃறிணைப் பன்மை வினையாலணையும் பெயர்.
- வந்தேனே (வந்த என்னை)
- இது தன்மை ஒருமை வினையாலணையும் பெயர்.
- வந்தாயை (வந்த உன்னை)
- இது முன்னிலை ஒருமை வினையாலணையும் பெயர்.
- வந்தானை (வந்தவனை) - இது படர்க்கை வினையாலணையும் பெயர்.

வினையடியாகப் பிறந்து வினையையும், வினை புரியும் கருத்தாவையும் உணர்த்தும் பெயர் வினையால் அணையும் பெயர் எனப்படும்.

உ.ம்: வந்தவனை, வந்தவனால், வந்தவனுக்கு, வந்தவனிடம், வந்தவனுடைய

பழந்தமிழில் வினைமுற்று வடிவங்களே வேற்றுமை ஏற்று வினையாலணையும் பெயராகவும் அமைந்தன. உ.ம் : வந்தேன் + ஐ - வந்தேனை,

வந்தாய் + ஐ - வந்தாயை,

வந்தான் + ஐ - வந்தானை

நட, நடந்தான், நடந்த, நடந்து முதலிய வினைகள் வேற்றுமை உருபுகளை ஏற்கா. வேற்றுமை எற்காமை வினைச் சொற்களின் ஒரு முக்கிய பண்பு என இலக்கண நூலார் கூறுவர். "வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளது" என்று தொல்காப்பியமும் கூறுகின்றது. நடந்தான் என்பது நடந்தானை என்று பழந்தமிழில் வேற்றுமை உருபு ஏற்கும். அவ்வாறு ஏற்கும்போது அதனை வினையாலணையும் பெயர் என்பர்.

தற்காலத் தமிழில் வினைமுற்று வடிவங்கள் வினையாலணையும் பெயர்களாக அமைவதில்லை. வினையாலணையும் பெயர்கள் தற்காலத் தமிழில் பின்வரும் அமைப்பைக் கொண்டுள்ளன.

வினைஅடி + கால இடை நிலை + படர்க்கை இடப்பெயர்

வா + ந்த் + அவன், வா + ந்த் + அவள் → வந்தவன் →வந்தவள்

வினையாலணையும் பெயர்கள் வாக்கியங்களின் இணைப்பினாலேயே பிறக்கின்றன. மேலே உள்ள வினையாலணையும் பெயர்களின் பிறப்பைப் பின்வருமாறு எதிர்மறை வினையாலணையும் கொண்டுள்ளது.

வினையடி + எதிர்மறை இடைநிலை +படர்க்கை இடப்பெயர்

ஆத் + அவன் → செய்யாதவன் செய் + ஆத் + அவர்கள்

வினையடியிலிருந்து ஆக்கப்பெயர், தொழிற்பெயர், வினையாலணையும் பெயர் ஆகிய வெவ்வேறு வகையான பெயர்ச் சொற்கள் ஆக்கப்படுகிறது.

## 2.21 இடைச்சொல்

முன்னும் பின்னும் தனித்து வருமாயினும் பெரும்பாலும் பெயர் வினைகளை இடமாகக் கொண்டு வருவது இடைச்சொல் இடை – இடம்.

- அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களும்
- எ, ஏ, யா, ஆ, ஓ என்னும் வினா எழுத்துக்களும்

- ஏகாரம், உம்மை, ஓகாரம் ஆகியவைகளும் இடைச்சொற்களே.
- தான் மற்றும் என்பவையும் இடைச்சொற்களாகும்
- ஐ,ஆல் முதலிய வேற்றுமை உருபுகளும் இடைச்சொற்களே.
- மற்று என்பது இக்காலத்தில் மற்ற என்று மருவி வருகிறது. இ.்.தும் இடைச்சொல்லே.
- முன், பின், இனி, தொறும், தோறும், வாளா, சும்மா, ஆவது, ஆதன்,யினும், தான், ஐயோ, அந்தோ, பொள்ளென, பொருக்கென முதலியவை இடைச்சொற்களே.
- அவன் தான் தான் இடைச்சொல்
- அவனே நல்லவன் ஏ இடைச்சொல்
- அண்ணனும் தம்பியும் உம் இடைச்சொல்
- அண்ணனும் தம்பியும் என்னும் தொடரிலிருக்கும் உம்மைகள்

எண்ணப்படுவதால் எண்ணும்மை எனப்படும்.

- பூனையோ நாயோ வந்தது ஓகாரம் இடைச்சொல்.

இந்த ஓகாரம் சந்தேகமான கருத்தைக் கொடுப்பதால் ஐய ஓகாரம் எனப்படும்.

முருகனும் வேலனும் சென்றார்கள்- இதில் முருகன், வேலன் என்ற பெயர்ச் சொற்களில் "உம்"வந்தது. நடந்தனனே-இந்த வினைச் சொல்லில் "ஏ, வந்தது. "உம், ஏ" போன்ற சொற்கள் தனித்து வாரா. பெயர்ச் சொற்களையும், வினைச் சொற் களையும் அவை அடுத்தே வரும். இச்சொற்களே இடைச்சொல்.

"தனித்து வழங்குதலன்றி, பெயர் வினைகளை அடுத்து வரும் சொல்லே இடைச் சொல்லாம்.

பெயர் வினைகளைப் போலப் பெரும்பாலும் தனித்து வாராமல், அப்பெயர் வினைகளைச் சார்ந்து அல்லது இடமாகக் கொண்டு வருவது இடைச் சொல்லாகும். இடை - இடம்.

வேற்றுமை உருபுகள், விகுதிகள், இடைநிலைகள், சாரியைகள், உவம உருபுகள், சுட்டெழுத்துகள், வினா எழுத்துகள், ஏ,ஓ,உம்,மற்று, கொல், தான், வாளா, சும்மா, அந்தோ, ஐயோ, சீச்சீ, அம்மா, முன், பின், ஆயினும், இனி, தொறும், தோறும் முதலியன இடைச் சொற்கள்.

அவனைக் கண்டேன் - ஐ- வேற்றுமை உருபு.

வந்தான் -ஆன்- விகுதி.

செல்கிறான் -கிறு- கால இடைநிலை.

அறிஞன்- ஞ்- பெயரிடைநிலை.

எழுதுநன்- ந்- பெயரிடைநிலை.

போகின்றனன் - அன்- சாரியை.

தாமரை போன்ற பாதம் -போன்ற -உவம உருபு.

அப் பலகை, அந்தச் செடி. - அ, அந்த. - சுட்டு.

வந்தானா?- ஆ வினா.

நக்கீரன், நப்பிள்ளை.- ந- உயர்வுப் பொருளைத்தருவது.

இனி ஏகார ஓகார உம்மைகளுள் ஒரு சில மட்டும் தெரிந்து கொள்வோம்.

மரம், மாடு, நாய், மனிதன் போன்ற பெயர்ச் சொற்களும், வா, போ, விடு, நட போன்ற வினைச் சொற்களும் தனித்து நின்று பொருள் தருவன. ஆனால், மரங்கள், மரங்களை, மரங்களுக்கு முதலிய சொற்களில் வரும் - கள், - ஐ, - கு ஆகிய பன்மை விகுதி, வேற்றுமை உருபு போன்றவையும், வந்தான், போன, போனால் போன்ற சொற்களில் வரும் - ந்த் -, - ஆன் -, - ன் -, - அ -, - ஆல் - போன்ற கால இடைநிலைகள், பால் விகுதிகள், நிபந்தனை விகுதிகள் போன்றனவும் தனித்து நின்று பொருள் தராமல், பெயர், வினை ஆகியவற்றுடன் சேர்ந்து வந்து இலக்கணப் பொருள் தருகின்றன. இத்தகைய சொல் உறுப்புகளையே இடைச்சொல் என்பர்.

பெயர், வினை ஆகியவற்றைப் போல் இவை எண்ணிக்கையில் அதிகமானவை அல்ல மிகக் குறைவானவை. ஆயினும் எல்லாச் சொற்களுடனும் பெருவழக்கில் வருகின்றன. இவை இல்லாமல் மொழிப் பயன்பாடு சாத்தியமில்லை என்ற அளவுக்கு இவை முக்கியமானவை. உதாரணமாக : நான் தம்பி வீடு போ ஆகிய நான்கு சொற்களையும் ஒன்றை அடுத்து மற்றதை வைப்பதனால் நாம் ஒரு வாக்கியத்தை ஆக்க முடியாது. இடைச் சொற்கள் இவற்றோடு வெவ்வேறு விதமாக இணைந்து வெவ்வேறு வாக்கியங்களை உருவாக்குகின்றன.

(உ.ம்) நான் தம்பியின் வீட்டுக்குப் போனேன்

நானும் தம்பியும் வீட்டுக்குப் போனோம் நான் தம்பியுடன் வீட்டுக்குப் போவேன்

நான் தான் தம்பியுடன் வீட்டிலிருந்து போனேன்

நானும் தம்பியும்தான் வீட்டிலிருந்து போனோம்

இவ்வாறு பொருளுடைய வாக்கியங்களை ஆக்குவதற்கு இடைச் சொற்கள் பயன்படுகின்றன.

### 2.21.1 இடைச் சொல் வகைகள்

இடைச் சொற்கள் பலவகைப்படும். அவற்றுட் சில பின்வருமாறு:

### 2.21.1.1 ஏகார இடைச்சொல்

1. பாண்டவருள் தருமனே நல்லவன். - ஏகாரம் - பிரிநிலை. பிரித்துக் காட்டுவதால் பிரிநிலை.

2. பள்ளிக்கூடத்திற்குத் தானே போகிறாய்? - ஏகாரம் - வினா. 3. இவனே இதைத் திருடினான். - ஏகாரம் - தேற்றம். துணிந்து காட்டுதலால் தேற்றம்.

3. காய்ச்சல் வந்தால் கரும்பே கசக்கும். - கரும்பே என்னும் சொல்லிலுள்ள ஏகாரம் உயர்வு' இதை உயர்வு சிறப்பு ஏகாரம் என்பர்.

4. நாயே இச்சோற்றைத் தின்னாது. - ஏகாரம் - இழிவு சிறப்பு.

### 2.21.1.2 ஓகார இடைச்சொல்

1. பிச்சை எடுக்கவோ வந்தான்? - ஓகாரம்

   இதில் ஓகாரம் பிச்சை எடுக்க வரவில்லை என்பதை ஒழித்துத் திருட வந்ததை இசைத்தலால் (கூறுதலால்) இ∴து ஒழியிசை ஓகாரமாகும்.

2. நீயோ பாடினாய்? - ஓகாரம் - இது வினா ஓகாரம்.

3. நீ செய்வாய்' அவன் செய்வான்' நானோ செய்வேன். - ஓகாரம் - எதிர்மறை.

4. நாயோ நரியோ இங்கு வந்திருக்கும். - ஓகாரம் - ஐயம்.

   (ஐயம் - சந்தேகம்)

### 2.21.1 உம்மை இடைச்சொல்

1. முப்பது மாணவர்களும் வந்திருக்கிறார்கள். - உம் - முற்றும்மை. இவ்வகுப்பு மாணவர்களை முழுதும் குறிப்பிடுவதால் இது முற்றும்மை. முற்றும் காட்டும் உம்மை முற்றும்மை.

2. நாயும் இச்சோற்றைத் தின்னாது. -உம் - இழிவு சிறப்பு.

3. குரங்கும் ஏறமுடியாத மரம். - உம் - உயர்வு சிறப்பு. 4. பத்தாயினும் எட்டாயினும் கொடு.-உம் - ஐயம்.

4. அண்ணனும் தம்பியும் வந்தார்கள். எண்ணும்மை. எண்ணப்படுவதால் இ∴து எண்ணும்மையாகும். ஆங்கிலத்திலிருக்கும் யனெ என்பதற்கு இது சமமானது.

5. நீயும் போ, நானும் வருகிறேன். - நீயும் என்பதிலுள்ள உம்மை எதிரே உள்ள நானும் என்பதைத் தழுவி நிற்கிறது. ஆதலால், இ∴து எதிரது தழுவிய எச்ச உம்மை. நானும் என்பதிலுள்ள உம்மை, முன்னே உள்ள அ∴தாவது இறந்ததாக உள்ள நீயும் என்பதைத் தழுவி நிற்பதால், இ∴து இறந்தது தழுவிய எச்ச உம்மை.

### 2.21.2 இடைச்சொல் வரும் பொருள்கள்

இடைச்சொல் பின்வரும் எட்டுப் பொருள்களில் வரும் என நன்னூல் கூறுகின்றது. எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, எண்ணல், தெரிநிலை, ஆக்கம் என வரும்.

#### 2.21.2.1 சிறப்பு

இதனை உயர்வு சிறப்பு, இழிவு சிறப்பு என இரண்டாக வகுப்பர். உயர்வு சிறப்பு என்பது உயர்ந்தவற்றுள் உயர்ந்ததைக் குறிக்கும். உம்: கவிஞர்களும் போற்றும் கவிஞன் அரசர்களும் வாழாத ஆடம்பர வாழ்வு இழிவு சிறப்பு என்பது தாழ்ந்தவற்றுள் தாழ்ந்ததைக் குறிக்கும்.

நாயிலும் கடையர், கொலைகாரனை விடவும் கொடியவன்

#### 2.22.2.2 ஐயம்

மழை பெய்தாலும் பெய்யும், சிலவேளை அப்பா வந்தாலும் வருவார் இங்கு நிபந்தனை வினை எச்சத்துடன் உம் சேர்ந்து நிச்சயமின்மையை உணர்த்துவதால் இதனை ஐயம் என்பர். இத்தகைய வாக்கியங்களில் உம் இடைச்சொல் ஏற்ற அதே வினையே வினைமுற்றாகவும் வரும். இதனை ஐயம் என்பதைவிட சாத்தியப்பாடு என்பது பொருந்தும். எதிர்பார்க்கும் செயல் நிகழ்வதற்குரிய சாத்தியம் உள்ளது என்பதை இவ்வாக்கியங்கள் உணர்த்துகின்றன.

#### 2.21.2.3 எச்சம்

(கமால் வந்தான்) (நேற்று வந்தேன்)

(இறைச்சி சாப்பிடுவேன்)

கண்ணனும் வந்தான்

இங்கு உம் ஏற்ற பெயர்ச் சொல் பிறிதொன்றைத் தழுவி நிற்பதால் இதனை என்பர். இதனை அடங்கல் பொருள் (Inclusive) என்றும் கூறுவர். இங்கு உம் ஏற்ற பெயர் அனைத்தையும் உள்ளடக்குவதால் முற்று என்பர். எண்ணுப் பெயர்களுடன் உம் இடைச்சொல் சேர்ந்து அவை அனைத்தும் என முற்றுப் பொருளைத் தரும். உதாரணம்:- பத்துப் பிள்ளைகளும், இரண்டு மாணவர்களும், முப்பது கோழிகளும் வினாப் பெயர்களுடன் உம் இடைச்சொல் சேர்ந்தும் முற்றுப் பொருளைத் தரும்

எதிர்மறை வினை கொண்ட வாக்கியத்தில் வரும் உம் இடைச் சொல் ஏற்ற பெயர் முற்றுப் பொருள் உணர்த்தும் உம்: ஒருவரும் வரவில்லை. எண் மூன்றும் இரண்டும் ஐந்து, நானும் நீயும் அவனும்...இவ்வாறு எண்ணுதற்கும் இணைப்பதற்கும் உம் பயன்படுவதை எண் உம்மை என்பர்.

### 2.21.2.4 தெரிநிலை

ஆணும் இல்லை பெண்ணும் இல்லை. இதில் ஆராய்ச்சியும் இல்லை விமர்சனமும் இல்லை. இங்கு வெளிப்படையாக விடயத்தைக் கூறுவதனால் இதனைத் தெரிநிலை என்பர்.

### 2.21.2.5 ஆக்கம்

வீட்டைத்தான் அலுவலகமாகவும் பயன்படுத்துகிறேன். எழு அவரது தொழிலும் அவர் முழுநேர எழுத்தாளர். இங்கு ஒன்றே பிறிதொன்றாகவும் அமைவது சுட்டப்படுவதால் இதனை ஆக்கம் என்பர். இவை தவிர தற்காலத் தமிழில் இன்னும் சில பொருள்களில் உம் இடைச்சொல் வரக் காணலாம்.

## 2.22 உரிச்சொல்

உரிச்சொல்லாவது பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு வருவது. சில உரிச்சொற்கள் பல பொருளைக் குறிக்கும். ஒரே பொருளைக் குறித்தும் பல உரிச்சொற்கள் வருவதும் உண்டு. தொல்காப்பிய உரையாசிரியரான சேனாவரையர் பெரும்பாலும் செய்யுட்கே உரியனவாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பாரும் உளர் என்றார். மற்ற விளக்கத்துடன் கூறியதை மேற்கொண்டு எளிதாக விளக்குமாறு செய்யுளுக்கே உரிய சொல் உரிச்சொல்லென விளக்கினார்.

சால உண்டான். சால – உரிச்சொல்.

நன்று மழை பெய்தது மழை மிகவும் பெய்தது என்ற பொருள் தரும்போது நன்று என்பது உரிச்சொல். பெரும்பாலும் செய்யுளுக்கே உரிய சொல்லாக இருப்பதால் உரிச்சொல் என்றார் நன்னூலார். இயல்பான பொருளுக்கு இது வேறான பொருளைத் தருவதாகவும் இருக்கும்.

- சால, உறு, தவ, நனி, கூர், கழி – உரிச்சொற்கள்
- அறுசீர்க்கழி நெடில் ஆசிரிய விருத்தம்
- இங்கு உள்ள கழி – உரிச்சொல்
- பல பொருள் தரும் உரிச்சொல்.
- காப்பு – கடிநகர் சிறப்பு - கடியரன்

- கூர்மை – கடிவேல் விரைவு – கடிசென்றான்
- மணம் - கடிமாலை மிகுதி - கடிகாற்று
- விளக்கம் - கடிமார்பன் புதுமை - கடிமணம்
- அச்சம் - கடிப்போர் ஆர்த்தல் - கடிமுரசு

சால நன்று. நனி பேதை. உறு புகழ். இவற்றுள் சால, நனி, உறு என்ற சொற்கள் தனித்து வழங்கவில்லை. பெயர், வினைகளோடு வந்தன. அவற்றின் பண்பையும் உணர்த்தின. இவை உரிச் சொற்கள். பாவுக்குரிய சொல்லே உரிச் சொல்லாகும். இது தனித்து வழங்குதல் இல்லை. பெயர் வினைகளையடுத்தே இது வரும். அவற்றின் பண்பையும் உணர்த்தி நிற்கும்.

உரிச்சொல் என்பதை உரி + சொல் எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். உரி என்பது உரிய (உரிமை) என்ற பொருளைத் தருவதாகும். உரிச்சொல் எதற்கு உரியது என்றால் செய்யுளுக்கு உரியதாகும். உரிச்சொற்கள் பெரும்பாலும் பேச்சு வழக்கில் பயின்று வராத சொற்களாகும்.

உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் உரிய சொல் என்றும் கூறுவார்கள். உரிச்சொல் பெயருக்கும் வினைக்கும் அடையாக வருவதோடு அவற்றின் பண்பையும் விளக்கி நிற்கும்.

### 2.22.1 உரிச்சொல்லின் பொது இலக்கணம்

இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பலவகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயராகி, ஒரு குணத்தையேனும் பல குணத்தையேனும் உணர்த்துவனவாய், பெயர், வினைகளை விட்டு நீங்காதனவாகி. செய்யுளுக்கு உரியனவாயும் பொருட்கு உரிமை பூண்டு நிற்பவை உரிச்சொற்களாகும்.

(இசை, ஓசை. குறிப்பு - மனத்தால், குறிப்பால் உணரப்படுவது பண்பு - பொறியால் உணரப்படும் குணம்).

உரிச்சொல், குணத்தை உணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமை பூண்டு பெரும்பாலும் செய்யுளுக்கு உரியதாய் வழங்கும் சொல்லாகும். இ∴து இயல்பான பொருளுக்கு வேறான பொரு ளைக் குறிப்பாகத் தருவதாகவும் இருக்கும். பல உரிச்சொற்கள் உண்டு. இங்கு ஒரு சில உரிச்சொற்கள் மட்டும் தரப்படுகின்றன.

சாலப் பெரிது – சால - உரிச்சொல்

உறு பொருள் - உறு -உரிச்சொல்

நனி பேதை- நனி- உரிச்சொல்

கடி மலர்- கடி- உரிச்சொல்

எம் அம்பு கடிவிடுதும் - கடி- உரிச்சொல்

கழி கண்ணோட்டம் - கழி- உரிச்சொல்

கழிநெடிலாசிரிய விருத்தம்- கழி- உரிச்சொல். (கழி- மிகுதி)

**"பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி**
**ஒருகுணம் பலகுணம் தழுவிப் பெயர்வினை**
**ஒருவா செய்யுட்கு உரியன உரிச்சொல்"**

என்னும் நூற்பா (442) உரிச்சொல்லின் பொது இலக்கணத்தை வரையறுக்கின்றது.

1. உரிச்சொல் என்பது பல்வேறு வகைப்பட்ட பண்புகளையும் உணர்த்தும் பெயர் ஆகும்.
2. ஒரு சொல் ஒரு பண்பை உணர்த்தலாம் ஒரு சொல் பல பண்புகளையும் உணர்த்தலாம்.
3. உரிச்சொல், பெயர்ச்சொற்களோடும் வினைச்சொற்களோடும் சேர்ந்து அவற்றின் பண்பை உணர்த்த வரும்.
4. உரிச்சொல் செய்யுளுக்கு உரிய சொல்லாக வரும்.

எடுத்துக்காட்டு:

நனி பேதை - நனி எனும் உரிச்சொல் பேதை எனும் பெயர்ச் சொல்லோடு சேர்ந்து வந்தது.

நனி = மிகுதி, பேதை = அறிவற்றவன்

சாலத் தின்றான்

சால எனும் உரிச்சொல் தின்றான் எனும் வினைச்சொல்லோடுசேர்ந்து வந்தது.

சால = மிகவும்

மல்லல் ஞாலம் - மல்லல் எனும் உரிச்சொல் வளம் எனும் ஒரு பண்பை உணர்த்தும்.

கடி மலர்

கடி நகர் - கடி எனும் உரிச்சொல் முறையே மணம் மிக்க மலர். காவல் மிக்க நகர் எனப் பல பண்புகளை உணர்த்துகிறது.

### 2.22.2 உரிச்சொல் உணர்த்தும் பண்புகள்

உரிச்சொல் உணர்த்தும் பண்புகள் இரண்டு ஆகும். அவை :

1. குணப் பண்பு
2. தொழிற் பண்பு

உரிச்சொல் பல்வேறு பண்புகளை உணர்த்தும் என முன்னர் கண்டோம். அவற்றுள் பொருளின் பண்புகளை உணர்த்துவது குணப்பண்பு ஆகும்.

எடுத்துக்காட்டு: மாதர் வாள் முகம்

இங்கு மாதர் எனும் உரிச்சொல் விருப்பம் எனும் குணத்தை உணர்த்துகிறது.

(மாதர் = விரும்பத்தக்க, வாள் முகம் = ஒளிமிக்க முகம்)

இமிழ் கடல்

இங்கு இமிழ் எனும் உரிச்சொல் ஒலித்தல் எனும் தொழிற்பண்பை உணர்த்துகிறது.

## தொகுப்புரை

சொல் சொற்றொடர் என்பதற்கு இடையிலான வேறு வேறுபாடுகள் நன்கு மாணவர்களால் உணரப்படுகின்றது. சொற்களின் வகுப்பிற்கு மூல காரணமாக அமையும் பகுபத உறுப்பிலக்கணங்களை மாணவர்கள் பகுத்தல். இடைநிலைகள் காலம் காட்டும் முறைகளை தெரிந்துணர்கின்றனர். இலக்கணத்தில் காணப்படும் சொல்லின் வகைகளும் இலக்கியத்தில் காணப்படும் சொல்லின் வகைகளும் வேறுபடுத்தி காட்டப்பட்டுள்ளது என்பதால் இவ்விரண்டிற்கு உள்ள வேறுபாட்டை மாணவர்கள் தெரிந்துணர்கின்றனர். சொற்களில் காணப்படும் திணை, பால், எண், இடம் போன்றவை பயின்று வரும் முறைகளை நன்கறிகின்றனர். முற்று எச்சம் வினை உணர்த்தும் பெயர், வினை என்ற நிலையின் அடிப்படையில் விலக்கப்பட்டுள்ளதால் பெயர் வினைகளின் மாற்றத்தின் நன்குணர்கின்றனர்.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. சொல் என்றால் என்ன?
2. சொற்றொடர் சொற்றொடர் என்பது யாது?
3. சொற்றொடரின் வகைகள் யாவை?
4. பகுபதம் என்றால் என்ன பகாபதம் என்றால் என்ன?
5. பகுபதத்தில் உறுப்புகள் யாவை?
6. விகுதியின் வகைகள் யாவை?
7. இடைநிலைகளின் வகைகள் யாவை?
8. சாரியை என்றால் என்ன?
9. விகாரம் என்றால் என்ன? அதன் வகை சுட்டுக.
10. சொல்லின் வகை யாது?
11. பெயர் என்றால் என்ன? அதன் வகை யாது?
12. தொழிற்பெயர் என்றால் என்ன? சான்று தருக.
13. பெயரெச்சம் என்றால் என்ன? அதற்கு சான்று கூறுக.
14. திணையின் வகைப்பாட்டை எழுதுக.
15. உயர்திணை என்றால் என்ன? அதன் வகை யாது?
16. மூவிடங்கள் இலக்கணத்தில் எவ்வகையில் வரும்.
17. வினை என்றால் என்ன? வினையின் வகை யாது?
18. வினையெச்சத்தின் வகை யாது?
19. வினைமுற்று என்றால் என்ன? அதன் வகைகளை கூறுக.

### குறு வினாக்கள்

1. மொழி இறுதியையும் அதன் வகைகளையும் விவரித்து எழுதுக?
2. இடைநிலைகள் வகைகளை ஆராய்க.
3. பெயர் வகைகளை விளக்கி அதற்கு சான்று தருக.
4. ஐம்பால் பால் பாகுபாடு கோட்பாட்டை விளக்குக.
5. வினைமுற்று வரும் விதங்களை எழுதுக.
6. இடைச்சொல் விளக்கி எழுதுக.
7. உரிச்சொல்லின் இலக்கணத்தை கூறுக.

### பெரு வினாக்கள்

1. பெயரின் வகைகளை சான்றுடன் ஆராய்க.
2. பெயரில் திணை, பால், எண், இடம் பயின்று வரும் முறையை விளக்கி கட்டுரை வரைக.
3. வினை, வினையெச்சம், வினைமுற்று போன்றவற்றின் வேறுபாட்டை ஆராய்க.
4. இடைச் சொல்லின் வகைகளை கூறி அவற்றின் உறுப்புகளை விளக்கி உரைக்க.

# அலகு - III

## 3.0 பாட அறிமுகம்

தொடரின் வகைகள் இரண்டாகப் பிரித்துணர்த்தப்படுகின்றன. அவை தொகைநிலைத் தொடர்கள், தொகாநிலைத் தொடர்கள் என்ற நிலையில் வகைப்படுத்தப்படுகின்றன. தொகைநிலைத் தொடர்கள் எட்டாகவும் தொகாநிலைத் தொடர்கள் ஆறாகவும் விளக்கப்பெறுகின்றன.

## 3.1 பாட நோக்கம்

தொகைநிலைத் தொடரின் வகைப்பாட்டை மாணவர்களுக்கு கற்பித்தல். தொகாநிலைத் தொடர்களை தொகுத்துரைத்தல். தொடர்களின் வகைப்பாட்டை அறிதல். தொடர்களின் வேறுபாட்டை உணர்தல்.

## 3.2 தொகாநிலைத் தொடர்கள்

பெயர்ச் சொல்லுடன் பெயர்ச்சொல்லும், பெயர்ச் சொல்லுடன் வினைச் சொல்லும் சேர்ந்த இரண்டு சொற்களும் தம்மிடையே உருபுகளும், காலமும் தொகாமல் வெளிப்படையாய் வந்து தொடர் அமையின் அதற்குத் தொகாநிலைத் தொடர் என்று பெயர்.

தொகாநிலைத் தொடர் என்பது சொற்கள், வேற்றுமை, அல்வழிப் பொருளில், உருபுகள் இருந்து மறையாமலும், உருபுகளே இல்லாமலும் தொடரும் தொடராகும்.

வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் என்பது, வேற்றுமைக்குரிய உருபுகள் மறையாமல் வெளிப்பட்டுத் தொடரும் தொடராகும்.

அல்வழித் தொகாநிலைத் தொடர் என்பது, அல்வழிக்கு உரிய தொகைகளான வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை ஆகியன நீங்கலாக, தமக்கெனத் தனி உருபுகள் இல்லாத ஏனைய தொகாநிலைத் தொடர்கள் தொடரும் தொடராகும்.

### 3.2.1 தொகாநிலைத் தொடர் வகைகள்

எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர் என்னும் ஒன்பதும் அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகாநிலைத் தொடர்கள் ஆகும். இவற்றுள் எந்தெந்தத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும்.

(1) எழுவாய்த் தொடர்

(2) விளித் தொடர்

(3) வினைமுற்றுத் தொடர்

(4) பெயரெச்சத் தொடர்

(5) வினையெச்சத் தொடர்

(6) இடைச் சொற்றொடர்

(7) உரிச் சொற்றொடர்

(8) அடுக்குத் தொடர்

(9) வேற்றுமைத் தொடர்

வேற்றுமைத் தொடர்களில், உருபு விரிந்த விடத்து வேற்றுமைத் தொகாநிலைத் தொடராகும். வினைத்தொகை விரிந்தவிடத்து பெயரெச்சத் தொடராகும். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச் சொற்றொடராகும் உவமைத் தொகை விரிந்த விடத்து முன்னது இடைச் சொற்றொடராகும். பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத் தொடராகும். அன்மொழித் தொகை விரிந்த விடத்து வேற்றுமை முதலிய தொகாநிலைத் தொடர் முதல் ஏற்பனவாகும்.

**“முற்றுஈர் எச்சம் எழுவாய் விளிப்பொருள்**

**ஆறுஉருபு இடைஉரி அடுக்குஇவை தொகாநிலை”(நன்னூல் : 374**

இத்தொகாநிலைத் தொடர் வினைமுற்றுத் தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர்இ எழுவாய்த் தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் இடைச்சொற்றொடர், உரிச் சொற்றொடர். அடுக்குத் தொடர் என ஒன்பது வகைப்படும்.

### 3.1.1.1 எழுவாய்த் தொடர்

மாதவி பாடினாள்.

மாதவி எழுவாய். தொடரில் எழுவாய் முதலில் இருப்பதால் இ∴து எழுவாய்த் தொடர்.

### 3.2.1.2 விளித் தொடர்

இராமா! வா.

விளி முதலில் இருப்பதால் இது விளித் தொடர்.

### 3.2.1.3 வினைமுற்றுத் தொடர்

இவ்வினைமுற்றுத் தொடரில் இருவகை உண்டு. ஒன்று தெரிநிலை வினைமுற்றுத் தொடர்.

பாடினாள் சீதை.

பாடினாள் என்னும் தெரிநிலை வினைமுற்று முதலில் இருப்பதால் இது தெரிநிலை வினைமுற்றுத் தொடர். மற்றொன்று குறிப்பு வினைமுற்றுத் தொடர்.

சிறியன் வேலன்.

சிறியன் என்பது இங்கே குறிப்பு வினைமுற்று. குறிப்பு வினைமுற்று இத்தொடரில் முதலில் இருப்பதால் இது குறிப்பு வினைமுற்றுத் தொடர்.

### 3.2.1.4 பெயரெச்சத் தொடர்

இதிலும் இருவகை உண்டு. ஒன்று தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்.

பாடிய பையன்.

பாடிய என்பது தெரிநிலைப் பெயரெச்சமாதலால் இத் தொடர் தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்.

மற்றொன்று குறிப்புப் பெயரெச்சத் தொடர். நல்ல பையன்.

நல்ல என்பது குறிப்புப் பெயரெச்சமாதலால் இத்தொடர் குறிப்புப் பெயரெச்சத் தொடர்.

குறிப்பு : பகுதி வினைச் சொல்லாயின் தெரிநிலை என்றும், பகுதி பெயராயின் குறிப்பு என்றும் அறிக.

### 3.2.1.5 வினையெச்சத் தொடர்

விழுந்து எழுந்தாள்.

விழுந்து என்பது தெரிநிலை வினையெச்சம். இத்தொடரில் தெரிநிலை வினையெச்சம்முதலில் இருப்பதால் இது தெரிநிலை வினையெச்சத் தொடர்.

சிறிது என்பது குறிப்பு வினையெச்சம். குறிப்பு வினை யெச்சம் முதலில் இருப்பதால் இத்தொடர் குறிப்பு வினையெச்சத் தொடர்.

### 3.2.1.6 இடைச்சொல் தொடர்

மற்று அறிவாம், இனிப் பேசேன்.

மற்று என்பதும், இனி என்பதும் இடைச் சொற்கள். இவை இத்தொடர்களில் முதலில் இருப்பதால் இவை இடைச் சொல் தொடர்கள்.

### 3.2.1.7 உரிச்சொல் தொடர்

சாலப் பேசினான்.

சால என்னும் உரிச்சொல் இத்தொடரில் முதலில் இருப்பதால் இ∴து உரிச்சொல் தொடர்.

### 3.2.1.8 அடுக்குத் தொடர்

போ போ.

போ என்பது உணர்ச்சி மிகுதியால் அடுக்கி வருவதால், இ∴து அடுக்குத் தொடர்.

## 3.3 தொகைநிலைத் தொடர்கள்

இருசொற்கள் இருந்து நடுவில் எச்சொல்லும், பொருள் கொள்ளும்போது மறையாதிருந்தால் தொகா நிலைத் தொடர் என்போம். கண்ணன் உண்டான் என்னும் இத்தொடரின் நடுவில் ஒன்றும் மறையவில்லை. ஆதலால், இதைத் தொகாநிலைத் தொடர் என்கிறோம். ஆனால், துணி கட்டு என்னும் இத் தொடரில் துணியைக் கட்டு என்று பொருள்படுவதால் ஐ உருபு மறைந்திருக்கிறது. ஆதலால், துணிகட்டு என்பதைத் தொகை நிலைத்தொடர் என்கிறோம்.

தொகா நிலைத்தொடரில் இரு சொற்களின் நடுவில் ஒன்றும் மறைந்திராது' தொகைநிலைத் தொடரில் ஏதாவது மறைந்திருக்கும்.

இரண்டும் தொடர்களாக இருப்பினும் வேறுபாடு காட்டும் பொருட்டுச் சுருக்கமாகத் தொகாநிலைத் தொடரைத் தொடர் என்றும் தொகைநிலைத் தொடரைத் தொகை என்றும் கூறுவர்.

தொகைநிலைத் தொடர் என்பது, வேற்றுமை உருபுகள் முதலிய உருபுகள் நடுவே மறைந்து நிற்க, இரண்டு முதலிய சொற்கள் ஒரு சொல் தன்மையில் தொடர்வதாகும். ஒரு சொல் தன்மை என்பது பிளவுபடாது நிற்பதாகும்.

**“பெயரொடு பெயரும் வினையும் வேற்றுமை**

**முதலிய பொருளி னவற்றி னுருபிடை**

**ஒழிய விரண்டு முதலாத் தொடர்ந்தொரு**

**மொழிபோ னடப்பன தொகைநிலைத் தொடர்ச்சொல்”நூற்பா 361**

### 3.3.2 தொகைநிலைத் தொடர்வகைகள்

தொகைநிலைத் தொடர்மொழியை அறுவகையாகக் கூறுவர்.

1) வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்
2) வினைத் தொகைநிலைத் தொடர்
3) பண்புத் தொகைநிலைத் தொடர்
4) உவமைத் தொகைநிலைத் தொடர்
5) உம்மைத் தொகைநிலைத் தொடர்
6) அன்மொழித் தொகைநிலைத் தொடர்

என ஆறு வகைப்படும்.

**வேற்றுமை வினைபண்பு உவமை உம்மை**

**அன்மொழி எனஅத் தொகைஆறு ஆகும் (நன்னூல் - 362)**

1) பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல் தொடரும்.
2) பெயர்ச்சொல்லோடு வினைச்சொல் தொடரும்.
3) வினைச்சொல்லோடு பெயர்ச்சொல் தொடரும்.
4) வினைச்சொல்லோடு வினைச்சொல் தொடராது.
5) இடை, உரிச் சொற்கள் தொடரா.
6) ஒரு சொல்லோடு மற்றொரு சொல், பொருள் புணர்ச்சியில் தொடரும்.
7) சொற்களுக்கு இடையே உருபுகள் மறைந்து வரும்.
8) இரண்டு முதலாகப் பல சொற்கள் தொடரும்.
9) பல சொற்கள் தொடரினும் ஒரு சொல்போல் விளங்கும்.
10) உருபோடு சொல்லும் மறைந்து வரும்.
11) தொகை என்னும் சொல் உருபு மறைதல் எனப் பொருள்படும்.

### 3.3.1.1 பண்புத்தொகை

பண்புக்கும் பண்பிக்கும் உள்ள ஒற்றுமை நயத்தை விளக்குவதற்காக வரும் "ஆகிய" என்னும் பண்புருபு தொக்கு நிற்பனவும் பொதுப்பெயரும் சிறப்புப் பெயரும் இணைந்து நிற்க அவற்றிடையே அவ்வுருபுதொக்கு வருவனவும் பண்புத் தொகைகள் ஆகும்.

**"பண்பை விளக்கும் மொழிதொக் கனவும்**

**ஒருபொருட்கு இருபெயர் வந்தவுங் குணத்தொகை"நூற்பா 365**

இங்கு பண்பு எனப் பொதுப்படக் கூறியதால் வண்ணம், வடிவு, அளவு, சுவை என்னும் அடிப்படையில் அமைபவற்றைக் கொள்ளுதல் வேண்டும்.

செந்தாமரை, கருங்குதிரை வண்ணம்

வட்டக்கல், சதுரப்பலகை - வடிவம்

ஒருபொருள், முக்குணம் - அளவு

துவர்க்காய், இன்சொல் - சுவை

மேற்கூறிய சொற்கள் விரியுமிடத்து, செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள். துவர்ப்பாகிய காய், ஆயனாகிய சாத்தன். செம்மையாகிய நிறமாகிய குவளை என்றவாறு விரியும். மற்றவற்றையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

ஒரு பண்பு உணர்த்தும் சொல் பிறிதொரு சொல்லோடு இணைந்து உருவாகும் தொகைச் சொல் பண்புத்தொகை எனப்படும்.

வட்டமேசை - வட்டமான மேசை

வெண்மணல் - வெண்மையான மணல்

இன்சொல் - இனிமையாகிய சொல்

பைந்தமிழ், கருங்கடல். - மை, ஆகிய என்பவை மறைந்துள்ளன.

இவை பண்புத் தொகைகள்.

இப்படிப் பண்புச் சொல்லும் பெயர்ச் சொல்லும் இருந்து மாறுதலடைந்து வருந்தொகையைப் பண்புத் தொகை என்க. சுருங்கச் சொன்னால் பண்பின் அடிச் சொல்லோடு தொடர்ந்து வருவது பண்புத் தொகை எனலாம்.

### 3.3.1.1 இரு பெயரொட்டுப் பண்புத் தொகை

ஆகிய என்ற உருபு மறைந்து நிற்க ஒரு சிறப்புப் பெயரும் ஒரு பொதுப் பெயரும் இணைந்து உருவாகும் தொகைச் சொல்லை இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர். உம்:

சாரைப் பாம்பு (சாரை ஆகிய பாம்பு) சிட்டுக் குருவி (சிட்டு ஆகிய குருவி) தென்னை மரம் (தென்னை ஆகிய மரம்) கோடை காலம் (கோடை ஆகிய காலம்)

பலாமரம்

இங்கே இரண்டு பெயர்கள் ஒட்டிப் பண்புத் தொகை போன்று வந்துள்ளன. இவற்றுள் பலா என்பது சிறப்புப் பெயர்.மரம் என்பது பொதுப் பெயர். இவ்வாறு சிறப்புப் பெயரும் பொதுப் பெயருமாகிய இரு பெயர்கள் ஒட்டித் தொகையாகி வருமானால் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை என்க.

தமிழ்மொழி, வறுமைநோய்

இவை இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள். இரு பெய ரொட்டுப் பண்புத் தொகையில் இரு பெயர்களும் ஒன்றையே சுட்ட வேண்டும் என்பதறிக. இதில் இருபெயர்களும் ஒருங்கு சேர்ந்து ஒரு பெயரை உணர்த்தும்.

ஆயன் சாத்தன். சாரைப்பாம்பு - இருபெயரொட்டுப் பண்புத்தொகை

செந்நிறக் குவளை - பன்மொழித்தொகை

### 3.3.1.2 வினைத்தொகை

காலம் காட்டும் வினையுருபுகளான இடைநிலை, விகுதி முதலான மறைந்து நின்ற பெயரெச்சங்கள் வினைத் தொகைகளாகும்.

**“காலங் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை” நூற்பா 364**

(எ.டு கொல்யானை. விடுகணை, பாய்புலி முதலியன.

ஈண்டு, கொன்ற, விட்ட, பாய்ந்த முதலிய பெயரெச்சங்களின் இடைநிலைகளும் விகுதிகளும் கெட்டு கொல், விடு, பாய் என்னும் பகுதிகளாகிப் பெயர்களோடு தொக்கி வந்தன.

வினைத்தொகை என்பது, பெயரெச்சத் தொடராகும். பெயரெச்சமாக வரும் வினையில், பெயரெச்சத்தின் விகுதியும், காலம் காட்டும் இடைநிலையும் கெட்டு, வினையின் முதல்நிலை மட்டும் நின்று அதனோடு பெயர்ச்சொல் தொடர்வதாகும். அதனால் வினைத்தொகையைக் காலம் கரந்த பெயரெச்சம் என்பர். கரந்த என்றால் மறைந்த என்பது பொருள்.

(எ-டு) வீசு தென்றல்

இத்தொடரை விரித்துக் கூறும்பொழுது, வீசிய தென்றல், வீசுகின்ற தென்றல், வீசும் தென்றல் என முக்காலத்திற்கும் பொருந்திவரக் காணலாம். இவ்வாறு வினைத்தொகை முக்காலமும் குறித்து வருமானால் அவை முக்கால வினைத் தொகைகள் எனப்படும்.

வீசிய, வீசுகிற, வீசும் என்னும் பெயரெச்சங்களின் விகுதியும் காலமும் கெட்டு, வீசுதல் என்னும் தொழிலின் முதல்நிலையான வீசு என்பது மட்டும் நின்று, தென்றல் என்னும் பெயரொடு வந்து வினைத்தொகை ஆயிற்று.

சில வினைச் சொற்களின் வினைப் பகுதியான முதல் நிலை விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

(எ-டு) வருபுனல்

இவ்வினைத்தொகையில் வா என்னும் வினைப் பகுதியான முதல்நிலை வரு எனத் திரிந்து புனல் என்னும் பெயரோடு வந்தது.

**"காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை" (நன்னூல் - 364)**

கடிநாய்.

இது கடித்த நாய், கடிக்கிற நாய், கடிக்கும் நாய் என்று பொருள் தரும். மூன்று காலம் காட்டும் வினைமுற்று விகுதி இத்தொடரில் மறைந்திருக்கிறது' பெயரெச்சம் போலக் காணப்படுகிறது.ஆதலால், இது வினைத்தொகை. விளக்கமாகச் சொன்னால் பெயரெச்ச விகுதி தொக்கதே வினைத் தொகை எனலாம். சுருங்கக் கூறினால் வினைச் சொல்லின் பகுதியும் பெயர்ச் சொல்லும் சேர்ந்து வருவதையே வினைத் தொகை என்பர்.

### 3.3.1.3 உவமைத்தொகை

ஒரு பொருளைக் கூறுவதற்கு அதனோடு ஒத்த வேறொரு பொருளோடு சேர்த்துக் கூறின் அப்பொருளுக்குச் சிறப்பு ஏற்படும். அச் சிறப்புப் பொருள் தெளிவாக அமைவதற்காகத் தொடர்புடைய பொருளை உவமையாகக் காட்டுவர். அங்ஙனம் விளக்கும் போது போல முதலிய உவம உருபுகள் மறைந்து நின்று பொருளை விளக்கும் தொடர் உவமைத் தொகையாகும்.

**"உவமை வுருபில துவமத் தொகையே" நூற்பா 366**

இவ்வுவம உருபு வினை, பயன், மெய், உரு என்பனவற்றைப் பொருளாகக் கொண்டு வரும்.

புலிக்கொற்றன், குருவி கூப்பிட்டான - வினையுவமத்தொகை

மழைக்கை, கற்பகவள்ளல் - பயனுவமத் தொகை

துடியிடை, வேய்த்தோள் - மெய்யுவமத்தொகை

கார்கூந்தல், பவளவாய் - உருவுவமத்தொகை

இவை விரிகையில் புலி போலும் கொற்றன், மழை போலும் கை, துடி போலும் இடை, கார் போலும் கூந்தல் என அமையும். பிற எடுத்துக்காட்டுகளையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

உவமைத் தொகை என்பது, போல முதலிய உவமை உருபுகள் மறைந்து நிற்க, உவமானச் சொல்லோடு உவமேயச் சொல் தொடர்வதாகும். போல என்பதோடு புரைய, ஒப்ப, உறழ, மான கடுப்ப இயைப ஏய்ப்ப நேர் நிகர் அன்ன, இன்ன முதலியனவும் உவம உருபுகளாகும்.

(எ-டு.) பவளவாய்

இது பவளம் போலும் வாய் என விரியும். இவற்றுள், பவளம் என்பது உவமானம் போலும் என்பது உவம உருபு. வாய் என்பது உவமேயம். (உவமானம் - உவமையாகும் பொருள் உவமேயம் - உவமிக்கப்படும் பொருள்.)

இவ்வுவமைத் தொகை வினை, பயன், மெய், உரு என்பன பற்றி வரும்.

(மெய் - வடிவம் உரு - வண்ணம்.)

(எ-டு.) புலி மனிதன் - வினையுவமைத் தொகை

மழைக்கை - பயனுவமைத் தொகை

துடியிடை - மெய்யுவமைத் தொகை

பவளவாய் - உருவுவமைத் தொகை

இவை விரியும் பொழுது, புலி போலும் மனிதன், மழை போலும் கை, துடி போலும் இடை, பவளம் போலும் வாய் என விரியும்.

**“உவம உருபிலது உவமத் தொகையே”(நன்னூல் - 366)**

உவமைத் தொகையின் இலக்கணத்தைக் கூறிய பவணந்தியார் பின்னர் உவம உருபுகளை நூற்பா 367-இல் பட்டியலிடுகிறார். அவை. போல, புரைய, ஒப்ப, உறழ, மான. கடுப்ப, இடைய. ஏய்ப்ப. நேர. நிகர என்னும் செயவென் எச்சமொழிகள் பத்தும், அன்ன, இன்ன என்னும் குறிப்புப் பெயரெச்சம் இரண்டும் இவை போல்வனவும் உவம உருபுகளாகும் என்று பட்டியலிடுகிறார்.

மலைத்தோள்.

இது மலை போன்ற தோள் என்று பொருள்படும். போன்ற என்னும் உவம உருபு தொக்கி அ∴தாவது மறைந்து வருகிறது. அதனால், இ∴து உவமைத் தொகை.

### 3.3.1.4 உம்மைத்தொகை

உம்மைத்தொகை என்பது எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகை அளவைப் பெயர்களுள் உம் என்னும் இடைச்சொல் தொக்கு வருபவை உம்மைத் தொகைகளாகும்.

**“எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**

**எனும்நான்கு அளவையுள் உம்மிலது அத்தொகை”நூற்பா 368**

(எ.டு) ஒன்றேகால், கபிலபரணர் - எண்ணல்

கழஞ்சே கால், தொடியே க.்.க எடுத்தல் கலனே தூணி, நாழி யாழாக்கு -முகத்தல் சாணங்குலம், சாணரை - நீட்டல்

சேர சோழ பாண்டியர், புலிவிற் கெண்டை - பன்மொழித்தொகை

இவை விரியுமிடத்து, ஒன்றும் காலும், கழஞ்சும் காலும், கலனும் தூணியும். சாணும் அங்குலமும், சேரனும் சோழனும் பாண்டியனும் என்றவாறு விரியும். பிறவற்றையும் அவ்வாறே கொள்ளுதல் வேண்டும்.

உம் என்னும் இடைச்சொல் மறைந்து நிற்க இரண்டு பெயர்ச் சொற்கள் இணைந்து உருவாகும் தொகைச் சொல் உம்மைத் தொகை எனப்படும். அளவுப் பொருளில் இரண்டு சொற்கள் தொடர்ந்து வர அவற்றின் இடையிலும் இறுதியிலும் உம்மையாகிய உருபு மறைந்து நிற்பது உம்மைத் தொகை எனப்படும். அவ்வளவுகள் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு ஆகும்.

| | | |
|---|---|---|
| எ-டு : ஒன்றேகால் | - | எண்ணல் அளவை உம்மைத் தொகை |
| தொடியேக.்.சு | - | எடுத்தல் அளவை உம்மைத் தொகை |
| மரக்கால் படி | - | முகத்தல் அளவை உம்மைத் தொகை |
| அடி அங்குலம் | - | நீட்டல் அளவை உம்மைத் தொகை |

இவற்றை விரித்துக் கூறும் பொழுது, ஒன்றும் காலும், தொடியும் க.்.சும், மரக்காலும் படியும், அடியும் அங்குலமும் என விரியும்.

மற்ற தொகைநிலைத் தொடர்களில் காணப்படாத தனிச் சிறப்பு இவ்வும்மைத் தொகைக்கு உண்டு. மற்ற தொகைநிலைத் தொடர்களில் உருபு இரண்டு சொற்களுக்கு இடையில் மட்டுமே மறைந்து வரும். உம்மைத் தொகையில் இரண்டு சொற்களுக்கு இடையிலும் இரண்டாம் சொல்லின் இறுதியிலும் உம் என்னும் உருபு மறைந்து வருவதைக் காணலாம்.

**"எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல்**

**எனும் நான்கு அளவையுள் உம்மிலது அத்தொகை" (நன்னூல்- 368)**

செடிகொடி.

இங்கே உம்மை தொக்கி வருவதால் உம்மைத் தொகை. இது செடியும் கொடியும் என்று பொருள்படும்.

### 3.3.1.5 வேற்றுமைத்தொகை

ஐ,ஆல், கு, இன், அது, கண் ஆகிய இரண்டு முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள உருபுகள் மறைந்து நிற்க சொற்கள் இணைந்து தொகைச் சொல்லாக (கூட்டுப் பெயராக) அமைவது வேற்றுமைத் தொகை எனப்படும்.

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை,

1) முதல் வேற்றுமை
2) இரண்டாம் வேற்றுமை
3) மூன்றாம் வேற்றுமை
4) நான்காம் வேற்றுமை
5) ஐந்தாம் வேற்றுமை
6) ஆறாம் வேற்றுமை
7) ஏழாம் வேற்றுமை
8) எட்டாம் வேற்றுமை

இவற்றில் முதல் வேற்றுமை, எழுவாய் வேற்றுமை எனப்படும். எட்டாம் வேற்றுமை, விளி வேற்றுமை எனப்படும். எழுவாய் வேற்றுமை, விளி வேற்றுமை இரண்டிற்கும் உருபுகள் இல்லை. ஏனைய ஆறு வேற்றுமைகளுக்கும் உருபுகள் உள்ளன.

ஆறு வேற்றுமை உருபுகளும் வெளிப்பட்டு நின்றும் மறைந்து நின்றும் சொற்றொடரில் தம் பொருள் உணர்த்தும். உருபுகள் தோன்றாமல் மறைந்து நின்று சொற்றொடரில் பொருள் உணர்த்தும் தொடர்களே வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள் எனப்படும். வேற்றுமைகளும் அவற்றிற்குரிய உருபுகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1) இரண்டாம் வேற்றுமை - ஐ
2) மூன்றாம் வேற்றுமை - ஆல்,ஆன், ஒடு, ஓடு
3) நான்காம் வேற்றுமை - கு

4) ஐந்தாம் வேற்றுமை - இன், இல்

5) ஆறாம் வேற்றுமை - அது, ஆது

6) ஏழாம் வேற்றுமை - கண்

தொகை என்பது உருபு மறைதல் என்பதால் தொகைநிலைத் தொடரில் வேற்றுமைத் தொகை என்பது இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரை உள்ள ஆறு வேற்றுமைத் தொகைகளையே குறிக்கும்.

**“இரண்டு முதலாம் இடைஆறு உருபும்**

**வெளிப்படல் இல்லது வேற்றுமைத் தொகையே” (நன்னூல் - 363)**

இவ்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர், வேற்றுமை உருபு மட்டும் மறைந்து வருதல், வேற்றுமை உருபும் பயனும் சேர்ந்து மறைந்து வருதல் என இரண்டு வகைப்படும்.

1. பூங்குழல் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது பூவையுடைய குழலினை உடையவள் என விரியும்.

2. பொற்றொடி - மூன்றாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை இது பொன்னாலாகிய தொடியினை உடையவள் என விரியும்.

3. சொல்லிலக்கணம் - நான்காம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை சொல்லுக்கு இலக்கணம் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

4. பொற்றாலி - ஐந்தாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை - இது பொன்னால் ஆகிய தாலியினை உடையாள் என விரியும்.

5. கிள்ளிகுடி - ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை - இது கிளியினது குடியிருக்கும் ஊர் என விரியும்.

6. கீழ்வயிற்றுக் கழலை - ஏழாம் வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை கீழ்வயிற்றின் கண் எழுந்த கழலைப் போல்வான் என விரியும்.

இதிலும் இரு பிரிவுகள் உண்டு. வேற்றுமை உருபு மட்டும் மறைந்து நிற்க வருவது.

துணிகட்டு.

இங்கே இரண்டாம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கிறது. இஃது இரண்டாம் வேற்றுமைத் தொகை.

### 3.3.5.1 வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

யானைப்பாகன்.

இதுவும் வேற்றுமைத் தொகையே. ஆனால், இதில் உருபுடன் செலுத்தும் என்னும் பொருட் பயன் தரும் சொல்லும் மறைந்திருக்கிறது. யானையைச் செலுத்தும் பாகன் என்பது பொருள். இஃது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

மரப்பெட்டி.

மரத்தால் செய்யப்பட்ட பெட்டி என்று பொருள்படுவதால் இது மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

### 3.3.1.6 அன்மொழித்தொகை

தொகைச் சொற்களின் ஆற்றலால் அச்சொற்களுக்குத் தொடர்பில்லாமலும், பிறிதொரு பெயரைக்கொண்டு பொருள் தருமாறு அமையும் சொற்றொடர்க்கு அன்மொழித்தொகை எனப் பெயர். அன்மொழி என்பதை அல்,மொழி எனப் பிரிக்க வேண்டும் அல் - அல்லாதமொழி - சொல். எனவே, சொல் அல்லாத இடத்தில் பொருள் கிடைக்கும் சொல் இருந்தால் தானே பொருள் கிடைக்கும். வேற்றுமைத்தொகை முதலிய ஐந்து தொகைநிலைத் தொடர்மொழிகளுக்குமேல் மற்றும் ஓரிரு சொற்கள் தொக்கு வருவது அன்மொழித் தொகையாகும்.

**“ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி” நூற்பா 369**

இவ் அன்மொழித்தொகை ஐந்து தொகைநிலைத் தொடர்களிலும் வரும்.

பொற்றொடி வந்தாள்

முதலில் பொற்றொடி என்பது பொன்னாலாகிய தொடி என மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையாகும். மீண்டும் இதனை வந்தாள் எனும் முடிக்கும் சொல்லுடன் இணைத்துப் பார்த்தால் “அணிந்த பெண்“ வந்தாள் என்பது தெரியவரும். பொன், தொடி, வந்தாள் ஆகிய மூன்று சொற்களுக்கும் அப்பாற்பட்டுப் “பெண்“ எனும் சொல்லிலே பொருள் நிற்பதால், “பெண்“ எனும் சொல் அன்மொழி. அந்த அன்மொழி மறைந்து வருவதால் அன்மொழித் தொகை.

தொல்காப்பியர் பண்புத்தொகை, உம்மைத்தொகை, வேற்றுமைத் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அன்மொழித்தொகை பிறக்கும் என்றார். உவமைத்தொகையையும் வினைத்தொகையையும் சேர்க்கவில்லை. இருப்பினும் சேனாவரையர் இந்த இரண்டின் வாயிலாகவும் பிறக்கும் என்று விளக்கம் கண்டுள்ளார்.

“ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி“ என நூற்பா செய்துள்ளார். எனவே, அன்மொழித் தொகைக்கு ஒரு தொகை தேவையாகிறது. இது தொகைக்கு பிறக்கும் தொகை! பெரும்பாலும் வாக்கியமாக இருந்தாலன்றி அன்மொழித்தொகை என்று அறிந்துகொள்வது இயலாது.

பைந்தொடி வந்தாள்.

பைந்தொடி - அன்மொழித்தொகை. தொகைகளை நிலைக்களமாகக் கொண்டு வருவது அன்மொழித் தொகை. இது வேறு பொருள்தரும். பைந்தொடியுடையாள் என்பது பொருள். பெரும்பாலும் வாக்கியமாக இருந்தால் அன்றி அன்மொழித் தொகை என்று அறிந்து கொள்வது இயலாது.

தொடரும் தொகையும் தெரிந்து கொள்வதால் சந்திப்பிழை இன்றி எழுதலாம். எழுவாய்த் தொடர், பெயரெச்சத் தொடர், வினை முற்றுத் தொடர், அடுக்குத் தொடர் இவற்றிலும், வினைத் தொகை, உம்மைத் தொகை, இரண்டாம் வேற்றுமைத் தொகை இவற்றிலும் வல்லெழுத்து மிகாது என்று தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இரு பெயரொட்டுப் பண்புத் தொகையிலும் உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லெழுத்து மிகும் என்று எளிதாக அறிந்து கொள்ளலாம். தமிழ்த்தாய் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வலிமிக்கது காண்க.

## தொகுப்புரை

தொகைநிலைத் தொடர்கள் இலக்கணத்தில் பயின்று வரும் முறைகளை மாணவர்கள் தெரிந்துணர்வதன் மூலமாக மொழியை பிழையின்றி எழுத உதவியாக இருக்கிறது. மேலும் தொடர்களை வேறுபடுத்தி கற்கும் முறையினை மாணவர்கள் கற்கின்றனர். சொற்றொடர் அமையும் நிலை எடுத்துக்காட்டப்படுகின்றன. தொகைநிலைத் தொடர்களும் தொகாநிலைத் தொடர்களும் வகைப்படுத்தப்பட்டு விளக்கம் பெறுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?
2. தொடரில் எழுவாய் பயின்று வரும் முறையினை கூறு?
3. அடுக்குத்தொடர் எவ்வகையில் வரும்.
4. பண்புத்தொகை என்றால் என்ன? அதன் வகை யாது?
5. வினைத்தொகை சொல்லில் எவ்வாறு பயின்று வரும் என்பதை கூறுக.
6. அன்மொழித்தொகை வரும் விதத்தை கூறுக.

### குறு வினாக்கள்

1. வேற்றுமைத்தொகையை விளக்கி எழுதுக.
2. உம்மைத்தொகையை விளக்குக.

### பெரு வினாக்கள்

1. தொகைநிலைத் தொடரின் வகைகளை விளக்கி கட்டுரை வரைக.
2. தொடரில் தொகாநிலை பெற்று வரும் நிலையை ஆராய்க.

# அலகு - IV

## 4.0 பாட அறிமுகம்

தொடரும் வாக்கியங்களும் இவ்வியலில் விளக்கம் பெறுகின்றன. வாக்கிய உறுப்புகள் எடுத்துரைக்கப்படுகின்றன. எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் கூறப்படுகின்றன. தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம், செய்வினை வாக்கியம், செயப்பாட்டு வினை வாக்கியம் போன்ற வாக்கியாங்களும் குறிப்பிட்டு விளக்கப்படுகின்றன. நிறுத்தக் குறிகளும் அடைப்புக் குறிகளும் அவற்றின் அடையாளங்களுடன் கொடுக்கப்பெற்றுள்ளன.

## 4.1 பாட நோக்கம்

தொடர்களின் பயன்பாட்டை நன்கறிதல். தொடர்களின் வகைப்பாட்டினை கற்றுணர்தல். வாக்கியத்தின் உறுப்புகளை அடையாளம் காணும் திறனை பெறுதல். வாக்கியத்தில் அமையும் குறிகளை கையாளும் முறையினை நன்கு கற்றல்.

## 4.2 தொடர்

சொல் ஒன்றனோடு ஒன்று பொருட் பொருத்தமுறத் தொடர்வது தொடர். வண்டித் தொடர் என்றால் ஒன்றுக்கு மேல் வண்டிகள் தொடர்ந்திருக்க வேண்டும். அதுபோல ஒன்றுக்கு மேல் சொற்கள் தொடர்ந்திருந்தால் தொடர் என்க. ஒரு சொல்லைக் கொண்டு தொடர் எனலாகாது.

இரண்டு வாக்கியத் தொடர்கள் சமநிலையில் இணைக்கப்படும் போது கூட்டுவாக்கியங்கள் கிடைக்கின்றன. இவ்வாறு இணைக்கப்படும் வாக்கியத் தொடர்களைச் சமநிலை வாக்கியத் தொடர் அல்லது தனிநிலை வாக்கியத்தொடர் (Independent Clouse)என்பர். இணைப்பிலே இவை இரண்டும் சமத்துவம் உடையனவாக இருக்கும் ஒன்றில் மற்றது தங்கியிராது.

உதாரணமாக: நான் கொழும்புக்குப் போனேன், தம்பி கொழும்புக்குப் போனான் ஆகிய இரண்டு வாக்கியத்தொடர்கள் இணைந்து நானும் தம்பியும் கொழும்புக்குப் போனோம். என்ற கூட்டுவாக்கியம் கிடைக்கின்றது. இவ்வாக்கியத்தில் இணைந்துள்ள இரண்டு வாக்கியத் தொடர்களும் சமமானவை. ஒன்றில் மற்றது சார்ந்து இருக்கவில்லை. இரண்டும் தனித்தனி நிகழ்வுகளைக் கூறுகின்றன. ஒரு வாக்கியத் தொடர் கூறும் நிகழ்வு மற்ற வாக்கியத் தொடர் கூறும் நிகழ்வை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. இத்தகைய வாக்கியத் தொடர்களே சமநிலை வாக்கியத் தொடர் எனப்படும். இத்தகைய தொடர்களின் இணைப்பே கூட்டு வாக்கியமாகும். நான் கொழுப்புக்குப் போனேன், ஆனால், தம்பி கொழும்புக்குப் போகவில்லை. என்பது கூட்டுவாக்கிய இணைப்புக்குப் பிறிதொரு உதாரணமாகும். இதிலும் பின்வரும் இரண்டு சமநிலை வாக்கியத் தொடர்கள் உள்ளன:

நான் கொழும்புக்குப் போனேன், தம்பி கொழும்புக்குப் போகவில்லை. இவ்விரு வாக்கியத் தொடர்களும் ஆனால் என்னும் இணைப்பிடைச் சொல்லால் இணைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும் தனித்தனி நிகழ்வுகளைச் சொல்லும் வாக்கியங்களே. ஒன்று மற்றதில் தங்கியிருக்கவில்லை. இல் சமனிலை வாக்கியத் தொடர்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுவதை ஆக்கம் (Co-ordinate Construction) என்பர். சமநிலை ஆக்கப்பட்ட இணைக்கப்பட்ட வாக்கியம் கூட்டு வாக்கியமாகும். ஒரு கூட்டு வாக்கியம் இரண்டு அல்லது பல சமநிலை வாக்கியத் தொடர்கள் இருக்கும்.

நான் கொழும்பு துணைநிலைத் தொடர் அல்லது சார்புநிலைத் தொடர் (Subordinate Clouse) என்பர். இவ்வாறு ஒரு தலைமை வாக்கியத் தொடருடன் ஒன்று அல்லது பல துணை நிலைத் தொடர்கள் ஆகும். கலப்பு வாக்கியம் (Complex Sentence) எனப்படும் கலப்பு வாக்கியத்தில் ஒரு தலைமை வாக்கியமும் ஒன்று அல்லது பல சார்பு நிலைத்தொடர்களும் இருக்கும்.

நான் கண்ணனைப் பார்க்க விரும்பினேன்

மேல் உள்ள வாக்கியம் துணைநிலை ஆக்கத்துக்குப் பிறிதொரு உதாரணம். நான் விரும்பினேன் என்பது இதில் தலைமை வாக்கியத் தொடர், கண்ணனைப் பார்க்க என்பது துணைநிலை வாக்கியத் தொடர்.

இங்கு தலைமை வாக்கியத் தொடருக்குள் துணைநிலை வாக்கியத் தொடர் இணைக்கப்பட்டுள்ளது. இதனைப் பின்வருமாறு அடைப்புக்குறிக்குள் காட்டலாம்.

நான் [கண்ணனைப் பார்க்க ] விரும்பினேன்

இது ஒரு கலப்பு வாக்கியமாகும். ஒரு கலப்பு வாக்கியத்துள் இருக்கும் தலைமை வாக்கியத்தொடர் சமநிலைத் தொடராகும். ஏனையவை துணைநிலைத் தொடர்களாகும். கூட்டு வாக்கியத்துள் இருக்கும் எல்லா வாக்கியத் தொடர்களும் சமநிலைத் தொடர்களாகும்.

## 4.3 வாக்கியம்

சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து முழுமையான பொருள் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

உ.ம் : கந்தன் தோட்டத்தில் வேலை செய்கிறான்.

வாக்கியங்களை நாங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம். தனிவாக்கியம் ஒரு வாக்கியத்தில் ஒன்று அல்லது பல எழுவாயும், ஒரு பயனிலையும் காணப்படுமாயின் அது தனி வாக்கியமாகும். மாலா ஆடினாள். மாலாவும், சீதாவும் ஆடினார்கள். மழை பெய்கின்றது.

வாக்கியம் (Sentence) என்பது இலக்கண விதிகளுக்குட்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இணைந்து பொருளை உணர்த்தினால் அவ்வமைப்பு தொடர் என்றும் வாக்கியம் என்றும் கூறப்படும். தொடர் உணர்த்தும் கருத்தினைக் கொண்டும், தொடரின் அமைப்பினைக் கொண்டும் தொடர் பல்வேறு வகைகளாக வகைப்படுத்தப்படுகிறது. சொற்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்து எவ்வாறு சொற்றொடராகவும் வாக்கியமாகவும் அமைகின்றன என்பது தொடரியலில் விளக்கப்படும். இதனை வாக்கியவியல் என்றும் கூறலாம். வாக்கியத்தின் அமைப்பை விளக்குவதே வாக்கியவியல் அல்லது தொடரியல் எனப்படும்.

சொற்கள் இணைந்து வாக்கியங்களாக அமைகின்றன என நாம் பொதுவாகக் கூறுகின்றோம். ஆயினும், ஊரில் வந்தேன் நேற்று நான் இருந்து என்ற சொற்களின் சேர்க்கை வாக்கியமாகாது. இந்த வரிசையில் உள்ள சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருள்தரக் கூடிய முறையில் சரியாக இணையவில்லை. அதனால், இது பொருளுடைய வாக்கியமாக அமையவில்லை. இதே சொற்கள், நான் ஊரிலிருந்து நேற்று வந்தேன் என்ற ஒழுங்கில் இணையும் போது வாக்கியமாகிறது. இதே சொல் வரிசையை சற்று மாற்றி நான் நேற்று ஊரிலிருந்து வந்தேன், ஊரிலிருந்து நான் நேற்று வந்தேன், நேற்று நான் ஊரிலிருந்து வந்தேன் எனவும் வாக்கியங்கள் ஆக்கலாம்.

வாக்கியத்தைப் பிழையின்றி எழுதுவதற்கு வாக்கியம் என்றால் என்ன என்பதைப் பற்றியும், வாக்கிய வகைகள் இவை என்பதைப் பற்றியும், வாக்கியங்கள் இன்னவாறு அமைய வேண்டும் என்பதைப் பற்றியும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

வாக்கியம் என்பது வடசொல் என்று கேட்கும்போது வியப்படையலாம். “வாக்கியத்திற்குத் தமிழில் சொல் இல்லையா?“ என்று ஒருவர் கேட்கலாம். வாக்கியத்தைத் தமிழில் முற்றுச் சொற்றொடர் எனலாம். வாக்கியம் என்பதே பெரிதும் வழங்கி வந்திருப்பதால், நாம் அச்சொல்லை ஏற்றுக் கொள்வதால் தவறு இல்லை. முற்றுச் சொற்றொடர் என்றால் இன்று அது பலருக்கும் புரியாத புதிராக இருக்கும். வாக்கியம், உரைநடையில் மிக மிக இன்றியமையாத பகுதியாகும்.

வாக்கியம் என்பது ஒரே ஒரு முழுக்கருத்தைத் தெரிவிக்கும் சொற்கூட்டமாகும். ஒரு வாக்கியத்தில் இரு வேறு கருத்துகள் இருத்தல் கூடாது. ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை இருக்கும். சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து வருதலுமுண்டு.

1. நாளை வா”,
2. “இளமையிற் கல்“,
3. “இரப்பவர்க்கு இட்டு உண்ணுங்கள்’.

இவை வாக்கியங்களே. இவற்றில் எழுவாய்கள் இல்லை. முதலிரண்டு வாக்கியங்களில் நீ என்னும் எழுவாயும் மூன்றாவது வாக்கியத்தில் நீங்கள் என்னும் எழுவாயும் மறைந்து நிற்கின்றன. எழுவாய் தோன்றாமல் இருந்தால் அதனைத் தோன்றா எழுவாய் என்பர். செயப்படுபொருள் சில வாக்கியங்களில் இல்லாமலும் இருக்கும். கண்ணன் ஓடினான் என்னும் வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லாமல் இருப்பதைக் காண்க. சில வாக்கியங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட செயப்படுபொருள்களும் இருக்கும்.

ஆசிரியர், மாசிலாமணிக்குத் தமிழும் கணக்கும் கற்பித்தார்.

இதில் ஒன்றுக்கு மேற்பட்ட செயப்படுபொருள்கள் இருத்தலைக் காண்க. எழுவாயைத் தழுவியும் செயப்படுபொருளைத் தழுவியும் பயனிலையைத் தழுவியும் அடைமொழிகள் இருப்பதுமுண்டு. முழுக்கருத்தை விளக்குவதாகவே இருக்கும். பத்துத் திங்கள் சுமந்து ஈன்றெடுத்த தாயும் ஒழுக்கம் கெட்ட மகனை மிகவும் விரும்பமாட்டாள். இந்த வாக்கியத்தில் அடைமொழிகள் வந்திருத்தலைக் காண்க. பத்துத் திங்கள் சுமந்து ஈன்றெடுத்த என்னும் தொடர் ‘தாயும்’ என்னும் எழுவாய்க்குரிய தொடர். ‘ஒழுக்கம் கெட்ட’ என்னும் தொடர் ‘மகன்’ என்னும் செயப்படுபொருளுக்குக்குரியது. ‘மிகவும்’ என்பது ‘விரும்பமாட்டாள்’ என்னும் பயனிலைக்குரிய அடைமொழி.

தெளிவாகக் கருத்தைத் தெரிவிப்பதே வாக்கியத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும் என்பதை ஒருவரும் மறத்தலாகாது.

பொருள் மயக்கமும் வாக்கியத்தில் வருதல் கூடாது. ‘இங்குச் செய்யப்படும் பண்டங்கள் நெய்யில் செய்யப்பட்டவை அல்ல’ என்று சிற்றுண்டிச்சாலை அறிவிப்பில் பலரும் கண்டு இருக்கலாம். இஃது ஏமாற்றும் வாக்கியம். மயக்கும் வாக்கியமுமாகும். ‘செய்யப்பட்டவை’ என்னும் சொல் வரைக்கும் வேறு நினைக்கிறோம். ‘அல்ல’ என்னும் சொல்லைப் படித்த பின்னரே உண்மையை உணருகிறோம். இப்படி எழுதுவது வாணிகத் தந்திரம். ‘எண்ணெயில்’ அல்லது ‘டால்டாவில்’ செய்யப்பட்டவை என்றிருந்தால் பொருள் தெளிவாக இருக்கும். ‘நீங்கள் சொல்லுவது பச்சைப்பொய்’ என்று சொல்லாமல் நாகரிகமாய்க் கூறும் பொருட்டு ‘நீங்கள் கூறுவது உண்மைக்கு மாறானது” என்று சொல்கிறோம். இவ்வாறு கூறுவது வேறு, மயக்கும் வாக்கியம் வேறு.

தமிழ்மொழியில் வாக்கியம் பிழையில்லாமல் இருக்கலாம். அதில் கருத்து முடியாமல் இருப்பதுண்டு. இப்படிக் கருத்து முடியாமல் மற்றொரு கருத்தைத் தழுவி நிற்கும் எச்சக் கருத்துள்ள வாக்கியமும் ‘நானும் வருகிறேன்’ என்பது இந்த வகையான வாக்கியம். உம்மையால் இத்தன்மை உண்டாகிறது. இதனை எச்ச வாக்கியம் எனலாம். இத்தகைய வாக்கியம் தமிழில் மிகமிக அருகி வரும்.

### 4.3.1 எழுத்தும் சொல்லும் வாக்கியத்திற்குக் கருவிகள்

பன்னீராண்டு நிகழ்ந்த பஞ்சத்துக்குப் பின் நாடு மலிய மழை பெய்தது. பெய்த பின்றைப் பாண்டியன், ”இனி நாடு நாடாயிற்று. ஆகலின், நூல் வல்லாரைக் கொணர்க” என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்கினான். ஏவலர் எழுத்ததிகாரம் வல்லாரையும் சொல்லதிகாரம் வல்லாரையும் தலைப்பட்டுக் கொணர்ந்து, ”பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப் பட்டிலேம்” என்று மன்னனிடம் கூறிய போது, அவன், எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பொருளதிகாரம் அறிவதன் பொருட் டன்றே! பொருளதிகாரம் பெறேமெனின் இவை பெற்றும் பெற்றிலேம் என்று கவன்றான்” என இறையனார் அகப்பொருள் கூறுகின்றது. அஃது உண்மைதானே! எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பொருளதிகாரத்தை அறிவதற்குள்ள கருவிகள். அது போலவே எழுத்துப்பிழை, சொற்பிழை, சந்திப்பிழை, சொற்பிரிப்புப்பிழை முதலியனவெல்லாம் வாக்கியத்தைப் பிழையின்றி எழுதுவதற்காகவே அறிந்து கொள்கிறோம். எழுத்தும் சொல்லும் வாக்கியத்திற்குக் கருவிகள் என்பது கூறாமலே நன்கு விளங்கும்.

### 4.3.2 வாக்கியத்தில் பலர் செய்யும் தவறுகள்

வாக்கியங்களை எழுதும்போது மாணவர்களும் செய்தியாளர்களும் இதழாசிரியர்களும் எழுத்தாளர் சிலரும் இலக்கணப் பயிற்சி இல்லாமையால் பற்பல தவறுகள் செய்யக் காண்கிறோம். ஒருமை பன்மை வினைமுற்றுப் பிழைகள் நாளிதழ்களில் மலிந்து இருக்கக் காணலாம்.

ஆங்கிலத்தில் இப்பிழையைச் செய்தால் நம்மவர்களே எள்ளி நகைப்பார்கள். ஆனால், தமிழில் “கட்டுப்பாடுகள் இனிக் கிடையாது” என்று எழுதினால் தவறு என்று நாம் கவலைப் படுவதில்லை. ”கட்டுப்பாடுகள் இனிக்கிடையா” என்றிருக்க வேண்டும். சிலர் அப்படி எழுதுவதில் உயிரிருப்பதாகவும் கருதி விடுகின்றனர். பேச்சு மொழியில் தவறுகள் செய்கிறோம். கவலை யில்லை. எழுத்து மொழியில் தவறு செய்வது மொழிக்குச் செய்யும் தீமை என்றுதான் கூற வேண்டும்.

### 4.3.3 வாக்கியத்தில் முழுக்கவனம் செலுத்துக

நாகரிக வளர்ச்சியின் சின்னம் உரைநடைப் பெருக்கம். செய்யுள் பண்டை மொழியின் சிறப்பு. இன்றைய மொழியின் சிறப்பு இக் காலத்துக்கு ஏற்றவாறு உரைநடை நூல் பெருகுவதே யாகும். விஞ்ஞான அறிவு பெருகப் பெருக, உரைநடை நூல்களுக்குத் தேவையும் மதிப்பும் பெருகும். விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக் காலத்தில் உரைநடைதான் எழுத முடியுமேயன்றிச் சிறந்த செய்யுள் இயற்றுவது அரிதாகும். இன்று செய்யுளைப் படித்து இன்புறுவதற்குப் பலர் அஞ்சி நடுங்கி அலறுவது காண்கிறோம். பலர் செய்யுளை வெறுப்பதையும் கண்கூடாகப் பார்க் கிறோம். ஒரு சிலரே - செய்யுளின்பத்தில் பழகிய ஒரு சிலரே மனப்பண்பை வளர்ப்பதற்குச் செய்யுளைப் படிக்கின்றனர். இக்காலத்தில் அறிவு

வளர்ச்சிக்குக் காரணமான உரைநடையில் அறிஞர்கள் கவனம் செலுத்துவது இயற்கையே. உரைநடையில் கவனம் செலுத்தும் இக்காலத்தில் நாம் உரைநடைக்கு அடிப்படை யாக உள்ள வாக்கியத்தில் முழுக்கவனம் செலுத்த வேண்டுவது இன்றியமையாதது.

### 4.3.5 வாக்கிய வரலாறு

தமிழ்மொழியில் கி.பி.8-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இறையனார் களவியல் உரையில் வாக்கியங்கள் நல்ல முறையில் அமைந்திருக்கக் காணலாம். அந்த உரை நடை, செய்யுள் நடைபோல இருந்தாலும், வாக்கியங்களின் அமைப்புச் சிறந்திருக்கப் பார்க்கிறோம். கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளிலே வாழ்ந்த உரையாசிரியர்களால் வாக்கிய அமைப்பு வளர்ச்சியுற்றது எனலாம். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, மிகுந்த வளர்ச்சியுற்றுள்ள ஆங்கில மொழியின் கூட்டுறவால், தமிழில் வாக்கிய அமைப்புப் பண்பட்டு வரத் தொடங்கியது. இன்று நன்னிலையில் வளர்ந்துகொண்டு வருகிறது. இவ்வளர்ச்சிக்கு ஆங்கில மொழியின் கூட்டுறவே காரணம்.

### 4.3.5 வாக்கியத்தின் வகைகள்

#### 4.3.5.1 கருத்துவகை

கருத்தைப் பொறுத்து ஒருவகையாகவும், அமைப்பை ஒட்டி மற்றொரு வகையாகவும் வாக்கியங்களைப் பிரிக்கலாம். கருத்தைக் கொண்டு செய்தி (statement) வாக்கியம் என்றும் வினா (interrogation) வாக்கியம் என்றும் விழைவு (desir) என்றும் உணர்ச்சி (exclamation) வாக்கியம் என்றும் பிரிப்பது ஒரு வகை விழைவு வாக்கியமானது வாழ்த்தையோ, கட்டளையையோ, வேண்டுகோளையோ, சபித்தலையோ தெரிவிக்கும்.

1. செய்தி வாக்கியம்

    முயற்சி திருவினையாக்கும்

    மழை பெய்தால் நெல் விளையும்.

2. வினா வாக்கியம்

    இது யாருடைய வீடு?

    நேற்று நீ வந்தாயா?

3. விழைவு வாக்கியம்

    நம் நாடு நீடு வாழி! (வாழ்த்து)

    நாளைக்குப் பாடம் படித்து வா. (கட்டளை)

    எனக்கு இந்நூலைத் தருக. (வேண்டுகோள்) நீ ஒழிக. (சபித்தல்)

4. உணர்ச்சி வாக்கியம்

தமிழ் இறந்தபின் தமிழ்மண் மட்டும் இருந்தென்ன! தலைவ, வருக வருகவே!

## 4.3.5.2 அமைப்பு வகை

அமைப்பை ஒட்டி வாக்கியத்தைத் தனி வாக்கியம் (Simple Sentence) எனவும், தொடர் வாக்கியம் (Compound Sentence) எனவும், கலவை வாக்கியம் (Complex Sentence) எனவும் பிரிப்பது மற்றொரு வகை. தமிழில் தனி வாக்கியமானது சிறு வாக்கிய மாகவும் இருக்கும். பல பக்க அளவிற்கு வரக்கூடிய நெடும் பெருவாக்கியமாகவும் இருக்கலாம்.

வினையெச்சத்தின் உதவி யாலும் உம்மையின் உதவியாலும் இராமாயணக் கதையை ஒரு நெடும் பெருந் தனி வாக்கியமாக எழுதலாம். இக் காலத்தில் நெடும் பெருந் தனி வாக்கியத்தை யாரும் எழுதுவது இல்லை. அப்படி எழுதினாலும் யாரும் அதனைப் படித்துப் புரிந்து கொள்வது கடினமாகும். தமிழில் தொடர் வாக்கியம் என்பது இல்லை என்றாலும், ஆங்கில முறையைத் தழுவிக் கருத்துத் தொடர்பை ஒட்டியும் எழுவாயைத் திரும்பத் திரும்பப் பயன் படுத்துவதைத் தடுக்கும் பொருட்டும் அரைப்புள்ளியின் உதவியால் தொடர் வாக்கியத்தை எழுதுகிறோம். கலவை வாக்கியம் தமிழில் உண்டு. இவ்வாக்கிய வகைகள் பெரிதும் ஆங்கில வாக்கிய இலக்கணத்தை ஒட்டியவை.

### 4.3.5.2.1 தனி வாக்கியம்

ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ ஒரே பயனிலையைப் பெற்று வருவது தனிவாக்கியமாகும்.

இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

இ∴து ஒரே எழுவாய் ஒரே பயனிலையைப் பெற்று வந்த தனி வாக்கியம்.

இளங்கோ சிலப்பதிகாரத்தையும், சாத்தனார் மேகலையையும், திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியையும் இயற்றினார்கள்.

இது பல எழுவாய்கள் ஒரே பயனிலையைப் பெற்று வந்த தனி வாக்கியம். முன்னே குறிப்பிட்டவாறு தனி வாக்கியத்தைச் சிறு வாக்கியமாகவும் நெடும் பெருந்தனி வாக்கியமாகவும் எழுதலாம். ஆனால், வாக்கியம் சிறிதாகவும் அளவாகவும் இருந்தால்தான், கருத்துத் தெளிவும் உணர்ச்சி வேகமும் அமையும். கதைக்கும் நிகழ்ச்சிக் குறிப்புக்கும் சிறு வாக்கியங்களே பொருத்தமானவை.

### 4.3.5.2.2 தொடர் வாக்கியம்

ஒன்றுக்கு மேற்பட்ட வாக்கியங்கள், அதனால், இதனால் என்னும் சுட்டு முதற் காரணக்கிளவிகளாலோ, ஆகையால், ஏனென்றால் என்னும் காரணக்கிளவிகளாலோ, எனினும்,

இருப்பினும் போன்ற சொற்களாலோ இணைந்துவரினும், கருத்துத் தொடர்பால் இணைக்கப்பட்டுவரினும். அவ்வாறு வருவதைத் தொடர் வாக்கியம் எனலாம்.

வேறுவிதமாகக் கூறினால், ஒவ்வொன்றும் தனித்தனியாக இயங்கக் கூடியதாயிருப்பினும், கருத்துத் தொடர்பால் இணைக்கப்பட்டிருப்பின், அதனைத் தொடர்வாக்கியம் என்று சொல்லலாம். ஒரே எழுவாய் பல பயனிலைகளைக் கொண்டு முடிவதும் தொடர் வாக்கியமாகும். பலர்க்குத் தொடர் வாக்கியம் என்பது இப்படியிருக்கும் என்று விளங்காதிருப்பதால் எடுத்துக்காட்டுகள் இங்குத் தரப்பட்டுள்ளன.

1. அக்பர் பேரரசர் மட்டுமல்லர். ஆட்சித் திறமையும் மிக்க பேரறிஞர்.

2. உண்மைத் துறவி விரும்பினால் ஒருவேளை உணவு உண்பார். விரும்பாவிட்டால் சில நாட்கள் உண்ணாமலும் விரதம் இருப்பார்.

3. நான் மதுரைக்குப் போனேன். போனதும், எனக்குக் கடுமையான காய்ச்சல் கண்டதால், உடனே சென்னைக்குத் திரும்பி விட்டேன்.

4. அம்மாணவன் பாடங்களை ஒழுங்காய்ப் படிப்பதில்லை. அதனால்,தேர்வில்வெற்றிபெறவில்லை.

5. வெயில் கடுமையாய் இருந்தது. எனினும், நாங்கள் அந்த வெயிலில் வெளியே சென்றோம்.

6. உன்னிடம் இரண்டு இலக்கண நூல்கள் உள. அவற்றுள் ஒன்றை எனக்குக் கொடு.

7. கதிரவன் தோன்றியது. ஆகையால், பனி மறைந்தது.

8. சீடர்கள் குதிரையைக் கண்டு பிடித்தார்கள். ஆனால், அதைக் கண்டு துயருற்றார்கள். ஏனென்றால், அதன் கால் முடமாகி இருந்தன.

9. கண் களவு கொள்ளும் சிறு நோக்கு, காதலுக்குச் செம்பாக மன்று மிகப் பெரிது.

10. அவன் செய்தது எவருக்கும் நன்மை செய்யாது தீமையே செய்யும்.

11. அரசன் அரியணையில் இருந்தான் அவனோடு அரசியும் இருந்தாள்.

12. காமராசரது நுற்றாண்டை நாடும் மறவாது நற்றமிழரும் மறவார்.

13. தென்னைக்குக் கிளைகள் கிடையா மட்டைகளே உண்டு.

14. பயனிலை வினைமுற்றாக இருக்கலாம். பெயர்ச் சொல்லாக இருக்கலாம். வினாவாகவும் இருக்கலாம்.

15. இவ்வூரில் நன்செய் நிலமும் உண்டு. புன்செய் நிலமும் உண்டு.

16. பொறுமைக் குணம் பெண்களுக்கு மட்டும் வேண்டுவதன்று. ஆண்களுக்கும் வேண்டுவதுமாகும்.

17. இக்குற்றம் கண்டிக்கப்பட வேண்டுவது தண்டிக்கபட வேண்டுவதுமாகும்.

18. நான் வருவேன் என்றேன் வந்துவிட்டேன்.

19. எதையும் செய். ஆனால், நன்றாகச் செய்ய மட்டுமன்று

20. நான் ஒன்றை நினைக்கிறேன். ஆனால், மற்றொன்றைச் செய்கிறேன்.

21. சிறுவன் நாயின்மேல் கல்லெறிந்தான். கல் பட்டிருந்தால் அவனை அது கடித்திருக்கும்.

22. அவன் இன்று வருவான். இல்லாவிட்டால் நாளைக்கு வருவான்.

23. குமரனுக்குப் படிக்க விருப்பமும் இல்லை. வாழ்வில் சிறந்து விளங்க எண்ணமும் இல்லை.

24. என் குழந்தையைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்து என்னிடம் விட்டவனுக்கு நன்றியும் கூறினேன். அன்பளிப்பாக ஐம்பது ரூபாயும் கொடுத்தேன்.

25. அவன் ஓட்டப் பந்தயத்தில் ஓடினால் வெற்றிபெற மாட்டான். தோற்றுப் போவதைக் குறைவாகவும் கருதமாட்டான்.

26. அம்மன்னன் அந்நாட்டின் மீது படையெடுக்கவுமில்லை. அதனைக் கைப்பற்றவிரும்பவுமில்லை.

27. வேகமாக நட. இல்லாவிட்டால் வண்டி வருவதற்குள் இரயில் நிலையத்தைஅடைய முடியாது.

28. கப்பலில் காணாமற் போனவன் கடலில் விழுந்திருக்க வேண்டும். அல்லது எந்தக் கப்பலாவது அவனைக் காப்பாற்றியிருக்க வேண்டும்.

29. நான் வீட்டுக்குப் போய்விட்டேன். ஏனென்றால், எனக்கு வயிற்றுவலி வந்துவிட்டது.

30. நானும் வருகிறேன். நீயும் போ.

31. சமயம் என்பது நன்னடத்தை. வெறும் நம்பிக்கை அன்று.

32. நாங்கள் போராடுவது பொன்னுக்கு அன்று. புகழுக்கும் அன்று. உரிமைக்கே ஆகும்.

33. அன்று நடந்த விளையாட்டு விறுவிறுப்பாய் இருந்தது. நினைப்பூட்டும்படியாய் இருந்தது. எண்ணக் கவர்ச்சி யுடையதாய் இருந்தது.

34. ஒருவன் உண்மையாக அடையவேண்டிய அறம் துறவறம் அன்று. இல்லறமே.

## வாக்கிய வகைகளும் அமைக்கும் முறைகளும்

### 4.3.5.2.3 கலவை வாக்கியம்

கலவை வாக்கியம் என்பது பல வாக்கியங்கள் கலந்து ஒரு வாக்கியமாக அமைவது. இதில் ஒன்று முதன்மை வாக்கியமாக இருக்கும். மற்றது சார்பு வாக்கியமாக இருக்கும். சிலவற்றில் ஒன்று முதன்மை வாக்கியமாகவும் மற்றவை சார்பு வாக்கியங்க ளாகவும் இருக்கும்.

வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது என்றும், சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்றும் அறிஞர் அறிவுரை கூறுவர்.

சேவகன் வந்து கள்வர்கள் பொருள்களைத் திருடிச் சென்றார்கள் என்றும், பிடிப்பதற்குள் அவர்கள் ஓடி விட்டார்கள் என்றும் கூறியதும், நான் அத்திருடர்களைப் பிடிப்பதற்கு விரைந்து வந்து வண்டியில் சென்றேன்.

முதல் வாக்கியத்தில் இருக்கும் ”அறிஞர் அறிவுரை கூறுவர்” என்பது முதன்மை வாக்கியம்' “வாழ்க்கை இன்பமும் துன்பமும் கலந்தது” என்பதும், ”சிக்கல் ஏற்பட்டால் அதைத் தீர்த்து வாழ்க்கையை நடத்த வேண்டும்” என்பதும் சார்பு வாக்கியங்கள்.

இரண்டாவது வாக்கியத்தில் உள்ள “நான் அத்திருடர்களைப் பிடிப்பதற்கு விரைந்து வந்து வண்டியில் சென்றேன்“ என்பது முதன்மை வாக்கியம்' மற்றவை சார்பு வாக்கியங்கள். கலவை வாக்கியங்களில் பலவகை உண்டு.

### 4.3.5.2.4 தொடர் கலவை வாக்கியம்

இப்போது நான்காவது வகை வாக்கியம் ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. “ரீடர்ஸ் டைஜஸ்ட்“ நிறுவனம் வெளியிட்ட 'மிக நன்றாக எழுதுக' மிக நன்றாகப் பேசுக“ ('Write Better| Speak Better') என்னும் ஆங்கிலப் பெருநூல் ஒன்று புதிதாகத் தொடர் கலவை வாக்கியம் ஒன்றைக் குறிப்பிடுகிறது. இத்தகைய வாக்கியம் தமிழிலும் எழுதுவதைக் காண்கிறோம்.

1. திறனாய்வாளர்கள் நன்கு புகழ்ந்திருக்கிறார்கள் என்று கூறுமளவு வெற்றி பெற்றுள்ள பெரும்பாலனவாகிய நவீனங்கள் பொதுமக்களால் புறக்கணிக்கப்படுகின்றன. அவற்றுள் பல திரைப்படமாக்க ஹாலிவுட் நிறுவனத்துக்கு விற்ற உரிமையை மீட்டுக் கொண்டிருப்பினும், விற்பனை வகையில் தோல்வியுற்றிருக்கின்றன.

2. அங்கு வந்தவள் என் தங்கை என்றும், அவளை அங்கிருந்த மாணவன் கேலி செய்தான் என்றும் அறிந்ததும், நான் அந்த மாணவனிடம் சென்று, ”நீ அப்பெண்ணை எப்படிக் கேலி செய்யலாம்? என்று கேட்டு வைதேன். காவற் கூடத்துக்கு அவனை இழுத்துச் சென்று காவலரிடம் ஒப்படைத்தேன்.

3. திருவள்ளுவர் முதல் முதலாக நீதிக்கருத்துகளைக் குறட் பாவில் அமைத்துத் திருக்குறளை இயற்றினார் என்று கருதுவதனால், அவரை அறிஞர்கள் முதற் பாவலர் என்று குறிப்பிடுவது பலரும் அறிந்த செய்தி என்று நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. நீங்களே அறிவீர்கள்.

கலவை வாக்கியங்களிலும் தொடர்வாக்கியம் கலந்து வருவதால் இத்தகைய வாக்கியங்கள் தொடர் கலவை வாக்கியங்கள் எனப்படும்.

### 4.3.6 வாக்கிய அமைப்பில் அறிய வேண்டுவன

1. தமிழ்மொழியில் பயனிலை, எழுவாயுடனும் திணை, பால், எண், இடம் இவற்றுடனும் மாறுபடாமல் இசைந்து வர வேண்டும். இதை ஒரு சிறிதும் தெரிந்து கொள்ளாமல் பலர், நாளிதழ்களிலும் வேறு வெளியீடுகளிலும் அஃறிணை, ஒருமை, பன்மை வினைமுற்றுகளிலே தவறு செய்கின்றனர். கட்டுப் பாடுகள் இனிமேல் கிடையாது என்றும், “அங்கே நூறு அல்லது இருநூறு வீடுகள் இருக்கிறது“ என்றும், “வியப்பும் கவலையும் ஏற்பட்டிருக்கிறது“ என்றும், “இன்று செய்திகள் வராது“ என்றும் பலர் எழுதக் காண்கிறோம். “கட்டுப்பாடு கிடையாது“ என்றாவது, ‘கட்டுப்பாடுகள் கிடையா“ என்றாவது எழுத வேண்டும்’ “அங்கே நூறு அல்லது இருநூறு வீடுகள் இருக்கின்றன“ என்று எழுத வேண்டும். “வியப்பும் கவலையும் ஏற்பட்டிருக்கின்றன“ என்று எழுத வேண்டும். “இன்று செய்திகள் வாரா“ என்று எழுத வேண்டும். இப்பிழைகளை நீக்கக் கீழ்வரும் அடிப்படை இலக்கண விதிகள் மனத்தில் நன்கு அமையுமாறு திரும்பவும் இங்குக் கூறப்படுகின்றன.

து, று என்பவை அஃறிணை ஒருமை வினைமுற்று விகுதிகள். இவற்றை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் என்பர். “வண்டி வந்து சேர்ந்தது“ என்னும் வாக்கியத்தில் “வண்டி“ என்னும் ஒருமை எழுவாய்க்கு ஏற்றவாறு “து“ விகுதி வந்திருப்பது அறிக. “கோழி கூவிற்று“ என்னும் வாக்கியத்தில் ஒருமை எழுவாய்க்குப் பொருந்தும்படி “று“ விகுதி வந்திருப்பது காண்க.

‘அ’ என்பது பலவின்பால் வினைமுற்று விகுதி. “இந்த வண்டிகள் இரண்டும் வந்து சேர்ந்தன“, “கோழிகள் கூவின’. -வாக்கியங்களிலும் பன்மை எழுவாய்களுக்கு இசையுமாறு “அ“ வினைமுற்று விகுதியாக இருக்கக் காண்க. இந்த “அ“ விகுதி உடன்பாட்டில் அஃதாவது ஒப்புக் கொள்வதில் வந்துள்ளது.

“வண்டிகள் வந்து சேரா“, “கோழிகள் கூவா“. -இந்த வாக்கியங்களில் எதிர்மறையில் அஃதாவது எதிர் மறுத்துக் கூறுவதிற் பன்மை எழுவாய்க்கு “ஆ“ வினைமுற்று விகுதியாக வந்திருக்கக் காணலாம். இந்த “ஆ“ விகுதி பலவின்பால் எதிர்மறை வினைமுற்று விகுதியாகும்.

| ஒன்றன்பால் உடன்பாடு | பலவின்பால் உடன்பாடு |
|---|---|
| 1. போர் நாட்டைப் பாழாக்குகிறது. | 1.போர்கள் நாட்டைப் பாழாக்குகின்றன. |
| 2.கட்சிச் சண்டை பிளவை உண்டாக்குகிறது. | 2. கட்சிச் சண்டைகள் பிளவைஉண்டாக்குகின்றன. |
| **ஒன்றன்பால் எதிர்மறை** | **பலவின்பால் எதிர்மறை** |
| 1. செய்தி வாராது. | 1. செய்திகள் வாரா. |
| 2. விடுமுறை இராது. | 2. விடுமுறைகள் இரா. |

இச் சிறிய இலக்கண அறிவால் இத்தகைய தவறுகளை எளிதாக நீக்கிவிடலாம். இதற்காக நன்னூலும் படிக்க வேண்டுவதில்லை. தொல்காப்பியமும் கற்க வேண்டுவதில்லை.

2. பிரதமா் தன் தாய் நாட்டின் மதிப்பை உலகில் உயர்த்தி வந்தார். இவ்வாக்கியத்தில் “தன்“ என்றிருப்பது தவறு’ “தம்“ என்றிருக்க வேண்டும். அவர் தன் வீட்டுக்குப் போனார் என்று எழுதாமல் தம் வீட்டுக்குப் போனார் என்று எழுதுக. மரியாதைப் பன்மையாக இருப்பதால் தம் என்றே எழுதுவதுதான் சரியானது. மரியாதைப் பன்மை வினைமுற்றை ஏற்றுவரும் எழுவாய் பலர்பாலில் இருந்தால், அதனுடைய பிரதிப்பெயரும் (Pronoun) பலர்பாலில் இருக்க வேண்டும்.

“ஔவையார் நல்வழி இயற்றினார்“ என்னும் வாக்கியத்தில் “இயற்றினார்“ என்று வினைமுற்று வருவதால், ஔவையார் “ஆணோ பெண்ணோ“ என்னும் ஐயம் பலர்க்கு எழுவதுண்டு. ஔவையார் பெண். பெண்பாலுக்கு “ஆர்“ விகுதி மரியாதைக்காக வரும். இதனை இலக்கணத்தில் “பால் வழு அமைதி“ என்பர். மரியாதைக்காக அல்லது உயர்வுக்காக “ஆர்“ விகுதி சேர்க்கும்போது வினைமுற்றும் பலர்பால் வினைமுற்றாகவே இருக்க வேண்டும். ஔவையார் தம் நூலில் கூறினார் என்றுதான் எழுத வேண்டும். ஔவையார் தன் நூலில் கூறினார் என்று எழுதுவது தவறு. மரியாதைப் பன்மைக்கும் பிரதிப்பெயர் பலர்பாலிலே இருக்க வேண்டும் என்றறிக. திருமதி ஜோதியம்மாள் கூறினாள் என்று எழுதுவது இலக்கண முறைப்படி தவறாக இல்லாதிருப்பினும், மரியாதைக் குறைவாகும். “கூறினார்“ என்று எழுதுவது தமிழ் மரபு.

3. என் நண்பர் கூறினார். பலர் கூறினர்.

இவ்வாக்கியங்களை நுட்பமாகக் கவனித்தால், மரியாதைப் பன்மை வினைமுற்றில் “ஆர்“ விகுதி வருதலும், பலர் பால் வினைமுற்றில் ‘அர்“ விகுதி வருதலும் தெரிந்து கொள்ளலாம்.‘என் தாயார் கூறினர்“ என்று எழுதுதல் நன்றன்று’ ‘என் தாயார் கூறினார்“ என்றே எழுதுவது நன்று.

“அவர்கள் கூறினார்“ என்று எழுதக் கூடாது’ “அவர்கள் கூறினார்கள்“ என்று எழுதுவதே சிறப்பாகும். ‘அடிகள் பேசினார்கள்“ என்று எழுதுவதே நல்லது.

4. யார் என்னும் வினா உயர்திணையிலுள்ள மூன்று பால்களுக்கும் வரும்.

அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

எது, யாது என்னும் வினாக்கள் அ∴றிணை ஒருமைக்கும்

எவை, யாவை, யா என்னும் வினாக்கள் அ∴றிணைப் பன்மைக்கும் வரும்.

எது, யாது இவை அ∴றிணை ஒருமை வினாக்கள்.

எவை, யாவை, யா இவை அ∴றிணைப் பன்மை வினாக்கள்.

இங்கு வந்தது எது? கூறியது யாது? இங்கு வந்தவை எவை? கூறியவை யாவை?

"யா காவாராயினும் நாகாக்க". (யா-எவற்றை)

5. "அல்லது" வரும்போது ஒருமை எழுவாய் இருந்தால் ஒருமை வினை முற்றும்,

பன்மை எழுவாய் இருந்தால் பன்மை வினைமுற்றும் வரும்.

நாய் அல்லது பூனை கூரை மேல் ஓடுகிறதா?

நாய்கள் அல்லது பூனைகள் கூரைமேல் ஓடுகின்றனவா?

6. "ஒவ்வொரு" என்னும் தொடர் ஒருமை வினைமுற்றைக்கொள்ளும். ஒவ்வொரு நிகழ்ச்சியும் அரசினர்க்குத் தெரிவிக்கப்படுகிறது. ஒவ்வொன்றும் நாள்தோறும் உடைகிறது. ஒவ்வொன்றும் தன் தன் இடத்தை அடைந்தது.

7. "ஒவ்வொருவர்" என்னும் தொடர், பன்மை வினைமுற்றைக் கொள்ளும். ஒவ்வொருவரும் திருக்குறள் படிக்கின்றனர். ஒவ்வொருவரும் தம் தம் வீடு சேர்ந்தனர்.

செல்வன், முருகன், கண்ணன். - ஒவ்வொருவரும் நன்கு விளையாடுகின்றனர்.

8. ஐயத்தைக் காட்டும் ஓகாரம் வரும்போதும் பிரிக்கும் பொருளில் வரும் 'ஆவது' என்னும் சொல்லின் பின்னும் 'அல்லது" என்னும் சொல் வருதல் கூடாது.

வினைமுற்று ஒருமையாகவே இருக்கும்.

"துறவிக்கு விருப்போ அல்லது வெறுப்போ கிடையாது என்பது தவறு.

"துறவிக்கு விருப்போ வெறுப்போ கிடையாது" என்றே இருக்க வேண்டும்.

"நாயாவது அல்லது நரியாவது இதைத் தின்றிருக்கும்" என்பது பிழை.

"நாயாவது நரியாவது இதைத் தின்றிருக்கும்" என்று எழுத வேண்டும்.

ஆவது என்பது பெரும்பாலும் எதிர்காலத்தைக் குறிக்கவே வரும்.

இந்த மாதக் கடைசியிலாவது அடுத்த மாத முதல் வாரத்திலாவது வா.

அவனாவது இவனாவது இவ்வேலையைச் செய்தல் வேண்டும்.

9. “எப்படி“, “எவ்வாறு“, “எங்ஙனம்“, “எவ்வளவு“, “எது“ என்று வாக்கியம் தொடங்குமானால் சமநிலை வருவதற்கு “அப்படி“, “அவ்வாறு“, “அங்ஙனம்“, “அவ்வளவு“, ‘அது’ என்றே வரவேண்டும்.

திருவள்ளுவர் திருக்குறளில் இப்படிப் பாடியிருத்தலைக்காணலாம்.

”எவ்வ துறைவ துலகம் உலகத்தோ(டு)

அவ்வ துறைவ தறிவு”.

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு”.

ஒருவர் எங்ஙனம் பேசுகிறாரோ அங்ஙனம் நடந்து காட்ட வேண்டும். “எப்படி“ என்று தொடங்கி ‘அவ்வாறு“ என்று எழுதுவதைப் பல்லாயிரக்கணக்காகப் பார்க்கலாம். இத்தவறு ஒழியவேண்டும்.

10. ஒரு நாய், ஓர் அணா என்று எழுதுதல் இன்னோசை பயக்கும். வருமொழி உயிர்மெய்யெழுத்தில் தொடங்கினால் ஒரு என்னுஞ் சொல்லையும், வருமொழி உயிரெழுத்தில் தொடங்கினால் ஓர் என்னுஞ் சொல்லையும் பயன் படுத்துக. செய்யுளில் யாப்பிலக்கணம் கருதி இவ்விதி மாறுபட்டும் வரும். இவ்விதியையே இருமடங்கு ஈருடல் என்பவற்றிற்கும் கொள்க. தொல்காப்பியர் இவ்விதியை “முதலீரெண்ணின் முன்” என்னும் எழுத்ததிகார 455வது நூற்பாவில் கூறுகிறார் என்றறிக.

11. அது போயிற்று. அ∴து இல்லை. இவ்வெடுத்துக்காட்டுகளைக் காண்க. வருமொழி உயிர்மெய்யில் தொடங்கினால் அது, இது, எது என்னும் சொற்களையும், வருமொழி உயிரெழுத்தில் தொடங்கினால் அ∴து, இ∴து, எ∴து என்னும் சொற்களையும் பயன்படுத்தி எழுதுக.

இது குறித்துத் தொல்காப்பியத்தில் காணப்படும் விதிகள் இவை:

”முன்னுயிர் வருமிடத்து ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும் அல்வழி யான”

தொல்காப்பியம் - எழுத்து - 424

“ஏனைமுன் வரினே தான்நிலை யின்றே” தொல்காப்பியம் - எழுத்து - 425

ஆனால், இக்காலத்தில் இவ்விதியை எளிமைக்காகப் பலர் மேற்கொள்வதில்லை.

12. ரூபாய், பைசா, பவுன், ராத்தல், டன் முதலியவை பன்மையில் வந்தாலும் ஒருமை வினையே கொள்வது மரபு.

என்னிடம் ஆயிரம் ரூபாய் இருக்கிறது.

அவரிடம் நூறு டன் புளி உளது.

போருக்கு எட்டரைக் கோடி பவுன் பிடித்தது.

13. உடம்பு எல்லாம் நொந்தன.

பொருள் எல்லாம் அழிந்தன. இவ்வாக்கியங்கள் தவறானவை.

உடம்பு எல்லாம் நொந்தது என்றும்,

பொருள் எல்லாம் அழிந்தது என்றும் எழுதுக.

இங்கே எல்லாம் என்னுஞ் சொல்லானது முழுதும் என்னும் பொருளில் வந்துள்ளது. சேனாவரையர் 'மேனி எல்லாம் பசலை யாயிற்று என ஒரு பொருளின் பல்லிடம் குறித்து நிற்றலுடைத்து எல்லாம் என்பது கோடற்கு என்று கூறி யிருப்பதால், இப்பொருளும் உண்டென்பது புலனாகும். பொருள்கள் எல்லாம் அழிந்தன. இங்கு எல்லாம் என்னும் சொல் பன்மைப் பொருளைத் தருகிறது.

14. இவனுக்குக் கண்ணன் என்று பெயர். இது தவறு. இவனுக்குக் கண்ணன் என்பது பெயர் என்றிருக்க வேண்டும். இவனுக்குக் கண்ணன் என்று பெயர் கூறுவர் என்றாவது வாக்கியம் அமைய வேண்டும்.

15. முக்காலங்களுக்கும் உரிய இயற்கையை நிகழ்காலத்தால் கூறுவது. முக்காலத்துக்கும் உள்ளதாகிய இயல்புடைய எல்லாப் பொருளையும் இறந்தகாலச் சொல்லாலும் எதிர்காலச் சொல்லாலும் சொல்லாது, இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் தன்னுள் அகப்படுத்தி மூன்று காலங்களுக்கும் பொதுவாய் நிற்கும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைச் சொல்லால் சொல்ல வேண்டும் என்று சொல்லதிகாரத்துக்கு உரை எழுதிய சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறுகின்றனர். அவர்கள் காட்டும் எடுத்துக்காட்டுகள் கீழ்வருபவை.

மலை நிற்கும்.

தீச்சுடும்.

திங்கள் இயங்கும்.

தீச்சுடும் என்றால் பண்டும் இன்றும் மேலும் சுடும் என்பதனை விளக்கியவாறு என்று நச்சினார்க்கினியர் கூறுவதோடு, இது நிகழ்காலச் சொல்லோடு ஒவ்வாமையை உணர்த்தும் என்று கூறுகிறார். சேனாவரையர் செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல் நிகழ்காலச் சொல்லாயினும் ஒருவாறு பொதுச் சொல்லேயாகும் என்று குறிப்பிடுகிறார். நன்னூல் ஆசிரியர் முக்காலத்தினும் ஒத்து இயல்பொருளை நிகழ்காலத்தில் கூறுவர் என்கிறார். நன்னூல் உரையாசிரியர்களுள் ஒருவராகிய இலக்கண அறிஞர் இராமானுசக் கவிராயர், "தீச்சுடும், மலை நிற்கும்" என்று எழுதுவதோடு மலை நிற்கிறது, நிலம் கிடக்கிறது என்றும் கூறலாம்

என்னுங் கருத்தைத் தெரிவிக்கிறார். நன்னூலுக்கு உரை இயற்றிய ஆறுமுக நாவலரும் சடகோப இராமானுஜ ஆச்சாரியாரும் "முக்காலங்களிலும் ஒரு தன்மையாய் நடக்கின்ற பொருள்களை நிகழ்காலத்தினால் சொல்ல வேண்டும்" என்றே பொருள் கண்டு, "மலை நிற்கிறது. தெய்வம் இருக்கின்றது" என்றே என்றே எடுத்துக்காட்டுகள் 18 தந்திருக்கிறார்கள்.

சொல்லதிகாரத்திற்குத் தெளிவுரை இயற்றிய மகாகவி அ.கு. ஆதித்தர், "கிறு என்னும் நிகழ்கால இடைநிலையைப் பயன்படுத்தி நிகழ்கால வினைமுற்றால் முக்காலத்துக்கு ஒத்தியல் பொருளைக் கூறுவதே முறையானது" என்று உதாரணங்களைக் காட்டுகிறார். அவை வருமாறு:

மக்கள் பிறக்கிறார்கள். இறக்கிறார்கள்.

பூமி சுழல்கிறது.

சர்க்கரை இனிக்கிறது.

முக்காலத்துக்கு ஒத்தியல் பொருளை நிகழ்காலத்தால் கூறுவது பொருத்தமாகும். ஆங்கில இலக்கணமும் இக்கருத்தை ஆதரிக்கிறது. The sun rises in the east.

சொல்லும்போது வாக்கியத்திலுள்ள சொற்களைக் கேட்போர்க்குப் பொருள் உணருமாறு சேர்த்துக் கூறுதலை அண்மைநிலை என்பர். இது வாக்கியத்தைச் சொல்லும் போது கவனிப்பதற்குரியதாகும்.

### 4.3.7 வாக்கிய உறுப்புகள்

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவை வாக்கியதில் இடம்பெறும். நாய் ஓடியது - இவ்வாக்கியத்தில் இரு சொற்கள் இருக்கின்றன. அவற்றில் "நாய்" என்பது பெயர்ச் சொல். "ஓடியது" என்பது வினைச்சொல். ஒரு வாக்கியத்தில் பெரும்பாலும் வினைச்சொல்லே பயனிலையாக வரும். அப்பயனிலையோடு "யார்" அல்லது எது" என்ற சொற்களில் ஒன்றைச் சேர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். "எது ஓடியது?" என்று கேட்டால், அக் கேள்விக்கு "நாய்" என்று பதில் வருகிறது. "நாய்" என்பதே எழுவாயாம். சொல்லே வரும். பெரும்பாலும் பயனிலையாய் பயனிலையோடு எது அல்லது யார் என்ற சொற்களில் பொருத்தமானதைக் கொண்டு கேள்வி கேட்டால் அதற்கு வரும் விடையே எழுவாய்

குறிப்பு: எழுவாய் இல்லாத வாக்கியமே

கண்ணன் கண்டான் - இவ் வாக்கியத்திலும் இரண்டு சொற்கள் இருக்கின்றன. கண்ணன் என்பது பெயர்ச்சொல். அவன் செய்யும் தொழில். ஆகவே கண்டான் என்பது பயனிலை. தொழிலைக் காட்டுஞ் சொல்லே பயனிலை. பயனிலை இல்லையென்றால் அதுவே சில சமயங்களில் எழுவாய் மறைந்து வருவதுண்டு. அதுபோல பயனிலை வராது. ஆகவே பயனிலையே ஒரு வாக்கியத்தின் முக்கிய உறுப்பாம்.

### 4.3.7.1 எழுவாய்

பயனிலையோடு திணை, பால், எண், இட, உறவு கொண்டுள்ள பெயர்ச் சொற்களையே எழுவாய் என்போம். வாக்கியங்களில் எழுவாய்ப் பெயர்கள் திணை, பால், எண், இடம் என்பனவற்றின் அடிப்படையில் பயனிலையோடு உறவு கொண்டிருப்பதைக் காணலாம்.

நான் வந்தேன்

நீ வந்தாய்

கண்ணன் வந்தான்

அப்பா வந்தார்

கடிதம் வந்தது

நாங்கள் வந்தோம்

மேல் உள்ள உதாரணங்களில் வினைமுற்று வடிவங்கள் எழுவாய்ப் பெயரின் திணை, பால், எண், இடம் என்பவற்றுக்கு ஏற்ப வெவ்வேறு விகுதிகளைப் பெற்றுவந்துள்ளன. இந்த விகுதிகளோடு இயைபு கொள்ளும் பெயர்ச் சொற்களை எழுவாய் என இனம் காண முடியும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாயை அறிவதற்கு வேறு ஒரு வழியும் உண்டு. தான் என்னும் தற்சுட்டுப் பெயர் ஒரு வாக்கியத்தில் எப்போதும் எழுவாய்ப் பெயரையே சுட்டி நிற்கும். பின்வரும் வாக்கியங்களை உதாரணமாகத் தரலாம்:

கண்ணன் தன்னுடைய வீட்டுக்குச் சென்றான்.

அவர் எப்போதும் தன்னைப் பற்றியே பேசுகிறார்..

தானும் எங்களுடன் வருவதாக அப்பா சொன்னார்.

மேல் உள்ள வாக்கியங்களில் தான் எழுவாய்ப் பெயர்களையே நிற்கக்காணலாம். முதல் வாக்கியத்தில் தான் எழுவாய்ப் பெயரான கண் சுட்டுகின்றது. இரண்டாவது வாக்கியத்தில் தான் எழுவாய்ப் பெயரான சுட்டுகின்றது. மூன்றாவது வாக்கியத்தில் தான் எழுவாய்ப் பெயரான அப்பாவை சுட்டுகின்றது.

எழுவாய்ப் பெயர் வாக்கியத்தில் தனக்கு அண்மையில் இருந்தாலும் தொலைவில் இருந்தாலும் தான் எப்போதும் எழுவாய்ப் பெயரையே கூட்டி நிற்கக் காணலாம். அவ்வகையில் ஒரு வாக்கியத்தில் தான் என்னும் படர்க்கைத் தற்சுட்டுப் பெயரால் பிரதியீடு செய்யப்படும் பெயர்களை எழுவாயாகக் கொள்ள முடியும்.

#### 4.3.7.1.1 வெளிப்படை எழுவாய்

கண்ணன் வந்தான் என்ற வாக்கியத்தில் கண்ணன் எழுவாய், வந்தான் பயனிலை என்று சொல்கிறோம். கண்ணன் என்ற பெயர் வந்தான் என்ற வினையுடன் திணை, பால், எண், இட இயைபு கொண்டுள்ளதனால் கண்ணன் என்பதே எழுவாய் என்று எளிதாகச் சொல்லிவிட முடிகின்றது. இதனை வெளிப்படை எழுவாய் எனலாம்.

#### 4.3.7.1.2 தோன்றா எழுவாய்

எங்கிருந்து வருகிறீர்கள் என்ற வாக்கியத்தில் வெளிப்படையாக எழுவாயைக் காணவில்லை. எனினும் வருகிறீர்கள் என்ற வினையில் உள்ள ஈர்கள் என்னும் முன்னிலைப் பன்மை விகுதி மூலம் இவ்வாக்கியத்தின் எழுவாய் நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் என்பதை அறிந்துகொள்கின்றோம். இவ்வாக்கியத்தில் நீங்கள் என்னும் எழுவாய்ப் பெயர் மறைந்து இருக்கிறது என்பது தெரிகின்றது. இவ்வாறு எளிதில் யூகித்து உணரக்கூடிய, எனினும் வாக்கியத்தில் வெளிப்படையாக இடம் பெறாத எழுவாயைத் தோன்றா எழுவாய் என்று கூறுவர்.

கண்ணனைக் காணவில்லை

எனது பேனாவைக் காணவில்லை

ஆகிய வாக்கியங்களில் எழுவாய் எது? இவ்வாக்கியங்களில் உள்ள கண்ணனை, பேனாவை ஆகிய ஐ உருபு பெற்ற பெயர்கள் செயப்படு பொருள் என்படை அறியலாம். எழுவாய்ப் பெயர் என்று சொல்லக் கூடிய பெயர் எதுவும் இவ்வாக்கியங்களில் இல்லை. தோன்றா எழுவாய் என்று எதையாவது கூறமுடியுமா? நாணவில்லை என்ற எதிர்மறை வினையில் திணை, பால் விகுதி எதுவும் இல்லை.

### 4.3.7.2 பயனிலை

இணைப்பும் எழுவாய் பயனிலை இயைபும் இரண்டு அல்லது பல வாக்கியங்களின் எழுவாய்த் தொடர்கள் இணைக்கப்படும்போது அதற்கேற்ப பயனிலையும் மாற்றமடையும்.

1. உயர்திணைப் படர்க்கைப் பெயர்கள் இணைக்கப்படும்போது வினைமுற்று பலர்பால் விகுதி பெற்று அமையும்.

உம்: கண்ணன் வந்தான் + கமால் வந்தான் → கண்ணனும் கமாலும் வந்தார்கள்

2.அஃறிணைப் படர்க்கைப் பெயர்கள் இணைக்கப்படும்போது வினைமுற்று பலவின்பால் விகுதிபெற்று அமையும்.

உம்: நாய் வந்தது + மாடு வந்தது

தாயும் மாடும் வந்தன

3.ஆண்பால் பெயரும் பெண்பால் பெயரும் இணைக்கப்படும்போது பலர்பால் விகுதிபெற்று அமையும்.

உம் : தம்பி வந்தான் + தங்கை வந்தாள் தம்பியும் தங்கையும் வந்தார்கள்.

### 4.3.7.3 செயப்படுபொருள்

நான் சென்றேன் - இவ் வாக்கியத்தில் பயனிலை "சென்றேன்" என்பதாகும். அதனுடன் எதை என்று கேள். அதற்குப் பதில் இல்லை. அவன் சோற்றைத் தின்றான் - இவ்வாக்கியத்தில் தின்றான்" என்பது பயனிலையாகும். அதனுடன் எதை என்று கேள்வி கேள். "எதைத் தின்றான்?" அதற்குப் பதில் வருகிறதா? ஆம். "சோற்றை" என்பதே பதில் ஆகும். அதுவே செயப்படு பொருளாம். சோற்றைத் தின்றதே கருத்தாவால் செய்யப்பட்டதாம்.

பயனிலையோடு, எதை அல்லது என்றவைகளில் பொருத்தமான தொன்றை சேர்த்துக் கேள்வி கேட்க வேண்டும். வரும் விடையே செயப்படு பொருளாகும்.

எழுவாயும் பயனிலையும் ஒரு வாக்கியத்தின் முக்கிய உறுப்புக்களாம். அவைகள் இல்லாது வாக்கியம் அமைவது இல்லை. அவற்றுள்ளும் பயனிலையே மிக முக்கியமாம். ஏனென்றால் சில சமயங்களில் எழுவாய் மறைந்து வருதல் உண்டு. வாக்கியங்களில் செயப்படுபொருள் இருக்கும். எல்லா வாக்கியங்களிலும் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை.

இரண்டு அல்லது பல வாக்கியங்களின் எழுவாய்த் தொடர்கள் இணைக்கப்படும்போது அதற்கேற்ப பயனிலையும் மாற்றமடையும்.

செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்கள் வினைப் பயனிலை கொண்ட வாக்கியங்களை செயப்படுபொருள் குன்றிய வாக்கியங்கள், செயப்படுபொருள் குன்றா வாக்கியங்கள் என இரு வகைப்படுத்தலாம்.

செயப்படுபொருள் குன்றிய வினைகளைப் பயனிலையாகக் கொண்ட வாக்கியங்கள் செயப்படு பொருள் குன்றிய வாக்கியங்களாகும். இவ்வாக்கியங்களில் செயப்படு பொருள் என ஒன்று இராது.

செயப்படுபொருள் குன்றிய வாக்கியத்தில் குறைந்தபட்சம் ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் இருக்கும். உதாரணம் : நான் போனேன், அவள் சிரித்தாள் இவை இரண்டும் கட்டாயமானவை எனலாம். இவற்றில் நான், அவள் ஆகிய எழுவாய்ப் பெயர்கள் மறைந்து வந்தாலும் பயனிலையில் உள்ள விகுதிகள் மூலம் அவற்றை நாம் கண்டு கொள்ளலாம்.

இத்தகைய வாக்கியங்களில் எழுவாய்ப் பெயரைத் தவிர வேறு பல பெயர்த் தொடர்களும் வரலாம். அவை வினை நிகழ்வின் வெவ்வேறு அம்சங்களை உணர்த்துவதாக அமையும். உதாரணம் :- நான் கொழும்புக்குப் போனேன். இங்கு கொழும்புக்கு என்ற பெயர்த்தொடர் போன இடத்தை உணர்த்தப் பயன்படுகின்றது.

செயப்படுபொருள் குன்றா வாக்கியங்களில் குறைந்த பட்சம் இரண்டு பெயர்த்தொடர்களும் ஒரு பயனிலையும் இருக்கும். பெயர்த்தொடருள் ஒன்று எழுவாயாகவும் மற்றது செயப்படுபொருளாகவும் அமையும், உதாரணமாக :-நான் கண்ணனைப் பார்த்தேன், தம்பி கடிதம் எழுதுகிறான்

முதல் வாக்கியத்தில் நான், கண்ணன் ஆகிய இரண்டு பெயர்த் தொடர்கள் உள்ளன. அவற்றுள் நான் எழுவாய், கண்ணன் செயப்படு பொருள். அதுபோல இரண்டாவது வாக்கியத்தில் தம்பி, கடிதம் ஆகிய இரண்டு பெயர்த் தொடர்கள் உள்ளன. அவற்றுள் தம்பி எழுவாய்˙ கடிதம் செயப்படுபொருள். இவ்வாக்கியங்களில் மேலும் பல பெயர்த் தொடர்களும் இடம் பெறலாம். அவை வினை நிகழ்வுபற்றிய வேறு பல தகவல்களைத் தருவனவாக அமையும். உதாரணமாக : தம்பி அப்பாவுக்குக் கடிதம் எழுதுகிறான் என்ற வாக்கியத்தில் அப்பாவுக்கு என்னும் பெயர்தொடர் கடிதம் யாருக்கு எழுதப்படுகின்றது என்பதை உணர்த்தப் பயன்படுகின்றது. தம்பி புதிய பேனாவால் அப்பாவுக்குக் கடிதம் எழுதுகிறான். இவ் வாக்கியத்தில் புதிய பேனாவால் என்னும் பெயர்த்தொடர் எழுதுவதற்கு பயன்படுத்தும் கருவியை உணர்த்தப் பயன்படுகின்றது

## 4.4 தனிவாக்கியம்

தனிவாக்கியம் ஒரு வாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியம் தனிவாக்கியமாகும் என முன்னர் பார்த்தோம். நான் வந்தேன் அவன் வீட்டுக்குப் போனான் கண்ணன் புத்தகத்தை என்னிடம் தந்தான் இதுதான் எங்கள் வீடு கமலா கண்ணனுடன் பேசினாள் நான் ஒரு மாணவன் போன்றவற்றைத் தனிவாக்கியம் எனலாம். இவை ஒரு எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டுள்ளன. நானும் கண்ணனும் போனோம் இதனை நான் போனேன், கண்ணன் போனான் ஆகிய இரண்டு வாக்கியங்களின் இணைப்பாகக் கொள்ளலாம்.

நானும் கமாலும் நண்பர்கள். இது கூட்டு வாக்கியமா ?

நான் நண்பன், கமால் நண்பன் ஆகிய வாக்கியங்களின் இணைப்பாக இதனைக் கொள்ள முடியாது. ஏனெனில், இத்தகைய வாக்கியங்கள் பயன்பாட்டில் இல்லை. ஆகவே, நானும் கமாலும் நண்பர்கள் என்பதைத் தனிவாக்கியமாகவே கொள்ளவேண்டும். இதுபற்றி வாக்கிய இணைப்பு என்ற பகுதியில் விரிவாக விளக்கப்படும்.

### 4.4.1 தனிவாக்கிய அமைப்பு

தனிவாக்கியங்கள் இரண்டு வகையான அமைப்பைக் கொண்டுள்ளன.

1. பெயர்த் தொடர் + பெயர்த் தொடர் அமைப்பு
2. பெயர்த் தொடர் + வினைத் தொடர் அமைப்பு

பெ. தொ. + பெ. தொ. அமைப்புடைய வாக்கியங்களை பெயர் கொண்ட வாக்கியங்கள் எனலாம். பெ. தொ. + வி. தொ. அமையும் வாக்கியங்களை வினைப் பயனிலை கொண்ட வாக்கியங்கள் எனலாம்.

### 4.4.2 தொடர் வாக்கியம்

இரண்டு அல்லது பல சமநிலைத் தொடர்கள் இணைந்து கூட்டு வாக்கியங்கள் ஆகின்றன எனப் பார்த்தோம். இரண்டு சமநிலைத் தொடர்களை இணைத்து கூட்டு வாக்கியங்களை ஆக்குவதற்குச் சில இணைப்பிடைச் சொற்களும் வினை எச்சங்களும் பயன்படுகின்றன. தமிழில் வாக்கிய இணைப்புக்குப் பயன்படும்.

### 4.4.3 கலவை வாக்கியம்

அவன் கணிதமும் விஞ்ஞானமும் படிக்கிறான் இவ்வாக்கியத்தை அவன் கணிதம் படிக்கிறான் அவன் விஞ்ஞானம் படிக்கிறான் ஆகிய இரண்டு வாக்கியங்களின் இணைப்பாகக் கொள்ளலாம். அவ்வகையில் நானும் கண்ணனும் போனோம், அவன் கணிதமும் விஞ்ஞானமும் படிக்கிறான் ஆகியவற்றைக் கூட்டுவாக்கியம் (கலவை வாக்கியம்) எனலாம்.

#### 4.4.3.1 கலவை வாக்கியம் அமைப்பு

ஒரு தலைமை வாக்கியத் தொடரும் ஒன்று அல்லது பல சார்பு நிலைத் தொடர்களும் கொண்ட வாக்கியம் கலப்பு வாக்கியம் எனப் பார்த்தோம். உதாரணமாக அப்பா நாளைக்கு வருவார் என்று தம்பி சொன்னான் என்ற வாக்கியத்தில் தம்பி சொன்னான் என்பது தலைமை வாக்கியத் தொடராகும். அப்பா நாளைக்கு வருவார் என்பது சார்பு நிலைத் தொடராகும். இச்சார்பு நிலைத் தொடர் என்று என்னும் இணைப்பானால் தலைமை வாக்கியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தம்பி சொன்ன செய்தி என்ன என்பதை இச்சார்பு நிலைத் தொடர் விளக்குகின்றது. மேல் உள்ள உதாரணத்தில் சார்பு நிலைத்தொடர் முற்றுவாக்கியமாக இருப்பதைக் காணலாம்.

பின்வரும் வாக்கியத்தில் வரும் சார்பு நிலைத் தொடர் எச்சத் தொடராகும். அம்மா குழந்தைக்குப் பால் வாங்க கடைக்குப் போனார். இவ்வாக்கியத்தில் அம்மா கடைக்குப் போனார் என்பது தலைமை வாக்கியத் தொடராகும். குழந்தைக்குப் பால் வாங்க என்பது

சார்புநிலைத் தொடராகும். இது செய்ய என்னும் வாய்ப்பாட்டு எச்சத் தொடராக அமைந்துள்ளது. இவ்வெச்சத் தொடர் தலைமை வாக்கியத்துக்குள் செருகப்பட்டுள்ளது. அம்மா கடைக்குப் போனதற்கான காரணத்தை அது தருகின்றது.

நான் கண்ணன் வந்ததைக் கண்டேன். இவ்வாக்கியத்தில் நான் கண்டேன் என்பது தலைமை வாக்கியத் தொடராகும். கண்ணன் வந்தான் என்னும் சார்பு நிலைத் தொடர் கண்ணன் வந்தது என பெயர்த் தொடராக்கப்பட்டு தலைமை வாக்கியத்துக்குள் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, ஒரு கலப்பு வாக்கியத்துள் அமையும் சார்பு நிலைத் தொடர்கள் (1) எச்ச வாக்கியத் தொடர்களாக (2) முற்று வாக்கியத் தொடர்களாக (3) பெயர்த் தொடராக்கப்பட்ட முற்று வாக்கியத் தொடர்களாக இருக்கலாம்.

## 4.5 செய்வினை செயப்பாட்டுவினை

செய்வினையானது (Active verb) ஒரு பொருளின் தொழிலை உணர்த்தும் வினைச்சொல்லாகும்.

இராமன் இராவணனைக் கொன்றான்.

செயப்படுபொருளுக்கு முதன்மை தரும் வினையே செயப்பாட்டு வினை (passive verb) ஆகும். செயப்பாட்டுவினையில் ‘படு’ அல்லது ‘உண்’ என்னும் துணைவினை சேர்ந்து வரும்.

இராமனால் இராவணன் கொல்லப்பட்டான்.

இராமனால் இராவணன் கொலையுண்டான்.

எழுவாய்க்கும், வினைக்கும் இடையே உள்ள உறவின் அடிப்படையில் வினைச் சொற்களை செய்வினை, செயப்பாட்டுவினை என இரு வகைப்படுத்தலாம்.

### 4.5.1 செய்வினை

செய்வினை எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகளை பொதுவாக செய்வினை எனலாம்.

நான் கண்ணனைப் பார்த்தேன் குழந்தை பால் குடித்தது தம்பி கதவை மூடினான் யானை பாகனைக் கொன்றது.

மேல் உள்ள வாக்கியங்களில் பார்த்தேன், மூடினான், குடித்தது, கொன்றது ஆகிய வினைகள் உள்ளன. இவை முறையே நான், தம்பி, குழந்தை, யானை ஆகியவற்றை எழுவாயாகக் கொண்டுள்ளன. இங்கு எழுவாயே வினையின் கருத்தாவாகவும் உள்ளது.

அதாவது, பார்த்தவன் நான், மூடினவன் தம்பி, குடித்தது குழந்தை, கொன்றது யானை. இவ்வாறு, எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகள் செய்வினைகளாகும். கருத்தாவே செய்யும் வினை ஆகையால் செய்வினை எனலாம். செய்வினைகள் வினையடி + கால இடைநிலை + திணைபால் எண் இட விகுதி என்ற தெரிநிலை வினைமுற்று அமைப்புடையன.

### 4.5.2 செயப்பாட்டு வினை

செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினை செயப்பாட்டுவினை எனலாம். செயப்படுபொருள் குன்றாவினைகளே செயப்பாட்டு வினைகள அமையும். உதாரணமாக : யானை பாகனைக் கொன்றது என்ற வாக்கியத்தில் யானை எழுவாய், பாகன் செயப்படு பொருள் கொன்றது செய்வினை. பின்வரும் உதாரணத்தைப் பார்ப்போம். பாகன் யானையால் கொல்லப்பட்டான்

முதல் வாக்கியத்தில் செயப்படு பொருளாக இருந்த பாகன் இந்த வாக்கியத்தில் எழுவாய். முதல் வாக்கியத்தில் எழுவாயாக இருந்த யானை இந்த வாக்கியத்தில் ஆல் உருபு ஏற்று கருத்தாப்பொருளில் வந்துள்ளது. முதல் வாக்கியத்தில் கொன்றது என்னும் வடிவில் அமைந்த வினை இந்த வாக்கியத்தில் கொல்லப்பட்டான் என அமைகின்றது. இவ்வாறு கொல்லப்பட்டான். கொல்லப்பட்டது, மூடப்படும், எரிக்கப்பட்டது, திறக்கப்படும் போன்று அமையும் வினைகளே செய்பாட்டு வினைகள். இவை செயப்படு என்ற துணைவினை பெற்றுவரும்.

செய்வினையில் அடிச்சொல் அடிப்படை வடிவத்தில் இருக்கும். உம் : பார்த்தேன், மூடினான், குடித்தது, கொன்றது. இவற்றில் பார், மூடு, குடி, கொல் என்பன அடிச்சொற்களாகும்.

செயப்பாட்டு வினையில் அடிச்சொல் செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்ச வடிவில் இருக்கும். உம் : கொல்லப்பட்டான், மூடப்படும், எரிக்கப்பட்டது, திறக்கப்படும் ஆகிய செயப்பாட்டு வினைகளில் கொல்ல, மூட, எரிக்க, திறக்க என்பன வினையெச்சங்களாகும். செயப்பாட்டு வினையின் அமைப்பை பின்வருமாறு விளக்கலாம்:

| | | | |
|---|---|---|---|
| (செய்ய)வினைஎச்சம் | + படு | + கால இடைநிலை | + திணை பால் விகுதி |
| கொல்ல | + பட்ட் | | +ஆன் |
| கொல்ல | +படு | +கிறு | +ஆன் |

கருத்தா இல்லாத செயப்பாட்டு வினை வாக்கியங்கள் தற்காலத்தில் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

## 4.6 நிறுத்தற்குறிகள்

ஆசிரியர் வந்தார். ஒரு சோலையில் மா, பலா, தென், கோங்கு முதலிய மரங்கள் இருக்கின்றன. ஔவையார் "சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை " என்று கூறுகின்றார்.

மேற்கூறிய வாக்கியங்களில் என்ற அடையாளங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அமைகளே நிறுத்தக் குறிகளாம். மா, பலா, தென்னை என்று அடையாளம் வைத்து எழுதுவோமானால் மாப லாதென்னை என்று எழுதவும், படிக்கவும் கூடும். அப்பொழுது அவற்றின் பொருள் தெரியாதுபோகும்.

வாக்கியத்தின் கருத்தைத் தெளிவாக அறிய வைக்கும் குறிகளே நிறுத்தக் குறிகளாம்".

காற்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, உணர்ச்சிக்குறி, வினாக்குறி முதலான நிறுத்தக்குறிகள் எல்லாம் தமிழ் மொழிக்குப் புதுமையானவை. இவை தொல்காப்பியத்திலும் இல்லை' நன்னூலிலும் இல்லை. பயன்கருதி ஆங்கில மொழியிலிருந்து தமிழில் தழுவிக் கொள்ளப்பட்டவை இவை ஆங்கில மொழியினால் தமிழ் மொழியில் ஏற்பட்ட புதுமைகளுள் இக் குறியீட்டு இலக்கணமும் ஒன்று.

வினைமுற்றை இறுதியில் அமைத்தெழுதுவது, முற்றுப் புள்ளியின் வேலையைச் செய்து வந்தது. ஏகார ஓகார உம்மைகளும், காற்புள்ளியும் அரைப் புள்ளியும் ஆகிய இவற்றின் பணியைப் புரிந்து வந்தன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஆங்கிலமொழிப் பயிற்சி நாட்டில் மிகுந்த போது, இந்திய நாட்டு மொழிகள் அனைத்தினும் ஆங்கில மொழியின் நிறுத்தக் குறியீட்டு இலக்கணம் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டது.

அறிஞர் வி. அறிஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், "குறியீட்டு இலக்கணம் தமிழின்கண் முழுவதும் தழுவிக் கொள்ளப்படல் வேண்டும். அதனால், பொருள் தெளிவும் விரைவு உணர்ச்சியும் உண்டாகின்றன. இவை காரணமாகப் படித்தானுக்குப் படித்த நூலின்கண் ஆர்வமும் உண்டாகின்றது" என்று ஆங்கில மொழியிலிருக்கும் குறியீட்டிலக்கணத்தைத் தமிழ் மொழியிலும் தழுவிக்கொள்ள வேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்தியிருக்கிறார். ஆங்கில மொழியின் நிறுத்தக் குறியீட்டிலக்கணத்தை நாம் தழுவிக் கொள்ளலாம். ஆனால், அதைத் தமிழ்மொழி இலக்கணத்துக்குக் கேடு செய்யாதவாறு தழுவிக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

சாதாரணமாகப் பெரும்பாலோர் தமிழ்மொழி இலக் கணத்திற்கு மாறாகக் காற்புள்ளியை உம்மையுடன் சேர்த்துத் தவறாக எழுதி வருவதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். "அண்ணனும், தம்பியும்" என்று காற்புள்ளியை எண்ணும்மைக்குப் பின் போட்டுத் தவறாக எழுதுவதைப் பார்த்திருக்கலாம். தமிழிலக் கணத்தில் உம்மையின் வேலை இணைப்பது. இவ்வும்மை யிருப்பதே அங்குப் போதும். இ∴து எண்ணும்மை எனப்படும்.

ஆங்கிலத்தில் காற்புள்ளியின் வேலை பிரிப்பதாகும். தமிழ்மொழி இலக்கண முறைப்படி எண்ணும்மையால் இணைத்து விட்டு, ஆங்கிலக் குறியீட்டு முறைப்படி காற்புள்ளியிட்டுப் பிரிப்பது வேடிக்கையாக இருக்கிறது. நீண்ட வாக்கியத்தில் பொருள் தெளிவாக்குவதற்காகக் காற்புள்ளியை எண்ணும்மைக்குப் பின் இடுவதை வேண்டுமானால் ஒருவாறு ஏற்கலாம்.

காய், கறிகள் - இப்படிக் காற்புள்ளியிடுவது தவறு. இப்படிச் செய்தால் காய் என்னும் சொல் ஒருமையாகவும், கறிகள் என்னும் சொல் பன்மையாகவும் மாறிவிடப் பொருளும் வேறுபடும். காய்கறிகள் என்றே எழுத வேண்டும். காய்கறிகள் என்பது உம்மைத் தொகையாதலால் இத்தொகையில் காற்புள்ளி இடலாகாது. தொகைகள் ஒரு சொல் போலக் கருதும் தன்மை யுடையன என்பதறிக. உம்மைத் தொகையில் ஈற்றுவிகுதி பன்மையாக இருக்கும்.

நிறுத்தக் குறியீட்டுத் தவற்றால் சில சமயம் பொருளே வேறுபட்டு விடும். வாக்கியங்களில் பொருளான குறியீட்டுத் தவற்றால் வேறுபடுவது காணலாம்.

நீ பழம், பாக்கு, வெற்றிலை வாங்கி வா.

நீ பழம்பாக்கு, வெற்றிலை வாங்கி வா.

இங்கே பொருள் வேறுபடுவது காண்க.

, காற்புள்ளி (Comma)

; அரைப்புள்ளி (Semicolon)

: முக்காற்புள்ளி (Colon)

. முற்றுப்புள்ளி (Full Stop)

? வினாக்குறி (Question Mark)

! உணர்ச்சிக்குறி (Interjection Mark)

“ |” இரட்டை மேற்கோள் குறி (Double Quotation)

‘ ’ ஒற்றை மேற்கோள் குறி (Single Quotation)

........ தொடர் விடுபாட்டுக்குறி

’ விடுகுறி

“ மேற்படிக்குறி

### 4.6.1 உடுக்குறி (Star Mark)

- இணைப்புச் சிறுகோடு

-....- இடைப்பிறவரல் வைப்புக்குறி

( ) பிறைக்குறி

### 4.6.2 காற்புள்ளி

சொற்களைத் தனித்தனியாகவோ அடுக்கு அடுக் காகவோ பிரிக்கும்போது காற்புள்ளியிடுக.

1. அறம், பொருள், இன்பம், வீடு என்பவை உறுதிப் பொருள்களாகும்.

2. கபிலர், பரணர் முதலிய புலவர்கள் சங்ககாலத்தில் இருந்தார்கள்.

இங்கே தனித்தனியாகப் பிரித்ததால் காற்புள்ளியிடப்பட்டது.

3. நட்புக்குக் குகனும் பரதனும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனும், உதயணனும் யூகியும் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம். இங்கே அடுக்கு அடுக்காகப் பிரித்ததால் காற்புள்ளியிடப்பட்டது.

#### 4.6.2.1 விளிகளுக்குப் பின் காற்புள்ளியிடுக

1. இளமாணவர்களே, சாதி வேற்றுமை முதலியவை ஒழியப் பாடுபடுங்கள்.
2. கடவுளே, கருணை செய்தருள்க.
3. ஐயா, பெரியீர், அம்மையீர். (கடிதத்தின் முற்கூற்று விளியில்)
4. முகவரியில் குறிக்கும் பெயர், ஒவ்வொரு பட்டம், வீட்டு எண். தெரு இவற்றின் பின் காற்புள்ளியிடுக.

### 4.6.3 அரைப்புள்ளி

1. வாக்கியத்தில் ஒரே எழுவாயானது பல பயனிலை களைக் கொள்ளுமாயின், இடையிலுள்ள பயனிலைகளுக்கு அரைப்புள்ளி இடலாம்.

1. பெரும்பாலோர் பசியில்லாமலே உண்பர்' பசியாலும் உண்பர்' கிடைத்த போதெல்லாம் உண்பர்' நாவிற்காக உண்பர்' வாய் நாற, வயிறு நாற, குடல் நாற மலம் வைத்தும் உண்பர்.
சுத்தானந்த பாரதியார்

2. மனித வாழ்க்கை, ஓர் ஆறு' குளம் அன்று.

3. மனிதனுடைய மனம் கண்ணாடிப் வெள்ளிப் பாத்திரமாகும்.

பாத்திரமன்று’

4. இம்முனிவர் ஒரு கல்விக் களஞ்சியம்’ கேள்விக் குவியல்.

5. இரும்பு சூடாக்கினால் உருகும்’ இன்றேல் உருகாது. 6. மழை இல்லா விட்டால் விளைவு இல்லை’ அறுவடை இல்லை’ மக்களுக்கு உணவு இல்லை.

7. ஒளி மிகுதியானால் கண் பார்வை சுருங்கிக் கொள்ளும்’ ஒளி குறைந்தால் விரிந்து கொள்ளும்.

8. அதை மீண்டும் கிளப்புவது சிறுபிள்ளைத் தன்மையாவது மட்டும் அன்று’ நச்சுத் தன்மை யூட்டுவது மட்டும் அன்று’ விபரீதமானதுமாகும்.

9. ஒன்றுபட்டு வாழ்ந்தால் உயர்ந்து வாழலாம் என்னும் கொள்கை வீட்டுக்கும் பொருந்தும்’ வீதிக்கும் பொருந்தும்’ நாட்டுக்கும் பொருந்தும்.

10. தென்னை மரத்துக்குக் கிளைகள் கிடையா’ மட்டைகளே

2. ஏனென்றால், ஏனெனில் ஆகிய காரணக்கிளவிகளுக்கு முன் அரைப்புள்ளியிடுக. காரணம் காட்டும் சொற்களைக் காரணக்கிளவிகள் என்பர்.

1. நான் இன்று பேசமாட்டேன்’ ஏனென்றால், என் தொண்டை நோயுற்றிருக்கிறது.

2. முருகன் தேர்வில் தேறவில்லை’ ஏனெனில், அவன் எழுதிய விடைத்தாளில் அவனது கையெழுத்துக் கிறுக்கலாக இருந்தது.

3. ஒரு வாக்கியத்தில் பல சிறு வாக்கியங்கள் இருந்து முழுக் கருத்தை விளக்குமாயின், ஒவ்வொரு வாக்கியத்தின் பின்னும் அரைப்புள்ளியிடுக.

1. மலையும் மலையைச் சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப்படும்’ அது குறவர் முதலியவர்களுக்கு உறை விடம்.

2. காந்தியடிகள் தமக்காக ஒருநாளும் பணம் வாங்கிய தில்லை’ நாட்டு முன்னேற்றத்துக்காகவே வாங்கினார்.

3. மனம் அறிந்ததை மறைத்துப் பொய் சொல்லாதே’ சொன்னால் மனமே உன்னை வருத்தும்.

4. ஒன்றுக்கு ஒன்று மாறான கருத்துக் கொண்ட சிறிய சிறிய வாக்கியங்கள் சேர்ந்து முழுக்கருத்தை விளக்குமானால், ஒவ்வொரு சிறு வாக்கியத்தின் பின்னரும் அரைப் புள்ளியிடுக.

1. மலர்களோ மோந்தால் வாடும்' விருந்தாளிகளோ சிறிது முகம் கோணினும் வாடி விடுவார்கள்.

2. கற்றுவல்ல அறிஞர்கள் அடக்கமாயிருப்பார்கள்' கல்லாத மூடர்கள் ஆரவாரம் செய்வார்கள்.

3. எவன் தன் வலியும் பிறன் வலியும் பார்க்கிற தில்லையோ அவன் துன்பத்தை அடைவான்' எவன் அவற்றைப் பார்க்கிறானோ அவன் இன்பம் அடைவான்.

1. வாக்கியத்தில் கூறியதொன்றை விரித்துக்கூறும் போது முக்காற் புள்ளியிடலாம்.

வாழ்வு இரு திறத்தது: ஒன்று உயிர் வாழ்வு' மற்றொன்று உடல் வாழ்வு. திரு.வி.க.

2. முக்காற் புள்ளியுடன்:- இதுபோலக் கோடிட்டு எழுதுவதும் உண்டு.

பொருள் கூறுக:- களிறு, சேதா.

3. எடுத்தாண்டிருக்கும் மேற்கோள் இன்ன நூலில் இருக்கிறது என்பதைக் காட்ட முக்காற்புள்ளி பயன்படும்.

குறள் - அதிகாரம் 8 :6.

4. வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ ஆதரிக்கவோ மற்றொரு கருத்து அதைத் தொடர்ந்து வருமாயின், முன் கருத்து முடியுமிடத்தில் முக்காற் புள்ளியிடுக.

1. உடல் நலத்தைப் பாதுகாக்க எல்லா வகைகளிலும் முயற்சி செய்: உடல் நலம் இல்லாவிட்டால் வாழ்க்கை யில் இன்பமே இராது.

2. சிலர் தாமிருக்கும் பகுதியின் சூழ் நிலைச் சுகாதாரத்தைப் பற்றிக் கவலைப்படாது வாழ்வர்: அப்படியிருத்தலும் தவறு.

3. ஒன்றைக் கூர்ந்து சிந்திக்க நூல்களைப் படித்துப் பழகு: அதுவே கல்விக்கு மிகவும் வேண்டுவது.

### 4.6.4 முற்றுப்புள்ளி .

1. வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளியிடுக. பொருள் முடிந் திருப்பதைக் கண்களுக்கு எடுத்துக் காட்டுவது முற்றுப் புள்ளி.

   1. நச்சினார்க்கினியர் சிந்தாமணிக்கு உரை யெழுதியுள்ளார்.

   2. நீ உள்ளே வா.

2. சொற்குறுக்கத்திற்கு முற்றுப் புள்ளியிடுக.

திரு. உயர்திரு., தவத்திரு., கி.மு., கி.பி.

(முறையே திருவாளர், உயர்திருவாளர், தவத்திருவாளர், கிறிஸ்து பிறப்பதற்கு முன், கிறிஸ்து பிறந்த பின் என்பனவற்றின் குறுக்கங்களே மேற்குறித்தவை.)

1. திரு. மணி. திருநாவுக்கரசு முதலியார்.

(திரு - திருவாளர், மணி-மணிமங்கலம்.)

2. திரு. திரு.வி.க. ஜதிரு-திருவாளர், திரு-திருவாரூர், வி-விருத்தாசல முதலியார் (தந்தை பெயர்), க-கலியாணசுந்தர முதலியார்.]

3. ஆங்கிலப் பட்டத்தைக் குறிக்கும் எழுத்துகளுக்குப் பின் முற்றுப்புள்ளியிடுக.

திரு. ச.த. சற்குணர், B.A.

### 4.6.5 வினாக்குறி ?

வினவும் இடங்களில் வினாக்குறியிடுக. ஆங்கிலத்தை விடத் தமிழில் வினாவை அமைப்பது சிறு குழந்தைகளும் செய்யக்கூடிய அளவு எளிமையாக இருக்கும். எ, ஏ, யா, ஆ, ஓ ஆகிய இவை வினா எழுத்துகள். வந்தான் என்னும் சொல்லோடு "ஆ" சேர்த்தால் "வந்தானா?" என்றும், "ஓ" சேர்த்தால் "வந்தானோ?" என்றும் வினாக்கள் உண்டாகி விடும். எது, எவை, யாது, யாவை, ஏது, ஏன், என்ன, என் ஆகிய இவை வினாச் சொற்கள்.

1. பாடுபட்டால் பலன் இல்லாமல் போகுமா?
2. முயற்சியுடையார் இகழ்ச்சி அடைவாரோ?
3. இங்கு வந்தது எது? இங்கு வந்தவை எவை? நீ சொன்னது யாது? நீ சொன்னவை யாவை?
4. உனக்குப் பொறுப்பு ஏது?
5. ஒருவர் பண்பாடு பெறாமலிருந்தால், அவர் கல்வி கற்றதனால் பயன் என்?
6. உமக்கு என்ன வேண்டும்?
7. நீ ஏன் நேற்றுப் பள்ளிக்கு வரவில்லை?

### 4.6.6 உணர்ச்சிக் குறி !

தமிழர்கள், உணர்ச்சியுடைவர்களாயினும் உணர்ச்சியை வெளிப்படையாகக் காட்ட மாட்டார்கள். மனைவியிடம் மிகுந்த அன்புள்ள தமிழன் ஆங்கிலேயரைப் போல மனைவியுடன்

கைகோத்துப் போகமாட்டான். உணர்ச்சியை அடக்கி வைப்பது தமிழர் பண்பாடு. ஆதலால், கண்டவாறு உணர்ச்சிக் குறியை !, !!, !!! என்று இவ்வாறெல்லாம் போடுவது தமிழர் நாகரிகத்துக்கு மாறானது. உண்மையான உணர்ச்சி காட்டும் இடத்தில் மட்டும் உணர்ச்சிக் குறியிடுக. நம்ப முடியாது என்பதையும் இகழ்ச்சியுடையது என்பதையும் காட்டுமிடங்களிலும் உணர்ச்சிக் குறியிடுதல் உண்டு.

1. உணர்ச்சி காட்டும் இடங்களில் உணர்ச்சிக் குறி இடலாம். 1. அந்தோ! பல தமிழ் நூல்கள் முற்காலத்தில் அழிந்தனவே!

2. அவர்தம் பெருமை என்னே! என்னே!

2. உணர்ச்சியுடன் வரவேற்கும் போதும் வாழ்த்தும் போதும் சபிக்கும் போதும் உணர்ச்சிக் குறியிடுக.

1. மாபெருந் தலைவர் நேரு, வருக! வருகவே!

2. வாழி! வாழி! தமிழ்நாடு வாழியவே!

3. என் வாழ்வைக் கெடுத்த பாவி ஒழிக!

3. உணர்ச்சியுடன் விளிக்கும் போது உணர்ச்சிக் குறியிடுக. தம்பி! உன் நாவை அடக்கிப் பேசு!

இ∴து இரட்டை மேற்கோட்குறி, ஒற்றை மேற்கோட்குறி என இருவகைப்படும்.

### 4.6.7 இரட்டை மேற்கோட் குறி “ ”

ஒருவர் கூறிய சொற்களை அப்படியே எடுத்தாளும்போது இரட்டை மேற்கோட் குறியிடப்படும். நேர்க்கூற்றின் தொடக்கத் திலும் முடிவிலும் இரட்டை மேற்கோட்குறியிடுக.

நெடுஞ்செழியன், ”இப்போரில் நான் வெல்லாமற் போவேனா யின் என் குடிகள் பழி தூற்றும் கொடுங்கோலனாவேனாக!” என்று சூளுரைத்தான்.

குறிப்பு: சூளுரைத்தான், என்றான் என்னும் சொற்களுக்குப் பின் மேற்கோட் குறியிடுவது தவறு.

கண்ணன் கூறியதாவது, ”நான் வாங்கியதைக் கொடுத்து விட்டேன்” என்றான். இதுவும் தவறு.

கண்ணன், ”நான் வாங்கியதைக் கொடுத்துவிட்டேன்” என்றான் - என்றிருக்க வேண்டும்.

“கூறியதாவது“ என்பது வேண்டுவதில்லை.

நேர்க்கூற்றுத் தொடக்கத்தின் முன் காற்புள்ளியிட மறத்தலாகாது.

2. மேற்கோளைக் காட்டும்போதும் மேற்கோட்குறியிடுக. “அறம்தலை நின்றார்க்கு இல்லை அழிவு” என்றார் கம்பர்.

### 4.6.8 ஒற்றை மேற்கோட் குறி ‘ ’

1. நேர்க்கூற்றுக்குள் இருக்கும் நேர்க்கூற்றை ஒற்றை மேற்கோட் குறிக்குள் எழுதுவர்.

பரதன், “நான் என் செய்வேன்! தமையனார், “நீ போ. நான் பதினான்கு ஆண்டுகள் கழித்தே வருவேன்“ என்று சொன்னார். அதனால், வந்து விட்டேன்” என்றான்.

2. பிரித்துக் காட்டுதற்கும், பிறருடையது என்று அறிவித் தற்கும், பழமொழிகளைத் தெரிவித்தற்கும் ஒற்றை மேற் கோட் குறியிடுவதுண்டு.

1. “வு“, “வூ“, “வொ“, “வோ“ என்னும் எழுத்துகள் சொல்லுக்கு முதலில் வாரா.

2. “இமயம் சேர்ந்த காக்கை பொன்னிறமாகும்“ என்பது பழமொழி.

3. “பொய் சொல்லும் வாய்க்குப் போசனம் கிடையாது“.

### 4.6.9 தொடர் விடுபாட்டுக்குறி ........

வேண்டாததை விடும்போது ..... இக் குறியிடுக.

அருமைத் தமிழ் மாணாக்கர்களே, உங்கள் நாட்டை நோக்குங்கள், ..........................குற்றம் குறைகள் இருப்பின் மன்னிப்பீர்களாக!

### 4.6.10 விடுகுறி (“)

ஒன்றை விட்டுவிடும்போது (“) இக் குறியிடுக.

15-8-“99. - இங்கே 1999-ல் உள்ள 19 என்னும் ‘எண்“ விடப்பட்டது காண்க.

மேற்படிக் குறி (““ ““)

மேற்குறித்ததே இ.்.து என்று காட்டுவது மேற்படிக்குறி. வினைத்தொகை.

ஆடு கொடி – வினைத்தொகை

கடிநாய் “ “

### 4.6.11 உடுக்குறி (*)

அடிக்குறிப்புக் காட்டுவதற்கு (*) இக்குறி பயன்படும்.

இணைப்புச் சிறுகோடு (-)

1. ஒன்றை மற்றொன்றோடு இணைப்பதற்கு (-) இக் குறியிடுக.

கள் இங்கே சாப்பிடலாம்.

பிரயாணி-

2. விரித்துக் கூறுவதைத் தொகுத்துக் கூறுமிடத்தும் சிறுகோடு இடப்படும்.

நண்பர், சுற்றத்தார், ஊரார் விட்டனர்.

- எல்லாரும், என்னைக் கை

3. ஒன்றை விளக்கிக் கூறுமிடத்தும் இக்குறியிடுவதுண்டு. நான் விரைவில் மீண்டும் வருவேன்-பொழுது போவதற்கு முன் வந்து விடுவேன்.

### 4.6.12 இடைப்பிறவரல் வைப்புக் குறி (- ... −)

இக்குறி, ஒரு சிறு வாக்கியத்தின் முன்னும் பின்னும் உள்ள இரு சிறுகோடுகளைக்குறிக்கும். நாம் எழுதும் வாக்கியத்தின் நடுவில் இலக்கண முறையில் தொடர்பில்லாது, இடைப்பிறவரலாக வரும் தனிச் சொற்றொடரை அல்லது தனி வாக்கியத்தைப் பிரிக்க இக்குறி இடப்படும்.

1. இறுதியாக - சுருங்கக் கூறுமிடத்து - நாங்கள் வீட்டுக்கே திரும்பிவந்தோம்.

2. உடன் பிறந்தவர்களாகிய நீங்கள் உங்கள் வேற்றுமையை மறந்து - அதில் நான் ஐயம் கொள்ளவில்லை - முன் போல ஒற்றுமையாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

## 4.7 அடைப்புக் குறிகள்

பேச்சின் ஒலிப்பு வேறுபாடுகளை உரைநடையில் காட்டவும், செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படாமல் தவிர்க்கவும், கருத்துத் தெளிவு துலங்கவும், படிப்பவரின் அக்கறையை தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் செல்லவும் பயன்படும் குறிகளாகும்.

நல்ல தமிழில் எழுத விரும்புவோர் அதற்கேற்ற தமிழ் நடையைக் கையாளல் வேண்டும். மொழி நடை என்பது ஒழுங்கான அமைப்பில் எழுதுவதற்கான நெறிமுறையைக் குறிக்கும்.

### 4.7.1 பிறை அடைப்புக்குறி ( )

( ) இ∴து ஒன்றனை விளக்க மற்றொரு சொல்லைப் பிறைக் குறிகளுக்குள் எழுதப் பயன்படுவது.

1. பாரதியார் நுழைவுத்தேர்வில் (பிரவேச பரீட்சையில்) முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

2. இன்றைக்கு எண்பது ஆண்டுகளுக்கு முன் (11-9-1921) பாரதியார் சீதபேதியால் இறந்தார்.

### 4.7.2 பகர அடைப்புக் குறி [ ]

[ ] பிறைக்குறியை உள்ளடக்க இப்பகர அடைப்புக் குறி பயன்படும்.

இலக்கியப் புள்ளி (000000)

முற்றுப் புள்ளிக்கும் இலக்கியப் புள்ளிக்கும் உள்ள வேற்றுமை மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை போன்றது.

1. மேற்கோளும் பழமொழிகளும் நினைவுக்கு வாராமற் போகும்பொழுது இதனைப் பயன்படுத்தலாம்.

2. வெளியிடக்கூடாததற்கு இவ்விலக்கியப் புள்ளியைப் பயன்படுத்தலாம்.

3. சிறுகதைகளில் உணர்ச்சி மிகுந்த கட்டங்கள் வரும் போது இந்தப் புள்ளிகள் அப்படியே உணர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டும்.

தன்னுடைய மனச்சான்றுடன் போராடிய வண்ணம் அவன் அவளைத் தன்னந் தனியே விட்டுச் சென்றான்.

## தொகுப்புரை

வாக்கியங்களின் உறுப்புகளை எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என நன்கு உணர்ந்த நிலையில் வாக்கியங்களின் அமைப்பினை மாணவர்கள் தெரிந்துணர முடிகின்றது. மேலும் வாக்கியங்களை கையாள பயன்படும் நிறுத்தற்குறிகளின் பயன்பாட்டினையும் அவற்றை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற முறையினையும் மாணவர்கள் நன்கறிகின்றனர். மேலும் வாக்கியத்தின் பல்வேறு வகைகள் காணப்பட்ட நிலையில் அவற்றை வேறுபடுத்தி அறியும் விதத்தினை விளக்கிக் கொள்கின்றனர்.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. தொடர் என்றால் என்ன?
2. வாக்கியம் குறிப்பு வரைக.
3. வாக்கியத்தின் வகைகளை கூறுக.
4. வாக்கியத்தின் உறுப்புகள் யாவை?
5. செயல்படு பொருள் என்றால் என்ன?
6. கலவை வாக்கியம் எவ்வகையில் வரும்.
7. நிறுத்தற்குறிகள் எவ்வகையில் பயன்படுத்தப்படுகிறது என்பதை கூறுக.

### குறு வினாக்கள்

1. செய்வினை, செயப்பாட்டு வினையை விளக்கி எழுதுக.
2. வாக்கியத்திற்கு உரிய உறுப்புகளை ஆராய்க.
3. வாக்கியத்தின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
4. புள்ளிகளின் வகைகளை விளக்கி எழுதுக.

### பெரு வினாக்கள்

1. தொடர்களில் நிறுத்தற்குறிகள் பயன்படுத்தும் முறையினை விளக்கி கட்டுரை வரைக.
2. வாக்கியத்தினை விளக்கி அதன் வகைகளை பகுத்துரைக்க.
3. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் போன்றவற்றை விளக்கி கட்டுரை எழுதுக

# அலகு - V

## 5.0 பாட அறிமுகம்

சொற்களின் இணைவே புணர்ச்சியாகும். உயிரீற்றுப் புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சி, உருபுப் புணர்ச்சி போன்றவை விளக்கப்பெறும். இரு சொற்களின் இணைப்பில் வல்லினம் மிகுமிடங்களும் வல்லினம் மிகா இடங்களும் பட்டியலிடப்படுகின்றன.

## 5.1 பாட நோக்கம்

புணர்ச்சி விதிகளை வகைப்பாட்டின் அடிப்படையில் விளக்குவதால் புணர்ச்சி விதிகளை கற்றல். புணர்ச்சி விதிகளின் வகைப்பாட்டினை எடுத்துக்கூறல். வேற்றுமையில் புணர்ச்சி விதி வரும் விதத்தை அறிதல். உயிர் ஈற்று புணர்ச்சியைக் கற்றல். புணர்ச்சி விதியில் வலிமிகா இடங்களை கற்றல். வலிமிகும் இடங்களை அறிதல்.

## 5.2 புணர்ச்சி

இலக்கணத்தில் புணர்ச்சி என்பது சொற்கள் அல்லது சொல்லின் உறுப்புகள் பொருள்தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து வருவதைக் குறிக்கும்.

நாங்கள் மரத்தை வெட்டினோம் என்ற வாக்கியத்தில் மூன்று சொற்கள் உள்ளன. நாங்கள் + மரத்தை + வெட்டினோம் ஆகிய மூன்று சொற்களும் ஒன்றை அடுத்து மற்றது இணைந்து வந்து பொருள்தரும் வாக்கியமாகின்றன. நாங்கள் என்ற சொல்லில் நாம், கள் ஆகிய இரண்டு உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வந்து பொருள் தருகின்றன. மரத்தை என்ற சொல்லில் மரம், அத்து, ஐ ஆகிய மூன்று உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்துவந்து பொருள் தருகின்றன. வெட்டினோம் என்ற சொல்லில் வெட்டு, இன், ஓம் ஆகிய மூன்று உறுப்புகள் இணைந்துவந்து பொருள் தருகின்றன. இதனைப் பின்வருமாறு விளக்கலாம்:-

நாம் +கள் = நாங்கள்

மரம் +அத்து + ஐ = மரத்தை

வெட்டு+ இன் + ஓம் = வெட்டினோம்

இவ்வாறு சொல்லின் உறுப்புகள் அல்லது சொற்கள் பொருள்தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே புணர்ச்சி எனப்படும்.

### 5.2.1 அகப்புணர்ச்சி

ஒரு சொல்லின் உறுப்புகள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.

நாம் + கள் → நாங்கள், மரம் + அத்து + ஐ → மரத்தை வெட்டு + இன் + ஓம் வெட்டினோம்

இவ்வாறு, இரண்டு அல்லது பல சொல் உறுப்புகள் சேர்ந்து ஒரு சொல் அமைவது அகப்புணர்ச்சியாகும். நாங்கள் என்ற சொல்லில் நாம் + கள் என்னும் இரண்டு உறுப்புகள் உள்ளன. மரத்தை என்ற சொல்லில் மரம் + அத்து + ஐ ஆகிய மூன்று உறுப்புகள் உள்ளன. அவ்வாறே, வெட்டினோம் என்ற சொல்லிலும் வெட்டு + இன் + ஓம் ஆகிய மூன்று உறுப்புகள் உள்ளன.

### 5.2.2 புறப்புணர்ச்சி

இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ, வாக்கியமாகவோ வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.

நாங்கள் மரத்தை வெட்டினோம்.

நான் அந்தப் பக்கம் சென்றேன்.

அவன் ஓடிப் போனான்.

எங்கள் ஊரில் ஓர் அறிஞர் இருக்கிறார்.

மேல் உள்ள 4 வாக்கியங்களிலும் சொற்கள் அடுத்து அடுத்து நிற்கின்றன. சொற்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஒரு சொல்லை பிறிதொரு சொல்லில் இருந்து பிரித்துக் காட்டப் பயன்படுகின்றது. சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு எழுதும் வழக்கம் பழங்காலத்தில் இருக்கவில்லை. சொல் உறுப்புகளை ஒன்றோடு ஒன்று நெருக்கமாக இணைப்பது போல் சொற்களையும் நெருக்கமாக இணைத்து புணர்ச்சி விகாரங்களுடன் எழுதினார்கள். அவ்வாறு எழுதும்போது தனித்தனிச் சொற்களின் வடிவம் அடையாளம் காண முடியாதவாறு மாற்றம் அடையும். உதாரணமாக மேலுள்ள நாலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அது பின்வருமாறு அமையும்:

எங்களுாரிலோரறிஞரிருக்கிறார்.

இந்த வாக்கியத்தை எளிதாக நாம் புரிந்துகொள்ள முடியாது. இதனைப் புணர்ச்சி விகாரங்களுடன் சொற்களுக்கு இடையில் இடைவெளிவிட்டு வேறு ஒரு விதமாக பின்வருமாறும் எழுதலாம்:

எங்க ளுாரி லோ ரறிஞ ரிருக்கிறார்.

இவ்வாறு இடைவெளிவிட்டு எழுதினாலும் புணர்ச்சி விகாரங்கள் காரணமாக சொற்கள் தம் உண்மை வடிவத்தை இழந்து நிற்பதால் நம்மால் இவ்வாக்கியத்தை எளிதாகப் புரிந்து கொள்ள முடிவதில்லை.

தற்கால வழக்கப்படி எங்கள் ஊரில் ஓர் அறிஞர் இருக்கிறார் என்று புணர்ச்சி விகாரம் இன்றி சொற்களைப் பிரித்து எழுதும்போது நமக்கு வாக்கியம் எளிதாகப் புரிகின்றது. புறப்புணர்ச்சியில் சொற்களுக்கு இடையில் முடிந்த அளவு புணர்ச்சி விகாரங்கள் இன்றி, பிரித்து எழுதுவதே தற்கால வழக்கு.

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகளுக்கு இடையில் இடைவெளி இல்லாமல் புணர்ச்சி விகாரங்களுடன் அவற்றை இணைத்து எழுதுகின்றோம். அவற்றை இடைவெளிவிட்டுப் பிரித்து எழுதினால் நமக்கு எளிதில் புரியாது. மேல்தரப்பட்ட முதலாவது வாக்கியத்தை அவ்வாறு எழுதினால் அமையும்.

அகப்புணர்ச்சியில் சொல் உறுப்புகள் இடைவெளி இன்றி புணர்ச்சி விகாரங்களுடன் இணைத்து எழுதப்படுகின்றன.

புறப்புணர்ச்சியில் சொற்கள் இடைவெளிவிட்டு பெரும்பாலும் புணர்ச்சி விகாரங்கள் இன்றி, பிரித்து எழுதப்படுகின்றன. புறப்புணர்ச்சியில் அவசியமான இடத்து மட்டும் புணர்ச்சி விகாரங்கள் பேணப்படும். புறப்புணர்ச்சியில் புணர்ச்சி விகாரங்கள் எங்கு அவசியம், எங்கு அவசியமில்லை என்பது பின்னர் விளக்கப்படும்.

### 5.2.3 புணர்ச்சிவகை

புணர்ச்சி என்பது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபடச் சேர்வது. இப்புணர்ச்சி இரு வகைப்படும்: ஒன்று இயல்பு புணர்ச்சி. மற்றொன்று விகாரப் புணர்ச்சி. நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எந்த மாறுபாடும் அடையாமல் இயல்பாய் இருப்பது இயல்பு புணர்ச்சி எனப்படும். மாறுபாடு அடைவது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

**புணர்ச்சி**

இயல்பு புணர்ச்சி | விகாரப் புணர்ச்சி

கண்டு பேசினார், என்று கூறினார், வந்து தந்தார், செய்து சொன்னான் - இயல்பு புணர்ச்சி.

தெருவில்+ஓடினான் = தெருவிலோடினான். இதுவும் இயல்பு புணர்ச்சியில் சேரும்.

நிலைமொழியின் ஈற்று மெய்யெழுத்துடன் வருமொழி முதலில் வரும் உயிர் எழுத்துச் சேர்ந்து வருவதையும் இயல்பு புணர்ச்சியாகவே கொள்ளவேண்டும். தெருவில் ஓடினான் என்று பிரித்து எழுதுவதே இக்காலத்தில் நல்லது. நன்றாய் + இருக்கும் என்னும் இரு சொற்கள் சேரும் போது நன்றாயிருக்கும் என்றே வரும்.

### 5.2.3.1 இயல்புப் புணர்ச்சி

புணர்ச்சியில் குறைந்த அளவு இரண்டு சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் சம்பந்தப்படுகின்றன.

மாடு + கள் = மாடுகள்

கடல் + நீர் = கடல்நீர்

முதல் உதாரணத்தில் மாடு என்ற சொல்லும் - கள் என்ற பன்மை விகுதியும் சேர்ந்து மாடுகள் எனப் புணர்ந்துள்ளன. இரண்டாவது உதாரணத்தில் கடல், நீர் ஆகிய இரண்டு சொற்கள் சேர்ந்து கடல்நீர் எனப் புணர்ந்துள்ளன. இச்சொற்களில் முதலில் நிற்கும் மாடு, கடல் ஆகியவற்றை நிலைமொழி என்றும் அவற்றுடன் வந்து புணரும் கள், நீர் ஆகியவற்றை வருமொழி என்றும் சொல்வர்.

மேலே தரப்பட்ட உதாரணங்களில் நிலை மொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றின் வடிவங்களில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. இவ்வாறு தம் வடிவங்களில் எவ்வித மாற்றமும் இன்றி சொற்கள் அல்லது சொல் உள புணர்வதை இயல்புப் புணர்ச்சி என்பர். பின்வரும் உதாரணங்களைப் பார்.

அவர் + ஐ → அவரை, அவர் + ஆல் → அவரால், அவர் + உக்கு → அவருக்கு

இங்கு நிலைமொழி இறுதியில் உள்ள ரகர மெய்யுடன் வருமொழி முதலில் உள்ள ஐ, ஆ, உ ஆகிய உயிர்கள் சேர்ந்து முறையே ரை, ரா, ரு என உயிர் மெய் எழுத்துகளாக மாறி உள்ளன. இந்த மாற்றத்தைத் தவிர நிலை மொழியிலோ வருமொழியிலோ உள்ள எழுத்துகள் எவையும் கெடவில்லை. புதிதாக எழுத்துக்கள் எவையும் தோன்றவில்லை. இருக்கும் ஓர் எழுத்து திரிந்து பிறிதொரு எழுத்தாக மாறவும் இல்லை. நிலைமொழி இறுதி மெய்யும் வருமொழி முதல் உயிரும் மாற்றமின்றி அவ்வாறே இருக்க, அவை இரண்டும் இணைந்து ஒரு புதிய வரிவடிவம் (உயிர் மெய்) பெற்றுள்ளன. இவ்வாறு நிலை மொழி இறுதியில் உள்ள மெய்யும் வருமொழி முதலில் உள்ள உயிரும் இணைந்து உயிர் மெய் வடிவம் பெறுவதும் இயல்புப் புணர்ச்சியாகும்.

### 5.2.3.2 விகாரப் புணர்ச்சி

சொற்கள் அல்லது சொல் உறுப்புகள் புணரும்போது நிலைமொழியிலோ வருமொழியிலோ ஏதாவது மாற்றம் ஏற்படின் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப்புணர்ச்சி மூன்று வகைப்படும்.

விகாரப்புணர்ச்சி

தோன்றல் திரிதல் கெடுதல்

வாழை + பழம் என்னும் இரண்டு சொற்கள் சேரும்போது இடையில் “ப்“ தோன்றும். வாழைப்பழம் - தோன்றல். ஓர் எழுத்துப் புதிதாகத் தோன்றியிருக்கிறது. வல்லெழுத்து மிகுதல், உடம்படு மெய் வருதல் முதலியவை தோன்றல் என்னும் விகாரப் புணர்ச்சியின் பாற்படும். விகாரம் என்னும் சொல்லுக்கு மாறுபாடு என்பது பொருள்.

பல் + பொடி = பற்பொடி - திரிதல்

அணில் + பிள்ளை = அணிற் பிள்ளை.

இங்கே “ல்“ என்னும் மெய்யெழுத்து “ற்“ ஆக மாறியது.

ஒன்று வேறொன்றாய் மாறுதல் திரிதல் எனப்படும்.

மரம் + நாய் = மரநாய் கெடுதல்.

இங்கே “ம்“ என்னும் எழுத்துக் கெட்டது. உள்ளது அழிந்து போதலைக் கெடுதல் என்பர்.

விகாரம் என்பதற்கு வேறுபாடு, மாற்றம் என்பது பொருள்.

மரம் + கள் = மரங்கள்

பூ +கள் = பூக்கள்

முதலாவது உதாரணத்தில் மரம் என்ற நிலைமொழியுடன் கள் என்ற வருமொழி புணரும் போது நிலைமொழி இறுதியில் உள்ள ம், ங், ஆகத் திரிந்துள்ளது. அவ்வகையில் மரம் என்பது மரங் என்று வடிவம் மாறியுள்ளது. இரண்டாவது உதாரணத்தில் பூ என்ற நிலைமொழியுடன் - கள் என்ற வருமொழி புணரும்போது க் என்ற ஒரு புதிய எழுத்துத் தோன்றியுள்ளது. அதனால் - கள் என்ற வருமொழி - க்கள் என்று வடிவம் மாறியுள்ளது.

### 5.2.3.2.1 தோன்றல்

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது இடையில் ஓர் எழுத்துத் தோன்றுதல் தோன்றல் விகாரம் எனப்படும்.

பூனை + ய் + ஐ = பூனையை

பலா + இல் பலா + வ் + இல் = பலாவில்

கல் + ஆல், கல் + ல் + ஆல் = கல்லால்

ஒடி + போ, ஒடி + ப் + போ = ஒடிப் போ

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி, வருமொழி ஆகியவற்றில் வ், ல், ப் ஆகிய எழுத்துக்கள் புதிதாகத் தோன்றியுள்ளன. இது விகாரம் எனப்படும்.

### 5.2.3.2.1.1 உடம்படு மெய்

உயிரீற்றுக்கு முன் உயிர் முதல் மொழி வருமிடத்து அவ்விரண்டு உயிரொலிகளையும் விட்டிசைக்காது ஒன்றுபடுத்தி ஒலித்தல் அரிதாகலின், அவற்றை உடன்படுத்தற்கு இடையே ஒரு மெய்யெழுத்துத் தோன்றுகின்றது. அதுதான் உடம்படு மெய் என்பது.

"வ்" என்றும், "ய்" என்றும் இரண்டுவகை உடம்படு மெய்கள் உண்டு. முன்னதை வகர உடம்படு மெய் எனவும், பின்னதை யகர உடம்படு மெய் எனவும் கூறுவர்.

வந்த + உடன் = வந்தவுடன் என்று சேர்த்தெழுத வேண்டும். வந்த என்னும் சொல்லின் ஈற்றில் அகர ஒலி இருக்கிறது. வருமொழியாகிய உடன் என்பதன் முதல் எழுத்து உகரம். இந்த இரண்டு உயிர் ஒலிகளையும் ஒன்று படுத்தும் "வ்" என்னும் மெய் யெழுத்தையே உடம்படுமெய் என்கிறோம்.

### 5.2.3.2.1.2 வகர உடம்படு மெய்

அ, ஆ, உ, ஊ, ஓ என்னும் உயிரொலிகளுள் ஏதாவது ஒன்று நிலைமொழியின் கடைசியில் இருக்க, வருமொழி முதலில் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுள் எது வந்தாலும் வகர மெய் தோன்றும்.

போன + உடன் =போனவுடன்

மா + இலை = மாவிலை

திரு + ஆரூர் = திருவாரூர்

பூ +எழுத்து = பூவெழுத்து

கோ + இல் = கோவில்

வந்த உடன், போன உடன் என்று பிரித்தெழுதுதலே கூடாது.

சேர்த்தே எழுதுதல் வேண்டும். வர+இல்லை என்னும் சொல்லை வரவில்லை என்றுதான் எழுதவேண்டும்.

### 5.2.3.2.1.3 யகர உடம்படுமெய்

நிலைமொழியீற்றில் இ,ஈ,ஐ ஒலிகளுள் ஏதாவது ஒன்று இருக்க, வருமொழி முதலில் பன்னிரண்டு உயிரெழுத்துகளுள் எது வந்தாலும் யகர உடம்படு மெய் தோன்றும்.

கூலி+ஆள் =கூலியாள்

தீ+ஆல் =தீயால்

கை + எழுத்து =கையெழுத்து

### 5.2.3.2.1.4 ஏ முன் இருமையும்

ஏ ஒலியுடைய சொல்லானது பெயர்ச் சொல்லாயின் வகரவுடம்படுமெய்யும், இடைச் சொல்லாயின் யகரவுடம்படுமெய்யும் பெற்று வரும்.

தே+ ஆரம் = தேவாரம். (தே-கடவுளுக்குச் சூட்டப்படும் ஆரம் - பூ + மாலை.)

கறியே+இல்லை =கறியேயில்லை.

வீரமாமுனிவர் உள்ளிட்ட அக்காலப்புலவர்கள் உடம்படு மெய்யை வீணான இடங்களிலும் பயன்படுத்தினார்கள். வீரமாமுனிவர் இத்தாலியர். 18-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் கிறித்தவ ஊழியம் செய்தவர். அக்காலத்தைப் பின்பற்றி, தமது கொடுந்தமிழ் என்ற நூலில் இந்த வாசை, அவனோ வென்றால், நீயின்று வா என்று எடுத்துக்காட்டுகள் காட்டியுள்ளார்.

உடம்படுமெய் வேண்டுமா? என்னும் வினா எழுகிறது, செய்யுளைப் பிரித்துப் பொருள் உணர்ந்து கொள்வதற்கு இது மிகமிக இன்றியமையாதது. ”தவறாகப் பிரிக்காமல் சொற்களை எழுதுவதற்கும் இது வேண்டும். “போக ,,இருந்தார்“ என்னும் இரண்டையும் சேர்த்தெழுதும்போது போகவிருந்தார் என்று எழுதத் தெரிந்து கொள்வதற்கு உடம்படுமெய் தெரிய வேண்டுவதுதான் என்று ஒப்புக் கொள்வீர்கள். “நின்ற உடன்“ என்று எவரும் எழுதார். “நின்றவுடன்“ என்று ஏன் எழுத வேண்டும் என்று தெரிந்து கொள்வதற்கு உடம்படு மெய்யைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

வரையார் என்றதனால் உடம்படுமெய் கோடல் ஒரு தலையன்று.

கிளி அரிது, மூங்கா இல்லை எனவும் வரும்.'' -இளம்பூரணர் உரை

வரையார் என்றதனால் உடம்படுமெய் கோடல் ஒரு தலையன்று.

‘‘கிளி அரிது, மூங்கா இல்லை என வரும். - நச்சினார்க்கினியர் உரை

இவ்வாறு தொல்காப்பிய உரையாசிரியர்கள் இருவரும் எல்லா இடங்களிலும் உடம்படுமெய் வர வேண்டுவதில்லை என்று கருதினர். ஆதலால், இக் காலத்தில் கண்ட இடமெல்லாம்

உடம்படுமெய் சேர்த்தெழுத வேண்டுவதில்லை என்பதை அறிக. அப்படி எழுதினால் பொருள் மயக்கம் ஏற்படும்.

பெரியவிடம் என்னும் தொடர் பெரிய விஷம் என்றும், “பெரிய இடம்“ என்றும் இருபொருள் தரும். பாட்டில் சிலேடைப் பொருள் தருவதற்கு இது பயன்படும். உரைநடையில் இப்படி எழுதுவது தவறாகும். “பெரிய இடம்“ என்று பொருள் தருவதற்குப் ‘பெரியவிடம்“ என்று எழுதாமல் உடம்படு மெய் இன்றியே எழுதுக.

‘வந்த வலவன்“ என்னும் தொடரானது “வந்த தேர்ப்பாகன்“ என்றும், “வந்த நண்டு“ என்றும் பொருள்படும். வலவன்-தேர்ப் பாகன். அலவன்-நண்டு. ‘வந்த நண்டு“ என்று பொருள் தர வேண்டுமாயின், “வந்த அலவன்“ என்றே எழுதுக.

“அவனையடித்தான்“, “கறியேயில்லை“ என்று எழுதாமல் அவனை அடித்தான் என்றும், கறியே இல்லை என்றும் எழுதுக. ஆனால், தீயொளி, பனையோலை என்பனவற்றைப் பிரிக்காமலே எழுத வேண்டும். பொருள் மயக்கம் ஏற்படாதவாறு உடம்படு மெய்யைப் பயன்படுத்த வேண்டும்.

ஒரு நூலில் சிற்பயெழில் என்று இருக்கப் பார்த்தேன். இது தவறு. சிற்ப + எழில் = சிற்பவெழில் என்று வரவேண்டும். சிற்ப எழில் என எழுதப்பட்டிருந்தால் தவறே வந்திராது.

### 5.2.3.2.1.5 உடம்படுமெய் வரவேண்டிய இடங்கள்

தொகைச் சொற்களில் உடம்படுமெய் வரவேண்டும்.

பூவரசு, மாவிலை, தெருவோரம்.

### 5.2.3.2.1.6 உடம்படுமெய் வரக்கூடாத இடங்கள்

வியப்பு, துன்பம், மெச்சிப்பேசுவது ஆகிய இடங்களில் உடம்படுமெய் தேவையில்லை.

ஆ! ஆ! என்ன செய்தாய்!

ஐயமுண்டாகும் இடங்களிலும் வீணான இடங்களிலும் உடம்படுமெய் வேண்டுவதில்லை.

### 5.2.3.2.1.7 சுட்டு எகர வினாவின் பின் உயிரெழுத்துவரின் வகரம் தோன்றி இரட்டித்தல்

அ + உயிர் =அவ்வுயிர்.

இ + எழுத்து=இவ்வெழுத்து.

எ + அணி=எவ்வணி?

இந்த “வ்“ உடம்படு மெய் அன்று என்றறிக. சுட்டெழுத்துகளின் பின்னும் எகர வினாவின் பின்னும் யகரம் வரின் “வ்“ தோன்றுதல்

அ+யானை= அவ்யானை.

இ +யானை=இவ்யானை

எ+யானை=எவ்யானை?

பிறவற்றின் பின் அந்த அந்த எழுத்தே வருதல்

| | |
|---|---|
| அ + நூல்= அந்நூல். | இ +மாதர்=இம்மாதர். |
| இ+நாடு=இந்நாடு. | எ+ மாதம் =எம்மாதம்? |
| எ + நூல்=எந்நூல்? | அ + வீடு=அவ்வீடு. |
| அ+ செடி=அச்செடி. | இ + வேளை=இவ்வேளை. |
| இ + குதிரை=இக்குதிரை. | எ + விதம் =எவ்விதம்? |
| எ +படை=எப்படை? | அ + ஙனம்=அங்ஙனம். |
| அ+ஞாலம் =அஞ்ஞாலம். | இ + ஙனம்=இங்ஙனம். |
| இ + ஞாலம்=இஞ்ஞாலம். | எ +ஙனம் =எங்ஙனம்? |
| அ + மனைவி = அம்மனைவி. | |

### 5.2.3.2.1.8 உயிர் முன் உயிர்

| |
|---|
| வர+இல்லை= வரவில்லை. |
| வேலை+ ஆள் = வேலையாள். |
| அ+உயிர் = அவ்வுயிர் |

### 5.2.3.2.1.9 உயிர் முன் மெய்

| |
|---|
| அ+யானை = அவ்யானை. |
| இ +நூல் =இந்நூல். |
| எ+வாள்=எவ்வாள்? |
| அ+கடல் =அக்கடல். |
| இ +படம் =இப்படம். |
| எ+சங்கு=எச்சங்கு? |
| அ+ஞாலம் =அஞ்ஞாலம். |
| இ +மாடு=இம்மாடு. |
| எ+ஙனம் =எங்ஙனம்? |

### 5.2.2.2 திரிதல்

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது அவற்றில் உள்ள ஓர் எழுத்து பிறிதொரு எழுத்தாக மாறுதல் திரிதல் எனப்படும்.

மரம் + கள், மரங் + கள் = மரங்கள்

கல் + கள், கற் + கள் = கற்கள்

கொள் + ட் + ஏன், கொண் + ட் + ஏன் = கொண்டேன்

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள ம், ல், ள் என்ற எழுத்துகள் முறையே ங், ற், ண் எனத் திரிந்துள்ளன.

வா + ந்த் + ஆன் , வ + ந்த் + ஆன் = வந்தான்

செ + த்த் + ஆன் , செ + த்த் + ஆன் = செத்தான்

மேல் உள்ள உதாரணங்களில் வா, சா ஆகிய வினைச் சொற்கள் வ, செ, எனத் திரிந்துள்ளன. இது திரிதல் விகாரம் எனப்படும்.

1. ம் - ங், ஞ், ந், ஆகும். (க, ச, த முன்மட்டும்)

மனம் +களித்தான் = மனங்களித்தான்.

மரம் + சாய்ந்தது = மரஞ்சாய்ந்தது.

பணம் +தேடி= பணந்தேடி

2. ண் - ட் ஆகும். (க, ச, ப முன்மட்டும்)

மண் + குடம்=மட்குடம்.

மண் + பாண்டம்=மட்பாண்டம்.

மண் + சட்டி= மட்சட்டி

3. ண் முன் த ஆனது ட ஆகும்.

தண் + தமிழ்= தண்டமிழ்.

மண் + தலம் =மண்டலம்.

4. ன் - ற் ஆகும். (க, ச, ப முன்மட்டும்)

பொன் +குடம் =பொற்குடம்.

பொன் +சங்கிலி=பொற்சங்கிலி.

பொன் +பாடகம்=பொற்பாடகம்.

5. ன் முன் த - ற ஆகும்.

அவன் + தான் = அவன்றான்.

பொன் +தோடு= பொற்றோடு.

6. ள் - ட் ஆகும். (க, ச, ப, முன்மட்டும்)

கள் + குடியன்=கட்குடியன்.

முள் + செடி=முட்செடி.

முள் + பழம்= முட்பழம்.

7. ள் முன் த ஆனது ட ஆக, ள் - ட் ஆகும்.

முள் +தாள்=முட்டாள்.

8. ள் முன் ந ஆனது ண ஆக, ள் - ண் ஆகும்.

எள் +நெய் = எண்ணெய்.

தெள் +நீர் = தெண்ணீர்.

9. ல் - ற் ஆகும். (க, ச, ப முன்மட்டும்)

கல் + கம்பம் = கற்கம்பம்.

கல் + சுவர் =கற்சுவர்.

நெல் +பயிர் = நெற்பயிர்.

பந்தல் +கால் = பந்தற்கால்.

10. ல் முன் த ஆனது ற ஆக, ல்-ற் ஆகும்.

கல் +தூண் = கற்றூண்.

நல் + தமிழ் =நற்றமிழ்.

நல் +தாள்=நற்றாள்.

11. ல் முன் ந ஆனது ன ஆக, ல்-ன் ஆகும்.

நல் + நெறி = நன்னெறி.

கல் +நெஞ்சம் = கன்னெஞ்சம்.

புல் + நுனி= புன்னுனி.

12. ம முன் ல் ஆனது ன் ஆகும்.

மேல் + மேல் =மேன்மேல்.

கல் + மனம் =கன்மனம்.

13. ம முன் ள் ஆனது ண் ஆகும்.

நாள் + மலர் =நாண்மலர்.

முள் + மலை=முண்மலை.

14. ன் முன் ந ஆனது ன ஆகும்.

பொன் + நாடு= பொன்னாடு

தன் +நலம் = தன்னலம்.

15. ண் முன் ந ஆனது ண் ஆகும்.

தண் + நீர் = தண்ணீர்.

கண் + நோய் = கண்ணோய்.

விண் + நாடு= விண்ணாடு.

### 5.2.2.3 கெடுதல்

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது அவற்றில் உள்ள ஏதாவது ஒரு எழுத்து இல்லாமல் போதல் கெடுதல் எனப்படும்.

நாக்கு + ஐ, நாக்க் + ஐ = நாக்கை

கதவு + ஆல், கதவ் + ஆல் = கதவால்

இருமு + அல், இரும் + அல் = இருமல்

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதி உகாரம் கெட்டது.

மரம் + வேர் = மரவேர்

மனம் + வேதனை = மனவேதனை

மேல் உள்ள உதாரணங்களில் நிலைமொழி இறுதியில் உள்ள மகரம் கெட்டுத. இது கெடுதல் விகாரம் எனப்படும்.

எவ்வாறு + எனின் = எவ்வாறெனின் என்றே வரும். எவ்வாறு யெனின் என்று எழுதுவது தவறு. நிலைமொழியின் கடைசியில் குற்றியலுகரம் இருக்க, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியீற்றிலுள்ள குற்றியலுகரம் கெட்டுப்போக, நிலை மொழியீற்று மெய்யும் வருமொழி முதலில் இருக்கும் உயிரும் சேர்ந்து விடும்.

| | |
|---|---|
| வேறு + இல்லை = வேறில்லை. | மரபு +ஆகும்= மரபாகும். |
| அங்கு + அங்கு= அங்கங்கு. | உழுது + உண்டு = உழுதுண்டு. |
| என்று +என்றும் =என்றென்றும். | ஒப்பு + இல்லை=ஒப்பில்லை. |
| காசு + ஏது= காசேது? | எழுந்து + இரு=எழுந்திரு. |
| நாடு + அற்றோர் = நாடற்றோர் | மரபு +ஆகும்= மரபாகும். |

சில சொற்களில் முற்றியலுகரத்துக்கும் இப்படியே வரும். எடுத்துக்காட்டுகளைக் காண்க.

| |
|---|
| வரவு + ஏற்பு=வரவேற்பு. |
| கதவு +அடைப்பு=கதவடைப்பு. |
| செலவு + ஆயிற்று=செலவாயிற்று. |

1. மாறுபாடு+இல்லை =மாறுபாடில்லை.

இதில் “டு“ வில் இருக்கும் குற்றியலுகரம் கெட்டு விட, டகரமெய் வருமொழி உயிரோடு சேர்ந்துவிட்டது.

செலவு +ஆயிற்று=செலவாயிற்று.

இதில் முற்றியலுகரம் கெட்டுவிட, வகரமெய் வருமொழி உயிரோடு இணைந்து விட்டது.

2. குளம் + நெல் =குளநெல் (ம் கெட்டது).

அறம் + வினை =அறவினை (ம் கெட்டது).

மரம் +உரி=மரவுரி (ம் கெட்டது).

3. ள் முன் த வரின் ள் கெட்டுத் தகரம் டகரமாகும்.

நாள் + தோறும் = நாடோறும்.

அவர்கள் + தாம் = அவர்கடாம்.

துகள் + தீர் = துகடீர்,

## 5.3 வேற்றுமைப் புணர்ச்சியும் அல்வழிப் புணர்ச்சியும்

தமிழ் இலக்கணக்காரர் புணர்ச்சியை வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரண்டு வகைப்படுத்துவர்.

எழுவாய் வேற்றுமையும், விளி வேற்றுமையும் தவிர்ந்த ஏனையை ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலிய வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும், மறைந்தும் வர சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். வேற்றுமைப் புணர்ச்சி தவிர்ந்த ஏனைய எல்லாவகைப் புணர்ச்சிகளும் அல்வழிப் புணர்ச்சி எனப்படும். ஒரே விதமான சொற்கள் வேற்றுமையில் ஒரு விதமாகவும் அல்வழியில் வேறுவிதமாகவும் புணர்வதனால் பாகுபாடு அவசியமாகும்.

உதாரணமாக குருவி + கூடு, ஆடு + குட்டி

எழுவாய்ப் பொருளில் சொற்கள் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாகும். வேற்றுமைப் புணர்ச்சியாகும். வல்லினம் மிகுந்தும், அல்வழியில் இயல்பாகவும் புணர்ந்துள்ளன.

சில சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது வடிவம் மாறுகின்றன.

1. தன்மை, முன்னிலைப் பெயர்கள் இவ்வாறு வடிவம் மாறும்

என் + ஐ = என்னை

நாம் + ஐ = நம்மை

2. தான், தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்கள் வேற்றுமை ஏற்கும்போது வடிவம் மாறும்

தன் + ஐ = தன்னை

3. காடு, வீடு போன்று அமையும் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது உகரம் கெட்டு ஈற்று மெய் இரட்டிக்கும்

காடு + ஐ, காட்ட் + ஐ = காட்டை

வீடு + உக்கு, வீட்ட் + உக்கு = வீட்டுக்கு

## 5.4 உயிரீற்றுப் புணர்ச்சி

உயிர் ஈற்றுப் புணர்ச்சி நிலைமொழி ஈற்றெழுத்து உயிராகவும் வருமொழி முதல் எழுத்து உயிர் அல்லது மெய்யாகவும் அமைய சொற்கள் புணர்வது உயிர் ஈற்றுப் புணர்ச்சி எனப்படும். இது உயிர் + உயிர், உயிர் + மெய் என இருவகையாக அமையும்.

### 5.4.1 உயிர் முன் உயிர் புணர்தல்

நிலைமொழி இறுதியில் உயிரும் வருமொழி முதலில் உயிரும் வந்தால் இடையில் யகர மெய் அல்லது வகர மெய் தோன்றிப் புணரும். இவ்வாறு தோன்றும் மெய்யை உடம்படுமெய் என்பர்.

### 5.4.2 யகர மெய் தோன்றுதல்

நிலைமொழி இறுதியில் இ, ஈ, ஐ ஆகிய உயிர்களுள் ஏதாவது ஒன்று வந்தால் வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் ய கர மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

கிளி + ஐ, கிளி + ய் + ஐ = கிளியை

தீ + ய் + ஐ = தீயை

ஈ + ஆல், ஈ + ய் + ஆல் = ஈயால்

பூனை + ஆல் , பூனை + ய் + ஆல் = பூனையால்

மேற்காட்டிய உதாரணங்கள் எல்லாம் அகப்புணர்ச்சியாகும். அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் கட்டாயம் தோன்றும். ஆனால், புறப்புணர்ச்சியில் உடம்படு மெய் தோன்றுவது கட்டாயமல்ல. புறப்புணர்ச்சியில் உடம்படு மெய் இல்லாமல் பிரித்து எழுதும்போதுதான் பொருள் இலகுவாகப் புரிகின்றது. தற்காலத்தில் இவ்வாறு பிரித்து எழுதுவதே பொது வழக்கு.

தீயை யணைத்தார்கள் என்னை யழைத்துள்ளனர் ← தீயை அணைத்தார்கள்

### 5.4.3 வகர மெய் தோன்றுதல்

இ, ஈ, ஐ மூன்றும் தவிர மொழி இறுதியில் வரும் உயிர் எழுத்துகளுள் ஏதாவது ஒன்று நிலை மொழி இறுதியில் வந்தால், வருமொழி முதலில் எந்த உயிர் வந்தாலும் வகர மெய் உடம்படு மெய்யாகத் தோன்றும்.

பலா + ஐ, பலா +வ் +ஐ - பலாவை

பசு + ஐ, பசு +வ் +ஐ - பசுவை

புறப்புணர்ச்சியில் வகர உடம்படு மெய் தோன்றாமல் பிரித்து எழுதுவதுதான் தற்காலத்தில் பெருவழக்காக உள்ளது. அப்பா அந்த அறையிலிருக்கிறார் என்று தற்காலத்தில் யாரும் எழுதுவதில்லை. அப்பா அந்த அறையில் இருக்கிறார் என்றே இன்று எல்லாரும் எழுதுவர்.

புணர்ச்சியில் உடம்படுமெய் சேர்த்து எழுதவேண்டிய இடங்கள்

1. அகப்புணர்ச்சியில் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

2. தொகைச் சொற்கள் அல்லது கூட்டுப் பெயர்கள் அகப்புணர்ச்சிக்குரியவை. ஆகையால், அங்கும் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

உதாரணம் மாவிலை, பனையோலை, கோயில் / கோவில்

3. உடன், ஓடு ஆகிய சொல் உருபுகள் வரும்போதும் உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

அப்பா +உடன் = அப்பாவுடன்

தந்தை +உடன் = தந்தையுடன்

4. செய்த என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் உடன் என்னும் இடைச்சொல் புணரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

உம்: செய்தவுடன், வந்தவுடன், நின்றவுடன், கண்டவுடன், பார்த்தவுடன், கேட்டவுடன்.....

5. செய்ய என்னும் வாய்ப்பாட்டு வினை எச்சத்துடன் இல்லை என்னும் எதிர்மறைவினை புணரும்போது உடம்படு மெய் சேர்த்து எழுதுக.

உம்: செய்யவில்லை, போகவில்லை, வரவில்லை, பார்க்கவில்லை, கேட்கவில்லை....

### 5.4.4 குற்றியலுகரப் புணர்ச்சி

குற்றியலுகர ஈற்றுச் சொற்களுக்கு முன் வருமொழி முதலில் உயிர் எழுத்து வந்தால், குற்றியலுகரம் கெட்டுப் புணரும். தற்காலத் தமிழில் சொல் இறுதியில் வரும் எல்லா உகரமும் பெரிதும் குற்றியலுகரமாகவே ஒலித்தாலும் புணர்ச்சியில் மொழி இறுதியில் வரும் உகரங்கள் எல்லாம் கெடுவதில்லை.

## 5.5 மெய்யீற்றுப் புணர்ச்சி

மெய் ஈற்றுப் புணர்ச்சி நிலைமொழி ஈறு மெய் எழுத்தாலும் வருமொழி முதல் உயிர் அல்லது மெய் எழுத்தாலும் அமைய சொற்கள் புணர்வது மெய் ஈற்றுப் புணர்ச்சி எனப்படும்.

இது மெய் + உயிர் மெய் + மெய் என இருவகைப்படும்.

### 5.5.1 மெய் முன் உயிர் புணர்தல்

1. கல், மண், பொன், நெல் என்பனபோல் தனிக் குற்றெழுத்தை அடுத்து, சொல் இறுதியில் வரும் மெய்கள், வருமொழி முதலில் உயிர் வரின் இரட்டித்துப் புணரும்.

கல் + ஐ → கல் + ல் + ஐ = கல்லை

மண் + ஆல் →மண் + ண் + ஆல் = மண்ணால்

பொன் + ஐ →பொன் + ன் + ஐ = பொன்னை

நெல் + ஐ→ நெல் + ல் + ஐ = நெல்லை

புறப்புணர்ச்சியில் ஈற்றுமெய் இரட்டிக்காது இயல்பாகப் புணரும்.

சிறுவர்கள் மாங்காய்க்குக் கல் எறிந்தனர்

விதைப்பதற்குப் போதிய நெல் இல்லை.

இந்த மண் எனக்கு மட்டும் சொந்தம் இல்லை.

கல்லெறிந்தனர், நெல்லில்லை, மண்ணெனக்கு என இவற்றைத் தற்காலத்தில் புணர்த்தி எழுதும் வழக்கு இல்லை.

2. ஏனைய சொற்களின் இறுதியில் வரும் மெய் வருமொழி முதலில் வரும் உயிருடன் இணைந்து உயிர் மெய்யாகும். இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்.

பால் + ஐ = பாலை

அவர் + ஆல் = அவரால்

மணமகள் + ஐ = மணமகளை

பெண்கள் + உக்கு = பெண்களுக்கு

புறப்புணர்ச்சியில் தற்காலத் தமிழில் இத்தகைய மாற்றம் நிகழ்வதில்லை. அதாவது நிலைமொழி ஈற்று மெய்யும் வருமொழி முதல் உயிரும் இணைந்து உயிர் மெய் ஆவதில்லை.

அவர் எங்கள் ஊரில் இருந்தார். இவ்வாக்கியத்தை அவரெங்க ளூாரிலிருந்தார் என தற்காலத்தில் நாம் எழுதுவதில்லை.

### 5.5.2 மகர ஈறு

தொகைச் சொல்லாக்கத்தில் மகர ஈற்றின் முன் வல்லினம் வந்தால், மகர ஈறு கெட்டு வல்லினம் மிகும்.

மரம் + கொப்பு = மரக்கொப்பு

மரம் + தொட்டில் = மரத்தொட்டில்

மரம் + சட்டம் = மரச்சட்டம்

கள் என்னும் பன்மை விகுதி மகர ஈற்றுப் பெயர்களுடன் புணரும் பொழுது மகரம் ஙகரமாகத் திரியும்

மரம் + கள் = மரங்கள்

தாம் + கள் = தாங்கள்

தற்காலத் தமிழில் புறப்புணர்ச்சியில் மகர ஈறு வல்லினத்துக்கு இனமாகத் திரிதல் பெருவழக்கு அல்ல. உம் :

வானமும் கடலும் சந்திக்கும் இடம்

மாலனும் தம்பியும் தோழர்கள்

நானும் கண்ணனும் சென்றோம்

மேற்காட்டியவாறு எழுதுவதே தற்காலத்தில் பொது வழக்கு. மேல் உள்ள வாக்கியங்களை வானமுங் கடலுஞ் சந்திக்கும் இடம், நானுங் கண்ணனுஞ் சென்றோம், மாலனுந் தம்பியுந் தோழர்கள் என புணர்ச்சி விகாரத்துடன் எழுதுவோர் தற்காலத்தில் அரிது.

மகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அத்துச்சாரியை பெறும்.

மரம் + அத்து + ஐ = மரத்தை

மரம் + அத்து + கு = மரத்துக்கு

### 5.5.3 ணகர னகர ஈறு

ண, ன ஈற்றுச் சொற்களுக்கு முன் வல்லினம் வந்தாள் புணர்ச்சியில் அவை முறையே ட, ற ஆகத் திரியும்.

மண் + குடம் = மட்கடம்

மண் + பாத்திரம் = மட்பாத்திரம்

மண் + சட்டி = மட்சட்டி

தற்கால தமிழில் இவ்வாறு புணர்த்தி எழுதுவது பெரிதும் வழக்கில் இல்லை. மண்குடம், மண்பாத்திரம், மண்சட்டி, கண்காட்சி, கண்பார்வை என இயல்புப் புணர்ச்சியாக எழுதுவது பெருவழக்காகக் காணப்படுகின்றது. ஆயினும் ஒரு சொல்லுக்குள் நிகழும் அகப்புணர்ச்சியில் இந்த மாற்றத்தைக் காண்கின்றோம்.

ணகர ஈற்றின் முதல் தகரம் வந்தால் அத்தகரம் டகரமாகத் திரிதல் பழந்தமிழ் வழக்கு.

உதாரணமாக :-வெண் + தாமரை=வெண்டாமரை. தற்காலத் தமிழில் இவ்வாறு திரிதல் இல்லை.

## 5.6 உருபுப் புணர்ச்சி

மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகக் கொண்ட வேற்றுமை உருபுகள் நிலைமொழி, வருமொழிகளோடு புணரும் உருபு புணர்ச்சியை விளக்கிச் சொல்கிறது. பதத்தோடு விகுதியும், பதமும், வேற்றுமை உருபுகளும் புணரும் மூவகைப் புணர்ச்சியில் சாரியைகள் வரும் முறைமையை விளக்கிச் சொல்கிறது. மூவகைப் புணர்ச்சியில் வரும் சாரியைகள் எவை என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கிறது.

“ஒற்றுயிர் முதல் ஈற்று உருபுகள் புணர்ச்சியின் ஒக்குமன் அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே (நூ. 2- எனப் பொதுப்படக் கூறினார். எனவே இதுவே விதியெனக் கருதி “நம்பிகு“ என்றும் “நம்பிக்கண்“ என்ற விதி கொள்ளக்கூடாது. நம்பிகண் என மிகாது என்றும் நம்பிக்கு

என மிகுமென்றும் கொள்ளுதல் வேண்டும். எனவே வழக்கு அறிந்து பொது விதிகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

எல்லாம், எல்லாரும், எல்லீரும் என்னும் பெயர்கள், தான், தாம் முதலான மூவிடப் பெயர்கள், ஆ, மா, கோ என்னும் ஓர் எழுத்துப் பெயர்கள், அவ், அ..து முதலான சுட்டுப்பெயர்கள் ஆகியவை வேற்றுமை உருபுகளோடு புணரும்போது இடையே சாரியைகள் வரும் முறைமையை விளக்கிச் சொல்கிறது. உயிர் ஈற்றுப் புணர்ச்சி, மெய் ஈற்றுப் புணர்ச்சி ஆகிய இருவகைப் புணர்ச்சியிலும் வேற்றுமைக்குக் கூறப்பட்ட சில பொதுவிதிகளினின்று இரண்டாம் வேற்றுமை மாறுபட்டு அமைவதைக் குறிப்பிட்டு விளக்குகிறது.

நிலைமொழி வருமொழிகளுக்கு இடையில் ஏற்றப்பெற்றி வல்லெழுத்து (அ) மெல்லெழுத்து மிக்கு வரல் வேண்டும்.

(எ.டு) ஊர் + கு = ஊர்க்கு

மணி+ கு = மணிக்கு (நான்கன் உருபு)

ஊர் + கண் = ஊர்க்கண்

மணி+ கண் = மணிக்கண் (ஏழன் உருபு)

இவ்வாறு வல்லொற்று மிகும். இனி, இவ்வாறு மெல்லெழுத்தும் மிகும்.

நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையுமே வல்லினமாகிய கு.க என்பவற்றைப் பெற்றவை.

## 5.7 வல்லினம் மிகுமிடம்

நிலைமொழியின் இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும், ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் மிகும்.

சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகல்

அ, இ என்பன சுட்டு எழுத்துகள் எ, யா என்பன வினா எழுத்துகள். இவற்றின் முன்னும், இவற்றின் அடியாகத் தோன்றிய அந்த, இந்த, எந்த் அங்கு, இங்கு, எங்கு ஆங்கு, ஈங்கு, யாங்கு அப்படி, இப்படி, எப்படி ஆண்டு, ஈண்டு, யாண்டு அவ்வகை, இவ்வகை, எவ்வகை, அத்துணை, இத்துணை, எத்துணை என்னும் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

சான்று: அ + காலம் = அக்காலம்

எ + திசை = எத்திசை

அந்த + பையன் = அந்தப் பையன்

எந்த + பொருள் = எந்தப் பொருள்

அங்கு + கண்டான் = அங்குக் கண்டான்

எங்கு + போனான் = எங்குப் போனான்

யாங்கு + சென்றான் = யாங்குச் சென்றான்

அப்படி + சொல் = அப்படிச் சொல்

எப்படி + சொல்வான் = எப்படிச் சொல்வான்

ஈண்டு + காண்போம் = ஈண்டுக் காண்போம்

யாண்டு + காண்பேன் = யாண்டுக் காண்பேன்

அவ்வகை + செய்யுள் = அவ்வகைச் செய்யுள்

எத்துணை + பெரியது = எத்துணைப் பெரியது

ஓர் எழுத்துச் சொற்களின் முன் வல்லினம் மிகல்

கை, தீ, தை, பூ, மை என்னும் ஓர் எழுத்துச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

சான்று: கை + குழந்தை = கைக்குழந்தை

கை + பிடி = கைப்பிடி

தீ + பிடித்தது = தீப்பிடித்தது

தீ + பெட்டி = தீப்பெட்டி

தை + திருநாள் = தைத்திருநாள்

பூ + பறித்தாள் = பூப்பறித்தாள்

மை + பேனா = மைப்பேனா

குற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்

வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், சில மென்தொடர் மற்றும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன்னும், உயிர்த்தொடர் போன்ற அமைப்பை உடைய சில முற்றியலுகரச் சொற்களின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

சான்று: பாக்கு + தோப்பு = பாக்குத்தோப்பு

அச்சு + புத்தகம் = அச்சுப்புத்தகம்

எட்டு + தொகை = எட்டுத்தொகை

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

இனிப்பு + சுவை = இனிப்புச்சுவை

கற்று + கொடுத்தான் = கற்றுக்கொடுத்தான்

சில மென்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்.

சான்று: குரங்கு + குட்டி = குரங்குக் குட்டி

பஞ்சு + பொதி = பஞ்சுப்பொதி

துண்டு + கடிதம் = துண்டுக்கடிதம்

மருந்து + சீட்டு = மருந்துச் சீட்டு

பாம்பு + தோல் = பாம்புத்தோல்

கன்று + குட்டி = கன்றுக்குட்டி

இவற்றை வல்லினம் மிகாமல் குரங்கு குட்டி, மருந்து சீட்டு என்று எழுதினால் குரங்கும் குட்டியும், மருந்தும் சீட்டும் என்று பொருள்பட்டு உம்மைத் தொகைகள் ஆகிவிடும்.

சில உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் முன் வல்லினம் மிகல்.

சான்று: முதுகு + தண்டு = முதுகுத்தண்டு

விறகு + கடை = விறகுக்கடை

படகு + போட்டி = படகுப்போட்டி

பரிசு + புத்தகம் = பரிசுப்புத்தகம்

மரபு + கவிதை = மரபுக்கவிதை

முற்றியலுகரச் சொற்கள் முன் வல்லினம் மிகல்

தனிக்குறிலை அடுத்து வருகின்ற வல்லின மெய்யின் மேலும், பிற மெய்களின் மேலும் ஏறிவருகின்ற உகரம் முற்றியலுகரம் எனப்படும். நடு, புது, பொது, பசு, திரு, தெரு, முழு, விழு என்னும் முற்றியலுகரச் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

சான்று: நடு + கடல் = நடுக்கடல்

புது + புத்தகம் = புதுப்புத்தகம்

பொது + பணி = பொதுப்பணி

பசு + தோல் = பசுத்தோல்

திரு + கோயில் = திருக்கோயில்

தெரு + பக்கம் = தெருப்பக்கம்

முழு + பேச்சு = முழுப்பேச்சு

விழு + பொருள் = விழுப்பொருள்

தனி நெட்டெழுத்தை அடுத்தோ, பல எழுத்துகளைத் தொடர்ந்தோ ஒரு சொல்லின் இறுதியில் வல்லினமெய் அல்லாத பிற மெய்களின் மேல் ஏறி வருகின்ற உகரமும் முற்றியலுகரம் ஆகும். இத்தகைய முற்றியலுகரச் சொற்கள் பெரும்பாலும் 'வு' என முடியும். இவற்றின் முன் வரும் வல்லினமும் மிகும்.

சான்று: சாவு + செய்தி = சாவுச்செய்தி

உணவு + பொருள் = உணவுப்பொருள்

உழவு + தொழில் = உழவுத்தொழில்

நெசவு + தொழிலாளி = நெசவுத்தொழிலாளி

தேர்வு + கட்டணம் = தேர்வுக்கட்டணம்

கூட்டுறவு + சங்கம் = கூட்டுறவுச் சங்கம்

பதிவு + தபால் = பதிவுத்தபால்

இரவு + காட்சி - இரவுக்காட்சி

வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகல்.

இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையிலான ஆறு வேற்றுமைகள் ஒவ்வொன்றும் புணர்ச்சியில் மூன்று வகையாக வருகின்றன. வேற்றுமை உருபு தொக்கு (மறைந்து) வருவது. இது வேற்றுமைத்தொகை எனப்படும்.

சான்று: கனி + தின்றான் = கனிதின்றான்

இத்தொடருக்குக் கனியைத் தின்றான் என்று பொருள். கனி தின்றான் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ தொக்கு வந்துள்ளது. எனவே இது இரண்டாம்

வேற்றுமைத் தொகை.

வேற்றுமை உருபும், அதனோடு சேர்ந்து வரும் சில சொற்களும் தொக்கு வருவது. இது வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை எனப்படும்.

சான்று:

தயிர் + குடம் = தயிர்க்குடம்

இத்தொடருக்குத் தயிரை உடைய குடம் என்று பொருள். தயிர்க்குடம் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ என்பதும், அதனோடு சேர்ந்து வந்துள்ள உடைய என்பதும் தொக்கு வந்துள்ளன. எனவே இது இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

வேற்றுமை உருபு விரிந்து வருவது. இது வேற்றுமை விரி எனப்படும்.

சான்று: கனியை + தின்றான் = கனியைத் தின்றான்

மேலே கூறிய சான்றுகளை நோக்குவோம். வல்லினம் இரண்டாம் வேற்றுமைத் தொகையில் மிகாமலும், மற்ற இரண்டிலும் மிக்கும் வந்துள்ளது புலனாகும். இதுபோல ஒவ்வொரு வேற்றுமையும் மூவகைப் புணர்ச்சியில் வல்லினம் மிக்கும், மிகாமலும் வரும்.

**வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லினம் மிகும்.**

(i) இரண்டாம் வேற்றுமை விரியின் (ஐ உருபின்) முன் வரும் வல்லினம் மிகும்.

சான்று: ஒலியை + குறை = ஒலியைக்குறை

பாயை + சுருட்டு = பாயைச்சுருட்டு

கதவை + தட்டு = கதவைத்தட்டு

மலரை + பறி = மலரைப்பறி

(ii) நான்காம் வேற்றுமை விரியின் (கு உருபின்) முன்வரும் வல்லினம் மிகும்.

சான்று: எனக்கு + கொடு = எனக்குக் கொடு

வீட்டுக்கு + தலைவி = வீட்டுக்குத் தலைவி

ஊருக்கு + போனான் = ஊருக்குப் போனான்

(iii) நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அஃறிணையாயின் அதன்முன் வரும் வல்லினம் மிகும்.

சான்று: குறிஞ்சி + தலைவன் = குறிஞ்சித் தலைவன (குறிஞ்சிக்குத் தலைவன்)

படை + தளபதி = படைத்தளபதி (படைக்குத் தளபதி)

கூலி + படை = கூலிப்படை (கூலிக்குப் படை)

(iv) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: நகை + கடை = நகைக்கடை (நகையை விற்கும் கடை)

தயிர் + குடம் = தயிர்க்குடம் (தயிரை உடைய குடம்)

எலி + பொறி = எலிப்பொறி (எலியைப் பிடிக்கும் பொறி)

மலர் + கூந்தல் = மலர்க்கூந்தல் (மலரை உடைய கூந்தல்)

நெய் + குடம் = நெய்க்குடம் (நெய்யை உடைய குடம்)

(v) மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: வெள்ளி + கிண்ணம் = வெள்ளிக் கிண்ணம் (வெள்ளியால் ஆகிய கிண்ணம்)

இரும்பு + பெட்டி = இரும்புப் பெட்டி (இரும்பினால் ஆகிய பெட்டி)

தேங்காய் + சட்னி = தேங்காய்ச் சட்னி (தேங்காயால் ஆன சட்னி)

பித்தளை + குடம் = பித்தளைக் குடம் (பித்தளையால் ஆன குடம்)

(vi) நான்காம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

சான்று: கோழி + தீவனம் = கோழித் தீவனம் (கோழிக்கு உரிய தீவனம்)

குழந்தை + பால் = குழந்தைப் பால் (குழந்தைக்கு ஏற்ற பால்)

(vii) ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: வாய் + பாட்டு = வாய்ப்பாட்டு (வாயிலிருந்து வரும் பாட்டு)

கனி + சாறு = கனிச்சாறு (கனியிலிருந்து எடுக்கப்படும் சாறு)

(viii) ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: தண்ணீர் + பாம்பு = தண்ணீர்ப்பாம்பு (தண்ணீரில் உள்ள பாம்பு)

சென்னை + கல்லூரி = சென்னைக் கல்லூரி (சென்னையில் உள்ள கல்லூரி)

மதுரை + கோயில் = மதுரைக்கோயில் (மதுரையில் உள்ள கோயில்)

மலை + பாம்பு = மலைப்பாம்பு (மலையில் உள்ள பாம்பு)

(ix) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி அ∴றிணையாய் இருப்பின், அதன் முன்னர் வரும் வல்லினம் மிகும்.

சான்று: கிளி + கூண்டு = கிளிக்கூண்டு

புலி + குட்டி = புலிக்குட்டி

நரி + பல் = நரிப்பல்

வாழை + தண்டு = வாழைத்தண்டு

எருமை + கொம்பு = எருமைக் கொம்பு

தேர் + சக்கரம் = தேர்ச்சக்கரம்

**அல்வழிப் புணர்ச்சியில் வல்லினம் மிகல்.**

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொடர்கள் தொகை நிலைத்தொடர், தொகாநிலைத் தொடர் என இருவகைப்படும். இவ்விரு வகைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும்.

தொகை நிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்.

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர்கள் வினைத்தொகை, பண்புத்தொகை (இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் இதில் அடங்கும்), உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித் தொகை ஆகிய ஐந்தும் ஆகும். இத்தொகைநிலைத் தொடர்களில் எந்தெந்தத் தொடர்களில் வல்லினம் மிகும்.

i) பண்புத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: சிவப்பு + துணி = சிவப்புத்துணி

புதுமை + பெண் = புதுமைப்பெண்

தீமை + குணம் = தீமைக்குணம்

வெள்ளை + தாள் = வெள்ளைத்தாள்

மெய் + பொருள் = மெய்ப்பொருள்

பொய் + புகழ் = பொய்ப்புகழ்

புது + துணி = புதுத்துணி

பொது + பண்பு = பொதுப்பண்பு

ii) இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.

நிலைமொழியில் சிறப்புப் பெயரும் வருமொழியில் பொதுப்பெயருமாகச் சேர்ந்து வரும். இடையில் ஆகிய என்ற பண்பு உருபு மறைந்து வரும். இதுவே இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும். இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: மார்கழி + திங்கள் = மார்கழித் திங்கள்

வெள்ளி + கிழமை = வெள்ளிக் கிழமை

மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

உழவு + தொழில் = உழவுத்தொழில்

iii) உவமைத் தொகையில் வரும் வல்லினம் மிகும்.

சான்று: மலர் + கண் = மலர்க்கண் (மலர் போன்ற கண்)

தாமரை + கை = தாமரைக்கை (தாமரை போன்ற கை)

**தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகல்.**

எழுவாய்த் தொடர், விளித்தொடர், பெயரெச்சத் தொடர், வினையெச்சத் தொடர், தெரிநிலை வினைமுற்றுத் தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொல் தொடர், உரிச்சொல் தொடர், அடுக்குத்தொடர் என்னும் ஒன்பதும் அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகாநிலைத் தொடர்கள் ஆகும். இவற்றுள் எந்தெந்தத் தொடர்களில் வரும் வல்லினம் மிகும்.

i) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகும்.

பெயரெச்சத்தில் ஒரு வகை ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். அறியாத என்பது எதிர்மறைப் பெயரெச்சம். இதன் முன் வரும் வல்லினம் மிகாது. சான்று: அறியாத பிள்ளை. ஆனால் அறியாத என்பதில் உள்ள 'த' என்னும் ஈறு கெட்டு (மறைந்து), அறியா

என நிலைமொழியில் நிற்கும். இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதன் முன் வருமொழி முதலில் வரும் வல்லினம் கட்டாயம் மிகும். சான்று: அறியா + பிள்ளை = அறியாப்பிள்ளை.

செல்லா + காசு = செல்லாக் காசு (செல்லாத காசு)

ஓடா + குதிரை = ஓடாக் குதிரை (ஓடாத குதிரை)

தீரா + சிக்கல் = தீராச் சிக்கல் (தீராத சிக்கல்)

காணா + பொருள் = காணாப் பொருள் (காணாத பொருள்)

ii) அகர ஈற்று, இகர ஈற்று, யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்னும், வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன்னும், ஆக, ஆய் என முடியும் வினையெச்சங்களின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

அகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்.

சான்று: வர + சொன்னான் = வரச் சொன்னான்

உண்ண + போனான் = உண்ணப் போனான்

உட்கார + பார்த்தான் = உட்காரப் பார்த்தான்

இகர ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்

சான்று: ஓடி + போனான் = ஓடிப் போனான்

தேடி + பார்த்தான் = தேடிப் பார்த்தான்

கூறி + சென்றான் = கூறிச் சென்றான்

கூடி + பேசினர் = கூடிப் பேசினர்

யகர மெய் ஈற்று வினையெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகல்

சான்று: போய் + பார்த்தான் = போய்ப் பார்த்தான்

வன்தொடர்க் குற்றியலுகர ஈற்று வினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் மிகல்

சான்று: கற்று + கொடுத்தான் = கற்றுக் கொடுத்தான்

வாய்விட்டு + சிரித்தான் = வாய்விட்டுச் சிரித்தான்

படித்து + கொடுத்தான் - படித்துக் கொடுத்தான்

எடுத்து + தந்தான் - எடுத்துத் தந்தான்

கடித்து + குதறியது - கடித்துக் குதறியது

வைத்து + போனான் - வைத்துப் போனான்

ஆக, ஆய், என என்று முடியும் வினையெச்சங்களின் முன் வல்லினம் மிகல்

சான்று: தருவதாக + சொன்னான் - தருவதாகச் சொன்னான்

வருவதாய் + கூறினார் - வருவதாய்க் கூறினார்

வா என + கூறினார் - வா எனக் கூறினார்

மேலே காட்டிய சான்றுகள் எல்லாம் தெரிநிலை வினையெச்சங்கள் ஆகும். வினையெச்சத்தில் குறிப்பு வினையெச்சம் என்ற ஒன்றும் உண்டு. ஒரு தொழிலை உணர்த்தும் வினைப்பகுதியிலிருந்து தோன்றுவது தெரிநிலை வினையெச்சம். சான்று: உண்ணப் போனான். உண் என்ற வினைப்பகுதியிலிருந்து தோன்றியதால் உண்ண என்பது தெரிநிலை வினையெச்சம். ஒரு பண்பை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றுவது குறிப்பு வினையெச்சம். சான்று: மெல்லப் பேசினாள். மென்மை என்ற குணத்தை உணர்த்தும் பெயர்ப்பகுதியிலிருந்து தோன்றியதால் மெல்ல என்பது குறிப்பு வினையெச்சம். மொழியியலார் இதனை வினையடை (Adverb) என்று குறிப்பிடுவர். மேலே பார்த்த தெரிநிலை வினையெச்சம் போலவே குறிப்புவினையெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகும்.

சான்று: நிறைய + பேசுவான் = நிறையப் பேசுவான்

இனிக்க + பேசுவான் = இனிக்கப் பேசுவான்

நன்றாக + சொன்னான் = நன்றாகச் சொன்னான்

வேகமாக + கூறினான் = வேகமாகக் கூறினான்

விரைவாய் + பேசினார் = விரைவாய்ப் பேசினார்

மெல்லென + சிரித்தாள் = மெல்லெனச் சிரித்தாள்

மகர இறுதி கெட்டு உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் மிகல்

புணர்ச்சியில் மகர இறுதி கெட்டு, உயிர் ஈறாய் நிற்கும் சொற்கள் முன்வரும் வல்லினம் மிகும்.

சான்று: மரம் + கிளை , மர + க் + கிளை = மரக்கிளை

குளம் + கரை , குள + க் + கரை = குளக்கரை

ஆரம்பம் + பள்ளி , ஆரம்ப + ப் + பள்ளி = ஆரம்பப் பள்ளி

தொடக்கம் + கல்வி , தொடக்க + க் + கல்வி = தொடக்கக் கல்வி

அறம் + பணி , அற + ப் + பணி = அறப்பணி

கட்டடம் + கலை , கட்டட + க் + கலை = கட்டடக்கலை

வீரம் + திலகம் , வீர + த் + திலகம் - வீரத்திலகம்

மரம் + பெட்டி , மர + ப் + பெட்டி - மரப்பெட்டி

பட்டம் + படிப்பு , பட்ட + ப் + படிப்பு - பட்டப்படிப்பு

## 5.8 வல்லினம் மிகா இடங்கள்

நிலைமொழி இறுதியில் உள்ள உயிர்களின் முன்னரும் ய, ர, ழ என்னும் மெய்களின் முன்னரும் வருமொழி முதலில் வருகின்ற க, ச, த, ப என்னும் வல்லின மெய்கள் மிகாது. சுட்டு, வினா அடியாகத் தோன்றிய சொற்கள் முன் வல்லினம் மிகாமை

அது, இது, எது் அவை, இவை, எவை் அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை் அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு ' அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு என்னும் சொற்களின் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: அது + சிறிது = அது சிறிது

எது + பெரியது = எது பெரியது?

அவை + போயின = அவை போயின

எவை + பெரியவை = எவை பெரியவை?

அன்று + பார்த்தான் = அன்று பார்த்தான்

என்று + காண்பேன் = என்று காண்பேன்?

அத்தனை + செடிகள் = அத்தனை செடிகள்

எத்தனை + பழங்கள் = எத்தனை பழங்கள்?

அவ்வளவு + பேர் = அவ்வளவு பேர்

எவ்வளவு + தருவாய் = எவ்வளவு தருவாய்?

அவ்வாறு + பேசினான் = அவ்வாறு பேசினான்

எவ்வாறு + படித்தாள் = எவ்வாறு படித்தாள்?

வந்த, கண்ட, சொன்ன, வரும் என்பன போன்ற பெயரெச்சங்களோடு படி, ஆறு என்னும் சொற்கள் சேர்ந்து வரும் வினையெச்சச் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகாது.

சான்று. கண்டபடி + பேசினான் = கண்டபடி பேசினான்

சொன்னபடி + செய்தான் = சொன்னபடி செய்தான்

கண்டவாறு + சொன்னான் = கண்டவாறு சொன்னான்

சொன்னவாறு + செய்தான் = சொன்னவாறு செய்தான்

வரும்படி + கூறினான் = வரும்படி கூறினான்

வருமாறு + கூறினான் = வருமாறு கூறினான்

எண்ணுப்பெயர்கள், எண்ணுப்பெயரடைகள் முன் வல்லினம் மிகாமை

ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகியன வன்தொடர்க் குற்றியலுகரங்கள். இவற்றின் முன்வரும் வல்லினம் மிகுவதை ஏற்கனவே பார்த்தோம். ஏனைய ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் மென்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஆறு, நூறு என்னும் நெடில் தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயர்களின் முன்னும், ஏழு என்னும் முற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும், ஒன்பது என்னும் உயிர்த்தொடர்க் குற்றியலுகர எண்ணுப்பெயரின் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

சான்று: ஒன்று + போதும் = ஒன்று போதும்

இரண்டு + தடவை = இரண்டு தடவை

மூன்று + குழந்தைகள் = மூன்று குழந்தைகள்

நான்கு + கால்கள் = நான்கு கால்கள்

ஐந்து + சிறுவர்கள் = ஐந்து சிறுவர்கள்

ஆறு + கடைகள் = ஆறு கடைகள்

ஏழு + சிறுகதைகள் = ஏழு சிறுகதைகள்

ஒன்பது + கிரகங்கள் = ஒன்பது கிரகங்கள்

நூறு + பழங்கள் = நூறு பழங்கள்

ஒரு, இரு, அறு, எழு என்னும் எண்ணுப்பெயரடைகளின் முன்வரும் வல்லினம் மிகாது.

சான்று: ஒரு + பொருள் = ஒருபொருள்

இரு + தடவை = இருதடவை

அறு + படைவீடு = அறுபடைவீடு

எழு + கடல் = எழுகடல்

வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை.

i) இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வரும் வல்லினம் மிகாது.

சான்று: சாமி + கும்பிடு = சாமி கும்பிடு (சாமியைக் கும்பிடு)

நகை + செய்தான் = நகை செய்தான் (நகையைச் செய்தான்)

கனி + தின்றான் = கனி தின்றான் (கனியைத் தின்றான் )

காய் + கொடுத்தான் = காய்கொடுத்தான் (காயைக் கொடுத்தான்)

தமிழ் + படித்தான் = தமிழ் படித்தான் (தமிழைப் படித்தான்)

நீர் + பருகினான் = நீர் பருகினான் (நீரைப் பருகினான்)

ii) நான்காம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாயின் அதன்முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: பொன்னி + கணவன் = பொன்னி கணவன் (பொன்னிக்குக் கணவன்)

iii) ஆறாம் வேற்றுமைத் தொகையில் நிலைமொழி உயர்திணையாக இருப்பின் அதன்முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: காளி + கோயில் = காளிகோயில்

கண்ணகி + சிலம்பு = கண்ணகி சிலம்பு

தம்பி + துணி = தம்பி துணி

மகளிர் + கல்லூரி = மகளிர் கல்லூரி

ஆசிரியர் + கழகம் = ஆசிரியர் கழகம்

தாய் + சொத்து = தாய் சொத்து

மனைவி + கண்ணீர் = மனைவி கண்ணீர்

iv) மூன்றாம் வேற்றுமைக்கு ஆன், ஆல், ஒடு, ஓடு, உடன் என்னும் உருபுகள் உள்ளன. இவற்றுள் ஒடு, ஓடு என்பன உயிர் ஈறு கொண்டவை. இவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: என்னொடு + படித்தவன் = என்னொடு படித்தவன்

யாரோடு + பேசினாய் = யாரோடு பேசினாய்?

இக்காலத் தமிழில் ‘கொண்டு’ என்னும் சொல்லுருபும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய கருவிப் பொருளில் வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் மிகாது.

சான்று: கத்தி கொண்டு + குத்தினான் = கத்திகொண்டு குத்தினான் (கத்தியால் குத்தினான்)

வாள்கொண்டு + போர் செய்தான் = வாள்கொண்டு போர் செய்தான்

ஐந்தாம் வேற்றுமைக்கு உரிய உருபுகள் இல், இன் என்பன ஆகும் பொருள் : நீக்கப் பொருள் (விலகிச் செல்லல்). ஐந்தாம் வேற்றுமை விரியில் இல், இன் என்னும் உருபுகள் மட்டும் நின்று நீக்கப் பொருளைக் காட்டுவது இல்லை. இல் என்பதோடு இருந்து என்னும் சொல்லுருபும், இன் என்பதோடு நின்று என்னும் சொல்லுருபும் சேர்ந்தே நீக்கப் பொருளை உணர்த்துகின்றன. இவ்விரு உருபுகளின் முன்வரும் வல்லினம் மிகாது.

சான்று: வீட்டிலிருந்து + சென்றான் = வீட்டிலிருந்து சென்றான்

கூட்டினின்று + பறந்தது = கூட்டினின்று பறந்தது

ஆறாம் வேற்றுமைக்கு உரிய உருபுகளாக நன்னூலார் அது, ஆது, அ என்னும் மூன்றனைக் குறிப்பிடுகிறார். இவற்றுள் ஆது, அ என்பன இக்காலத் தமிழில் இல்லை. அது என்பது மட்டுமே உண்டு. அது என்னும் உருபின் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: யானையது + கொம்பு = யானையது கொம்பு

எனது + புத்தகம் = எனது புத்தகம்

இக்காலத் தமிழில் ‘உடைய’ என்னும் சொல்லுருபும், ஆறாம் வேற்றுமைக்கு உரிய கிழமைப் பொருளில் (உடைமைப் பொருளில்) வழங்குகிறது. இதன் முன் வரும் வல்லினமும் மிகாது.

சான்று: என்னுடைய + புத்தகம் = என்னுடைய புத்தகம்

பண்புடைய + கணவர் = பண்புடைய கணவர்

ஆசிரியருடைய + பெருமை = ஆசிரியருடைய பெருமை

அல்வழிப் புணர்ச்சியில் வரும் வல்லினம் மிகாமை.

அல்வழிப் புணர்ச்சியில் வரும் தொகைநிலைத் தொடர், தொகா நிலைத்தொடர் என்னும் இருவகைத் தொடர்களில் வல்லினம் மிகா இடங்கள்.

**தொகைநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை**

i) அல்வழியில் உள்ள தொகைநிலைத் தொடர்களில் ஒன்றான வினைத்தொகை மிகவும் அற்புதமான தொகை. ஊறுகாய் என்று சொன்னதும், நம் நாவில் அந்தக் காயின்

சுவை ஊறி நிற்கும். நேற்று ஊறிய காய், இன்று ஊறுகின்ற காய், நாளையும் ஊறும் காய் – ஊறுகாய். மூன்று காலங்களையும் காட்டும் இடைநிலைகள் என்னும் உருபுகள் மறைந்திருப்பதால், வினைத்தொகை எனப்பட்டது. வினைத்தொகையில் வரும் வல்லினம் கட்டாயம் மிகாது. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும் எனப் பார்த்தோம். ஆனால் வினைத்தொகையில் மட்டும் நிலைமொழி வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தாலும் வல்லினம் மிகாது.

சான்று: நாட்டு + புகழ் = நாட்டுபுகழ்

ஈட்டு + பொருள் = ஈட்டுபொருள்

இவ் வன்தொடர்க் குற்றியலுகரங்களின் முன்வரும் வல்லினம் வினைத்தொகையில் மிகவில்லை.

சான்று: சுடு + காடு = சுடுகாடு

நடு + கல் = நடுகல்

குடி + தண்ணீர் = குடிதண்ணீர்

மூடு + பனி = மூடுபனி

சுடு + சோறு = சுடுசோறு

விடு + கதை = விடுகதை

திருவளர் + செல்வன் = திருவளர் செல்வன்

திருவளர் + செல்வி = திருவளர் செல்வி

ii) இரண்டு சொற்களோ, இரண்டுக்கு மேற்பட்ட சொற்களோ வரும்போது, அச்சொற்களின் இறுதியில் உம்மை மறைந்திருப்பது உம்மைத் தொகை எனப்படும். உம்மைத்தொகையில் வரும் வல்லினம் மிகாது.

சான்று: இட்லி + தோசை = இட்லி தோசை (இட்லியும் தோசையும்)

யானை + குதிரை = யானை குதிரை (யானையும் குதிரையும்)

மா + பலா+ வாழை = மா பலா வாழை (மாவும், பலாவும், வாழையும்)

இரவு + பகல் = இரவு பகல் (இரவும் பகலும்)

நரை + திரை = நரைதிரை (நரையும் திரையும்)

கல்வி + கேள்வி = கல்வி கேள்வி (கல்வியும் கேள்வியும்)

நன்மை + தீமை = நன்மை தீமை (நன்மையும் தீமையும்)

தொகாநிலைத் தொடர்களில் வரும் வல்லினம் மிகாமை

i) எழுவாய்த் தொடரில் வரும் வல்லினம் மிகாது.

சான்று: கண்ணகி + பேசினாள் = கண்ணகி பேசினாள்

மாதவி + பாடினாள் = மாதவி பாடினாள்

கோழி + கூவியது = கோழி கூவியது

யானை + பிளிறியது = யானை பிளிறியது

ii) விளித்தொடரில் வரும் வல்லினம் மிகாது.

சான்று: மகனே + கேள் = மகனே கேள்

தம்பீ + போ = தம்பீ போ

அரசே + பார் = அரசே பார்

iii) ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று ஆகியவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது.

ஏவல் வினைமுற்று

சான்று: வா + கண்ணா = வா கண்ணா

போ + தம்பி = போ தம்பி

படி + பாடத்தை = படி பாடத்தை

புறப்படு + பள்ளிக்கு = புறப்படு பள்ளிக்கு

வியங்கோள் வினைமுற்று

சான்று: வாழ்க + தலைவா = வாழ்க தலைவா

ஒழிக + தீமைகள் = ஒழிக தீமைகள்

வருக + புலவரே = வருக புலவரே

**iv) அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் முன்வரும் வல்லினம் மிகாது.**

பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம், குறிப்புப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம், ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப் பலவகைப்படும். இவற்றுள் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தைத் தவிர, மற்றப் பெயரெச்சங்கள் அனைத்தின் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

தெரிநிலைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை

சான்று: வந்த + பையன் = வந்த பையன்

ஓடிய + குதிரை = ஓடிய குதிரை

கேட்ட + கேள்வி = கேட்ட கேள்வி

பாடிய + பாட்டு = பாடிய பாட்டு

கொடுத்த + கை = கொடுத்த கை

கூடிய + கூட்டம் = கூடிய கூட்டம்

குறிப்புப் பெயரெச்சத்தின் முன்வரும் வல்லினம் மிகாமை

குறிப்புப் பெயரெச்சத்தை இக்கால மொழியியலார் பெயரடை (யுனதநஉவளைந) என்று குறிப்பிடுவர். இதன் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: நல்ல + பையன் = நல்ல பையன்

பெரிய + தெரு = பெரிய தெரு

புதிய + சிந்தனை = புதிய சிந்தனை

சிறிய + பேனா = சிறிய பேனா

கரிய + குதிரை = கரிய குதிரை

அரிய + பொருள் = அரிய பொருள்

எதிர்மறைப் பெயரெச்சத்தின் முன் வரும் வல்லினம் மிகாமை

செல்லாத, காணாத, ஓடாத என்பன போன்ற பெயரெச்சங்கள் எதிர்மறைப் பொருளை உணர்த்துவதால் எதிர்மறைப் பெயரெச்சங்கள் எனப்படும். இவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: செல்லாத + காசு = செல்லாத காசு

காணாத + கண்கள் = காணாத கண்கள்

ஓடாத + குதிரை = ஓடாத குதிரை

v) ண்டு, ந்து, ன்று என முடியும் மென்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும், ய்து என முடியும் இடைத்தொடர்க் குற்றியலுகர வினையெச்சங்களுக்கு முன்னும் வரும் வல்லினம் மிகாது.

சான்று: கண்டு + பேசினார் = கண்டு பேசினார்

கொண்டு + போனான் = கொண்டு போனான்

வந்து + சென்றான் = வந்து சென்றான்

தின்று + பார்த்தான் = தின்று பார்த்தான்

கொன்று + குவித்தான் = கொன்று குவித்தான்

செய்து + தந்தான் = செய்து தந்தான்

கொய்து + கொடுத்தாள் = கொய்து கொடுத்தாள்

குறிப்பு வினையெச்சத்தில் உகர ஈற்றுக் குறிப்பு வினையெச்சங்களும் உண்டு. இவற்றின் முன் வரும் வல்லினம் மிகாது.

சான்று: நன்கு + பேசினான் = நன்கு பேசினான்

நன்று + பேசினாய் = நன்று பேசினாய்

i. ஆ, ஓ என்னும் வினா எழுத்துகளை இறுதியிலே கொண்டு முடியும் சொற்களுக்கு முன்னர் வரும் வல்லினம் மிகாது.

சான்று: அவனா + தந்தான் = அவனா தந்தான் ?

அவளோ + கொடுத்தாள் = அவளோ கொடுத்தாள் ?

ii. பல, சில என்னும் சொற்களின் முன்வரும் வல்லினம் மிகாது.

சான்று: பல + பொருள் = பலபொருள்

சில + பூக்கள் = சிலபூக்கள்

iii. இரு வடமொழிச் சொற்கள் சேர்ந்து வரும் தொடர்களில் வரும் வல்லினம் மிகாது.

சான்று: ஆதி + பகவன் = ஆதிபகவன்

தேச + பக்தி = தேச பக்தி

iv. வன்தொடர்க் குற்றியலுகரச் சொற்களின் முன் கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும் வந்தால் வல்லினம் மிகுவதில்லை.

சான்று: எழுத்து + கள் = எழுத்துகள்

வழக்கு + கள் = வழக்குகள்

வாக்கு + கள் = வாக்குகள்

வகுப்பு + கள் = வகுப்புகள்

ஆக்கு + தல் = ஆக்குதல்

வாழ்த்து + தல் = வாழ்த்துதல்

கூப்பு + தல் = கூப்புதல்

தூற்று + தல் = தூற்றுதல்

பதினெண் கீழ் +கணக்கு. = பதினெண் கீழ்கணக்கு, பதினெண் கீழ்க்கணக்குஎன்று இருவகையாகவும் வரலாம். ஆனால், தொல்காப்பியச் செய்யுளியலில் 470-ஆவது நூற்பா உரையில் பேராசிரியர் பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும் என்று எழுதியுள்ளார். ஆதலால், கீழ்க்கணக்கு என்று எழுதுவது மரபாயிற்று.

மெய்காவலர், மெய்காப்பாளர் இவை இப்படித்தான் வரவேண்டும். மெய்காவலர், மெய்காப்பாளர் (Bodyguard). இவை இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால் வல்லெழுத்து மிகாது. மெய்க்காவலர், மெய்க்காப்பாளர் என்றால் உண்மையான காவலர், காப்பாளர் என்றே பொருள்படும். ஆதலால், மெய் காவலர், மெய்காப்பாளர் என்றே வல்லெழுத்து மிகாமல் எழுத வேண்டும் என்பதறிக.

## தொகுப்புரை

புணர்ச்சியில் எழுத்துக்கள் அடையும் மாற்றத்தினை தெரிந்துணர முடிகின்றது. மேலும் புணர்ச்சி விதியில் உயிர்களும் மெய்களும் தனித்தனியாக புணர்வதை அறிய முடிகின்றது. புணர்ச்சி விதியில் வலிமிகும் இடங்கள் வலிமிகா இடங்களும் அடங்கும் என்பது தெளிவாகின்றது.

## பயிற்சி வினாக்கள்

### சிறு வினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன?
2. அகப்புணர்ச்சியை சான்றுடன் எழுதுக.
3. புறப்புணர்ச்சி எவ்வகையில் புணரும்.
4. புணர்ச்சியின் வகைகள் யாவை?
5. இயல்புப் புணர்ச்சி என்றால் என்ன?
6. விகாரப் புணர்ச்சி என்பது யாது?
7. தோன்றல் எவ்வகை புணர்ச்சியில் வரும்.
8. வேற்றுமையில் புணர்ச்சி வரும் விதத்தை கூறுக.
9. உருபுப் புணர்ச்சி எந்நிலையில் வரும்.
10. உடம்படுமெய் வரவேண்டிய இடம் யாது?

### குறு வினாக்கள்

1. புணர்ச்சியின் வகைகளை விளக்கி எழுதுக.
2. விகாரப் புணர்ச்சியின் வகைகளை விளக்குக.
3. வேற்றுமைப் புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி விளக்கி எழுதுக.
4. மெய்யீற்றுப் புணர்ச்சி வரும் நிலைகளை கூறுக.
5. விகாரப் புணர்ச்சியில் தோன்றல் இடம் பெறும் விதத்தை விளக்குக.

### பெரு வினாக்கள்

1. புணர்ச்சியின் வகை புணர்ச்சியை விளக்கி அதன் வகைகளை பகுத்துரைக்க.
2. இலக்கணம் கூறும் வலிமிகும் இடங்களை ஆராய்க
3. வலிமிகா இடங்களை பகுத்து சான்றுடன் கட்டுரை எழுதுக.

## முடிவுரை

இலக்கணத்தின் பொருள் விளக்கப்படுகின்றது. எழுத்துகளின் எண்ணிக்கை தொகுக்கப்பட்டுள்ளன. அதன் வடிவங்கள் குறிக்கப்பெற்றுள்ளன. எழுத்துகளின் குறில், நெடில், வலி, மெலி, இடை, உயிர்மெய், ஆய்தம், அளபெடை, முதலெழுத்து, சார்பெழுத்து போன்றன விளக்கப்படுகின்றன. சொல்லில் பகுப்பதமும் பதாப்பதமும் சொல்லின் வகைகளும் அச்சொற்களில் பெயர்ச்சொற்களின் திணை, பால், எண், இடம், உணர்த்துதலும் சுட்டப்படுகின்றன. வினை, இடை, உரிச்சொற்களும் விளக்கப்பட்டுகின்றன. தொகை மற்றும் தொகாநிலைத் தொடர்கள் எடுத்துக்காட்டுகளுடன் கொடுக்கப்பெற்றுள்ளன. தொடர்களும் வாக்கியாங்களும் அவற்றிற்கான நிறுத்தக் குறிகளும் இடம்பெறுகின்றன. சொற்கள் புணரும் நிலையும் விளக்கப்படுகின்றது. இவ்வாறு தமிழுக்குரிய அடிப்படைத் தமிழ் இலக்கணங்கள் விவரிக்கப்பெற்றுள்ளன.

**பார்வை நூல்கள்**


1. அடிப்படைத் தமிழ் இலக்கணம், எம். ஏ. நு.ஃ.மான் , பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை, கொழும்பு 13, 1999
2. முத்துச் சண்முகன், இக்காலத் தமிழில் கூட்டு வினைகள், மொழியியல் தொகுதி - 9, அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலைநகர், 1986
3. முத்துச் சண்முகன், இக்காலத் தமிழ் வேற்றுமைகள், ஆனந்தா பதிப்பகம், மதுரை, 1988
4. மு.வரதராசன், மொழிநூல், கழக வெளியீடு, சென்னை, 1976
5. பொற்கோ, தமிழிலக்கணக் கோட்பாடுகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை - 600005, 1989
6. ச. அகத்தியலிங்கம், சொல்லியல் 1,2, அண்ணாமலைநகர், 1979
7. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு,அண்ணாமலை நகர், 1980
8. ச. வே. சுப்பிரமணியன் (ப. ஆ.), இலக்கணத் தொகை - எழுத்து, நாகர்கோயில், 1967
9. பொற்கோ, இலக்கண உலகில் புதிய பார்வை, சென்னை, 1978
10. அ. திருமலை முத்துசாமி, தமிழ் இலக்கணம், அலைய்டு பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1


**இணையதள முகவரி**

- Tamil Heritage Foundation-www.tamilheritage.org <http://www.tamilheritage.org>
- Tamil virtual University Library- www.tamilvu.org/library http://www.virtualvu.org/library
- Project Madurai www.projectmadurai.org.
- Chennai Library- www.chennailibrary.com <http://www.chennailibrary.com>.
- Tamil E-Books Downloads- tamilebooksdownloads. blogspot.com
- Tamil Books on line-books.tamil cube.com
- Tamil novels on line books.tamilcube.com
- Tamil Universal Digital Library- www.ulib.prg <http://www.ulib.prg>.